# உலூமுத்தீன்

*எழுதியவர்கள்:* **குத்புஸ் ஸமான் மௌலல் கவ்ம் செய்யிது அப்துல் காதிர் என்ற கல்வத்து நாயகம் ரலியல்லாஹு அன்ஹு.**

**அறிவிப்பு:** *ஷெய்குனா கல்வத்து நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் எழுதப்பட்ட இந்த நூலை, அன்னாரின் சிறிய தந்தையின் மகனார் செய்யிது அஹ்மதுல் கபீறு இப்னு செய்யிது முஹம்மது ஆலிம் கிர்கரிய்யி காதிரி அவர்கள் ஷரஹு செய்து 17-10-1924 ம் தேதியில் அறபுத் தமிழில் வெளியிட்டதை, சுத்தத் தமிழில் ஹிஜ்ரி 1357 ஷஃபான் பிறை 20 ல்(15-10-1938) சனிக்கிழமை அச்சிட்டு வெளியிட்டு இருக்கிறார்கள்.*

*அரபுத் தமிழிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருப்பதால், இந்நூல் சுத்தத் தமிழில், வார்த்தைகளை சேர்த்துசேர்த்து எழுதப்பட்டிருந்ததை முடிந்தளவு தற்போதைய தமிழுக்கு மாற்றித் தந்திருக்கிறோம். அதேபோல் பத்திகளை பிரித்து உரிய தலைப்பும் இடப்பட்டிருக்கிறது. இதற்குரிய விளக்கங்களை காமிலான ஷெய்குமார்களிடம் கேட்டு விளங்கிக் கொள்ள வேண்டியது.*

-www.sufimanzil.org

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அவனைக் காணாதிருந்த போதிலும், கண்டதுபோல் கண்டு முறாக்கபாச் செய்பவர்களுடனேயாகி அவனிலே முயற்சிப்பவர்களை அவனுடைய பாதைகளவில் நேர்வழி காட்டுவானே, அப்பேர்பட்ட ஏகபராபர வஸ்துவாகிய ஒரே நாயகனைப் புகழ்கிறேன்.

இன்னும் நம்மிலே முயற்சிப்பவர்களை நம்முடைய பாதைகளவில் உண்மையாய் நேர்காட்டுவோமென்று சொன்னானே, அப்பேர்பட்டவன்.

இன்னும் தக்வாவுடைய மூமினானவர்களுக்குச் சகலதையும் அறிவிப்பது கொண்டு பிணையாய், தானே காரியகர்த்தனாய் இருப்பதன் பேரில் அவனை நான் புகழ்கிறேன்.

அவ்விதம் தானே பிணையென்பதற்கு சாட்சியாய் அல்லாஹ்வை தக்குவாச் செய்து கொள்ளுங்கள். அல்லாஹ் சகலதையும் உங்களுக்கு அறிவித்துத் தருவானென்றும் ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வை நீங்கள் தக்வா செய்வீர்களேயானால், உங்களுக்கு புறுக்கானை ஆக்கிவிடுவானென்றும், அவனுடைய காரியஸ்தர்கள் தக்குவாவுடையவர்கள் இல்லாமல் வேறு யாருமில்லையென்றும் சொன்னானே அப்பேர் பட்டவன்.

ஆகையால், தக்குவாவுடையவர்கள் அவர்கள் நாயனுடைய நபஹாத்தை முகந்து கொள்ள இலக்காகி, சங்கையாகிய அவனுடைய சொல்லளவில் கழுத்தை நீட்டி எட்டிப் பார்த்து நீயே

பூரணமுடையவன், அறிவுடையவன், எங்களுக்கு நீ அறிவித்ததைத் தவிர அறிவில்லை. உன்னைத் தூய்மையாக்குகிறோம் என்று இருந்து விட்டார்கள்.

அவன் சகலதையும் அறிவித்தான். நாயனே! அறிவை எனக்கு அதிகமாக்கி விடு என்ற ஒரு சொல்லைத் தவிர வேறு வஸ்துவிலும் அதிகத்தைத் தேடும்படியாய் ஏவப்படவில்லையே, அந்த ஒருவரின் பேரில் அல்லாஹ் சலவாத்தும், சலாமும் சொல்வானாகவும்.

அவர் எப்பேர்பட்டவரானால் அவர் அறியாத்ததை எல்லாம் அல்லாஹுத்தஆலா அவருக்கு அறிவித்ததால் அவருடைய வரிசையை மகா பாரதூரமானதென்று அல்லாஹ்வால் துதித்துப் புகழ்ந்து உயர்த்தப்பட்டார்கள்.

இன்னும், முன்னோர் பின்னோர்களுடைய அறிவுகளென்னும் வெள்ளம்போல் ஊறி வரும் சுனையாகிய ஊற்றுக் கண்ணாகவும், சிறுபாவம் பெரும்பாவம் சகலதையும் விட்டு காக்கப்பட்ட திவ்விய குணாளரான முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்கள் கோத்திரத்தார், சிநேகிதர்கள் மீதும் தக்வா செய்பவர்களுக்கு அல்லாஹுத் தஆலா புறுக்கானை ஆக்கிறதைக் கொண்டும், சகலதையும் அறிவிப்பது கொண்டும் காரியகருத்தாக இருக்கும் காலமெல்லாம் அல்லாஹுதஆலா சலவாத்தும் சலாமும் சொல்வானாகவும்.

**வேண்டுதல்**

*அம்மா பஃது*

இதாகிறது நீதம் அநீதம் (அதாவது நீதம் அநீதம் என்று துவக்கம் செய்திருப்பது எதுமொரு கோர்வை செய்பவர்கள் ஆரம்பத்தில் சொல்வதற்கு மாற்றமாக இருப்பது போல் சிலர் சிந்தையில் ஊசாடப் போதுமென்று எண்ணி சில போக்காக மேலே எழுதினேன். சாந்திக்கான சாலிக்குக்கு அதன் அந்தரங்கத்தைச் சொல்லப்படுமேயல்லாது மற்றவர்களுக்கு சொல்லக் கூடாது) இன்னதென்று கசடறக் கற்று (கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக) ரஸூலின் சொல்லிலும் செயலிலும் பின் சென்று, அவர்களது கற்பனையைக் கண்டுதேறித் தெளிய வேண்டி முயற்சித்து,

சகலருக்கும் முன்னிலையானவர்களாய் அந்தரங்கங்களைக் கொண்டு அல்லாஹ்வுடைய சொந்தம் பெற்ற அடியார்களாகிய எனது ஆண்டவமார்களின் வலுப்பந்தங்கிய வார்த்தைகளென்னும் ஜோதிப் பிரகாசத்தில் நின்றும் பந்தமாய் கொளுத்தி எடுக்கப்பட்ட தீனுடைய அறிவுகளை இதுவே சுருக்கமாக்கப்பட்ட கிதாபாக இருக்கும்.

அளவுக்கதிகமாக வெறும் பேச்சாய் பேசுவதில் தீனுடைய இல்மு இன்னதெனக் கண்டு தேறாதவர்களின் கண்கள் அவர்களளவில் எட்டிப் பார்க்கப்பட்டு,

எவ்விடத்திலும் பிரசித்தமாக்கப்பட்டுத் நான் பெரியவன் என்ற மாட்சிமைக்காக வீறுபேசித் துணிந்தும் ஒருவருக்கொருவர் குத்துப்பாடு பேசியும் இரவாய்ப் பகலாய் கிதாபுகள் கோர்வை செய்வதில் காலத்தைப் போக்கி நம்மை போலொத்த ஏழைகள் அவர்களைப் பார்த்து மருண்டு

வீண் தர்க்கங்களாலும், உபயோகமில்லாத அறிவுகளாலும் அவர்களுடைய கோர்வைகள் நிரம்பியிருப்பது அவர்களுக்கு பிசகுதலாகி இதுதான் தீனுடைய அறிவென்று மற்றவர்களையும் அவர்கள் பிசகுதலாக்கிக் காரியபாகம் தெரியாத அறிவீனர்களுடைய வார்த்தைகளில் நின்றும் ஒன்றும் நான் இதில் எடுக்கவில்லை.

ஆனதால், வக்த்துகளெனும் மாணிக்கங்களையும், காலங்கள் என்னும் இரத்தினங்களையும், அபூர்வமாகிய வாழ்நாள்களையும் துன்யாவுடைய அறிவுகளைத் தேடித் தெண்டிப்பது கொண்டே பழுதாக்கிப் போட்டார்கள்.

ஆகையால் பரிபூரணமாகிய ஆழமான நுட்பங்களுடனே தமிழ் பாஷையில் ஆகிறத்துடைய இல்முகளைச் சேகரித்து இந்த கிதாபை வட்டுறுக்கமாக கோர்வை செய்வதற்கு என்னுடைய ஊசாட்டத்திலுண்டானது.

ஏனென்றால் நான் படித்தபடி நடக்க என்னுடைய நப்சு மூரியாட்டம் செய்வதால், அதற்கு உறுதிப்பாடு உணர்ச்சைக்காகவும், ஞாபகத்துக்காகவும், இன்னும் யாவரும் காதாற கேட்டு கல்பில் தரிபடுத்தவும், இன்னும் கியாமத் நாள் வரை நடந்தேறிவரும் தமருங் கொண்டு தருமமிட்டவர்கள் பெற்றுக் கொள்ளும் பதவிகளில் மேலாம்பரமானவைகளில் நான் புகுத வேண்டியும்,

இன்னும் அந்த நபுஸானது தன்னை மறந்து பிறருக்கு உபதேசிக்க உவந்தபடியால் அதனுடைய கருத்துக்கு இசைந்து உபாயமாகவும், தந்திரமாகவும் தன்னை மறந்து பிறருக்கு உபதேசம் சொல்வதின் பேரில் என்னுடைய நப்ஸை உறுக்கினவனாகவும், பயங்கரம் பூட்டினவனாகவும், اتاء مرون الناس بالبر (*அத*ஃ: *முறுானந் நாஸ பில்பிர்ரி*) என்ற ஆயத்து போல் ஒத்ததில் நன்மையைக் கொண்டு ஏவி அதன்படி நடக்காதவர்களை பழித்தும்,

பாராதூரங்கொண்ட அவனுடைய கோபம் அவர்கள் பேரிலுண்டாகுமென்று அல்லாஹ் சொல்லியிருக்கிறதையும் முன்னோர்கள் சகலரும் அப்பேர்பட்டவன் இம்மை மறுமையிலும் பழிப்புக்கு உட்படுவான் என்று சொல்லியிருப்பவைகளை அந்த நபுசுக்கு ஓதிக்காட்டி என்னுடைய ஊசாட்டப்படி கோர்வை செய்ய எத்தனித்தபோது,

என்னுடைய கருத்தை நான் நம்பாதபடியால் ஒருவேளை இந்த ஊசாட்டம் தலைமைத்தனத்தை உவந்ததற்காக நபுசுடைய குபாடத்தில் நின்றுமுள்ளதாக இருக்குப்போதுமென்று என் தன்னிலே ஆலோசித்தவனாகவும் وماأُبرء نفسى(வமாஉ பர்ரிவு நப்ஸீ) என்ற ஆயத்தையும், افرء يت من اتخذ الهد هواه(*அபற அய்த்த மனித்தகத இலாஹகு ஹவாஹு*) போலுள்ள ஆயத்துக்களில் நபுசை நம்பக் கூடாது. அது கெடுதலைக் கொண்டே ஏவிக் கொண்டிருக்கும்.

நபுசுடைய அவாவே அநேகர்களுக்கு நாயனாக இருக்குமென்று அல்லாஹுத் தஆலா சொல்லி யிருப்பவைகளையும் ஓதிக் காட்டிக் கொண்டிருக்கும் போது அல்லாஹ் உடைய பாதையில் உடன்பிறப்பாகிய முஹம்மதுடைய மகனார் ஹபீபு என்பவர் இது நல்ல ஊஷாட்டந்தான்

அதளவில் முன்னோக்கி இந்த காரியத்தை நிறைவேற்ற வேணுமென்று மிகுதியும் அதட்டுதலாய் விரும்பினார்.

இது(கைறுடைய) சாடையில் ஹக்கீக்கத்தில் ஹவன் நபுசுக்காக செய்வதால் (ஷற்றில்) தீங்கில் விழுத்தாட்ட ஷைத்தானுடைய குபாடத்தில் நின்றுமுள்ளதாக இருக்குமோ அல்லது றப்பானிய்யத்தாகிய நல்லுதவி கட்டளையில் நின்றுமுள்ளதோவென்று அகப்பார்வையால் நான் தெளிந்து கொள்ளத் தகுதியில்லாதவனாக இருந்ததால், அவருடைய அதட்டுதல் கொண்டும் பாராட்டுதலில்லாமல் அந்தக் கோர்வையென்னும் கருத்தை விட்டு விட்டேன்.

அப்படியிருக்கும்போது நான் (இல்மு) இபாதத்துபோல் உள்ளதை விட்டு பற்றுதலாக மருட்டுதல் துக்கமென்னும் சமுத்திரத்தில் மூழ்கியதின் அலைமோதலால் கல்பு கலங்கியிருக்கும்வேளை சங்கையாகிய றமலான் மாதம் வந்துவிட்டது.

ஆகையால், நெஞ்சுகள் மறைத்திருப்பதையும், விழிகள் சுருட்டி விழிப்பதையும் பரிஸ்காரமாய் யாதொரு களங்கமெண்ணியே அறிந்திருக்கிறவனின் முகத்துக்காகவே நான் தராணி பெற்றமட்டுக்கு என்னுடைய நாட்டத்தைக் கலப்பறுதலாக்கி வைத்து இந்தக் கிதாபை கோர்வை செய்வதின் பேரில் பராக்காயிருப்பதை இந்தவகையில் மிகவும் வேண்டுதலாக கண்டேன்.

ஆனால் முன்னோர்களாலும், பின்னோர்களாலும் இந்த விசயத்தில் அனேகமாய் கோர்வையாக்கப்பட்டிருந்தாலும் சிலர்கள் யாவரும் எளிதில் விளங்கி பிரயோசனம் பெறக்கூடாத அடிமூடுகளை எடுத்துக் காட்டினார்களல்லாது அதின் பிரிவுகளையும், பணர்களையும்(கிளைகளையும்) எடுத்துப் பேசவில்லை.

சிலர்கள் சஹாபாக்கள் முன்னோர்களுடைய ஹால்களையும், நடைபழக்குதலையும் காட்டாமல் இராக்கதை பேசுவதற்குள்ள ஆகங்களை எடுத்துக் காட்டினார்கள்.

சிலர்கள் ஹக்காயிக்கு மஃரிபாவில் முங்குதலாய்ச் சொல்லியிருப்பதில் அவாமுக்கும் கலாஸ்ஸுக்கும் இடையிலுள்ள நிலைப்பாட்டைப் பிரிக்கவில்லை.

சிலர் ஆரிபூன்கள் ஹோஷ்மாறி இலாஹிய்யத்தாகிய ஹலறத்துக்கு அதபுக் குறைவை வருத்துகிற சில வார்த்தைகளைச் சொல்லியிருப்பதைக் கொண்டும் லாஹிறில் மஃனா தெளிவாயிருக்க இதற்கு அஸ்றாறாகிய முறாது மஃனா இன்ன இன்னதென்று லாஹிரை விட்டு மாற்றமாகச் சொல்வது கொண்டும் கோர்வையை நிறப்பிப்போட்டதை மடையர்களாகிய ஸிந்தீக்குகள் மனனமாக்கிக் கொண்டு தாங்கள் தெளஹீதுடைய இல்மையறிந்து தேறினவர்கள் என்றும், கஷ்பு கறாமாத்தையுடையவர்கள் என்றும் வழி கெடுக்கும்படியாக ஆகிவிட்டது.

இந்த கிதாபு அவ்விதமான உளப்பங்கோணல்களை விட்டும் நீங்கியிருக்குமென்பது ஏது எவ்விதமென்று எண்ணாதே. உன்னுடைய ஆழிய கருத்தினால் பார்வையிட உனக்குத் தோணுதலாகும்.

ஆகையால் எனது மருட்டுதமல் என்னும் தூக்கத்தை விட்டு என்னை உணர்ச்சை பூட்டி இந்த கிதாபிலுள்ளபடி அமல் செய்பவர்களில் என்னை முந்தினவனாக ஆக்கிவிடவும், இம்மையிலும், மறுமையிலும் சங்கையாகிய அவனுடைய முகத்தை நாடியே கலப்பறுதலானதாக இந்தக் கிதாபைக் கையேர்த்துக் கொள்ளவும்,

இன்னும் அவன் சகலதையும் இல்முலதுன்னியால் படித்துக் கொடுக்கும் தலத்திலே சித்தீக்கூன்களாகிய முத்தக்கீன்களுக்கு நல்லுதவி கட்டளை கொடுப்பதுபோல் எனக்கும் நல்லுதவி கட்டளை கொடுக்கவும்,

இன்னும் சலாமத்தாகிய கல்பு கொண்டு அல்லாஹ்விடத்தில் வந்தவர்களுடைய கூட்டத்தில் என்னை ஒதுக்கிச் சேர்த்துக் கொள்ளவும்,

இன்னும் இந்தக் கிதாபில் முந்தைய நூல்களில் உள்ளதையும், அபிப்பிராயங்களையும் வருவிப்பதில் தப்பிதத்தை விட்டு என்னைக் காத்துக் கொள்ளவும்,

இன்னும் ஏதாவது ஒரு அறிவை யாருக்கு நான் அறிவித்தாலும், நானறிய பெற்றாலும் அவனுக்குப் பொருத்தமுள்ளதிலேயே என்னை நேர்காட்டவும், எனக்கு உதிப்பைத் தரவும் அல்லாஹ்விடத்தில் ஐயறிவு ஐம்புலனையடக்கி ஒடுக்கியஞ்சியும், கெஞ்சியும் அதபுடன் கேட்டு நிற்கிறேன். ஆமீன். யாறப்பல் ஆலமீன்.

**அறிவு**

اعلمي يا نفس الا مارة وياحبيب *இஃலமீ யானபுசில் அம்மாற வயாஹபீபு* – தீங்கு கொண்டு ஏவுகின்ற என்னுடைய நபுசே! இன்னும் இந்தக் கோர்வை செய்யத் துணிந்தபோது நல்மாராயம் சோபனம் சொல்லிய ஹபீபே! அறிந்து கொள்.

இந்த கோர்வையில் இப்போது தொடுப்பதில் முதலாவது எந்தக் காரியத்தைத் துவக்கமாக எழுதுவோமென்று யோசித்ததில் அறிவுனுடைய விபரங்களைக் கொண்டே துவக்கஞ் செய்யவேணுமென்று நல்கருத்தும் உதிப்பும் உண்டானது.

அப்பால் ஆகிறத்துடைய உலமாக்களில் முஹக்கிக்கூன்களாகிய எனது ஆண்டவமார்களின் கோர்வைகளில் மிகுந்ததையும் அறிவுடைய விபரங்கொண்டே துவக்கஞ் செய்யப்பட்டிருப்பதைப் பார்த்து அதுபோல் நேரான நற்கருத்தும் உதிப்பும் உண்டானதுக்காய் அல்லாஹுத்தஆலாவை ஷுக்று செய்து கொள்கிறேன்.

ஆனால் இந்தக் கிதாபை நோட்டமிடுகிற உனக்குச் சில வசியத்துச் செய்கிறேன். அதில் முதலாவது என்னுடைய நபுசுக்கும், இரண்டாவது உனக்கும் மற்றவர்களுக்குமாக ஏற்படுத்தப்பட்டது ஆகையால் உனக்குத் தேடாப்புறத்தில் அகப்பட்டப் புதையலாகவும், நேர்வழியின்னதெனத் தெரியாமல் குருடாகியிருந்த உனக்கு அகக்கண்ணைத் திறக்க வந்த அருள்பிரகாசமாகவும்,

ஒருவன் கடினமான வழியில் நடந்து களைப்புற்று கடும்பசியுடனும் தாகத்துடனும்; கடுங்காந்தியும் சூட்டுடனும்; காட்டில் அகப்பட்டு இறக்கும் தருவாயில், ஆகாயத்தில் நின்றும் பசுமை பொருந்திய பச்சை மரகதத்தில் ஒன்பது வகை இரத்தினாதியால் அழுத்தப்பட்ட பாத்திரத்துடன் குளிர்ச்சி பொருந்திய மாளிகையும், காலான்களும், பதினெட்டு நளபாகத்துடன் உணவும், அமிர்தமாகியத் தண்ணீரும் வந்துவிட்டால் எவ்வளவு மகிழ்ச்சியுடன் அவைகளை அங்கீகரிப்பானோ அப்படிப்போல்

அல்லது மேலும் சுவர்க்க லோகத்தைக் கொடுக்கப்பட்டால் எவ்விதம் சந்தோஷமாய் அதில் புகுத நாடுவானோ அப்படிப்போல்

அல்லது அதைப் பார்க்கிலும் ஆயிரம் ஆயிரம் மடங்கு அதிகமாக இதில் ஆசையுடன் சிந்தையைச் செலுத்திப் பார்க்க அல்லாஹுத் தஆலாவுடைய முகத்துக்காய் உங்களிடத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

உன் கைவசம் இந்தக் கிதாபு அகப்பட்டால் அல்லாஹ்வின் மீதாணை, அல்லாஹ்வின் மீதாணை, அல்லாஹ்வின் மீது ஆணை அதுகளை ஆராயாமல் வீண் பொழுது போக்காதே. அப்பால் இதிலுள்ளபடி தெண்டிக்கவும், அல்லாஹ்வுக்காக வேண்டி நபுஸே!ஹபீபே! உங்களிடத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். இதில் ஏதும் குறைபாடு சொல்பவர்களுடைய சொல்லளவில் திரும்பிப்பாராதே.

ஏனென்றால் இந்த உலகில் அல்லாஹ்தஆலாவுடைய முகத்தை நாடி இல்மை வெளியாக்கிறவர்களைக் காண்பது அரிது. உலமாக்களென்று பேர் பெற்றவர்கள் சகலரும் ஒருவருக்கொருவர் குறைபாடு சொல்வதை விட்டும் ஒழிந்திருக்கவில்லை.

ஆனால் இதில் ஏதாவது உனக்கு விளங்காமல் அல்லது முன்பு நீ கேட்டிருப்பதற்கு மாற்றமாக விளங்கினால், நீயாவது அல்லது தஹ்கீகில்லாத உலமாக்களுடைய சொல்லைக் கொண்டாவது தவறாக விளங்கிக் கொள்ளாதே. அதனால் மிகுந்த லாபம் இழந்து விடுவாய். ஆகிறத்துடைய உலமாக்களில் முஹக்கிக்கானவர்களைச் சந்தித்தாயாகில் கேட்டுத் தெளிந்து கொள்.

ஆனால் இன்னாளில் அவர்களைக் காண்கிறது பேர்மட்டில் கேட்டு ரூபத்தைக் காணக்கூடாமலிருக்கிற அன்காஉல் மக்ரிப் என்னும் தேசத்தில் இருக்கிற ஆணையராஞ்சிப் புள்ளென்று சொல்லப்படுவதுபோல் அவர்களும் இருப்பார்கள் என்று கேள்விப்படுகிறோம்.

அவர்களின் இருதிருப்பாதார விந்தங்களைத் தெரிசித்தக் கண்களுக்கு சோபனம். உலமாஉத் துன்யாவென்னும் துன்யாவினுடைய உலமாக்கள் (கத்தா)வென்று சொல்வதளவில் திரும்பிப்பாராதே. ஏனென்றால் அவர்கள் ஹஸதை விட்டொழியமாட்டார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உலமாஉத் துன்யா உடைய வருணிப்பில் அனேகமாய்ச் சொல்லியிருப்பதுடன், அவர்களுக்குப் பின் ஸஹாபாக்களுடைய காலத்தில்தான், ஹஸதையுடையவர்கள் ஆகிறத்துடைய உலமாக்களாகிய மகாப் புண்ணியவான்கள் பேரில் குறைபாடு சொல்லத் துவங்கி விட்டார்கள்.

முதலாவது தப்ஸீருடைய உலமாக்கள் எல்லாம் நாயகமாகிய செய்யிதினா இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குர்ஆனுக்கு தப்சீரு செய்ததை நாபி உப்னுல் அஸ்ரகு என்பவர் குறைபாடு சொல்வதும் குர்ஆனுக்கு மனம்போல் தப்சீர் செய்கிறன்றார் என்று மிகுந்த நோவினை எல்லாம் செய்கிறவராக இருந்தார்.

இன்னமும் அப்துல்லாஹ் இப்னு உமரும், அப்துல்லாஹ் இப்னு ஸுபைரும், சொர்க்கம் கொண்டு நல்மாராயம் பெற்ற ஸஃது ரலியல்லாஹு அன்ஹு இவர்கள் போல் உள்ளவர்களுடைய இல்மிலும், தொழுகை முதலாகிய இபாதத்துகளிலும் சிலர்களெல்லாம் குறைபாடு பேசுகிறவர்களாக இருந்தார்கள்.

தாபிஊன்களில் அனேகர்களையும், நாலு இமாம்களையும் குறைபாடு சொல்லி அவர்களில் சிலரை காபிரென்றும் சொல்லியிருக்கிறார்கள். அபாயஸூதுல் பிஸ்தாமியை ஊரை விட்டும் ஏழு தடவை துரத்தினார்கள். இன்னும் தின்னூனில் மிஸ்ரிய்யி, ஸம்னூனில் முஹிப்பு ரலியல்லாஹு அன்ஹுமா இவர்களையெல்லாம் ஸிந்தீக் அல்லது நாஸ்திகன் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னும் அஷ்ஷெய்குல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு தங்கள் **புஸூஸுல் ஹிகம்** என்றக் கிதாபில் லிஸானுல் ஹக்கு என்றும் வஜ்ஹுல் ஹக்கு என்றும் அளவிடக் கூடாதப் புகழ்ச்சியாய் புகழப்பட்ட அபூயஸீதில் கர்ராஸ் என்பவர்கள் ஒரு கிதாபு கோர்வை செய்தார்கள். அதில் ஹக்காகிய சொல்லையே சொல்லியிருக்க அதில் சிலதை பிடித்து ஹசதுடையவர்கள் அவர்களை **காபிர்** என்று பத்துவா கொடுத்தார்கள்.

இன்னும் ஸஹ்லுத்துஸ்த்தரிய் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை **காபிர்** என்றார்கள். இன்னமும் பஜாயாவென்னும் ஊரிலுள்ள அபூமத்யனுல் மக்ரிபிய்யி ரலியல்லாஹு அன்ஹு அவர்களை சிந்தீக் என்று மிகுந்த வருத்தப்படுத்தி ஊரைவிட்டுத் துரத்தி விட்டார்கள்.

இவர்கள் எப்பேர்பெற்றவர்கள் என்றால், அஷ்ஷெய்குல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு **புதுஹாத்துல் மக்கிய்யாவில்** அவர்களைக் கணக்கில்லாத புகழ்ச்சியாய் புகழ்ந்து பின்பு சொல்கிறார்கள்: ஒருபோது நானும் அப்தால்களில் ஒருவரும் காபு மலைக்குப் போயிருக்கும்போது அம்மலையை சூழ்ந்து கொண்டிருக்கிற நரகத்துக்கருகே நாங்கள் போகையில் நம்முடைய கூட்டாளி என்னைப் பார்த்து இந்த சர்ப்பத்தின் பேரில் சலாம் சொல்லுமென்றார். அப்போது சலாம் சொன்னவுடன் பாம்மானது உடனே ஜவாபு சொல்லி, நீங்கள் எந்த தேசமென்று கேட்க, நாங்கள் பஜாயாவென்னும் நகரத்தில் உள்ளவர்கள் என்றவுடன், அந்தப்பட்டணத்தை உடையவர்களுடன் செய்கு அபீமத்யன் உடைய நடவடிக்கைகள் பற்றி எவ்விதமாக இருக்குதென்று கேட்டது.

அப்போது அவரை அவ்வூரையுடையவர்கள் சிந்தீக் என்று சொல்கிறார்கள் என்று சொன்னோம். உடனே ஆ! புதுமை. ஆதமுடைய மக்களுடைய மடத்தனமே! மிகவும் ஆச்சரியம். அல்லாஹுத் தஆலா அவனடிமைகளில் ஒருவரை ஒலியாக நிறுத்தி, அப்பால் அவனுடைய கல்குகளில் ஒருவராவது பொருத்தக் கெடுவார்கள் என்று அல்லாஹ்வின் பேரிலாணையாக

நான் எண்ணியே இருக்கவில்லை என்று அந்த பாம்பானது நாகரீகமாக சொன்னவுடன், அவரை உனக்கு எப்படித் தெரியுமென்று நாங்கள் கேட்டோம்.

உடனே சுப்ஹானல்லாஹ். பூலோகத்தில் அவரையறியாதவர்கள் இருக்கிறார்களா? அல்லாஹ்வின் ஆணை! அல்லாஹுத்தஆலா அவரைப் பாராதூரமாகிய ஒலிய்யாக எடுத்து அடியார்களுடைய கல்பில் அவர்பேரில் உவப்பை உண்டாக்கியிருக்கிறான். காபிர் அல்லது முனாபிக்கே ஒழிய அவரைப் பொருத்தக்குறைவாக இருக்கமாட்டார்கள் என்று நாகம் சொல்லியது என்று பேசி வருகிறார்கள்.

ஜுனைதுல் பகுதாதி, அபுல் ஹஸனிஷ்ஷாதுலிய்யி ரலியல்லாஹு அன்ஹுமா போலுள்ளவர்களில் அனேக அனேக அவுலியாக்களை ஸிந்தீக் என்றும் கஸ்ஸாலி ரலியல்லாஹு அன்ஹுவை காபிர் என்றும் பத்தவாக்கள் கொடுத்திருப்பதும் தவிர அவர்கள் கோர்வை செய்த **இஹ்யா உலூமுத்தீன்** என்ற கிதாபையும் சுட்டுக் கரித்துப் போட்டார்கள்.

முஹ்யித்தீன் இப்னு அரபி ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களை அனேக உலமாக்கள் காபிர் என்றும், சிந்தீக் என்றும் பத்வாக்கள் கொடுத்து இருக்கிறதும் தவிர அவர்கள் பேரில் றத்தாக அனேக கிதாபுகள் கோர்வை செய்திருப்பதில் சிலதையெல்லாம் நான் பார்த்ததில் அதிலுள்ளதில் ஒன்றையாவது இதில் எழுத கைகூசுகிறபடியால் விடப்பட்டது.

இன்னமும் அவர்களைக் குறைவுபடுத்தி ஹஸதினால் வெட்டிப்போடும்படி சொல்லித் தன்னைத் தப்பிக் கொண்டவர்களை அடுத்துப் பேசவேணுமானால் அதிக நீளமாகிவிடும்.

இன்னமும் ஆகிறத்துடைய உலமாக்களில் அநேகர்களையும் அநீதமாய் சுல்த்தான்களிடத்தில் கோள்ச் சொல்லி அவர்களை காபிறென்று பத்வாவும் கொடுத்து வகை செய்து போட்டார்கள்.

இமாம் அபூபக்ரின் நாபிலிசிய்யி ரலியல்லாஹு அன்ஹு அவர்களை மிஸ்று சுல்த்தான்களிடத்தில் சிந்தீக் என்று ஏற்படுத்திக் கொல்லும்படி ஹுக்மும் செய்தபடித் தலை கவிழத் தூக்கி ஆட்டை உரிப்பது போல் உரிக்கும்படி சுல்தான் உத்திரவு கொடுத்துப்போட்டார். அதுபோல் உரிக்கும்போது உள்ளச்சப்பாட்டுடனும், ஆராய்வுடனும் குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தார்கள். யாதொரு ஈனவிரக்கமில்லாமல் தீர்மானமாக உரித்தே போட்டார்கள்.

இன்னமும் ஹலபு என்ற ஊரிலுள்ள நஸீமீ ரலியல்லாஹு அன்ஹு அந்த ஹஸதுடைய உலமாக்களுக்கிடையிலிருந்து சகல இல்மிலும் அவர்களுக்கு மேலிட்டு அவர்களுடைய சொற்களை மிகுந்த அத்தாட்சிக் கொண்டு தள்ளுகிறவர்களாக இருந்ததின்பேரில் ஹஸது வைத்து அவர்களை அந்த ஊர் சுல்தானிடம் கோள் சொல்லிக் கொன்று போட முயற்சித்ததில் முடியாமல் சூரத்துல் இக்லாசை சிறிய ஒரு காகிதத்தில் எழுதி செருப்புத் தைக்கும் செம்மானிடம் கொடுத்து மேற்படி காகிதத்தை தோலிடையில் வைத்துப் புதிதாக ஒரு செருப்புத் தைத்து அந்தச் செருப்பை நஸீமி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு உகப்பாக வேறே தேசத்திலிருந்து அவர்களை உகந்தவர்கள் ஹதியாவாக அனுப்பியதுபோல் அந்தச் செருப்பை அவர்களிடம் சேர்ப்பித்தார்கள்.

அவர்கள் அதிலிருக்கிற மாறுபாட்டை அறியாமல் ஹதியாவை சந்தோசமாக கபூல் செய்து செருப்பை காலில் அணிந்து கொண்டார்கள். அப்பால் ஹஸதுடைய உலமாக்கள் அந்த ஹலபென்ற ஊர் அதிகாரியிடத்தில் போய் நஸீமி என்பவர் குர்ஆனை மிகுந்து பழிப்பதுத் தவிர அவருடைய பொருத்தக் கேட்டின் தீர்மானம் *குல்ஹு வல்லாஹு அஹது* என்கிற சூரத்தை எழுதி செருப்பில் வைத்துத் தைத்திருக்கிறதாகக் கேள்வியாகிறோம்.

ஆனதால் அதைச்சோதித்து அதற்குத் தகுந்த ஹுக்கும் செய்ய வேண்டுமென்று முறையிட்டபடியால் உடனே அதிகாரியானவர் அவர்களை அழைத்துச் செருப்பைச் சோதித்துப் பார்க்க சரியாக இருந்தபடியால் ஷெய்கு ரலியல்லாஹு அன்ஹு யாதொன்றும் பேசாமலிருந்து விட்டார்கள்.

உடனேத் தலை கவிழத் தூக்கி ஆட்டை உரிப்பது போல் உரித்துப் போட்டார்கள். அவ்விதம் உரிக்கும்போது உரிப்பவர்களைப் பார்த்து சிரித்தவர்களாக தௌஹீதில் ஐநூறு பைத்து உண்டு பண்ணினார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவ்விதமெல்லாம் அவுலியாக்கள் பேரிலும் ஆகிறத்துடைய உலமாக்களாகிய நாதாக்கள் பேரிலும் ஹஸது வைத்து ஊரை விட்டுத் துரத்தினதும் கொலை பாதகங்கள் செய்ததும், இமாமென்றும் உலமாக்கள் என்றும் பேர்பெற்ற துன்யாவுடைய உலமாக்களல்லாது அறிவில்லாத அவாமுகள் இவ்வளவு தீராமையாகச் செய்யவேயில்லை. அவ்விதம் அவர்கள் செய்யவும் மாட்டார்கள்.

ஆனால், ஹஸதுடைய உலமாக்களுடைய நடைபிடியை உனக்கு நான் சைக்கினையாக காட்டினதெல்லாம் இந்த கிதாபில் ஏதும் அவர்களுடைய குறைபாடு உண்டாகி நீ அதளவில் சாய்ந்து கஷ்டவாளி ஆகி விடுவாய் என்கிறதற்கும், இன்னும் உலமாக்களெல்லாம் இந்தக் கிதாபில் சொன்னபடி நடக்கிறார்களா? நான் நடப்பதற்கு என்று அவர்களைப் பார்த்து பொடுபோக்காக இருந்து விடப்போதுமென்பதற்கல்லாது வேறில்லை.

ஆனால், ஆகிறத்துடைய உலமாக்களைக் கண்டாயாகில் இதில் சொல்லப்படுவதை அவர்களுடைய செய்கையால் அறிந்து கொள்வாய். *அல்யிஷாரத்துத் தக்பீ லில் ஆகில்* - புத்திவானுக்குச் சைக்கினை போதும்;. ஆகையால், முகம் வைத்ததில் முன்னோக்கி இல்மைப் படிக்க வேண்டியதே முதலாவது கடமை என்பதற்குச் சில அடித்தளங்களை போட்டு அப்பால் இல்மிலும் மற்றதிலும் ஒழுங்கின்படி தொடுத்து விடுவோம்.

நபுஸே! அறிந்து கொள். அல்லாஹுத்தஆலா உன்னைச் சீதேவியாக்கி வைப்பானாகவும். முதலாவது இன்ஸானாய் ரூபமெடுத்தவன் மீது கடமையென்னவென்றால் தன்னிலே தானே யோசிக்க வேணும்.

ஆனால் கடமையென்று ஒருவர் விதியாக்காதிருந்தாலும் அவனுடைய கருத்து ஆராய்வில்லாமல் இருக்கமாட்டாது. அவ்விதம் ஆராய்ந்து பார்த்தானேயானால் இந்த ஜன்மத்தைக் காண மேலாம்பரமானது ஒன்றுமில்லை என்பது அவனது சிந்தையில் தோன்றும்.

அப்போது என்ன காரணத்தால் இந்த ஜன்மம் மேலானதென்றும் ஏது காரணத்தால் மற்ற ஜீவாத்துமாக்களை விட்டும் இது பிரிந்ததாகுமென்றும் யோசிக்கச் சகலதையும் வகை விபரமாய்ப் பிரித்து அறிவதுடன் அதனதனுடைய ஒடுக்கம் இவ்விதமாகுமென்ற அறிவெனும் ஒரு சிறப்புக் கொண்டல்லாது வேறில்லை என்பது நிச்சயமாகி சந்தேகமில்லாமல் தோணுதலாகும்.

ஆனால் அவனுடைய ரூபங் கொண்டல்லை. ஏனென்றால் கானகத்தில் இன்சானுடைய ரூபத்தில் எத்தனையோ ரூபமிருக்கிறது. அல்லது அவனுடைய திரேகப் பலவந்தத்தாலென்றால் ஒட்டகை இவனைக் காணத் தேக பலவந்தமானது. சடத்தின் பெருப்பந்தாலென்றால், யானை மிகப் பெருத்தது.

அவனுடைய வீரத்தன்மையால் என்றால், ஐவாய் மிருகங்களில் இவனைப் பார்க்கிலும் மிகக் கொடூரம் தங்கிய சுத்த வீரத்தன்மையுடையது உண்டாகியிருக்கிறது. அதிகமாய் திண்ணுகிறதாய் என்றால், காளை மாடு இவனைப் பார்க்கிலும் மிகுந்து திண்ணுகிறதாய் இருக்கிறது.

போகத்தால் மிகுந்து சுகன்றியுடையது என்றால், இரண்டு மூன்று நாழிகைத் தூரத்துக்கு ஒரே புணர்ச்சியில் நடக்கிற கின்ஸீறு அதிக சுகத்தையும் இன்பத்தையும் அனுபவிக்கறதாயிருக்கிறது. ஒரு திகதியில் நாலாறு முறை புணர்வதொ என்றால் அடைக்கலாம் குருவியை மிகைக்க மாட்டான்.

ஆனால் சேர்க்கை செய்யும் விதம் அழகான மாதிரியென்றால் பெருச்சாளியும் இவ்விதம்தான் செய்கிறது. மிகுந்த திரவியங்களை சேகரித்து வைப்பதாவென்றால் எத்தனையோப் பிசாசுகள் இராஜாதி ராஜாக்களிடம் காணக்கூடாத திரவியங்ள் இரத்தினாதிகளை வைத்திருக்கிறது.

ஆனால் மேலே சொல்லப்பட்டக் குணங்களை மனிதர்கள் உவந்து தேடுவதுடன் அறிவாளிகளுக்கிடையிலும் புகழப்பட்டதாயிருக்குதே இந்த பேச்சுமேல் பூச்சேயல்லாது வேறில்லை. ஆழமாக யோசித்தால் இந்தச் சொற்களை உடைத்துப் போடலாமென்று எண்ணுகிறாய்.

நபுஸே! அப்படி எண்ணாதே. ஹயவானிய்யத்தாகிய அல்லது ஷைத்தானிய்யத்தாகிய அந்தக் குணங்களையே நீ இச்சித்து அதுவே மருண்டு அகப்பார்வை இழந்து வருடங்கள், மாசங்கள,; வாரங்கள, நாட்கள் அல்லது மேலும் எல்லா ஒவ்வாரு மூச்சுவிடும்போதெல்லாம் ஹகீகத்தில் ஒவ்வொரு மிருகத்தின் குணத்தையும் சிலவேளை சகல மிருகத்தின் குணத்துடன் ஷைத்தானுடைய குணத்தையும் அடையவளைத்தலாக நீ தரித்து அந்த குணத்திலே மூழ்கி, ஆகிலும் ஹக்கீகத்தில் அதுவாகவே நீ இருப்பதாலும் இன்சானிய்யத்தாகிய அறிவென்னும் அகக்கண் உனக்குக் குருடாகி இருப்பதால் அவ்விதம் எண்ணுகிறாய்.

ஆராய்ந்து பார். ஒருவனுக்கு எப்போதும் அதிகச் சுமை எடுக்கிறதே வழக்கமாகயிருந்தால் அவனை ஒட்டகம் போலென்றும், அல்லது உட்டகையேயென்றும் அதிகமாய் தின்கிறதால்

மாடென்றும், ஒருவன் என்னேரமும் கோபத்தை உடையவனாக இருந்தால் அவனுக்கு நாய் பேய்க்கு கோபம் வருவதுபோல் வருகிறதென்றும், நாயே என்றும்,

தீட்பாகிய செய்கையைச் செய்தால் பன்றியென்றும், கழுதையென்றும், குரங்கென்றும், அதிக ஹஸதுடையவனை நரியென்றும், ஒரேப்பிடிவாதமாக இருக்கிறவனை கரடி என்றும், மிகுந்த திரவியங்களை தங்கரீகம் செய்து ஈயாதவர்களை பேயானது புதையலைக் காத்திருப்பதுபோல் காத்திருக்கிறான் என்றும், பிசாசு என்றும் இப்படிப்போல் சகல மிருகங்களுடைய குணத்தையும் ஒன்றையாவது விடாமல் சகலரும் சொல்லியழைப்பதைச் சோடித்துப் பார்த்துக் கொள்.

இப்போது சொல்லப்பட்டவைகள் எல்லாம் குர்ஆனுடைய அத்தாட்சி கொண்டு உனக்கு தலீல் சொன்னதல்லாது மனோகரப்படி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் ஹதீதில் பன்றியுடைய ரூபமாகவும், நாயுடைய ரூபமாகவுவும், சிலப் பாவிகளை எழுப்பப்படுமென்றும் இன்னும் மிஃராஜுடைய ஹதீதில் அனேகமாய் வந்திருப்பதும் தவிர

றாபியத்துல் அதவிய்யா ரலியல்லாஹு அன்ஹா போல் உள்ளவர்கள் சில அவுலியாக்களை மாத்திரம் மனிதராகக் காண்பதாகவும், சொன்னதை பிரத்தியட்சமாய்ச் சிலர்கள் சோதித்திருப்பதும் தவிர எவ்வளவோ பேர்களுடைய றூஹுகளானது மவுத்தானதின் பின் ஆவேசமெனும் பிசாசுகளாய் அய்யோவென்றலைந்து திரிவதில் கோடியிலொன்று சில சமயங்களில் சிலர்களுடையப் பார்வையில் வெளியாகியுமிருக்குது.

அச்சக்கரை முதலாகிய இடங்களில் சில கபுறுகளிலிருந்து அந்த றூஹானது ஓர்வகை மிருகமாய் இரவு காலங்களில் வெளிப்படுவதில் அதற்கு வீரமுட்டிப் பிசாசு என்றும் சொல்கிறார்கள்.

ஆனால் நம்மிலுள்ள ஆரிபீன்களும் முஷ்ரிகீன்களிலுள்ளவர்களில் சிலரும் பாவிகள் மௌத்தானதின் பேரில் அவர்களுடைய அர்வாஹுகள் மிருகங்களாயும், ஷைத்தான்களாயும் ரூபமெடுப்பதை மறைவில்லாமல் பரிஸ்காரமாய் பார்த்திருப்பதால் அல்லாஹ்வுக்கு மாறு செய்து இன்ன இன்னவிதமான தாழ்ந்த குணத்தையுடையவன் மறுபிறப்பில் நாய், பன்றி முதலாகிய பலபல ரூபமெடுப்பான் என்று சொன்னார்கள்.

அவர்கள் சொன்னதெல்லாம் ஆலம் பர்ஸகில் அவ்விதம் இருப்பதைக் கண்டபடிக்கல்லாது வேறில்லை. ஆனால் பாவிகளாயிருப்பவர்கள் மவுத்தாகிறதற்கு முற்பட துன்யாவிலிருக்கும்போதில் தானே சில அவுலியாக்களுக்கு மிருகசாதியாகத் தோற்றப்படுவார்கள். சில அவுலியாக்களுக்கு மவுத்தானதின் பேரில்தான் தோணுதலாகும்.

அதினுடைய விதர்ப்பம் எப்படியென்றால் சில ஆரிபூன்களுக்கிடையில் சகலரையும் எழுப்பப்படுகிற விதத்தில் கிலாபு விதர்ப்பம் வந்தது போலாயிருக்கும். அதென்னவானால் சிலர்கள் றூஹைத்தான் எழுப்பப்படுகிறது, சரீரத்தை எழுப்பப் படுகிறதில்லை என்றார்கள். சிலர்கள் இவ்விடத்திலிருப்பதுபோல் சரீரத்தையும் ரூஹையும் ஒன்றாகவே எழுப்பப்படும்

என்றார்கள். ஆனால் இவர்களுக்கிடையில் முஹக்கிகூன்கள் இரு வகுப்பாரும் அவரவர்கள் கண்டதைச் சொன்னார்கள் என்றார்கள்.

அதென்னவானால் றூஹைத்தான் எழுப்பப்படும். சரீரத்தை எழுப்பப்படாதென்று அவர்கள் சொன்னதெல்லாம் துன்யாவில் சரீரத்தில் றூஹு மறைவாயிருப்பதுபோல் ஆகிறத்தில் சரீரம் றூஹில் மறைவாக இருக்கும். ஆகையால் சரீரத்தை அவர்கள் காணாதபடியால் அவ்விதம் சொன்னார்கள் என்றார்கள்.

இரண்டையும் எழுப்பப்படும் என்று சொன்னவர்கள் இரண்டையும் கண்டபடியால் அவ்விதம் சொன்னார்கள் என்றார்கள். அப்படிப்போல் துன்யாவிலிருக்கும்போது சரீரத்துடைய திரையால் றூஹானிய்யத்தாகிய குணம் மறைந்திருக்கும் அகஸ்ஸூல் கவாஸுகளுக்கு அது தேணுதலாகும். சில கவாஸுகளுக்கு அவன் மவுத்தாகி சரீரத்தின் திரை நீங்கி அவனில் மிகைப்பாகியிருந்த றூஹானிய்யத்தாகியக் குணத்தின்படி ரூபமெடுத்ததின் பின்னால்தான் வெளியாகும். ஆகையால் ஹகீகத்தில் எவனெவனில் எந்தெந்த மிருகத்தின் குணம் மிகைப்பாக இருந்ததோ அந்த மிருகமாகத் தான் இப்போதையிலுமிருப்பான்.

இவ்விடத்தில் எந்தக் குணமும் றூஹில் மறைந்து றூஹு சரீரத்தில் மறைந்து விடும். மவுத்தான உடன் அந்தந்த மிகைப்பாகிய குணத்தின்படி றூஹானது ரூபமெடுத்து இவ்விடத்திலிருந்தச் சரீரம் றூஹில் மறைந்து போகும்.

ஆனால் பாவிகள் படும்பாடுகள் இவ்விதமிருக்க ஆரிபூன்களுடைய சொல்லை விளங்காமல் இஸ்லாமானவர்களில் தனாஸுகிய்யாக்கனென்ற ஒரு கூட்டம் அவரவர் செய்த பாவத்துக்குத் தக்கது நாயாய், பன்றியாய், கழுதையாய் இவ்விடத்திலே பிறப்பானென்றும் காபிர்களும் அப்படியே சொல்கிறார்கள்.

ஆரிபூன்களுடைய சொல்களில் சிலதில் மாற்றி பிறக்கிறதுதானென்று தாறுமாறாக சிலர்கள் விளங்கினதை அறிந்து அவர்களை பழித்துத் தாங்கள் அவ்விதம் கருத்து வைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் அல்லாவையறிந்த அவுலியாக்களும் அல்லது அன்பியாக்களும் திண்ணாமலும் திரவியம் தேடாமலும் ஜமாவு செய்யாமலுமாயிருந்தார்கள் என்று நீ கேட்கப் போதும்(*இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்*) இதுகளில் ஒன்றையும் செய்யாமல் பிணம் போலிருந்து செத்துப் போவென்று சொல்லவில்லை. பணங்காசு தேடித்தின்று ஜமாவு செய்யாதிருந்தால் அன்பியாக்களும் அவுலியாக்களும் எவ்விதம் வெளியாவார்கள்?. ஆனால் உனக்குச் சரியான அறிவிருந்தால் இவ்விதமான கேள்வியில் தீராண்மையாக மாட்டாய்.

ஆகிலும் அறிந்து கொள். ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு சேகரமாய் ஒன்பது மனைவிமார்கள் இருந்திருக்கிறார்கள். சஹாபாக்களிலும், அவுலியாக்களிலும் அனேர்களும் மிகுந்த பணங்களைத் தேடியே இருக்கிறார்கள். ஆனால்

இதுகளில் ஷர்உ உடைய வரம்பை கடக்காமல் நிறைவேற்றி வருவதுடன் துன்யாவி;ல் எந்தக் கருமத்தின் பேரில் சஞ்சரித்தாலும் ஆகிறத்தை மறக்காமல் தேட்டமும் நாட்டமும் அதுவே சிந்தையாக இருக்க வேணும்.

ஆகிறத்தை ஏது காரியம் மறக்கச் செய்யுமோ அவைகளை விட்டு உடனே நீங்கினால் அல்லாது ஒடுக்கம் ஈமான் சலாமத்தை ஆதரவு வைப்பது மிகவும் அரிதாயிருக்கும். ஏனென்றால் எந்த எண்ணத்தில் மனம் கொளுகியிருந்ததோ அந்த எண்ணத்தின் பேரில் மவுத்தாக்கவும் படும். எழுப்பவும் படுமென்று ஹதீதில் வந்திருக்கிறது.

ஆனால் வெளிரங்கத்தில் கோடையிடி முழங்கும்போல் கலிமாச் சொல்லி மவுத்தானவர்கள் யாதொன்றும் பேசாமல் மவுத்தானவர்களைப் பார்க்க அல்லாஹுத்தஆலாவிடத்தில் *அப்ளலு* - வரிசை என்று சொல்லமுடியாது. அவரவர்களுடைய கல்பு கொளுகியிருப்பதில் காரியமல்லாது வேறில்லை.

றூஹானது சடலத்தை விட்டும் பரியும்போது எந்தக்குணம் மிகைப்பாக இருந்ததோ அப்படியே ரூபமெடுத்து விடும். அதற்காகத்தான் ஆரிபூன்களில் சிலர் அல்லாஹ்வை அறிந்தவர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் மாற்றிப் பிறக்கிறதை விட்டொழிய மாட்டார்கள் என்றார்கள்.

இதுவெல்லாம் மவுத்தானதின் பிற்பாடேயல்லாது திரும்ப துன்யாவில் வந்து பூதங்களாற் சமைந்துத் தேகமெடுப்பதில்லை. தாறுமாறாய் விளங்காதே. ஆகையால் முகம் வைத்ததளவில் மீளுகிறேன்.

இப்போது சொல்லப்பட்டதால் மனிதத்தன்மையென்பதும் எவ்விடத்திலும் அந்த ரூபம் உருக்குலையாமல் பேதகமாகாதிருப்பதும் அறிவும் பூராயமும் கொண்டலல்லாது வேறில்லை. ஆனால், இன்சானை அறிவு ஒன்றுக்காய்ப் படைக்கப்பட்டதல்லாது வேறில்லை.

எப்படியானால் குதிரை கழுதையோடு சுமை சுமப்பதில் கூட்டாயிருப்பதுடன் இடப்பகுதி, வலப்பகுதியாலும், அழகிய ரூபத்தாலும் மேலாகியிருக்கிறது. ஆகையால் அந்த தன்மையால் குதிரையை கழுதையை விட்டுப் பிரிவாகப் படைக்கப்பட்டிருப்பதுபோல் பிரிவாகவும் அதை மேன்மையாகவும் பாவித்து வருகிறோம். அந்த பகுதி முதலாகிய வருணிப்பை அதில் காணப்படாதிருந்தால் கழுதையுடைய நிலைமையிலாகிவிடுவதுடன் இது குதிரையில்லை கழுதையே. கழுதை என்று சொல்லப்படும்.

அப்படிப்போல் இன்சானானவன் கழுதை குதிரைக்குச் சில காரியத்தில் கூட்டாகி அவனுக்குச் சொந்தமான கருமந்தான் அல்லாஹ்வுக்கு முடுகுதலாக்கப்பட்ட மலாயிக்கத்துகளுடைய வருணிப்பில் நின்றுமுள்ளது. அதற்காகத்தான் இன்சானாகிறவன் மிருக ஜாதியுடைய நிலைமைக்கும், மலாயிக்கத்துகளுடைய நிலைமைக்கும் ஊடாயிருக்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அதென்னவானால் இன்சானில் ஊண், தீன், பழக்கம் உண்டாயிருப்பதால் விருட்சாதிகளுக்கு ஒப்பாகிறான். உசும்புதல், ஐயறிவும் இருப்பதால் மிருகத்துக்கு ஒப்பாகிறான். அவனுடைய ரூபம்

உயரம், பருப்பத்தால் சுவரில் சித்தரிக்கப்பட்ட கோலத்துக்கு ஒப்பாகிறான். இன்சானிய்யத்தெனும் மனித தன்மையெல்லாம் சகல வஸ்துவுகளின் அந்தரங்கங்கள் இன்னதெனத் தெரிகிறதேயல்லாது வேறில்லை.

ஆகையால் இன்சானானவன் தன்னுடைய அகம், புறம் உசும்புதல், ஒடுங்குதல் சகலதையும் அறிவின் பேரிலும், அதின்படிக்குள்ள அமலின் பேரிலும் செவ்வுறுதலாக்கிச் சீராய் நடத்தி வந்தானேயானால் மலாயிக்கத்து:க்களைக் கொண்டு ஒப்பாகி அவர்களுடனேயே சேர்ந்து சஞ்சாரிக்கவும், இன்னும் மலக்கென்றும், றப்பானிய்யியென்றும், நாயகத்தனத்தளவில் சேர்க்கப்பட்டவன் என்றும் சொல்லத் தகும்.

அப்படியில்லாமல் திரேகத்தின் இன்பங்களை அனுபவிக்கவும் அதற்குள்ள உபாய தந்திரத்திற் கருத்தை செலுத்திக் கொண்டிருந்தால் மிருகத்துடைய குணங்களை எடுத்துமிருகமாகி அல்லது ஷைத்தானுடைய குணத்தை எடுத்து, ஹகீகத்தில் அததாகயிருக்கும் வேளை மவுத்து வந்து விட்டால் றூஹு அந்த ஹகீகத்தாக ரூபமெடுத்துவிடும். ஒல்யியாது பில்லாஹ் - அல்லாஹ்விடத்தில் கார்மானம் தேடுகிறேன். நபுஸே! உஷார்! உஷார்! நபுஸே! உணர்ச்சையாயிரு.

ஆகையால் இன்சான் இன்சானாகயிருப்பது அறிவுகொண்டுதான் என்பது அக்குலால் நல்லாகத் தோணுதலாகிவிட்டதுபோல், அல்லாஹுத்தஆலா சகலரையும் படைத்தலும், அன்பியாக்களை அனுப்பினதும், வேதங்களை இறக்கினதும், ஆதம் அலைஹிஸ்ஸலாம் நாள் முதல் இதுநாள்வரை கோர்வை செய்பவர்களுடைய கோர்வையும், உபதேசிப்பவர்களுடைய உபதேசமும், முன்னூலை நோட்டமிடுபவர்கள் நோட்டமிடுவதும்,

அன்னை சத்தம், கிளை, கோத்திரங்களை இழந்து தேசாந்திரிகளாய் காடு வனாந்திரங்கள் சென்று சருகு முதலானவைகளைப் புசித்து இரவாய்ப்பகலாய் தூக்கம் முதலாகிய சுகண்டிகளை இழப்பதும், இராஜாதி ராஜாக்கள் இல்லறத்தை இழப்பதும், அறிவொன்றுக்கல்லாது வேறில்லை என்பதும்,

முஸ்லிம் காபிர் சகலரும் ஒத்துமையாய்ச் சொல்வதாலும் சகலருக்கும் அதுகொண்டு, இல்முல் யகீன் திட்டமான அறிவு உண்டாகி இருப்பதாலும், ஹக்குக்கும், கல்குக்கும் அதைப் பார்க்கச் சிறப்பான வர்ணிப்பு ஒன்றுமில்லாததாலும், அதனுடைய வரிசையில் வந்திருக்கிற குர்ஆன் ஹதீதுகளையும் மற்றும் வேதாந்தம் சித்தாந்தங்கயும் எடுத்து உனக்கு அத்தாட்சி காட்ட வேண்டியதில்லை.

ஆனால், நபுஸே! உனக்குச் சுருக்கமாக ஒரு உபதேசம் சொல்கிறேன். எனது மாதாபிதாக்கள் இருவரும் எனக்குக் கல்வியைக் கற்பிக்க முயற்சித்தார்கள். நீண்டகாலம் நான் முரண்டு பண்ணினேன். அப்பால் அதில் பூணுதலாகியும் நாளிதுவரை நான் நாடியிருக்கிற அறிவில் ஒரு அணுவளவும் நான் அறியாதிருந்தும் அந்த அறிவுக்கு பகரமாய் இந்த உலகம் முழுவதையும் ஏக சக்ரவத்தி ஒரு குடையில் ஆளும்படி எனக்குக் கொடுக்கப்பட்டாலும் அல்லது எட்டு சொர்க்க லோகங்களையும் கொடுக்கப்பட்டாலும் இந்த அறிவைப் பார்க்கிலும் இவைகளைத்

தெரிந்துக் கொள்வது ஷிர்கு, பெரும்பாவம் என்றும், மருட்டுதல் என்றும், மடத்தனம் என்றும் திட்டவட்டமான அறிவு எனக்குண்டாகியிருப்பதுடன் உன்னுடைய மயக்கத்தாலும், நான்கு சத்துருக்கள் செய்யும் சதிமானத்தாலும், மோசத்தாலும், மேலெண்ணத்தாலும் நான் மோசம் போகிறேன் அல்லாது அறிவுடைய மேலாம்பரம் உனக்கு தெரியாத்ததில்லை. உணர்ச்சை பெற்றுக் கொள்.

ஆனால் அறிவுடைய பாரதூரம் துலாம்பரமாகி விட்டது. அறிவு அறிவென்று சொல்கிறார்கள். அறிவென்பது இன்னது என்று நிச்சயமாக்கியிருக்கிறார்கள் இல்லை. உலமாக்கள் என்று பேர் பெற்றவர்களும், ஒரே சொல்லாகச் சொல்லவில்லை.

**அறிவு என்பது என்ன?**

ஆகையால் அறிந்து கொள். இல்மாகிறது அல்லாஹ்வுடைய ஒளிவுகளில் நின்றுமுள்ள ஒளிவாக இருக்கும். அதை அவனுடைய அடியார்களில் நின்றும் தான் நாடியவர்களுடைய கல்பில் வைத்து சோதிப் பிரகாசமாய் ஏகமாய் எரிக்கச் செய்கிறான். அந்த ஒளிவினால் சகல வஸ்துவின் அந்தரங்கத்தின் பேரில் அதை உதயமாகிப் பார்க்கும்படியாய் அடிமையுடைய உள்ளத்தில் ஆண்டவன் நிறுத்துகிற ஓர் பொருளாயிருக்கும்.

அதாகிறது வெளிப்பார்வைக்குச் சூரியனுடைய பிறமை எப்படியிருயிருக்கிறதோ, அப்படிப்போல் அகப்பார்வைக்கு இல்முடைய பிரகாசம். அதென்னவானால் சூரியன் இல்லாதிருந்தால் வெளிக்கண் யாதொன்றையும் பார்க்கமாட்டாது.

இரவு காலத்திலானாலும் சூரியனுடைய சொச்ச ஒளியினால் பார்வைத் தெரியுமல்லாது வேறில்லை. சூரியனுடைய பிரகாசம் செல்லாத சிறிய கட்டுமானங்களில் கூரிய இருளில் நேத்திரங்களை விழித்துப் பார்த்தாயாகில் கண் குருடாய் ஒன்றும் தோணாதிருப்பதை அறிவாய்.

ஆனால், சந்திரன் முதலாகிய மற்ற தீபங்களுடைய பிரகாசத்துக்கும் சூரியன்தான் அசலேயல்லாது வேறில்லை. அப்படிப்போல் அகப்பார்வை இல்மெனும் சூரியனால்தான் சகல வஸ்துவின் அந்தரங்கத்தை அகக் கண் காணுமல்லாது வேறில்லை.

ஆனால் இப்போது வருவிக்கப்பட்டதால் இல்மென்கிறது அல்லாஹ்வுடைய ஒளிவில் நின்றுமுள்ளதென்றால் எல்லோருக்கும் அவரவர் மட்டுக்கு ஒருவருக்கு மிகுதமாகயும் சிலருக்கு கொஞ்சமாயும் அறிவு இருக்கிறதென்று நீ எண்ணுகிறாய். அப்படி எண்ணாதே.

ஏனென்றால் சிரைக்கத் தெரிவதும் ஒரு அறிவுதான். அந்த அறிவை அதில் நாடப்பட்டதல்லை. ஆகிலும் அது அறிவாகவும் மாட்டாது. அதையல்லாம் அறிவென்று சொல்கிறதானால் மிருகஜாதி சில அறிவில் இன்சானைப் பார்க்கிலும் ஆயிரமாயிரம் மடங்கு அதிக அறிவுடையதாக இருக்கிறது.

ஏனென்றால், இன்சான் கைத்தொழில் மிகவும் தந்திரமாகச் செய்கிறான் என்றால் கறையான் தேன்குளவி முதலாகிய சில புழு பூச்சிகளும், தூக்கணத்தான் குருவி முதலாகிய சில பட்சிகளும் செய்வதுபோல் செய்யமாட்டான். ஆகிலும் குரங்குக்குள்ளக் கூர்மையாவது மாட்டுக்குள்ள மதியாவது மனிதனுக்கில்லை என்பது நன்றாய்த் தெரிய வருகிறது.

ஐயறிவுக்குத் தோற்றாத கால நிகழ்ச்சி வேளை நிகழ்ச்சியிலும் காகம், கரிக்குருவி கோட்டான், கிள்ளை, சேவல், செம்போத்து முதலானது இன்சானுக்கு உஸ்தாதாகயிருக்கிறது. சந்த பரிச ரூப ரச கந்தமென்ற ஐயறிவும் அதுவே மிகைப்பாக இருக்கிறது. மொத்தத் தொகையில் ஆராய்ந்து பார்த்தால் இல்வாழ்க்கையின்பத்தையும், இச்சையையும் நிறைவேற்றுவதற்குள் சகல விசயங்களிலும் இன்சானைப் பார்க்க விலங்கினமே மேலானதாயிருக்கிறது.

ஆகையால் மாண்டு பிழைத்து மானிடனாய் ஜென்மம் எடுக்கும் மகிமையை அறிவது ஒன்றேயல்லாது வேறில்லை. ஆனதால் வார்த்தைகளால் மருட்டி மருட்டி மதிமயங்கியும் மயக்கியும் அறிவாளிகளென்ற பேர்பெற்று குர்ஆன் ஹதீது முதலாகிய சகல அறிவுகளும் தெரிந்தும் மஷ்ரிக்குத் தொடுத்து மஃரிபுவரைக் கீர்த்தியாகி இருப்பவர்களில் மிகுந்தவர்களும் அந்த ஒளிவுக்குக் குறுக்கிட்டு அந்த அறிவுகளைத் தெரிந்திருப்பார்கள் என்று எண்ணாதே. அந்த அறிவு தூர்ந்தேபோய்விட்டது கொஞ்சத்தைத் தவிர. அந்த அறிவுடையவர்களை கண் படைத்தவர்கள் காண்பார்களல்லாது, முகத்திலே இரண்டு புண் படைத்தவர்களால் காணக் கூடாது.

இக்காலத்தில் உலமாக்கள் என்று பேர் பெற்றவர்களில் மிகுந்தவர்களும் சரியான அறிவுடையவர்கள் அல்ல என்று நான் சொன்னதற்கு அதிகத் தூரமாயிருக்கும். ஏனென்றால் அவர்கள் தாங்கள் உசாராகாமலும், நீயும் மேல்பூச்சான அவர்கள் சொல்லையேக் கேட்டு, அவர்களையே கனமாகக் கண்டு உலமாக்களுடைய வரிசையில் வந்திருக்கிற பாரதூரங்கொண்ட ஹதீதுகளை எல்லாம் அவர்களிலேயே வைத்துப் பார்த்து, உன்னுடைய இஃதிக்காதை அதிகப்படுத்திப் போட்டாய்.

அப்படியானால் அவர்களில் சில சோதனையைப் பார். எல்லாத்தையும் விட்டுப் போட்டு ஈமானுடைய பாபில் அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்ள வேணும் என்பார்கள்.

ஆனால் அல்லாஹ்வென்றது ஏதாயிருக்கும் என்றால், நம்முடைய கருத்தில் அல்லது காபிருடைய கருத்திலாவது ஊசாடாமலிருக்குதே, அதையேத் திரும்பவும் சொல்வார்கள். எப்படியானால் அல்லாஹ் கட்டையனில்லை, நெட்டையனில்லை, கறுப்பில்லை என்பார்கள். இந்தச் சொல்லுக்கு முற்பட நம்முடைய கருத்து மாற்றமாக எண்ணியிருக்கவே இல்லை. ஆகிலும் இந்த விசயத்தில் எவ்வளவு பேசினாலும் ஒரு குறிப்பைக் காட்டாதபடியால் இதை விட்டு விடுவோம்.

அப்பால் மலாயிக்கத்துகள் என்பது ஏதென்றால் அதிலும் அவர்கள் சொல்லித் தருகிறது மூடலாக இருக்கிறதேயல்லாது வேறில்லை. அப்பால் வேதம் என்பது ஏதென்றால் நாம் தட்டழிவது போல் தட்டழிகிறார்கள். அப்பால் ரசூல்மார்கள் முதல் சகலதிலும் அப்படியே

ஆகிவிடுகிறார்கள். அப்பால் இஸ்லாமுடைய காரியத்தில் கேட்டாலும் அப்படியே இருக்கிறார்கள். இன்னமும் ஏதாவது இது என்ன காரணத்துக்காக பர்ளாக்கப்பட்டது ஹறாமாக்கப்பட்டது? இதுக்கு சிர்றென்னவென்றால், இதுவெல்லாம் வந்தபடி வணங்கக் கடமையே அல்லாது இவைகளுக்கெல்லாம் காரணம் கேட்பது மடத்தனம் என்கிறார்கள்.

அவர்கள் சொல்வது ஹக்கான சொல்லாயிருந்தாலும் விளங்குகிறவர்களும் விளங்காதவர்களும் உண்டு. விளங்கியதனால் ஈமானுடைய நூறு அதிகமாகவும் போதும்.. அப்படியிருக்க அந்தக் கேள்வியின் பாபை அடைத்துப் போடுகிறார்கள்.

அதிலும் தங்களுக்குத் தெரிந்தால் அவ்விதம் சொல்லமாட்டார்கள். கூடியவரை இழுத்துப் போட்டாவது சொல்லியேத் தீர்த்துப் போடுவார்கள். ஏனென்றால் வாய் மூடியிருக்க வேண்டிய பாபை அவர்கள் திறந்து தௌஹீதென்றும், மஃரிபா என்றும், ஹக்காயிகு என்றும் கங்கு கரையில்லாமல் பேசி கால் சருகச் செய்வது இல்லாமல் தாங்களும் கரியபாகம் தெரியாமல் சருகி அல்லாஹ்வை அறிவதும் அறிந்தவர்களும் அல்லாது மற்ற அறிவெல்லாம் வீணறிவே அல்லாது வேறில்லை.

இதற்காகத்தான் சாலிஹானவர்களில் ஒருவர் சொல்கிறார்: குர்ஆன் ஹதீது முதலானதுகளை மிகுதமாய் ஓதிய ஆலிமாகிய ஒரு சினேகிதர் எனக்கு இருந்தார். அவர் மவுத்தானத்தின் பேரில் இருளடைந்த ஓர் காம்பரையில் அவரைப் பார்த்து,'நீர் மிகுந்த இல்மையுடையவராக இருந்தீரே. அல்லாஹ் தஆலா உமக்கு என்ன அன்பளிப்பு செய்தானென்று கேட்டபோது, 'அல்லாஹ் என்னை கடிந்து உருக்கி துன்யாவை விட்டு என்னை அறியாமல் நீ புறப்பட்டாய் அல்லவா?' என்று சொன்னான் என்றார்.

லாஹிர் வெளியிரங்கமான இல்மில் எவ்வளவு மேலிட்டாலும் அல்லாஹ்வை அறியக்கூடாது. ஆகிலும் பர்ளு, ஷர்த்துகளை அறிகிற மட்டுக்கு அதில் படித்தால் போதும். அதற்கு உலமாக்களால் அரபுத் தமிழில் கோர்வை ஆக்கப்பட்டிருக்கிறது போதும்.

இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் போல் உள்ளவர்களில் அனேகர்களும் ளாஹிர் உடைய இல்மில் காலத்தைப் பழுதாக்கிப் போட்டதைப் பற்றி மிகவும் கவலையடைந்தார்கள். தீர்மானம் அபூபக்கரில் பாஸகானிய்யி என்ற புகறாக்களிலுள்ளவர்களை அடுத்ததின் பேரில் அல்லாஹ்வை அறிகிற இல்மின்பேரில் தெண்டித்தார்கள்.

இன்னும் பகுர் ராஸீ ரஹிமஹுல்லர் என்ற இமாம் லாஹிருடைய இல்மில் கங்குகரையில்லாச் சமுத்திரம் போலாகியும் முஹ்யித்தீன் இப்னு அரபி ரலியல்லாஹு அன்ஹு பகுருர் ராஸீயை குறைச்சலாய் பேசி மிகுந்த வஸிய்யத்தெல்லாம் செய்திருக்கிறார்கள்.

எத்தனையோ பேர்கள் காலமெல்லாம் லாஹிருடைய இல்மில் வாழ்நாட்களைத் தொலைத்ததின் பேரில் அழுது சலித்து இருக்கிறார்கள். இவ்வளவு மட்டிலும் உனக்குப் போதும்.

ஆகிலும் அறிவில்லாமல் வணக்கம் கூடவே மாட்டாது. அறிவில்லாதவனுடைய வணக்கமும், காபிருடைய வணக்கமும் தட்டப்பட்டதாக இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அறிவைப் படிப்பதெல்லாம் வணங்கவேயல்லாது வேறில்லை.

அதற்காகத்தான் وما خلقت الجن والانس الا ليعبدون *வமா கலக்த்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃபுதூன்* என்ற ஆயத்துக்கு ஜின்னையும், மனுவையும் என்னை வணங்கவே தவிர படைக்கவில்லை என்ற மஅனாயிருக்க *ஐலியஃரிபூனி* **என்னை அறியவே தவிர படைக்கவில்லை**யென்று இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு தப்ஸீர் செய்திருக்கிறார்கள்.

ஏனென்றால், வணக்கம் என்பது அடிபணிகிறது. ஒரு வஸ்துவின் வலுப்பத்தையும் மேலாம்பரத்தையும் அறியாமல் எவ்விதம் பணியக் கூடும். இன்னமும் அவர்கள் இவ்விதம் தப்ஸீர் செய்ததே சரி என்று வேறே ஆயத்தும் ஹதீது குத்ஸியிலும் வந்திருக்கிறது.

ஆகையால், அறிவும் அதன்படி வணங்கவும் வேணும். இது இரண்டையும் தவிர உள்ளது இன்சானுக்கு அசலாகிய குணமேயில்லை என்று திட்டவட்டமாய்த் தெரிந்து விட்டது.

ஆனால் உவமையில் இல்மாகிறது மரம் போலும், இபாதத்தாகிறது கனிபோலும் அநேக அநேக உலமாக்களைச் சோடித்து சொல்லலாம். இது இரண்டிலும் மிகுந்த சிறப்புப் பொருந்தினது இல்முதான். ஏனென்றால், அது அசலாக இருப்பதால்.

ஆனால் காயாத மரத்துக்கு சிறப்பில்லை. இல்முதான் சிறப்புடையது என்பதற்கு அத்தாட்சி வேண்டியதில்லை. ஏனென்றால், இபாதத்துக்கு வக்த்து - நேரமுண்டும். இல்முக்கு வக்த்து இல்லை. அணையாடைப் பிள்ளையாயிருப்பது தொடுத்து கப்றில் புகுதும்வரை இல்முக்கு வகுத்துண்டென்றும் லாஹிர் ஹுகமாக்கள் சொல்லியிருந்தாலும் இல்முக்கும் மஃரிபாவுக்கும் மவுத்துக்குப் பின்னாலும் தீர்ச்சையில்லை.

இல்மைப் படிப்பதால் இபாதத்துக்கு இடைஞ்சல் இல்லாமலும், இபாதத்துச் செய்வதால் இல்முக்கு இடைஞ்சல் இல்லாமலும் இருக்க வேணும். ஆனால் இவ்வளவு மட்டில் நீளமாக இல்மைப் படிக்க வேண்டுமென்று சொன்னதால் நீ உசாராகி அறிவையுண்டாக்கிக் கொள்ளும் வழி தெரியாமல் ஏங்கி மயங்குகிறாய்.

இன்னமும் உலமாக்களுடைய மஜ்லிஸில் போய் ஹாலிராகி அதபுடன் கால்மடித்துக் கேட்க வேணுமென்றும் எண்ணுகிறாய். ஆனால் இவர்களிடம் நீ போய் கேட்டவுடன் கிதாபு வீட்டிலிருக்கிறது நான் ஹதீது சொல்ல நினைத்து வராதபடியால் கொண்டு வரவில்லை. ஆகையால், நாளை கொண்டு வந்து சொல்கிறேன் என்கிறார்.

அல்லது நீ கேட்ட கேள்வியானது, தீனில் யார் மீதினும் அறிய வேண்டிய பர்ளு அய்னாக இருக்க, அவருடைய சிந்தையில் ஒரு போதையிலும் ஊசாடாதபடியாலும் நீ கேட்டதின் பேரிலாவது நாமும் தெரிய வேணுமே என்ற எண்ணமும் இல்லாமல், நல்லது கிதாபைப் பார்த்துச் சொல்லுகிறேன் என்றதில் அவருக்குத் தட்டுப்படாமல் அல்லது



www.sufimanzil.org

தெரியாமலிருந்ததிலும் வேறேயொரு இல்மாளியிடம் கேட்டுப் படித்துச் சொல்பவர் இல்மாளியாக மாட்டார்.

தவிரவும் தான் படிக்க வேணுமென்பது தனக்குத் தெரியாதவர் இடம் இல்மைப் படிக்கிறது எவ்விதம்? ஆகையால் அறிந்த நாயகமார்களிருப்பார்கள் என்கிற இஃதிகாது நிர்ணயத்துடன் உலக முழுவதும் இவ்விதமே மயங்கி நபியுல்லாஹ் உணர்ச்சைப் பூட்டிக் குறிப்பிட்டுச் சொன்ன நாள் திட்டவட்டமாய் வருடம் ஆயிரத்துக்கு முற்படவே வந்து விட்டபடியால் நம்மிலே நாம் யோசிக்க வேணுமல்லாது, உலமாக்கள் என்று பேர் பெற்று அந்தரங்கத்தில் ஒன்றும் இல்லாதவர்களிடம் நாம் செல்லாதிருப்போமாகவும்.

ஆண்டவர்கள் சொன்னதாவது இஸ்லாம் நவமாய் யாருமற்ற பரதேசி போல் வெளியாச்சுது. இனிமேலும் அப்படித்தானாகி விடுமென்றார்கள். ஆகையால் இல்மில் யோசிப்போம்.

முதலாவது நம்முடைய ஊசாட்டத்திலுண்டாகிறது என்னவென்றால் யாராலும் அளவிடக் கூடாத அற்புதமான அழகு பொருந்திய இடைவிடா இரகசியங்களைப் பொதிந்த இந்த ரூபம் எவ்விதமம் எடுத்தோம்? வேறே ஒரு வஸ்துவின் அதிகாரம் நம்மில் செல்லாமல் நாமாகவே ஜீவித்திருக்கிறோமா? அல்லது இன்னமொரு வஸ்துவின் வருதிப்படிதான் நிலை நிற்கிறோமா? என்று யோசித்தவுடன் வருதிப்படிதான் என்பது நிச்சயமாகிறது.

ஏனென்றால், உதிர்ந்து போகிற ஒரு ரோமத்தை நிறுத்தவும், அழகுக்காய் விரும்பிய ஒரு ரோமத்தைத் தோற்றச் செய்யவும் வேண்டாத கொட்டாவி, திடுக்கம், துளும்புதல் போல் உள்ளதை விலக்கவும், நினைக்க வேண்டியதை நினைக்கவும், வேண்டாத்ததை விட்டு மறுக்கவும் நம்மால் முடியவில்லை.

அப்படியானால் இந்த அதிகாரம் நம்மில் அந்த வஸ்துவுக்கு இப்போது இடையில் குறுக்கிட்டதா? அல்லது ஆதியிலுள்ளதா? என ஆராயும் இடத்தில் நமக்கு இப்போது முப்பத்தி நாலு பராயம்(வயது) நிரப்பமாகி( இதைக் கோர்வை செய்தவருக்கு 34 வயதாகி விட்டதால் இங்ஙனம் குறிப்பிடப்படுகிறது. மனிதனுக்கு 17 பிராயம் வரை சிறுபிள்ளை என்றும், அதுமுதல் 34 வயதுவரை வாலிபம் என்றும், அதுமுதல் 60 வரை நடுவயதென்றும், அதுமுதல் கடைசிவரை விருத்தாப்பம் என்றும் சொல்லப்படுகிறது|) நடுவயதாகி இருப்பதால் இது தொடுத்து நம்முடைய தோற்றத்துக்கு ஆதி எதுவோ அதுவரை ஆராய்ந்து பார்ப்போமாக.

நாம் இதற்கு மூன்று வருடத்திற்கு முன் வாலிபமாகவும், அதற்கு முன் சிசுவாயும், பாலகனாகவும், மதளையாயும், அப்பால் கெற்பக் குவளரையில் தசைக் கட்டியாய் இரத்தக் கட்டியாய் நுத்துபாவாய், இந்திரியமாய் அப்படியேப் பிதாவின் சிரசிலும், அப்பால் தந்தை தாய் புசித்த பழவர்க்கம், தளவர்க்கம்,

தாங்கிச வர்க்கமமாய் அதற்குண்டான சுவையாயும், நிறமாயும், சத்தாயும், அதனதின் குணமான குளிர்ச்சி, சூடு, சீதளம், வறட்சி, வாதபித்த, சேத்துமம் என்ற நாடிக்குணங்களாயும், மாங்கிசவர்க்க

முதலானதுக்கு ஏதேது குணமுண்டோ அதுவாயும், பிருதவி, அப்பு, தேய்வு, வாய்வு, ஆகாயம் என்ற பூதங்களாயும்,

அதற்குமேல் சொல்லப்படுகிறபடி ஒளிவாயும், அதற்கப்பால் சொல்லேது பொருளேதென்று காட்டொண்ணா அந்தரங்கமாயும் இருப்பதில் எவ்விதமும் சகலதுக்கும் ஆதியான ஒன்று வேண்டியதாகவே இருக்கிறதென்றால் தீர்மானம் முற்றாது. அப்படியொன்றில்லை.

நாமாக படிபடியாய் இறங்கி வருகிறோம் என்றால் விற்றில்லா விருட்சமும் குலாலனில்லா குடமும், தச்சில்லா மாளிகையும் உண்டாகுதென்றதாகிறது, நாம் வந்தவழி நமக்குத் தெரியாதிருந்த போதிலும் நம்முடைய பார்வையிலாவது அபிப்பிராயத்திலாவது அடி மூலமில்லாமல் ஒன்று உண்டாகக் காணவுமில்லை. தோற்றவும் இல்லை. அப்படி எல்லாம் நம்முடைய (அக்லுக்கு) அத்தாட்சி சொன்னாலும் ஏந்துக் கொள்ளாது.

ஏனென்றால் ஒன்றே சகலதுக்கும் அடிமூலமாயும், ஆதியாயும் சொன்னால் அது எவ்விதமுண்டாச்சுதென்றும், அடிமூலமொன்றில்லை என்றால் மற்றது எப்படி உண்டாச்சுது என்றும் இரண்டும் பேசாமல் தட்டளிந்து மதிமயங்கி பொறி கலங்கி நிற்கும் வேளை ரசூல்மாhர்களென்ற சிலர்களால் சகலதுக்கும் ஒரு ஆதி உண்டாகியே இருக்குதென்றும், அந்த ஆதி என்ற ஒரு வஸ்துவானது எங்களுடன் பேச நாங்கள் கேட்கிறோம் என்றும்,

அதில் சிலதை வேதம் என்றும், இன்னும் அந்த அக்லானது கண்டிருப்பதற்கும் கேட்டிருப்பதற்கும் மாற்றமாய் சில திஷ்டாந்தரமான அற்புதங்களை அவர்கள் செய்தும், நாங்கள் சொல்கிறபடி நீ நடப்பாயாகில் நாங்கள் சொன்ன உண்மையை அறிவாய் என்றும் சொல்லும்போது நீதப்படி ஆதியொரு வஸ்து உண்டாகி இருக்கிறதென்ற கட்சியே வலுவாகிறது.

ஏனென்றால் இரண்டும் பேசாமலிருந்த அக்குலின் பேரில் அதிகாரம் செலுத்தி இன்னவிதமான நம்புதலில் ஆயிருவென்று நிறுத்தாட்ட வந்தவரும் நிஜஸ்தராக இருப்பதாலும், இரண்டால் ஒருத் தீர்ப்புக் கிடைக்க வேண்டும் என்று வழிபார்த்து இருந்தபடியால் அவர்கள் சொன்னதே ஹக்கு - உண்மை என்றும் நிச்சயித்தோம்.

ஆனால் ரசூல்மார்கள் அந்தக் காலத்தில் இருந்தார்களல்லாது இப்போது இருக்கிறார்களா? அல்லது ரசூல்மார்களை இன்னார் இன்ன விதம் என்று அணுவளவாவது ஊசாட்டத்திலும் உண்டாகாமலும் இந்த குர்ஆன் முதலிய வேதங்கள் இன்னது என்றும்,

அறவே அறியாமலிருக்கிற காபிரானவர்களும் சகலதுக்கும் மூலப் பொருளாய் முதன்மையாய் ஒரு வஸ்து உண்டாகியே இருக்கிறதென்றும், வேதங்கள் நாலு உண்டாகியே இருக்கிறதென்றும் எவ்விதம் சொல்கிறார்கள் என்று நீ கேட்கப் போதும்.

ஆனால் உன்னுடைய குருட்டுத்தனத்தால் இவ்விதம் கேட்டாயல்லாது ரசூல்மார்கள் வந்து நமக்குத் தீர்ப்புச் செய்தார்கள் என்றதில் வெளியில் அவர்கள் ரூபமெடுத்து வந்ததையும் அவர்கள் காலத்தில் அவர்கள் வாக்கால் திருவுளம் பற்றியதையும் யோசித்து

ஒருவரையொருவர்த் தொடர்வதென்னும் தக்லீதாகிய ஈமானையுண்டாக்கிக் கொள்ள நாடுகிறாயோ அதை விட்டுவிடு.

நான் சொல்வதொன்றையாவது உந்தன்னை விட்டகலாமல் அவர்கள் தாங்களே குர்ஆனாக இருந்த ஆரிபூன்களுடையக் கருத்துக் கொண்டு கடந்தேற வேண்டுமல்லாது சொல்கிறார்களே ஒப்புக் கொள்ளத்தானே வேணும் என்ற கலக்கத்தை விட்டு விடு.

அதென்னவானால், الموجودات كلمات الله الورد ات رسل الله (*அல்மௌஜூதாத்துக் கலிமாத்துல்லா அல்வாரித்தாத்து ருஸ்லுல்லாஹ்*) உண்டாக்கப்பட்டவைகள் அடங்களும் அல்லாஹ்வுடைய கலிமாக்கள் என்னும் வார்த்தைகளாயிருக்கும். நினைக்காமல், யோசிக்காமல் கருத்தில் வருகிற நல்ல எண்ணங்கள் அடங்களும் அல்லாஹ் உடைய தூதர்களாக இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால் நாம் தானே உருவானோமா? அல்லது ஒரு வஸ்துவிலிருந்து நம்மை உண்டு பண்ணினதாவென்று யோசித்துக் கொண்டிருக்கும்போது, இந்த எண்ணங்களை அடக்கி ஒடுக்கி அல்லாஹ் ஒருவனிருந்து உண்டு பண்ணுகிறான் என்று கருத்தில் வம்பாய் வருகிறவைகளாயிருக்கிறதை ரசூல்மார்கள் என்று சொல்லப்படுகிறது.

இவ்விதம் சொல்லப்பட்டதால் வெளியில் ரசூல்மார்களிலிருக்கிறார்களா அல்லவா என்று நீ எண்ணுகிறதாகத் தோணப்படுகிறது. அஸ்தக்பிருல்லாஹ். எனக்கு நான் இந்தச் சொல்லை வெளிப்படுத்தினதெல்லாம் ரஸூல்மார்களுடைய தகுதியையும் பாரதூரத்தையும் அதிமாக்கி அவர்களைக் கொண்டு ஈமானை அதிகப்படுத்தவே அல்லாது வேறில்லை.

முஸ்லிம், காபிர் சகலருடைய கஸ்பிலும் அக்குலின் பேரில் தீர்ப்புச் செய்கிற நல்வழியில் சேர்ப்பித்து வைக்கிற நீதமாகிய நல்ல எண்ணம் எப்போதும் அடந்தேறலாக வருகிறதுடன் அதனளவில் கூர்ந்து யோசிக்காமல் காபிர்கள், குபுரிலும் முஸ்லிமானவர்களில் மிகுந்தவர்களும் தங்கள் மருட்டதலிலாகி விடுகிறார்கள்.

காபிர் கூர்ந்து யோசித்தால் முஸ்லிமாகி நேர்வழி பெறுகிறான். முஸ்லிம் இபாதாதத்து முதலானவைகளை அதிகப்படுத்துகிறான். ஆகையால், (ஆலம்) *கைய்பில்*- மறைவான ஆலத்தில் அவர்கள்தான் அவ்விதம் வெளியாகி இருப்பதும்(*ஆலம் ஷஹாதாவிலும்*) அவர்கள்தான் வெளியாகி நேர்வழியில் அழைக்கிறதும் என்று உணர்ச்சை பெறுவதுடன், இந்த ஒரு அசலை நன்றாக ஆராய்ந்தாயாகில் மிகுந்த இல்மும் உனக்கு வெளியாகும்.

ஹகீகத்தில் அக்குலுக்குத் தீர்ப்புச் செய்பவர்கள் அவர்களாக இருப்பதுபோல் லாஹிரிலும் மனிதப் பண்பான குணமெடுத்து வந்து அவர்களே தீர்ப்புச் செய்வார்கள். ஆராய்ந்து பார்!

ஒருபோது அல்லாஹ் படைத்ததில் முந்தினது அக்லென்றும், ஒருபோது அல்லாஹ் படைத்ததில் முந்தினது கலமென்றும், ஒருபோது (ஜாபிரே) அல்லாஹ் படைத்ததில் உம்முடைய நபியுடைய ரூஹென்றும் மூன்று ஹதீதும் மூன்று விதமாகச் சொல்லியிருப்பதும் முறாது ஒன்றேயல்லாது வேறில்லை.

ஆனால் அல்லாஹ்வுடைய வஹ்தானிய்யத்தைத் தரிபடுத்தி வைக்கிறதில் இரண்டுக்கிடையில் ஆமென்றும் அல்லவென்றும் சொல்லாமல் மயங்கினது அக்லுல் மஆஷேயல்லாது வேறில்லை.

ஏனென்றால், அக்குலாகிறது **அக்லுல் அவ்வலென்றும், அக்குலுல் குல்லென்றும், அக்குலுல் மஆஷென்றும்** மூன்று வகையாயிருக்கும். அல்லாஹ் படைத்ததில் முந்தினது, அக்லென்றதில் அதுகொண்டு முறாது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமில் நின்றும் ஜிப்ரீலுடைய அசலானதால் நீதமாக அல்லாஹ் ஒருவனிருக்கிறானோ என்று சிந்தையில் வருகிறது. அதன் புறத்திலுள்ளதாகவும் அல்லாஹ் ஒருவனென்று வஹ்தானிய்யத்துடைய புறத்தில் நின்றுமுள்ளதேயல்லாது வேறில்லை.

முந்தி படைத்ததென்றுது அக்குலுல் அவ்வலை நாடப்பட்டதாக இருக்கும். அக்குலுல் குல்லு என்றது அதற்கு இரண்டாம் படியிலும் அக்குலுல் மஆஷீ என்றது மூன்றாவதாயும் அதுதான் பலவிதமான உத்தேசத்தையும் பொய்யான ஊசாட்டங்களையும் கொண்டு வருகிறது.

ஆனால் இந்த மூன்றும் காரியம் தன்னில் ஒன்றே அல்லாது வேறில்லை. இதன் விபரங்களை பின் விபரிக்கப்படும். இன்சானாய் பிறக்கும்போதே அல்லாஹ் ஒருவனுண்டுமென்றும், அவனுடைய வஹ்தானிய்யத்தைத்தரிபடுத்திப் பிறப்பதும் தவிர மூமின், காபிர் சகலரும் அல்லாஹ்வெனும் பராபர வஸ்துவாகிய கடவுள் என்றொருவன் இருக்கிறான் என்றே நிச்சயித்திருக்கிறார்கள். அந்த எண்ணம் வரித்தாதென்னும் ரசூல்மார்களல்லாது வேறில்லை.

இதற்காகத்தான், ரசூல்மார்களை அல்லாஹ் ஒருவன் உண்டுமென்று அறிவிக்கிறதற்காக அனுப்பப்படவில்லை. ஆனால் உண்டாயிருக்கினென்ற உறுதிப்பாடு அவர்கள் புறத்தாலே கல்பில் உண்டாகியிருக்கிற எண்ணம் பலவிதமாய்க் குலைந்து போகாமல் அந்த எண்ணத்தைத் தரிபடுத்தி தௌஹீதென்னும் ஓர்மைப்படுத்தி வணங்க வேண்டியே அழைக்க வந்தார்கள்.

அதற்காகத்தான் குர்ஆனில் முஹம்மதே! அந்த கல்குகளிடத்தில் அவர்களைப் படைத்தது யார் என கேட்டபோதில் அல்லாஹ் என்று சொல்லுகிறார்கள் என்றும்,

அல்லாஹுத்தஆலா மனிதர்களை யாதொன்றின் பேரிலுண்டு பண்ணியிருக்கிறானோ அந்தப் பிறவிக் குணத்தையே பூண்டுக் கொள்ளுங்கள். அல்லாஹ் படைத்த விதத்தை பதல் செய்யக்கூடாது. அதுவே நிலைபாடான மார்க்கம்.

ஆகிலும் மனிதர்களில் மிகுந்தவர்களும் அறியமாட்டாரென்றும், இன்னும் மிகுந்த இடத்திலும் முஹம்மதே! நீர் சகலருக்கும் ஞாபகத்தையும் நினைப்பையும் உண்டாக்குமென்றும், இப்படிப்போல் அனேக ஆயத்துக்களும்,

இன்னும் ஏதோ திரவியங்களை சேகரிக்கவும் சகலரையும் அடக்கி அரசாண்டு தான் பெரியவரென்று சகலரும் பணிய எண்ணங் கொள்கிறார் என்றும் குறைஷி காபிர்கள் எண்ணி நபியுல்லாஹ்வுடைய கருமத்தில் பதவிசாய் தனிப்பட இருந்து யோசிக்காமல் ஏகக் கூட்டங்களாய் கட்சி வாதமாய் அவர் எதைச் சொன்னாலும் எவ்வித அற்புதத்

திருஷ்டாந்தரங்களைக் காட்டினாலும் ஒப்பாமல் ஆட்சேபித்து அவர்களை முகப்பங்கமாக்கிப் போடவே வேணுமென்ற எண்ணங் கொண்டே முரண்டு செய்தார்கள்.

அப்போதையில் அனேக திருஷ்டாந்தரங்கள் காட்டியும் ஒப்புக் கொள்ளாதிருந்தபோது குர்ஆனில் குறைஷிகளே! உங்களுக்கு நான் உபதேசம் சொல்கிறேன். அது என்னவெனில், அல்லாஹுத்தஆலாவுக்காக வேண்டி நீங்கள் அந்தக் கூட்டங்களை விட்டொழிந்து இரண்டிரண்டு பேராயும் தனித்தனியாயும் இருந்து உங்களில் அல்லது என்னில் ஏதாவது பயித்தியமற்றது இருக்குதா என்று யோசித்துப் பாருங்கள் என்று முஹம்மதே! சொல்லுமென்று அல்லாஹுத்தஆலா திருவுளமானான்.

அவ்விதம் யோசித்தவர்கள் ஒப்புக் கொண்டு மூமினாகி பலம் பெற்றார்கள். அல்லாதவர்கள் காபிராகி செத்தார்கள். இன்னமும் சற்குணங்களை நிறப்பமாக்கி வைக்கவே என்னை அனுப்பப்பட்டதென்று நபியுல்லாஹ் திருவுளமாயிருக்கிறார்கள்.

இன்னமும் மூசா ஈஸா அலைஹிமஸ்ஸலாம் உடைய நாளையிலுள்ள ஹுக்கமாக்களில் சிலர்கள் நீர் கொண்டு வந்த மார்க்கமும் இல்மும் சரிதான். ஆகிலும் எங்கள் கல்பில் அதற்கு மாற்றமாக ஒன்றுமில்லை. உம்மைக் கொண்டு நாங்கள் ஈமான் கொண்டு கலிமா சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை என்று விலகிக் கொண்டார்கள்.

ஆனால் இந்த ஹுக்கமாக்கள் நுபுவ்வத்தை இன்காறு செய்ததெல்லாம் அவர்கள் சொல்லுகிறார்கள்: யாராகிலும் சரீர இச்சைகளை வெறுத்து லோகத்தில் வணங்கிவருகிற நீதமான சற்குணங்களைச் சரியாக கொண்டு வந்து கல்பைத் தெளிவாக்கினால் மேலோகத்திலுள்ள ரூபங்கள் முழுவதும் அவனிலே பதிவாகி மறைவானதெல்லாம் வெளியாகிவிடும். ஊடாலே யாதொன்றும் அவனுக்குச் செலவில்லை என்றார்கள்.

அதற்காகத்தான் முன்னூல்களாலும், தங்கள் கருத்தாலும். யோசிக்கத்தக்க புத்திசாலியில் அனேகர்களும் அவர்களுடைய நோட்டம் ஐயறிவு புத்திகளாலும் யோசித்து தாங்கள் அல்லாஹ்வை அறிந்த உலமாக்களாகி விட்டோமென்று எண்ணுகிறார்கள். தக்லீதுடைய ஈமான் சிஹத்தில்லை என்றும் சொல்கிறார்கள்.

காரியந்தன்னில் அவர்களுடைய அக்குலையும், ஐயறிவையும், நோட்டத்தையும் தொடர்ந்து சில சமயம் சரியானதை தப்பிதமாகவும், தப்பிதமானதைச் சரியாகவும் எண்ணுகிறார்கள். ஆகையால் அல்லாஹ் ஷறுஆக்கியதைத் தவிர எதைத் தொடர்ந்தாலும் கால் சருகுதலைக் கொடுக்குமல்லாது வேறில்லை என்று செய்குல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு சொல்கிறார்கள்.

இதில் முஅத்திலாக்களென்ற ஒரு கூட்டம் இந்த லோகம் தன்னாலே உண்டாகி தன்னாலே அழியுதேயல்லாது சிருஷ்டிக்கிறவன் ஒருவனில்லை என்றார்கள். அந்தச் சொல்லை குப்பாறுகளே ரத்து செய்து வேர்ப்பிடுங்கலாய் பிடுங்கியும் அவ்விதம் பேசுகிறவனை அவர்களே சாதி விலக்கி வைத்து அவன் மானம் மரியாதை இழந்திருப்பதால் அந்த மூதேவிகளுடைய

(இப்படிப்பட்டவனுக்கு பரம சண்டாளன் என்றும், வேதவிரோதி என்றும், நாஸ்திகன் என்றும் சொல்வார்கள்) தஅவாவை இதில் இழுத்துப் பேசாதிருப்போமாகவும்.

ஆனால் காரியம் தன்னில் அவர்களுடைய இயற்கை குணத்திலும் நாயன் ஒருவன் உண்டென்பது எப்போதும் அடந்தேறலாய் வந்துக் கொண்டிருக்குமேயல்லாது வேறில்லை. ஆகையால் அல்லாஹ் ஒருவனுண்டு என்பது இயற்கை குணமாகவே நிச்சயமாகி விட்டது. அப்படியானால் அவன் நாயனும் நாம் அடிமையுமாக இருப்பதால் அவனுக்குப் பொருத்தமான விதம் நாம் நடக்க வேண்டுமென்பது சிந்தையில் ஊசாடும்.

ஏனென்றால் ஒருவகை எண்ணத்தில் கனமாய்க் கண்டால் அவருக்குப் பணிந்தும் அவருக்குப் பொருத்தமாயும் நடக்க வேண்டுமென்பது நம்முடைய சிந்தையில் ஊசாடுவதும் தவிர அப்படியே நடத்தி வருகிறோம். ஆகிலும் அவர்களால் யாதொரு தீங்கையும் நலவையும் ஆசை வையாதிருப்பதுடன் பணிந்தும் அவர்களுடைய ஏவலுக்கு வழிப்பட்டும் விலகல்களைத் தவிர்த்தும் நடக்கிறோம்.

காபிர் முஸ்லிம் சகலரும் பாவம் புண்ணியம் இரண்டுண்டு என்றும், ஏவல், விலகல் இரண்டு உண்டு என்றும், இந்த உலக வாழ்க்கையை நம்பக்கூடாது, பொய்யான வாழ்க்கை என்றும், பொய்யான மாய்கை என்றும், தொழாமை, ஈயாமை முதலாகிய ஏது பாவங்களுண்டோ அதையெல்லாம் பாவங்கள் என்றும், தொழுகை, சகாத்து முதலானவைகளை நன்மையென்னும் மோட்சகதி அடைவார்கள் என்றும், நன்மையைச் செய்தவர்களுக்கு சொர்க்கமென்றும், தீமையைச் செய்தவர்கள் நரகம் என்னும் அதோகதியடைவார்கள் என்றும் முஸ்லிம் காபிர் சகலரும் ஒற்றுமையாக இருப்பதுடன் ஆயிரத்தில் ஒன்றில் காபிர் விதர்ப்பமாகிறதானாலும் அவர்களிலும் ஆழமாகிய கருத்தையுடையவன் நம்மிலுள்ள ஷரஇலுள்ள காயிதாப்படிக்குள்ளக் கற்பனையைக் கேட்டு யோசிப்பார்களாகில் யாதொரு விதர்ப்பமும் இல்லாமல் இந்த மார்க்கத்தையே ஒப்புக் கொள்வார்கள்.

இதற்குத் திருஷ்டாந்தம் என்னவானால் காபிர்களில் மிகுந்தவர்களும் தங்கள் மார்க்கத்தைப் பொய் என்று தள்ளி இதில் வருகிறார்கள். இஸ்லாமில் உள்ளவர்கள் அப்படிப் போகவில்லை. அப்படியே போனாலும் இதனுடைய உண்மையைக் கண்டு தேறாதவனாயிருப்பதுடன் அதில் போரதால் ஏதாகுதல் பொருள் பெண் ஆஸ்தி அல்லது உத்தியோகம் கால சீவனம் சேமமாய்க் கழிவது முதலாகிய ஓர் பிரயோசனத்துக்காக அல்லாது வேறில்லை.

இது பொய் அது உண்மை என்று அணுவளவும் கவனத்தில் ஊசாடி அர்ப்பமும்; விவேகமும் உடையவன் அதில் செல்லமாட்டான். குபுரிலிருந்து இவ்விடத்தில் சாப்பாட்டுக்காய் வருபவனை பாராட்டாத்தது போல் இதிலிருந்து அதில் புகுதுகிறவனையும் பாராட்ட மாட்டோம்.

எதிலும் விவேகமுடையவர்களை எமுகமாக்குவோம். ஆகையால் காபிர் முஸ்லிம் சகலரும் ஒத்துமையாயிருப்பதுபோல் நம்முடைய சிந்தையிலும் நாம் ஈடேற்றம் பெறுவதற்கு வழி

எவ்விதம் என்றும் எவ்வித வழிபாட்டை நாம் வழமையாக்கித் தகுந்த பிறத்தியாகிய கூலியென்னும், மோட்சத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

எதை நாம் உண்மையாய் நம்பி அகமும் புறமும் ஒன்றாய்க் கண்ணாறக் கண்டது போல் கண்டு வழிபட்டு அதுடன் ஒன்றையும் கூட்டாக்காமல் ஓர்மைபடுத்தியதின் வலுப்பத்தையும் அறிந்து அப்பால் பிரத்தியட்சமாய்க் கண்டு களி கூர்ந்திருக்க வேண்டுமென்று இருதயத்தில் இடைவிடா இரகசியமாய் எப்போதும் ஊசாடிக் கொண்டே இருக்கிறது.

ஆகையால் நபுஸே! ஆராய்ந்து பார். குர்ஆனில் தீனில் கட்டாயமில்லை. வழிகேட்டை விட்டு நேர் வழி வெளிச்சமாகி விட்டதென்றும் உங்களின் பேரில் தீனில் ஒரு வருத்தத்தை வைக்கவில்லையென்றும், நபி நாயகம் சர்க்குணங்களை நிறப்புவதற்காகவே என்னை அனுப்பப்பட்டதென்றும் திருவாய் மலர்ந்தருளியபடி இந்த மார்க்கத்தின் கட்டளையடங்களும் தன் தன் இயற்கைக் குணமென்னும் வழக்கத்தில் சாயாமல் நீதியைக் கண்டு கடத்தேறக் கருதியிருக்கும் கூரிய விவேகிகள் சிந்தையில் உண்டாகும் ஊசாட்டத்துக்குச் சரியாயிருக்குமல்லாது வேறில்லை.

ஆனால் சிலதின் முடிவு இன்னதென தெரியாதிருக்கும் வேளை அதில் ரஸூலுடைய கட்டளை இவ்விதமென்று வெளியானவுடன் அதை ஏற்றுக் கொள்வார்கள். ஆகையால் தீனில் வம்பிக்குதலும் யாதொரு வருத்தமும் கிடையாது. இப்போது சொல்லப்பட்டதற்கு திருஷ்டாந்தம் உன்னுடைய சிந்தையில் ஓர்வழிப்பாட்டால் கூலியைப் பெறுவது வழக்கமாயிருப்பதால் எதை நம்புவோம்.

நம்பினால் (இதுதான் ஈமான்) எவ்விதம் வழிப்படுகிறது( இதுதான் இஸ்லாம்) வழிப்படுவதில் பிரயோசனம் கொடாதது ஒன்றையும் கூட்டாக்காமல் எவ்விதம் ஓர்மைப்படுத்தி (இதுதான் தௌஹீது|) அதன் தகுதியை அறிந்து (இதுதான் மஃரிபத்து) தேர்ந்து தெரிசிக்கிறது என்ற நினைப்பு உன்னுடைய கருத்திலுண்டானதே. தீனும் அதினுடைய நாலு பர்ளுமல்லாது வேறே ஒரு கட்டளை ஒன்றும் கிடையாது.

ஆகையால், ரஸூல்மார்களை அனுப்பப்பட்டதும், வேதங்களை இறக்கப்பட்டதும் அறிவாளிகளுடைய அறிவிற்கும் மெஞ்ஞானிகளின் அனுபவத்திற்கும் ஒற்றுமையாயிருக்கும் அல்லாது வேறில்லை. ஆனால், தீனுடைய அறிவென்று யாதொரு உபயோகமில்லாமல் ஏற்பாடாயிருப்பதை இவ்வளவென்று எழுத்தாலும் சொல்லாலும் அளவிடக்கூடாத வீணாகிய அறிவுகளை எல்லாம் உலமாக்கள் என்று பேர் பெற்ற வீணர்கள் ஏற்படுத்தி என்போல் உள்ள வீணர்களை மருட்டிப் போட்டார்கள்.

ஆகையால், நபுஸே! அந்த மயக்கமும் மருட்டுதலும் உன்னை விட்டு நீங்கி தீனுடைய அறிவுகளை நீ கண்டு தெளிந்து கடத்தேறப்போதுமென்ற ஆசையோடு உனக்கு உறுதியாகவும் உபதேசமாகவும் சொல்லத் துவங்குகிறேன்.

**தன்பீஹுன் வஇஃலாம்**

நிச்சயமாய் அல்லாஹுத்தஆலா உங்களுக்கு அந்த வழிபாட்டைத் தெளிவாக்கி இருக்கிறான். ஆகையால் நீங்கள் வழிப்பட்டவர்களாக இருக்கும் போதல்லாது மாண்டு போக வேண்டாமென்று யஃகூபும் இபுறாஹீமும் அவர்களுடைய மக்களுக்கு வசிய்யத்துச் சொன்னதாக அல்லாஹுத்தஆலா குர்ஆனில் திருவுளமானான்.

இந்தவழிப்பாடு மார்க்கமென்று குறிப்பிட்டால் கேட்பவர்களுக்குத் தெரிந்ததாக இருக்க வேண்டுமல்லவா? அதற்காகத்தான் வேறே ஆயத்தில் அல்லாஹ்விடத்தில் மார்க்கமாவது இஸ்லாம் என்னும் வழிப்பாடாயிருக்கும் என்று வந்திருக்கிறது. ஆகையால் மார்க்கம் என்பது வழிப்பாடாச்சுது.

வழிப்பாடு அடிமையில் நின்றுமுள்ளபடியால் மார்க்கம் அடிமையில் நின்றுமுள்ளதுதான். மார்க்கம் அல்லாஹ்விடத்தில் நின்றுமுள்ளதென்று சொல்லப்படுவதெல்லாம் அடிமை வழிப்படும் விதத்தை அவன் ஏற்படுத்திய ஷறுஆகயிருக்கும்.

எப்படியானால் ஒரு ராஜன் குடி ஜனங்களுக்குச் சில பணிவிடைகளைக் கற்பித்து அதின்படி குடிஜனங்கள் நிறைவேற்றினால் இராஜனிலுள்ள பணிவிடையென்று சொல்வது போலாயிருக்கும்.

ஆகையால் தீன் என்னும் மார்க்கம் கொண்டு நிலைநின்று நிறுத்தாட்டுகிறவன் அடிமையாயிருக்கும். அவன் நடக்கும் சட்டங்களாகிய ஷறகு என்னும் மார்க்க ஏற்பாட்டை ஏற்படுத்தினவன் நாயகனாயிருக்கும்.

எப்படிப்போலானால் தொழுகை என்னும், வணக்கத்தை ஏற்படுத்தியவன் நாயகனாகவும் அதை நிலைப்பாடாய் நிறுத்தினவன் அடிமையாகவும் இருப்பதுபோலாயிருக்கும். அதற்காகத்தான் குர்ஆனில் மிகுந்த இடங்களிலும் தீனை நிறுத்தாட்டி வையுங்கள் என்றும் தொழுகையை நிலைப்படாய் நிறுத்தாட்டி வையுங்கள் என்றும் ஏவப்பட்டிருக்கிறது.

இந்த நுணுக்கம் தெரியாமல் சில ஸிந்தீகுகள் தொழுகையை நிலைப்படத் தொழுகிறதென்று வந்திருக்கிறது கல்பில் எப்போதும் நிலைபடுத்தி வைக்கிற அகமியத் தொழுகை என்று வாய்மதம் பேசுவார்கள். ஆகையால் இஸ்லாமல்லாத்ததை மார்க்கமாகத் தேடுவானேயானால் அவனில் நின்றும் அதை ஒப்புக் கொள்ளப்படமாட்டாது. ஆகிறத்தில் அவன் நஷ்டவாளர்களில் நின்றுமுள்ளவனாக இருக்குமென்று அல்லாஹுத்தஆலா குர்ஆனில் திருவுளமானான்.

ஆகையால் ஷறுகு என்னும் மார்க்க விதிப்படி நிலை நிற்பதென்ற தீனெனும் சொல் கூலியைப் பெற்றுக் கொள்ள நேமமாய் வழிப்படுதலென்ற மூன்று விளக்கத்தைப் பொதிந்ததாயிருக்கும்.

ஏனென்றால் யாராகிலும் பணிவிடையைக் கற்பித்ததில் அதற்குள்ள வழக்கம்போல் வழிப்பட்டுக் கூலியைப் பெற்றுக் கொள்ளக்கூடுமல்லாது வேறில்லை. அப்படிப்போல் அல்லாஹுவுடைய கட்டளைக்கு அவன் ஏற்படுத்திய வழக்கம் போல் வழிப்பட்டால் கூலி

கிடைக்கும் அல்லாது மனோகரப்படி நடந்தால் வழிப்படாடென்று சொல்லக்கூடாத்ததும் தவிர தண்டனையும் செய்யப்படும்.

ஆனால் இதில் ஒரு நுணுக்கமிருக்கிறது. அதென்னவானால் பூலோகத்திலுள்ள இராஜாக்கள் முதல் எவர்களும் ஏதொரு கட்டளையிட்டாலும் மனதில் அனேக வருத்தம் சடைவு கோபமிருப்பதுடன் வெளிரங்கத்தில் அதற்கு விதர்ப்பம் செய்யாத பாவனையாக நிறைவேற்றிப் போட்டால் ஏற்றுக் கொள்வார்கள்.

அல்லாஹ்வாகிறவன் கருத்துக்கும், சொல்லுக்கும், செய்கைக்கும், அகம்புறம் இரண்டுக்கும் நாயகனாகவும் ஓயாது ஒழியாததுகளில் உதயமாகிப் பார்த்திருப்பவனாகையாலும் ஊசாட்டம் ஒடுங்குதல் உசும்புதல் சகலதும் இவ்விதம் நிறையிலிருக்க வேண்டுமென்று கற்பித்திருப்பதாலும் வெளிப்பாவினைகளை ஏற்றுக் கொள்ளமாட்டான்

கலப்பறுதலாகிய தீன்தான் அல்லாஹ்வுடையதென்றும் அல்லாஹ்வுக்கு தீனைக் கலப்பறுதலாக்கி வைத்தே வணங்கும்படிக்கும் தீன் என்கிற சொல்லை குர்ஆனில் எழுபதே சொச்சம் தலத்தில் அல்லாஹு தஆலா மடக்கி மடக்கிச் சொல்லியிருக்கிறான்.

அல்லாஹ்விடத்தில் தீனென்பது இஸ்லாமென்னும் தலைசாய்குதலாயிருக்கும். அதுவே வழிப்பாடாயிருக்கும். வழிப்பாடென்பது உன்னுடைய செய்கைதான். ஆகையால் உன்னில் நின்றுமுண்டாகிறது கொண்டேயொழிய நீ சீதேவியாகிறதில்லை. அதன் மாற்றமும் அப்படிப்போலதான்.

உன்னுடைய செய்கை உனக்குச் சீதேவித்தனத்தை தரிபடுத்தி வைத்ததுபோல் நாயகத்தனத்தளவிற் சேர்க்கப்பட்ட திருநமாகங்களே ஒழிய அவனுடைய செயல்களைத் தரிபடுத்தி வைக்கவில்லை. அந்த திருநாமங்களாகிறது நீயாக இருக்கும். அந்த செய்கைகளாகிறது புதுசாக்கப்பட்டதுகளாயிருக்கும். இதில் நீ என்று உன்னை எதுப்பாக்கிச் சொன்னது உண்டாக்கப்பட்டது சகலதையும் நாடப்பட்டதாயிருக்கும்.

நீயாகிறவன் ஆலங்களுடைய அந்தரங்கங்களையும், அஸ்மாக்கள் அடங்களையும் பொதிந்திருப்பதால் உன்னை ஒருவனை எதுப்பாக்கிச் சொன்னதால் போதுமாயிருக்கும். ஹக்குடைய அடையாளங்களைக் கொண்டு நாயன் என்று அவனுக்குப் பேர் வைக்கப்பட்டது. உன்னுடைய அடையாளங்களைக் கொண்டு உனக்குச் சீதேவியென்றும் பேர்வைக்கப்பட்டது. ஆகையால் உனக்கு அவன் கற்பித்த ஷறகு என்ற பணிவிடையளவிற் சேர்ந்து வழிப்பட்டு தீனையும் நிறுத்தாட்டி வைத்தாயாகில் அவனுடைய பேட்டியென்னும் சரியிருப்பில் உன்னை இறக்கி வைப்பான்.

தீன் அடங்கலும் அல்லாஹ்வுக்குடையதாக இருக்கும். அதடங்களும் உன்னில் நின்றுமுள்ளதுதான். அடிமூட்டைப்பார்க்கிறது கொண்டே ஒழிய யாதொன்றும் அவனில் நின்றும் உள்ளதில்லை. இப்போது எழுதப்பட்டதுகளில் நின்றுமுள்ள நுணுக்கமும், அதற்கு இந்த லோகத்தில் முகாந்திரமும் எப்படியானால், இந்த லோகம் முழுவதையும் ஏக சக்கரவர்த்தியாய்

ஒரே குடையில் கட்டியாளத்தகுந்த வல்லமையும், நீதியையும், அன்பையும், கிருபையையும், இரக்கமும் அமர்த்தி முதலாகிய சகலவிவேகமும் உடையவராய் ஒருவர் இருக்கிறார். அவருக்கு இராஜன் என்கிற பெயர் வெளியாகவில்லை. அப்போது லோகத்திலுள்ளச் சகலரும் அவரையே இராஜாவாக ஆக்கி வைத்ததில் இராஜாவென்று அவருக்கும், சில பணிவிடைகளை அவர் கற்பித்தபடி நிறைவேற்றியவர்களுக்குச் சீதேவியென்ற பேரும் கொடுத்துத் தன்னுடைய சிம்மாசனத்தில் சரியிருப்பு கொடுப்பது போலிருக்கும்;.

அப்படிப்போல் ஹக்குத்தஆலாவுடைய நாயகத்தனத்தளவில் சேர்க்கப்பட்ட அஸ்மாக்கள் மறைவாக இருந்ததில் கல்குகளை உண்டாக்கினதால் அவைகள் வெளியாச்சுது. அடிமையுடைய சீதேவித்தனமும் மூதேவித்தனமும் அவன் ஏற்படுத்திய ஷரஹைக் கொண்டுதான் வெளியாகி அவனுடைய செய்கையால்தான் சீதேவியென்றும் மூதேவியென்றும் பேர் ஏற்கிறான்.

ஆனால் அந்த ராஜன் நீதனாகவும், இரக்கவாளியாயும் இருப்பதுடன் களவு செய்தவனைக் கையைத் தறிக்கவும், தொழுகை விடுவது முதலாகிய கொல்வதற்குப் பாத்திரமாகிய செய்கையைச் செய்வதால் கொல்வதாலும், சகலத் துர்செய்கைகளுக்கும், அதற்குள்ளத் தண்டனைக் கண்டினை நடத்துவதாலும், பந்துகானா ஜைலர் கானா உண்டுபண்ணி அவைகளில் அடைத்து வைக்க வேண்டியவர்களை அடைத்து மறியலில் வைப்பதாலும், நீதஸ்தர் இரக்கவாளியென்று பேர் நீங்காதிருப்பதுடன் கொல்லுகிறவர், தண்டனை செய்யிரவர் சிறைசாலைக்காரர் என்கிற பேர்கள் எல்லாத்தையும் குடிஜனங்கள் அவருக்கு தரிபடச் செய்து போடுவார்கள்.

அப்படிப்போல் அல்லாஹுத்தஆலா நம்முடைய செய்கையினால் *முன்த்தகிம் ஹதீதுல் இக்காபு ஷதீதுல் அதாபு* – வேதனை செய்யிறவன் வேதனைக்கடிசானவன்; என்று பேர் கொண்டு தஜல்லியாகிறான். அல்லது வெளியாகிறான்.

அந்த ராஜன் தீர்மானமான இரக்கமுள்ளவராக இருந்தாலும் நீதியை நடத்த வேண்டியதற்காக சகல ஆக்கினைகள் செய்வதுபோல் கல்குகளாலும், அவர்களுடைய செய்கைகளாலும் தான் அல்லாஹுத்தஆலாவுடைய அஸ்மாக்கள் வெளியாகிறது. அந்த ராஜாவானவர் எப்போதும் குடிஜனங்களுக்கு தானும் உபதேசிப்பதுடன் தன்னுடைய வேலைக்காரரையும் குடிஜனங்களில் ஒருவருக்கு ஒருவரையும் நீதமாய் நடப்பதின் பேரில் உபதேசிக்கும்படிக்கும் செய்கிறார். அப்படிப் போல்ச் சகலதிலும் சோடித்துப் பார்த்துக் கொள்.

அல்லாஹுத்தஆலா சொர்க்கலோகத்தளவில் அழைக்கிறான். ஈடேற்றத்தையுடைய வீட்டளவில் அழைக்கிறான் என்று குர்ஆனில் அவ்வல் தொடுத்து ஆகிறத் வரைக்கும் பாவத்தளவிற் சாடாமல் உபதேசமே அல்லாது வேறில்லை. அவர்கள் தங்களை தாங்களே அநீதம் செய்துக் கொள்கிறார்கள் என்றும் குர்ஆனில் திருவுளமாயிருக்கிறான்.

அதற்காகத்தான் உலகத்தில் நடக்கிறது சகலதையும் கைறுன்குல்லியி என்னும் அடங்களும் கைறானதென்றும் ஷர்ருன்ஜுஸ்யிய்யி சில விசயங்களால் தீங்காகிறதென்றும்

சொல்லப்படுகிறது. எப்படியானால், அல்லாஹுத்தஆலா சகலரையும் தன்னுடைய கிருபை கொண்டே வெளிப்படுத்திச் சகலரையும் நேரான பாதையில் நடந்து இருபதியிலேயும் சுகத்தையும் இன்பத்தையும் அனுபவிக்கவே பொருத்தமாக இருப்பதுடன், அவனுடைய ரசூல்மார்களையும் அனுப்பி அந்த இன்பவீட்டளவில் அழைக்கும்படி செய்திருக்கிறான். அவர்கள் அதற்கு வழிப்படாதபடியால் அதற்குத்தகுந்த புறத்தி செய்ய வேண்டுமென்று நரகத்தைப் படைத்ததாய் வருகிறது. அதுவே தவிர அவனுடைய பொருத்தத்தில் நின்றுமுள்ளதில்லை.

இன்னான் தீங்கு செய்து நரகத்திற்கு பாத்திரமானவன் என்று அவனுடைய நாட்டத்திலிருந்தாலும் சரி எப்படியானால் லோகத்தில் குடிஜனங்கள் பேரில் இரக்கமுள்ள இராஜனுக்குப் பொருத்தமும் சந்தோசமும் சகலரும் நீதியாக நடந்து வருவதுடனும் ஒருவரையும் கண்டினை தெண்டினைக்குள்ளாக்கதிருக்க வேண்டுமென்பதே பிரியமாக இருப்பதுடன் ஒவ்வொருவனை அவர் பார்த்ததில் அவனுடைய பிறவிக் குணத்தால் அல்லது இயற்கையால் சேர்க்கையால் அல்லது வீராப்புவராகி மருட்டுதல் சூது முதலாகியக் கொள்கைகளுக்கு இவனுடன் பட்டுத் தண்டனைக்குள்ளாவான் என்று அவருடைய சித்தத்துக்குத் தோணுதலாகி எவ்விதமான நீதி நூல்கள் வேதாந்தம் சித்தாந்தம் முதலானவைகளைக் கொண்டு நல்லுபதேசம் செய்தாலும் அவனது துர்குணம் துர்செய்கை நீங்காதென்று திட்டவட்டமாய் அவர் மதித்திருப்பதுடன் நல்மொழிகளை அவனுக்கு உபதேசிப்பதும் நீதிதான். அவனுக்குத் தகுந்த சிகிட்சை செய்வதும் நீதியிலுள்ளதுதான்.

ஆனால், நீ தீனை நிறுத்தாட்டி அல்லாஹுதஆலா உன்பேரில் ஷறுஆக்கிய மார்க்க விதி தவறாமல் நடத்தி வருவதால் உனக்குள் மறைவாக இருந்த மனிதத்தன்மையுடைய வண்ணிப்பை நிறப்பமாக்கி வைக்க யோக்கியவான். மனிதத் தன்மையுடையவன் சீதேவித்தனம் பொருந்தியவன் என்ற பேரை உன்னுடைய செய்கையால் உனக்கு அவன் கொடுப்பது போல் அவனுக்கு மறைவாக இருந்த நாயகத்தளவிற் சேர்க்கப்பட்ட அற்றஹ்மான் அல்மலிக்கு அற்றப்பு, அல்காலிகு போல் ஒத்த (கமாலிய்யத்தாகிய நிறப்பமாகிய அஸ்மாக்களை நீயும் உன்னுடைய செய்கையும் அவனுக்குத் தரிபடுத்தி வைக்கிறதாயிருக்கிறது.

அகந்தைவராகி மறுட்டுதலால் அவன் ஏற்படுத்திய ஷறவுக்கும் மாற்றம் செய்தவனுக்கு அவனில் மறைவாயிருந்த மூதேவி துஷ்டன் அநீதகாரென்ற பேரை உனக்கு அவன் கொடுப்பதுபோல், அதற்கெதுகையாகிய அவனில் மறைவாகி இருந்த நாயகத்தனத்தளவிற் சேர்க்கப்பட்ட அல்கபீறு அல்முன்தகிம் அல்கஹ்ஹாறு அல்ஜப்பாறு துல்பதுஷி ஷதீது போல்ஒத்த ஜலாலிய்யத்தாகிய அகங்காரமென்னும் அஸ்மாக்களைக் கொண்டு உன்னில் தஜல்லியாகி வெளியாகும்படி செய்துக் கொள்கிறாய்.

தாத்திய்யத்தாகிய அஸ்மாக்களையும் ஜலாலிய்யத்தாகிய ஜமாலிய்யத்தாகிய அஸ்மாக்களையும் சகலதிலும் சோடித்துப் பார்த்துக் கொள். தன்னாலேதான் கெட்டால் அண்ணாவி என்னசெய்வான். தனக்கு வினைதானேத் தேடிக் கொண்டான். தன்புத்தியால் தலையெடுப்பார் ஆயிரம் பேர். தன் புத்தியால் தலையழிவார் ஆயிரம் பேர் என்ற பழமொழி

போல் உள்ளவைகளை பன்னிறும் கூட்டாயிருக்கிற நிறுபாகமாகிய வயிற்றுடைய இன்பத்திலும் அபத்துடைய இன்பத்திலும் வைத்துப் பார்த்து இதுபோல் உள்ள தீனுடைய அறிவுகளில் மதிமயங்கிப் பொறிகலங்கி உளறாதே.

ஆனால் தீன் என்னும் சொல் வழிபாடு வழக்கம் கூலி என்ற மூன்று விளக்கத்தைப் பொதிந்ததென்று நான் சொன்னதில் குர்ஆனில் அடிமைகளை நோக்கி உங்களுடைய தீனென்று சொல்லியிருப்பதில் அடிமை வழக்கமாய் வழிப்படுவதால் கூலி கிடைக்கும் என்பது தெரிந்ததுதான்.

அல்லாஹ்விடத்தில் தீதென்றதற்கு அல்லாஹ் ஏற்படுத்திய (ஷர்உ) என்றும் சொன்னதும் சரிதான். தீனீ என்னுடைய தீனென்றும், தீனுல்லாஹ் அல்லாஹ்வுடைய தீனென்றும் குர்ஆனில் சொல்லியிருக்கிறபடி அல்லாஹ்வும் வழக்கமாய் வழிப்படுவதால் கூலியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற விளக்கமுண்டாக வேண்டியதிருக்குதே என்றும் கேட்கப் போதும். ஆழிய கருத்துக் கொண்டு யோசித்தோமாகில் உனக்கு வெளியாகும்.

அதெப்படி என்றால் அடிமை நாயனுக்குப் பொருத்ததமாயுள்ளதில் வழிப்பட்டால் அடிமைக்குப் பொருத்தமாயுள்ள தவாபு கூலி சொர்க்கலோகம் முதலானவைகளைக் கொடுப்பது கொண்டும் நாயன் வழிப்படுகிறான்.

ஹதீதில் கமாத்ததீனுத்துதானு நீ வழிப்படுவதுபோல் உனக்கு வழிப்படப்படும் என்று சொல்லபட்டதுபோல், அடிமை விதர்ப்பம் செய்தால் ஒருவேளை பொறுத்துக் கொள்ளும்படிக் கேட்டதற்கு அவன் வழிப்படுகிறான்;. அல்லது பொறுக்கக் கூடாத்ததில் வேதனை செய்ய இவனுடைய இயற்கையும் சேர்க்கையும் கேட்டுக் கொண்டபடி வேதனை செய்வது கொண்டு வழிப்படுகிறான்.

ஆனால் அந்தரங்கத்தில் வெளிரங்கத்தில் மாற்றம் செய்யிறவனும் அவன்பேரில் ஹுக்கும் செய்கிற அஸ்மாக்களுக்கு வழிப்பட்டவனேயல்லாது வேறில்லை. ஒருவேளை கபூறெனும் பிழைப்பொறுக்கிறவன் என்ற இஸ்முக்கு அல்லது முன்த்தரில் என்னும் வேதனை செய்கிறவன் என்ற இஸ்முக்கு வழிப்பட்டவனாக இருப்பானல்லாது வேறில்லை.

அதை வழிப்பாடென்று சொன்னக் கருத்தெல்லாம் அவனை வேதனை செய்ய வழிப்பட்டான் என்றெதல்லாது வேறில்லை. உலகத்தில் எத்தனையோ பேர் தூக்குவதற்கு பாத்திரமான வேளை அதிகாரிகளை பார்த்து தாமதிக்க வேண்டாம். என்னைத் தூக்கில் போடென்று தூக்கில் விழுகிறவனும் அக்கரமித்து ஓடினதின்பேரில் வம்பாய்ப் பிடிக்கப்பட்டு தூக்கப்படுகிறவனும் ஒன்றே அல்லாது வேறில்லை. இதற்காகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

**ஷி:்று பைத்து**

(*குல்லுன் யதீனு பிதீனில் ஹக்கிலெளபத்தினு வலய்ஸ தீனுன் லிகைய்றில் ஹக்கி மஷ்றூஉ*) அடங்கலும் ஹக்குடைய தீன் கொண்டே வழிப்படுகிறதாயிருக்கிறது. ஹக்கல்லாத்ததுக்கு ஏற்பாடாக்கப்பட்ட வழிப்பாடே கிடையாது. கல்குகளைப் படைத்தது அவனை வணங்கவே

அல்லாது வேறில்லை. அவனல்லாத்ததுக்கு உஜூது - உள்ளமையில்லாத்ததால் இல்லாத்ததை வணங்க ஒருவருக்கும் தகுதியேயில்லை. அடிமூட்டிலேயே அந்த வணக்கத்தின் பேரிலேயே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அல்லாஹ்வுக்கு வழிப்படாத வஸ்து ஒன்றுமேயில்லை.

இதற்காக குர்ஆனுடைய அத்தாட்சியும் ஹதீதும் ஆரிபூன்களுடைய சொல்களும் உண்டாகியிருப்பதுடன் சரியான விவேகத்துடன் கொஞ்சமெங்கிலும் இல்மென்னும் வாடையை முகர்ந்தவர்களுடைய சிந்தையில் யாதொரு (தலீலும்) தேடாமல் திட்டவட்டமான அறிவுண்டாகியே இருக்கிறது.

சில நிருமூடர்கள் அவர்களை ஏற்றிப் புகழ்ந்து இமாம்கள் என்ற பேரையும் அவர்களில் நடத்தாட்டப்பட்டிருக்கிற சில அறிவீணர்கள் இப்பேர்பட்ட சொற்களை நமது நாயகமார்களாகிய லோக இரட்சகர்களான மஷாயிகுகளென்ற மெய்க்குருக்களான நாயகங்களுடைய கிதாபுகளில் கண்டு அதை குபுரென்றும் ஸன்தகாவென்றும் பலவிதமாக உளறியிருப்பதில் திரும்பிப்பாராதே.

இன்னமும் இந்தச் சொல்களின் அந்தரங்கங்களைக் கண்டுத் தேறித் தெளியாமல் அதை ஒப்புக் கொண்டு தங்குளுடைய கல்பிலிருக்கும் குபுறுக்கும் செய்த்தானிய்யத்துக்கும் உதவியாக இந்தச் சொல்லையே அத்தாட்சியாக்கி இபாதாத்து முதலானது சகலதையும் விட்டு முந்தின குபுறோடு குபுறையும் முந்தின செய்த்தானிய்யத் என்னும் மூரியாட்டத்தோடு மூரியாட்டத்தையும் அதிகப்படுத்திக் கொள்கிற மூதேவியாகியத் தோஷீகள் அந்தச் சொற்களை ஏற்றுக் கொள்வது கொண்டும் பாராட்டாதே.

அந்த நாதாக்கள் இப்படிப் போலுள்ளதை அவர்களுடைய கிதாபுகளில் எழுதினதெல்லாம் அல்லாஹ்வுடைய வஹ்தானிய்யத்தைச் சகலரும் தரிபடுத்தி லாஹிருடைய வணக்கத்தையும், பாத்தினுடைய வணக்கத்தையும் சகலரும் அதிகப்படுத்தவும் எறும்பு, கடையானை முதல் எண்பத்து நான்கு நூறாயிரம் உயிரினங்களும் அல்லது ஒரு அணுவாகிலும் அவனுடைய வழிப்பாட்டை விட்டுப் புறப்படாதென்கிற உறுதிப்பாட்டைச் சகலரும் கல்பில் தரிபடுத்தவும்,

அவனுடைய இராஜங்கம் நடக்கிற வலுப்பத்தாலும் குதுறத்தாலும் ஒருவராலும் அவனுடைய கற்பனையை அக்கிரமித்து நடக்கக் கூடாது. சகலரும் அவனுடைய வழிப்பாட்டுக்குள்ளடங்கி நடப்பார்கள் அல்லாது மீறி நடக்க முடியாதென்கிற உறுதிப்பாட்டை உண்டாக்கிக் கொள்வதற்கல்லாது வேறில்லை.

எப்படியானால் இந்த உலகம் முழுவதையும் ஒருகுடையில் கட்டியாளுகிற ராஜன் சில பணிவிடைகளை குடிஜனங்களுக்குக் கற்பித்ததில் இன்னான் இன்னதை நிறைவேற்றமாட்டான். அப்போது நம்முடைய அதிகாரத்தை அவனில் செலுத்துவோம் எனக் குறிப்பிட்டபடி சிலர் வழிப்பட்டார்கள். வழிப்படாதவர்கள் அவருடைய சித்தத்திலுள்ளபடிக்கும் நடந்தார்கள். அவர்களுக்குச் சில அதிகாரங்கள் நடத்தினதில் அதற்கு வழிப்பட்டார்கள்.

ஆனாலும் அல்லாஹ்வுடைய வலுப்பமும் அவனுடைய சித்தமும் கமாலிய்யத்துடையதாகையால் ஒருவனை மூதேவியென்று அவனுடைய சித்தத்தில்

கற்பித்தபடி வழிப்படுவானல்லாது மாற்றமுண்டாகாது. அவன் வேதனை செய்யப்பிடித்தபோது வழிப்படுவானல்லாது மீறவும், மறைத்துக் கொள்ளவும் கூடாது.

ஷறுஇன்படி வழிப்பட்டவன் வெளி ஏவலுக்கும் நாட்டத்துக்கும் வழிப்பட்டான். ஷறுஇஜ மீறினவன் நாட்டத்துக்கு வழிப்பட்டான். மற்ற இராஜாக்களிலும் அப்படித்தான் என்றாலும் அவர்களுடைய சித்தத்தில் நேர் செய்வான் என்று எண்ணப்பட்டவன் தப்பிதவானாயும், தப்பிதவான் என்று எண்ணப்பட்டவன் யோக்கியவானாகவும், வெளிரங்கத்தில் சரியாய் பணிவிடையை நிறைவேற்றினவனாய் வெளிப்பட்டவன் காரியம் தன்னில் முற்றிலும் மோசக்காரனாயும், அவர்களுடைய ஆக்கினைக்கு மறைந்துக் கொள்ளவும் அக்கிரமிக்கவும் கூடும். இதுபோல் ஆராய்ந்து கொள்.

ஆகையால் தீன் என்கிற சொல்லுக்குள் மூன்று விளக்கமும் ஹக்கிலும், ஹல்கிலும் சரியாவதற்கு ஒன்றாவதாகிய வழிப்பாட்டில் விளங்கியபடி இரண்டாவது கூலி என்பதில் எப்படியானால் வழிப்படாடென்றதே இரு புறத்திலும் கூலியாகி விடுகிறது. ஹக்குக்குப் பொருத்தமுள்ளபடி வழிப்படுவதால் அடிமைக்குப் பொருத்தமான கூலியைக் கொடுப்பதால் அவனை இவன் பொருந்தச் செய்தான். இவனை அவன் பொருந்தச் செய்தான்.

அவனுக்குப் பொருத்தமில்லாத்ததைச் செய்வதால் இவனுக்குப் பொருந்தாத்ததைச் செய்கிறான். துன்பத்துக்குள்பட்டவன் குத்தக்காரன், பாவி, விலங்குக்காரன் மறியல் வீட்டில் கிடந்து மனமடிவாய் கஷ்டத்தோடு வேலை பார்க்கிறவன் என்பதுபோல் உள்ள எண்ணறாத தாழ்ந்த வர்ணிப்புகளை உனக்கு அவன் கொடுக்கிறான்.

ஆகையால் அவன் உன்மீது ஜலாலிய்யத்தாகிய கஹ்ஹாறென்னும் அடக்கியரசாளுகிறவன் முஅத்திபு எனும் வேதனை செய்கிறவன் ஷதீதுல் இக்காபு எனும் வேதனை கடிசானவன் என்ற அஸ்மாக்களைக் கொண்டு தஜல்லியாகும்படி செய்துக் கொள்கிறாய். ஆனால் அவனுக்குக் குறைவான பேரை அவனுக்குக் கொடுக்கிறதனால் அவனும் அப்படியே கொடுத்தால்தானே சரியான கூலியாகும் என்று விளங்காதே.

உலகத்தில் நீதமான ராஜாக்கள் இரக்கவாளி தருமபுத்திரர் என்ற வர்ணிப்பு போலொற்றதை ஏற்றுக் கொள்வதே அவர்களுக்கு நிறப்பமான வர்ணிப்பும் மேலாம்பரமாகவும் இருந்தபோதிலும் தூக்கில் - கழுவிற் போட வேண்டியவர்களை அவ்விதம் செய்தால் பழிவாங்குகிறவர் என்று பேர்கொண்டு அவருக்கு குறையுண்டாகாது ஆராய்ந்து கொள்.

ஆனால், இப்போதுச் சொல்லப்பட்டதில் அல்லாஹ்வுடைய ஏவலுக்கு மாறு செய்தவன் அல்லாஹ்வுடைய நாட்டத்துக்கு மாறுபட்டவன்தானே, அப்படியிருக்க இவனை வேதனை செய்கிறது இவனுடைய நாட்டதுக்கு விரோதமானால் இருபுறத்திலும் கூலி சரியாக மாட்டாதேயென்று நீ கேட்கப்போதும்.

அவனுடைய தற்செயல் குணம் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவனுடைய கொள்கை ஏற்றுக் கொள்ளும். எப்படியானால் உலகத்தில் ஒருவன் குற்றம் செய்ததற்காக கைகாலில் விலங்கு

பூட்டியிருக்க அவனுக்கு அடங்காத துன்பமாகயிருக்க தன்னுடைய தண்டித் தோழர்களைப் பார்த்து மெய்ப்பாக இதில் என்ன குறைவிருக்கிறது? நம்முடைய தாய், தகப்பன்மார்கள், கைகாப்பு, கால்காப்பு போடவில்லையென்று சொல்வதுடன் அவனுக்குத் தீர்ப்பான காலம் தீர்ந்து பந்துகானாவை விட்டு நிவாரணையானதின் பேரில் திரும்பவும் அவ்விதம் தண்டனைக்குள்படுவதும் தவிர நூறுதடவையானாலும் மீளவும் போதும்.

ஆனால் உன்னுடைய இந்தக்கேள்வி மிகவும் பாரதூரமானதும் அநேக விரிவாக விரித்துப் பேச வேண்டியதிருப்பதாலும் பின் நரகலோகத்துடைய அதாபு இன்னதென்று வகைவிபரமாய் பேசுமிடத்தில் இவைகளை யாதொரு களங்கமின்றியே பயான் செய்திடுவோம்.

தீனென்ற சொல்லுக்கு மூன்றாவது விளக்கமான வழக்கமென்றதில் ஹக்கிலும் கல்கிலும் அந்த வழக்கமுண்டாகிறது. எப்படியென்றால் வழக்கமென்றதை புத்தியால் ஆராயுமிடத்தில் ஒரு காரியத்தை ஒருவன் செய்து மடக்கியும் அதைச் செய்வதற்குச் சொல்லப்படுகிறது.

ஷறுஇன் ஒழுங்குப்படி இவன் வழக்கம் செய்து வந்தால் நல்ல கூலியைக் கொடுப்பதே அவனுடைய வழக்கம். இவன் கெட்ட வழக்கம் பண்ணினால் கெட்ட கூலியைக் கொடுப்பதே அவனுக்கு வழக்கம்.

ஆகையால் இப்போது எழுதப்பட்டவைகளில் விளங்கப்பட்டது என்னவென்றால், தீன் என்பது இஸ்லாம் என்றும், அதுவே வழிப்பாடென்றும், அதுவே கூலி என்றும் அதுவே வழக்கம் என்றும் விளங்கிவிட்டது.

ஆகையால் தீன் என்பது ஏதாயிருக்கும் என்று கேட்;கப்பட்டால் வழிப்பாடென்று சொன்னால், மற்ற இரண்டு விளக்கமும் கூலியென்று சொன்னால் மற்ற இரண்டும் வழக்கமென்றாலும் அதுபோல் விளங்கவேபடும்.

எப்படியானால், ஒருவன் ஏதாவதொரு காரியத்தில் ஒருவருக்கு வழிப்பட்டு ஒரு கூலியைப் பெற்றுக் கொள்கிறது வழக்கமாயிருந்தால், இவனுக்கு வழக்கம் இதுதானென்றால், வழிப்பட்டுக் கூலியைப் பெற்றுக் கொள்கிறதுதான் இவனுக்கு வழக்கமென்று விளங்கப்படுமல்லாது வேறில்லை.

இப்படிப்போல் மற்ற இரண்டிலும் சோடித்துக் கொள்ளவும். இப்போது சொல்லப்பட்டவைகளெல்லாம் வெளிரங்கமானப் பேச்சாயிருக்கும்.

அவைகளுடைய இரகசியமும், உள்ரங்கமும் ஆகிறது, ஹக்குடைய வுஜூதெனும் கண்ணாடியில் தஜல்லியாகும். ஹக்கில் நின்றும் அடிமைகளின் பேரில் அவரவர்களுடையக் கொள்கைகளில் அவர்களுடைய உள்ளமைகள் கொடுக்குமே அந்த ஒன்றேயொழிய மீளமாட்டாது.

ஏனென்றால் அவர்களுக்கு எல்லாக் கொள்கையிலும் ஒரு ரூபமுண்டும். அவர்கள் கொள்கைகள் விதர்ப்பமாகிறதற்காக வேண்டி அவர்களுடைய ரூபங்களும் விதர்ப்பமாகும்.

ரூபங்கள் விதர்ப்பமாகிறதற்காக வேண்டி தஜல்லியும் விதர்ப்பமாகும். ஆகையால் உண்டாயிருக்கிற விதங்கொண்டு அடிமையில் குணபாடு விஷயமாகும்.

ஆகையால் நல்லதையும் அவனுக்கு அவனைத் தவிர யாரும் கொடுக்கவில்லை. ஆகிலும் அவனே அவன்தன்னை சுகண்டியாக்கி வைக்கிறவனும் துன்பத்துக்குள்ளாக்குகிறவனுமாயிருக்கிறான். ஆனபோதே அவன்தன்னையே ஒழிய அவன் பழிக்க வேண்டாம். ஆகையால் அல்லாஹ்வுக்கு அந்த அடிமையின் கொள்கையைக் கொண்டு அறிந்திருக்கிறதில் தீர்மானமெற்றிய கடப்பான முகாந்திரம் உண்டும்.

அறிவு அறியப்பட்டதைத் துடர்வதற்காக வேண்டி இதோ எழுதப்பட்டது கத்றுடைய சிர்றை வெளிச்சமாகப் பேசினதாகயிருக்கும். இதில் கூலியை மட்டிலும் குறிப்பிட்டு பேசியிருந்த போதிலும் தீனுடைய விளக்கத்தில் மூன்றாவதாகிய வழக்கமென்பதையும் பயான் செய்யப்பட்டேயிருக்கிறது.

ஏனென்றால் இவனுடைய வழக்கம் எப்படியோ அப்டித்தானிருக்கும். அவனுடைய வழக்கமென்று விளங்கப்படுகிறது. ஆனால், தீனுடைய சிர்றில் இப்போது எழுதப்பட்டதை நீ விளங்குகிறாயோ எப்படியோ தெரியவில்லை. ஆகிலும் சைக்கினையாய் நானெழுதுவதில் நோட்டத்தை ஆழமாக்கிப் பார்த்தாயாகில் விளங்கிக் கொள்வாய்.

அறிந்து கொள். ஹக்கும் அவனுடைய அஸ்மாக்களும் தரிபாடாகிய குறிப்புகள் என்னும் கண்ணாடிகளில் வெளியாகும். இன்னமும் பல குறிப்புகளும் ஹக்குடைய வுஜூதெனும் கண்ணாடியிலும் வெளியாகும். இது இரண்டில் நின்றும் எல்லாம் மற்ற ஒன்றொன்றுக்கும் கண்ணாடியாகயிருக்கும்.

ஆகையால், கூலி என்பது *தய்யான்* என்னும் கூலி கொடுக்கிறவன் என்ற அவனுடைய திருநாமத்தில் நின்றும் அடிமைகள் என்ற குறிப்புகளுடைய விதங்கொண்டு ஹக்குடைய வுஜூதெனும் கண்ணாடியில் ஹக்கு தஜல்லியாகிறதற்குச் சொல்லப்படுகிறதாயிருக்கும்.

ஆகையால் வழிப்பாடு கொண்டும் அதற்குக் கூலி கொண்டும் கற்பிக்கும்படி செய்து கொண்டது உண்டானதெல்லாம் ஹக்கை பல குறிப்புகளும் தேடினது கொண்டாயிருக்கும். ஆகையால் பல கொள்கைகளில் நின்றும் எதின்பேரில் அவர்களிருக்கிறார்களோ, அந்த ஒன்றைக் கொண்டு அவர்களை தக்குவீபெனும் ஏவல் விலக்கல் செய்வதின் பேரிலும், அதற்குத் தகுந்த கூலி கொடுப்பதின் பேரிலும் ஹக்கை அவர்கள் வருந்துரார்கள்.

ஆகையால் கல்குகளுடைய கொள்கைகளில் அவர்களுடைய உள்ளமைகள் தேடினதே, அந்த ஒன்றைத் தவிர கூலி என்னும் கொள்கை ஹக்கில் நின்றும் அடிமைகள் பேரில் மீளமாட்டாது. அதுகளுக்கு நயமானதும் அதுகளுக்கு தீங்கானதும் அதுகளின் நின்றுமுள்ளதுதான் அது அல்லாத்ததில் நின்றுமுள்ளதல்ல.

ஹக்கில் நின்றும் அதுகளுடைய உள்ளமை அளவிற்ச் சேர்க்கப்பட்டக் கொள்கைகள் என்னும் ரூபங்களுக்கு வுஜூதைக் கொடுப்பது உண்டும். ஆகையால் கொள்கையடங்களிலும் அந்தந்த

கொள்கை தேடினதே அப்படி உள்ள சொந்தமான ரூபம் அதுகளுக்குண்டும். கொள்கைகளும் விதர்ப்பமாகும். ரூபமும் விதர்ப்பமாகும். அப்போது தஜல்லியாகப்பட்டுக் கொள்கிறது தங்கரீகம் தேடுகிற விதற்பங்கொண்டு இலாஹிய்யத்தாகிய தஜல்லிகளும், அதுகளுடைய கொள்கைகளும் விதர்ப்பமாகும். ஆகையால், பல குறிப்புகள் என்ற அடிமைகள் தங்களைத் தாங்களே அதாபு செய்துக் கொள்கிறார்கள். தங்களைத் தாங்களே சுகண்டியாக்கியும் கொள்கிறார்கள்.

ஆகையால் வழிகேட்டிலாகி அதாபுக்குப் பாத்திரமானவேளை அல்லாஹ்விடத்தில் நாயனே! எங்களால் யாதொரு உசும்புதல் ஒடுங்குதல் இல்லையே, நேர்வழி காட்டுகிறவனும் நீயே!, வழி கெடுக்கிறவனும் நீயே! எங்களுக்கு நேர்வழியை ஊசாடச் செய்தாயாகில் நாங்கள் பாவத்தை நாடோமே என்று கேட்பாராகில் அவர்கள் பேரில் கேடாக கடப்பாகிய முகாந்திரம் அவனுக்குண்டும்.

ஏனென்றால் அதனதின் கொள்கையும், இயற்கையும் எதின்பேரிலாயிருக்கிறதோ அதையறிந்து அதனதின் விதங்ககொண்டுதான் தஜல்லியாவான். முன் எழுதப்பட்டதில் ஹக்கும் அதினுடைய அஸ்மாக்களும் தரிபாடாகிய குறிப்புகள் என்னும் கண்ணாடிகளில் வெளியாகும் என்றும், பல குறிப்புகளும் ஹக்குடைய உஜூது என்னும் கண்ணாடியில் வெளியாகும் என்றும்,

அதில் எல்லா ஒவ்வொன்றும் மற்ற ஒன்றுக்கு கண்ணாடியாக இருக்கும் என்றும் சொன்னதாவது, அல்லாஹுத் தஆலா இன்னதின்னது இன்னவிதமென்று அறிந்த சமூகத்திலே நாயகத்தனத்தளவிற் சேர்க்கப்பட்ட திருநாமங்களின் அந்தரங்கங்கள் ரூபமாக இருந்தபடி தரிபாடாகிய குறிப்புகள் என்னும் கண்ணாடியில் வெளியாகிறது என்றும் சொல்லப்படும்.

அதன் விபரம் எப்படியானால், ஒரு குயவன் (குயவனுக்கு ஸானிஃ என்று பெயர். அல்லாஹ்வுக்கும் ஸானிஃ என்று பெயர்) மண்ணினால் சில பாண்டங்களை உண்டு பண்ணச் சேகரமாய் மண்ணை எடுத்து இன்ன இன்ன வஸ்துவை வைப்பதற்கு இன்னின்ன பாண்டங்கள் செய்ய வேண்டுமென்றுக் கருதியபடி தன்னுடைய கருத்தில் சகலதையும் ரூபமாக்கிப் பார்ப்பதற்கு அவனுடைய கருத்தில் தரிபட்டக் குறிப்புகள் என்று சொல்லப்படும். அதன்படிதான் பிற்பாடு வெளியாகும்.

தவிரவும், ஒரு ஆல வித்தில் ஆல் முழுவதும் சுருண்டதாயும், ஆல் முழுவதிலும் வித்தைத் தோற்றப்படக்கூடிய கண்ணாடியாகவும் உவமானமாக்கிக் கொள். ஆனால் ஹக்குடைய உஜூதென்னும் கண்ணாடியில் கல்கென்னும் குறிப்புத் தோணுகிறதும், கல்கெனும் உஜூதெனும் கண்ணாடியில் ஹக்கு வெளியாகிற விதமும், மஃரிபா முஷாஹதாவை விபரம் செய்யுமிடத்தில் துலாம்பரமாகும்.

ஹக்குடைய அஸ்மாக்கள் சகலதும் அதனதின் ஊட்சிதம் நடப்பதற்குள்ள ஒவ்வொருக் குறிப்பைத் தேடும் ஹக்குடைய இஸ்மில், தய்யானென்பது கூலி கொடுக்கிறவன் என்ற மஃனாவையுடையது. அந்த இஸ்முடைய மஃனா வெளியாகிறதற்கு அடிமைகள் என்னும் குறிப்புகளே, ஏதும் எங்களுக்கு ஓர் வழிப்பாட்டைக் கற்பித்துக் கூலியைத் தாவென்று தேடுகிறபடி அதினுடைய தஜல்லி நடக்கிறது.

ஹாதி என்ற இஸ்மின்படி அதன் கற்பினைக்குள்ளாகி நேர்வழி பெறுகிறார்கள். முலில்லு என்ற இஸ்மின் ஊட்சிதத்தைத் தங்களில் நடத்தி வைக்கத் தேடுகிறவர்கள் அவ்விதம் நடந்து கெடுகிறார்கள். ஆனால் இப்போது எழுதப்பட்டவைகளால் சகலதும் ஊழ்விதிப்படி நடப்பதும் தவிர எவனெவன் என்ன கஷ்டப்பட்டாலும் நரகத்திற்குப் பாத்திரமானவன் நரகவாதியாயும் ஆகிவிடுகிறதில்லை என்றும் விளங்கப்படுவதால் நாம் பலவிதமான இபாதாத்துச் செய்யவும் மனம் இச்சித்தவைகளை மறுத்து நடப்பதிலும், வீணான மனமடிவும் கஷ்டமும் நேரிடுகிறது.

தற்காலத்தில் அநேக கஸ்டத்தையுண்டு பண்ணுகிறதாயிருக்கிறதே என்ற ஊசாட்டம் உன்னில் உண்டாகுமானால் அதை நீக்காமல் அந்த எண்ணத்தில்தானே தரிபட்டு நடப்பாயாகில்,

***இது ஷற்ஹு***

*(இன்னமும் இதுபோல் அனேகக் கேள்விகளைக் கொண்டு வருவாயாகில் அதெப்படியென்றால் நாயகத்தனத்தளவிற் சேர்க்கப்பட்ட அஸ்மாக்களில் நினறும் ஹாதீ நேர்வழி காட்டுகிறவன், முலில்லு வழிகெடுக்கிறவன், முயிஸ்ஸு சிறப்பாக்கி வைக்கிறவன், முதில்லு தன்மையாக்கி வைக்கிறவன், அபுவ்வு மன்னிக்கிறவன், முன்த்தக்கிம் வேதனை செய்கிறவன் என்பதுபோல் இந்த அஸ்மாக்கள் வெளியாகும் துறைகளான கல்குகளில் அதனதின் ஊட்சிதம் நடக்கும்போது முலில்லு வழி கெடுக்கிறவன் என்ற இஸ்முக்கு ஒருவன் பூர்வீகத்திலே மளுஹர் என்னும் வெளியாகும் துறையாக ஆகப்போகிறதில்லையே.*

*அப்படியிருக்க நபிமார்களையும், உலமாக்களையும் அனுப்பி அவர்கள் மனிதர்களை நேர்வழியளவில் அழைக்கிறதில் என்ன பிரயோஜனமென்று நீ கேட்பாயாயகில், இன்னமும் அஹ்து மீதாகு அறுதிமானம் எடுத்த நாளில் அலஸ்து பிரப்பிக்கும் நான் உங்கள் நாயன் அல்லவா? என்று ஆண்டவன் கேட்டபோது,*

*காலூ பலா அவனுடைய படைப்புகளில் மூமினானவர்கள் மெய்தான் என்று ஒப்புக் கொண்டார்கள். காபிறுகள் அல்லத் தட்டினார்கள். அப்போது ஒப்புக் கொண்டவர்கள் தானே இப்போது துன்யாவில் நிரப்பமான ஈமான் என்ற தங்கரீகத்தைத் தேடி வந்திருக்கிறார்கள். ஒப்புக் கொள்ளாமல் அல்லத்தட்டினவர்கள் தானே குபுறென்ற தங்கரீகக் குறைச்சலைத் தேடி வந்திருக்கிறார்கள்.*

*ஆனதால் நபிமார்கள் உலமாக்களுடைய அழைக்குதல் அவனவன் ஆதியிலே தேடிவந்த தங்கரீகத்தை அளித்து மாற்றிப் போடுமோ என்று கேட்பாயாகிலும் இந்தப் பிசகுதலான சந்தேகம் உன்னில் மறைவாயிருந்து உன்னை வாதித்துக் கொண்டிருக்கிறது. அந்த சந்தேகம் நீங்கும்படியாய் நான் சொல்கிறேன் கேள்.*

*அன்பியாக்களும், அவ்லியாக்களும் உலமாக்களும் நபி பட்டத்தையும், விளக்கத்தையும், வறதத்தையும் பெற்று வருகிற காலத்திலிருந்த மனிதர்கள் பத்றத்து மார்க்கம் தூர்ந்து போன காலத்திலிருந்தது போல் இருக்கிறார்கள். அப்போது நபிமார்கள் மனிதர்களை நேர்வழியில்*

*அழைக்க கொஞ்ச முந்தியும் இன்னார்தான் மூமின் இன்னார்தான் காபிர் என்று சொல்ல முடியாது.*

*ஏனென்றால் ஏவல் விலக்கல் இன்னதென்று அவர்களுக்குத் தெரியாமல் பழைய வழிகேட்டில் தரிபட்டு இருக்கும்போது நபிமார்களுடைய அழைக்குதலாகிறது அவர்களில் மறைவாகயிருந்த தங்கரீகத்தை இஸ்லாமென்றாவது குப்றென்றாவது வெளிப்படுத்திப் போட்டுது. அவரவர்கள் பூர்வீகத்திலே தேடிக் கொண்ட தங்கரீகத்தை அப்போதுதான் உணர்ந்தார்கள். உணர்ந்துகொண்டதின் பின்னால் எங்களின் மறைவாகயிருந்ததுதானே இப்போது உங்களைக் கொண்டு வெளியாகினது. அதுவே தவிர உங்களாலே எங்களுடைய பழைய தங்கரீகத்தை அழித்து மாற்ற இயலுமா? அல்லது கூட்ட குறைக்க இயலுமா? என்று கேட்பாயாகிலும் இதுவரையிலும் நுபுவ்வத்து, விலாயத்து, வறதத்து இன்னதென்று விளங்காத்ததால் இவ்விதம் கேட்கிறாய்.*

*ஆனதால், அவைகளை விளங்கிக் கொள். நுபுவ்வத்தைக் கொடுக்கப்பட்ட அன்பியாக்களுக்கும், விலாயத்தைக் கொடுக்கப்பட்ட அவ்லியாக்களுக்கும், வறதத்தைக் கொடுக்கப்பட்ட உலமாக்களுக்கும் எல்லா ஆலம்களிலேயும் ஆக்க அழிக்கக் கூடிய தஸர்றுபாத்து என்ற தத்துவம் உண்டும்.*

*அந்த தத்துவத்தைக் கொண்டுதான் நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முலில்லு என்ற இஸ்முக்கு மலுஹறாக இருப்பவனை ஹாதீ என்ற இஸ்முக்கு மள்ஹறாக ஆகும்படி அழைத்து நேர்வழிக் காட்டினதுபோல் சந்திரனை இருபிளப்பாய் பிளந்தார்கள். செத்த பிரேதங்களை எழுப்பினார்கள். அஸ்தமித்த சூரியனை மீட்டினார்கள். இன்னமும் எண்ணத்தில் அடங்காத காரணங்களை எல்லாம் முஃஜிஸாத்தைக் கொண்டு செய்தார்கள்.*

*முஃஜிஸாத்து என்பது அக்குலானது கண்டிருப்பதற்கும், கேட்டிருப்பதற்கும் மாற்றமான இன்னுமொருவரால் செய்யக்கூடாத காரியத்தைச் செய்வதாயிருக்கும். அது எப்படி என்றால் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் நெருப்பிலே தஸற்றுபு செய்து அதைக் குளிரச் செய்து போட்டார்கள். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கைகோலை பாம்பாக்கினார்கள். கடலை பிளந்து வழியாக்கி அவர்கள் கவுமுகளை அழைத்துக் கொண்டு போனார்கள். பிர்அவ்னுடைய கவுமுகளைப் பிடித்து விழுங்கச் சொன்னார்கள். அவர்களை விழுங்கிப் போட்டுது.*

*சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காற்றை வசப்படுத்தி தங்கள் எருவாகனமாகிய விரிப்பை விரித்து அதில் தங்கள் கௌமுகளை ஏற்றிக்கொண்டு பறக்கச் செய்தார்கள். தாஊது அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இரும்பை மெழுகுபோல் அவர்கள் கைகொண்டு குலைத்துப் போடுவார்கள்.*

*மற்யம் அலைஹிஸ்ஸலாம் ஈத்தமரத்தை அசைத்து பழமில்ஹத காலத்தில் காய்த்து பழுத்து உதிரச் செய்தார்கள். ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூனூ கிறத்தத்தன் காசிஈன்- பங்களிப்பாகிய குரங்குகளாக ஆகிப் போங்கள் என்று சொல்லி அவர்களுக்கு வழிப்படாத*

*சிலரை குரங்குகளாக ஆக்கிப் போட்டார்கள். இன்னமும் இதுபோல் உள்ளதுகளை கேட்கமாத்திரம் எண்ணுகிறாய்.*

*அன்பியாக்கள் தான் இவ்விதமெல்லாம் செய்தார்கள். அவர்களுக்கு நுபுவ்வத்து என்னும் ஆண்டவனுக்குப் பகரமாகுதல் என்னும் தத்துவமிருந்தபடியால் அவர்களாலே ஒருவேளை சீதேவியாக்கி வைக்க முடியும்தான். அதுபோல் இந்த உலமாக்களுக்கு அந்த நுபுவ்வத்தைக் கொடுக்கப்பட்டாயிருக்கிறது. நுபுவ்வத்துடைய வாசல்தான் அடைபட்டுப் போய் விட்டதே என்று கேட்பாயாகில்,*

*அறிந்துகொள். பத்துரத்துடைய காலத்தில் நபியாக அனுப்பப்பட்ட நபிமார்கள் முந்தின நபியை தொடர்வதன்னியே புதுசுபுதுசாகிய ஹுக்குமுகளைக் கொண்டு அந்தகாலத்து மனிதர்களை ஏவல் விலக்கல் செய்து நேர்வழி காட்டும்படியாக நுபுவ்வத்துத் தஷ்ரீவுதான் நமது நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொண்டுத் தரிவுண்டுப் போய்விட்;டது.*

*இந்தக் காலத்தில் நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய குலபாக்களாகிய அவ்லியாக்கள் நபி நாயகத்தை தொடர்ந்தவர்களாக இருக்கிற ஹாலிலே இந்த காலத்து மனிதர்களுக்கு இணக்கமான காரியங்களைக் கொண்டு ஆண்டவனுடைய ஹுக்குமுகளை நடத்தாட்டி அவர்களில் முலில்லுடைய மள்ஹறாக இருப்பவர்களை ஹாதியுடைய மள்ஹரு அளவில் அழைத்து நேர்வழிகாட்டும்படியாக நுபுவ்வத்துல் விலாயத்தாகிறது இந்த உலமாக்களைக் கொண்டு கியாமத்து நாள் வரைக்கும், நடந்துக் கொண்டுதானிருக்கும்.*

*அந்த அன்பியாக்களைக் கொண்டு நடத்தினதையெல்லாம் இப்போது இந்த அவ்லியாக்களாகிய உலமாக்களைக் கொண்டுதான் நடத்துகிறான். ஏனென்றால் அவர்கள் அடங்களிலேயும், ஆண்டவனுடைய அஸ்மா சிபாத்துகள் வெளியாகி இருப்பதால், இவர்கள் அவன்தானாக இருந்து ஹுக்குமுகளை வெளிப்படுத்துகிறார்கள். இவர்களுடைய நாட்டம் சொல், செயல் அடங்களும் அவன்தானாக இருப்பதால் இவர்களுக்கு மாற்றம் செய்வது அவனுக்கு மாற்றம் செய்வதாக இருக்கும்.*

*இன்னமும், அன்பியாக்களிற் மிகுந்தவர்களுக்கு நுபுவ்வத்துல் விலாயத்து உண்டாகியிருந்தது போல் ஹிலுறு அலைஹிஸ்ஸலாமுக்கும் துன்யாவில் ஈசா அலைஹிஸ்ஸலாம் இறங்கின நேரத்தில் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் நுபுவ்வத்துல் விலாயத்ததாக இருக்கும் என்று இன்சான் காமில் என்ற கிதாபில் வருகிறது.*

*ஏனென்றால், ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நுபுவ்வத்துல் விலாயத்தைக் கொண்டு வந்த நேரத்தில் தங்களுடைய இன்ஜீல் வேதத்தைக் கொண்டு மனிதர்களை நடத்த மாட்டார்கள். குர்ஆனைக் கொண்டுதான் நடத்தாட்டுவார்கள்.*

*மேலும் முன் பூர்வீகத்திலே நிறப்பமாக இருந்ததுதான் இப்போது நிறப்பமாக இருக்கும் என்றும், முன் பூர்வீகத்திலே குறைவாக இருந்ததுதான் இப்போது குறைவாக இருக்குதென்றும், நிறப்பத்துக்கு முன் அஹ்து மீதாகுடைய நாளையில் ஒப்புக் கொண்டதுதான் காரணமாக இருக்கும் என்றும், குறைச்சலுக்கு அந்த நாளையில் மறுத்ததுதான் காரணமாக இருக்கும் என்றும் சொல்லக் கூடாது.*

*ஏனென்றால் காபிரீன்களுடைய அகீதாவாகிய கொள்கைக்கு நேர்பாடாகி விடுவதுடன் அவனவனும் முந்தின ஜென்மத்தில் செய்த பாவ புண்ணியத்துக்கு தக்கது நல்ல பிறப்பாக அல்லது கெட்ட பிறப்பாக துன்யாவில் பிறக்கிறான் என்று சொல்வதுடன், இந்த துன்யாதான் (ஜஸா) கூலி கொடுக்கப்படுகிற வீடென்று சொல்ல வேணும். துன்யா கூலி கொடுக்கப்படுகிற வீடில்லை. இந்த துன்யாவில் செய்த புண்ணியத்துக்கு கூலி கொடுக்கப்படுகிறது ஆகிறத்தாகிய மறுமையிலாக இருக்கும்.*

*தவிரவும் ஆண்டவன் இப்போதும் எப்போதும் அப்போதும் அவனுடைய நாட்டப்படி செய்கிறான். அவனுடைய தெரிவுதல்படி செய்கிறான். இன்னும் எல்லா நேரமும் அவன் வெளியாகுற காரியத்திலிருக்கிறான் என்றும் சொல்ல முடியாத்ததுபோல முன் நாடி எல்லாத்தையும் செய்து போட்டு இப்போது சும்மாயிருக்கிறான் என்று சொல்ல வேணும். அவன் அப்படிச் சும்மாயிருக்கவில்லை. ஒரு நொடி நேரத்தில் ஒன்றை ஆக்க அழிக்க வல்லமையுடைவன். நாடினதை அழிக்கிறான். நாடினதைத் தரிபடுத்தி வைக்கிறான். உம்முல் கிதாபு அவன் வசத்திலாயிருக்கும்.*

*மேலும் படைத்தது முதல் கடைசி வரையிலும் நன்மை செய்வதற்கென்றே கற்பிக்கப்பட்டவர்கள் மலாயிகத்துகளாக இருக்கும். திண்மை செய்வதற்கென்றே கற்பிக்கப்பட்டவர்கள் ஷெய்த்தான்களாயிருக்கும். அதுபோல் மனிதர்களை ஒன்றிற்காக கற்பிக்கப்படவில்லை.*

*மேலும், அவர்களுடைய கற்பனை இன்னது தான் என்று நபியாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் மட்டுப்படுத்தி அவரவர்களுடைய கற்பனை இன்னதுதான் என்று அறிவார்களானால் துன்யாவிலேயே அச்சம் தீர்ந்து போவதுடன் துன்யாவுடைய கோர்வையைக் குலைத்துப் போடுவார்கள். அப்படி அச்சம் தீர்ந்து போகாமல் இருப்பதற்காகவே ஆண்டவன் அவனுடைய கலாகத்றை மறைத்து வைத்திருக்கிறான்.*

*அதற்காகத்தான், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மாஅத்ரீ மாயுப்அலு பீ வலாபிக்கும் - உங்களைக் கொண்டும், என்னைக் கொண்டும் இன்னதுதான் செய்யப்படும் என்று நானறியமாட்டேன் என்று சொல்லுமென்று அல்லாஹுத்தஆலா சொல்லச் சொன்னான். மேலும் அந்த நாயகமாவது இந்த துன்யாவில் அச்சம் தீர்ந்து சும்மாயிருக்கவில்லை. லாயவுமனு மக்றல்லாஹி இல்லல் கவுமுல் காஸிறூன் - ஆண்டவனுடைய குபாடத்தை நஷ்ட்டவாளன்தான் அச்சம் தீர்ந்து இருப்பான் என்று ஆண்டவன் சொன்னான்.*

*மேலும், அல்லாஹுத் தஆலாவுடைய களா கற்பனையாகிறது இரண்டு வகையாயிருக்கும். அதில் ஒன்றாவது, முஹ்க்கமு - பேதகமாகாதது. அது அல்லாஹ்வுடைய சொந்த காரியம். இரண்டாவது முப்றமுன் - அதில் பேதகம், பிரட்டி விடுதல் முதலானவைகளுக்கு இடம்பாடானது.*

*மனிதர்களுடைய களாவானது பேதகமாகிறதில் உள்ளதானபடியால், ஆண்டவனுடைய களாகத்றுடைய விசயத்தில் ஆலோசித்து தட்டழிந்தவர்களாய் அச்சம் தீராமலிருப்பதுடன் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முதல் (முப்றமுடைய) களாவில் நின்றும் கார்மானம் தேடினார்கள். அதுபோல், மன்றாடி சிபாரிசும் தேடினார்கள்.*

*மேலும், ஆண்டவனுடைய தாத்துடைய (மள்ஹறாகிய) அஹ்லுல்லாக்களுடைய பதவியாகிறது, அவர்களுடைய மவுத்துக்குப் பின்னாலே யாவும் முடிந்துபோய் விட்டதென்று சொல்லக்கூடாது. ஏனென்றால் மனிதனுடைய பதவிக்கு ஒரு தீர்ச்சையில்லை. இதுகளை உணர்ந்து தன்னுடைய நிலைமை இன்னதுதான் என்று அறிந்து அந்த வழியில் செல்லாமல் உன்னுடைய குருட்டுத்தனமென்னும் நரகத்தில் கிடப்பதுடன், இனிமேலாவது அதை நீக்கும் வழியைத் தேடாமல் பொடுபோக்காக இருந்து விடுவாயாகில்,)*

அதுவே நரகத்துக்கு வழி. அல்லது அதுவே நரகமென்றெண்ணிக் கொள். ஏனென்றால், *கல்லா லௌத்த..லமூன இல் மல்யக்கீன் லத்தறவுன்னல் ஜஹீம் தும்ம லத்தறவுன்னகா அய்னல் யக்கீன்* - நீங்கள் நிச்சயமாகிய அறிவாக அறிவீர்களானால், திட்டவட்டமாய் உங்கள் உள்ரங்கத்தில் நரகத்தைக் காண்பீர்கள். அப்பால் நிச்சயமாக கண்காட்சியாக காண்பீர்கள் என்றும் அல்லாஹுத்தஆலா குர்ஆனில் திருவுளமாயிருக்கிறான்.

சீமான் என்ற பேரை ஏற்க அல்லது தன்னுடைய கனாஅத்தைப் போதுமானமட்டில் போதுமாக்கிக் கொள்ள நாடினவர்கள் அதற்குத் தகுந்த நடப்பை எடுக்காமல் ஊழ்விதிப்படி நடக்குமென்று பிணம்போலிருந்துவிட்டால், தரித்திரவான் என்றும், சோத்துக்கில்லாமல் சாகக் கிடக்கிறவன் என்ற வர்ணிப்பையும் உண்டாக்கிக் கொள்வானல்லாது வேறில்லை.

உலகத்தில் ஒவ்வொரு முயற்சியாலும், கோலத்தாலும் அதற்குள்ள வர்ணிப்பையும், அவைகளால் வரும் நயத்தையும், தீங்கையும், அனுபவிக்கிறதுபோல் தீனிலும் அப்படித்தான். தீனுடைய சிர்றில் இப்போதெழுதப்பட்ட சிர்றைப் பார்க்கிலும், மேலாம்பரமான சிர்றாகிறது, ஆலுத்திலுண்டான பல இடம்பாடாகிய குறிப்புகள் என்னும் கல்குகளாகிறது, அறவே இல்லாத்தது என்கிற அதினுடைய அடிமூட்டின் படிக்கே இருக்குதல்லாது வேறில்லை.

சகலதும் இன்ன இன்ன விதமானக் குறிப்பென்று குறித்தபடி வெளியாகினதிலும் அதுகளுக்கு யாதொரு வுஜூதும் கிடையாது. உண்டானதுகளின் கொள்கையுடைய ரூபங்களைக் கொண்டு அணைந்ததாக ஹக்குடைய வுஜூதைத் தவிர வெளிரங்கத்திலும் யாதொரு உஜூதும் கிடையாது.

ஆகையால், பலவித தஜல்லியெனும் வெளியான ரூபங்களைக் கொண்டு இன்பம் பெறுகிறதும், துன்பம் பெறுகிறதும் ஹக்கேயல்லாது வேறில்லை. அவன் நாடினால் அவனுடைய கல்கைக் கொண்டு அவன் தனக்கு வழிப்பட்டுக் கூலியை வழமையாக்கிக் கொள்கிறான்.

இதற்காகத்தான், பைத்து சொல்லப்படுகிறது. *பல்பஹ்று பஹ்றுன் அலா மாக்கான மின்க்கிதமி இன்னல் ஹவாத்தித அம்வாஜுன் வஅன்னஹாறு* - சமுத்திரம் பூர்வீகத்திலாயிருந்தபடி சமுத்திரம்தான். அதில் புதுசாயுண்டாகிறதுகள் அலைகளும், ஆறுகளுமாயிருக்கும் என்றும்

(பொன்னை மறைத்தது பொன்னணி பூடனம்

பொன்னில் மறைந்தது பொன்னணி பூடனம்

தன்னை மறைந்தது தன் கரணங்களாம்

தன்னில் மறைந்தது தன் கரணங்களே

குன்னென் றெழுந்தது தன்வடிவாகி

கூடுமதுதானே முச்சுடராகி

மின்னென் றெழுந்ததில் வெளிச்சமுமாகி

மீண்டு மவ்வொளிதானே மின்னுள்ளொடுங்கி

சொல்லடி பெண்ணே சொல்லாயோ பெண்ணே

துய்மை மயவெளிதன் மயம் பெண்ணே)

பொன்னென்றதில் பல பணியதுமாகி பேறும் உண்டாக்கினோன்தான் அஹதாமென்றும், இன்னமும் ஆராய்வுடன் எதைப் பார்த்தாலும் வுஜூது ஒன்றென்பதற்கு அத்தாட்சியாகுதல்லாது வேறில்லை. இன்பமென்றும், துன்பமென்றும் சொல்லப்படுவது உண்டான வஸ்துக்களின் வர்ணிப்பில் நின்றுமுள்ளதாயிருக்கும். இது இரண்டையும் ஹக்களவிற் சேர்த்ததாகிறது,

இரண்டு பாதையில் ஒன்றுக்காயிருக்கும். அது இறங்கும் தலத்தில் உண்டானதென்ற வருணிப்புகளைக் கொண்டு அது வருணிப்புப் பெறுவதாலும், இன்னமும் உண்டானது என்கிறதும் அதினுடைய வருணிப்புகளும் ஹக்களவில் மீளுகிறதற்காக வேண்டியுமாயிருக்கும். 'எல்லாம் ஒன்றே' ஒன்றென்கிறதைப் பிடித்துப் பார்க்க அடங்களும் அதிலே மாண்டதாகவே இருக்கிறது.

ஆகையால், இன்பமும் இல்லை. துன்பமும் இல்லை. ஏனென்றால், உண்டானதுக்கே வுஜூதில்லை என்றால், அதினுடைய பலவித வர்ணப்புக்கு எப்படி உஜூதுண்டாயிருக்கும். இதற்காகத்தான்,

(பைத்து) *வஅல்லமுத்தீன வத்துன்யா லித்தாலி பிஹா வஸய்யறுல்கல்ப லில் மஹ்பூபி அவ்த்தானா* - தீனென்னும் ஆகிறத்தையும், துன்யாவையும் அதுகளை தேடுகிறவனுக்குச் சாட்டிப்போட்டு கல்பை மஹ்பூபுக்குக் குடியிருக்கும் தானங்களாக ஆக்கிக் கொண்டார்கள் என்று ஆரிபூன்களில் ஒருவர் சைக்கினை செய்தார்கள்.

**தீன் பற்றிய விளக்கம்:**

فصل **பஸ்லுன்** தீனாகிறது இரண்டு தீனாயிருக்கும். *முதலாவது* அல்லாஹ்விடத்திலேயும், ஹக்குத்தஆலா அவருக்கு அறிவித்தானே அந்த ஒருவரிடத்திலும் ஹக்கு அவருக்கு அறிவித்தானே அந்த ஒருவர் அவருக்கு அறிவித்தாரே அந்த ஒருவரிடத்திலும் தீனாக இருக்கும்.

*இரண்டாவது* கல்குகளிடத்தில் தீனாகயிருக்கும். அதை அல்லாஹுத்தஆலா மற்றவர்கள் உறுதிபெறும்பொருட்டு சொல்லிக் காட்டியிருக்கிறான். அல்லாஹ்விடத்தில் தீனாகயிருக்கிறதைத்தான் அல்லாஹுத்தஆலா தெரிந்து கொண்டான். இன்னும் கல்குகளிடத்திலுள்ள தீனைக்காண மேலாம்பரமான பதவியை அல்லாஹுத்தஆலா அதற்குக் கொடுத்தான். அந்த தீன்தான் அன்பியாக்கள் கொண்டாடி வந்து அவர்கள் மூலமாய் மற்றவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

கல்குகளிடத்திலுள்ள தீன் என்றது ஹக்குடைய நூறு கொண்டு நேர்வழி பெற்று அம்றுடைய ஆலத்திலும் கல்குடைய ஆலத்திலும் யோசித்துத் தாங்களாக தங்களுடைய நப்சுகளை அடக்கி ஒடுக்கி சகல இச்சைகளையும் விட்டு நீங்கி கல்குகளை விட்டுத் தனித்து வைத்த ஹிம்மத்தைச் சறுகவிடாமல் ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய மார்க்கத்தில் உள்ள பாதிரிமார்கள் நூதனமாகச் செய்ததாயிருக்கும். அப்படிப்போல் சரியான அநேக மெய்ஞானிகளும் தெண்டிக்கிறார்கள்.

ஆனால் இமாம் அப்துல் கரீமுல் ஜீலிய்யி ரலியல்லாஹு அன்ஹு தங்களுடைய **இன்சான் காமில்** என்னும் கிதாபில் அறுபத்தி மூன்றாவது பாபில் சகல தீனுடைய ஸிர்ருகளைப் பேசி வருகிறதில் விதர்ப்பமாகிய சகல மார்க்கங்களும் பத்து (அஸலென்றும்) அதிலுள்ள பிரிவுகள் மிகுத்திருப்பதால், தீர்ச்சையாகாதென்றும் சொல்லியிருப்பது(புசூஸில்) சொல்லியபடி இரண்டு தீனென்று மேலே எழுதினதற்குப் பிணங்காது ஆராய்ந்து கொள்ளவும்.

இன்சான் காமிலில் சொல்லியபடி மிகுந்த சுருக்கமாய் பழவரக்காட்டு ஜான் முஹம்மது லெப்பை கில் ஆலிம் நாயகம் தர்ஜுமாச் செய்திருப்பதைப் பார்த்துக் கொள்ளவும். ஆனால், அதை அவர்கள் விரிவாக்காமல் சொல்லியிருப்பதை தாறுமாறாய் விளங்காதே.

மொத்தத்தில் தீன் என்பது வழிப்பாடென்பதை மறந்து விடாதே. வழிகூடி நடப்பதில் சரியான பாதையளவில் போய் தீபரம் நாடும் தலத்தை எத்திக் கொள்கிறதும் உண்டு. பாதை வழித் தெரியாமல் பாதை தப்பி அனேக கஷ்ட நஷ்டத்துடன் துன்பப்பட்டு, வருத்தப்பட்டு மதிமயங்கி

பொறி கலங்கி அப்பால் எத்திக் கொண்டாலும் அவரவருடைய தகுதிக்குத்தக்கபடி இன்பத்தை அனுபவிப்பார்கள்.

ஒரு இராஜானிடத்தில் இசிம்மாசனத்தில் ஒன்றாக சரியிருப்பு இருப்பவர்களும் அப்புறமிருப்பவர்களும், நிற்பவர்களும், மேலிட்ட பணிவிடையால் மேலிட்ட சுகண்டியிலும், தாழ்ந்த பணிவிடையால் தாழ்ந்த சுகண்டியிலும் பலபலவிதமிருப்பார்கள்.

அவரவர்களுடைய கருத்துக்கும், தகுதிக்கும் தக்கபடியே அவர்களுடைய முயற்சிகளைக் கையேற்றுக் கொள்ளப்படும். ஒருபோது ஈஸா அலைஹிஸ்ஸலாம் கானகத்தில் வழிகூடி நடக்கும்போது, தோல் வேலை செய்கிற ஒரு செம்மான் சுஜூதிலிருந்து சொல்கிறான்: 'நாயனே! நீ ஏறுகிற கழுதையை எனக்கு காண்பித்தாயானால், அதற்கு அழகான ஒரு சேணம் ஜீன் சரிகட்டி வைப்பேன் என்று மிகுந்தப் பேராசையுடன் சொல்வதைக் கேட்டு, ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஓய் புத்தியில்லாதவனே! நாயனுக்குக் கழுதையும் இருக்குமோ? அவன் கழுதை மீதிலும் ஏறுவானோ என்றவுடன், அல்லாஹுத்தஆலா ஓய் ஈஸாவே! நம்முடைய அடிமைக்கும் நமக்கும் இடையில் திரையை உண்டாக்காதிரும். அவனுடைய தகுதிக்குத் தக்கது நம்மை முனாஜாத்து செய்ததை நாம் அதிக சந்தோசத்துடன் ஒப்புக் கொண்டோம் என்று உத்தரவாச்சுது.

இன்னமும் ஒருபோது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸவ்தா என்ற வெள்ளாட்டியைப் பார்த்து அல்லாஹ் எங்கே இருக்கிறான்? என்றபோது, '**வானத்தில்**' என்று அவள் சொன்னவுடன், கஃபாவுடைய நாயகனை இவள் ஈமான் கொண்டவள் என்றார்கள்.

இன்னமும் ஒரு கோவிலில் இருந்த விக்கிரகத்தை அதிக குஷூவுடன் பூசித்துக் கொண்டிருந்த ஒருவருடைய கூப்பிடுதலுக்கு அல்லாஹுத்தஆலாவிடத்தில் நின்றும் **லப்பைக்க** என்று மறுமொழி உண்டானதாக அஷ்ஷெய்குல் அக்பர் நகல் செய்திருக்கிறார்கள்.

ஆனால் இன்சான் காமில் என்னும் கிதாபில் பலவிதமான குப்பாறுகள் தீர்மானம் ஒருவகை இன்பம் பெறுகிறதாக இருந்தபோதிலும், நீண்டகாலம் நரக லோகத்திலிருந்து தீர்மானமான துன்பங்களை அனுபவித்தின் பின்னல் அல்லாது வேறில்லை என்று சொல்லுகிறார்கள்.

அடுத்தாண்மையாகச் செம்மானுடைய ஆகத்திலும் சவ்தா என்ற வெள்ளாட்டியுடைய ஆகத்திலும் அப்பால் விக்கிரகத்தைப் பூசித்தவனுடைய செய்தியையும் பேசி வந்ததில் ஒரு கேள்வியுண்டாகி இருக்கிறது. அதென்னவானால், மேற்படி மூவரும் திட்டவட்டமான காபிர் என்று ளாஹிரில் நாம் ஹுக்கும் செய்வதும் தவிர அவர்கள் சொன்னதைச் சரிகண்டவனையும் முற்த்தது என்றாக்கி ளாஹிர் ஷரீஅத்தின்படி அவர்களைக் கொன்று போடும்படிக்கும் ஹுக்கும் உண்டாகி இருக்கிறதே,

தவிரவும் உலகத்தில் குப்பாரென்று சொல்லப்படுகிறவர்கள் எல்லாம் ஒவ்வொரு விதம் மேற்படி மூவரும் கொண்டிருக்கிற இஃதிக்காதுபோல் உள்ள ஒவ்வொரு வகை நிருணயங்களைத் தானே விசுவாசித்திருக்கிறார்கள். அப்படியிருக்க, அவர்களோடு போர்ச்

செய்யும்படிக்கும் போர்க்களத்தில் மடிந்துபோன முஸ்லிமுக்கு ஜயம் பெறுதலும் கிடைக்க வேண்டியதென்ன? என்று கேட்கப் போதும்,

அறிந்து கொள்! இந்தக் கேள்விக்கு பதில் சொல்வது கொண்டு புக்லாயிருக்கத்தகுமாகிய கேள்வியாயிருப்பதுடன் நான் எழுதுவதை ஆராய்ந்து பார்.

குப்றென்பதுக்குப் பொருளாவது திரை என்றதாயிருக்கும். காபிறென்பது மறைந்தவன், தடைபட்டவன் என்றதாக இருக்கும். ஆனால், ஹக்கை விட்டுத்தடையாகி மறைந்தவனும் உண்டும். தீனைவிட்டுத் தடையாகி மறைந்தவனும் உண்டும். முஷ்ரிக்கானவர்கள் ஹக்கை விட்டும் மறைந்தவர்கள். வேதத்தை உடைய யஹூதி, நஸறாக்கள் தீனை விட்டுத் தடுக்கப்பட்டவர்கள்.

ஹக்கை விட்டுத் தடுக்கப்பட்டவர்கள், தீனை விட்டுத் தடுக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள். தீனைவிட்டுத் தடுக்கப்பட்டவாக்ள் ஒருவேளை ஹக்கைவிட்டுத் தடுக்கப்பட்டவர்களாக இருக்கமாட்டார்கள். அதென்னவானால், முஷ்ரிக்கானவர்கள் பல வஸ்துவுக்கும் அது தன்னிலே ஒவ்வொரு குணபாட்டைக் கண்டு அவைகளை எல்லாம் நாயன் என்பார்கள். வேதத்தையுடையவர்கள் ஒரே நாயனை வணங்குவதுடன் வழிப்பாட்டின் முறைத் தவறி நிற்பார்கள்.

ஆனால் வேதத்தையுடையவர்கள் வேறே ஒரு வஸ்த்துவுக்கு குணபாடு உண்டுமென்றால் முஷ்ரிக்காகி விடுவார்கள். முஸ்லிம் எண்ணினாலும் அப்படித்தான். இந்த இரண்டு குப்ரிலும் குப்று ஜஹ்லென்னும் அறியாமையினால் உள்ள குப்றும், குப்று நிபாக்கென்றும் லாயிலாஹாவுலாயி வலாயிலாஹாவுலாயி - இந்தக் கூட்டத்தளவிலாவது அந்தக் கூட்த்தளவிலாவது சேராமல் முஸ்லிம் முஷ்ரிக்குச் சகலருடனும் உள்ளொன்று புறமொன்றாகயிருக்கிற குப்றொன்று குப்று இனாதெனும் மூரியாட்டமாய் முரண்டாயிருக்கிற குப்றொன்று குப்று ஸந்தக்கத் என்னும் எந்தவழிப்பாட்டைச் சொன்னாலும் தர்க்கிப்பதுடன் முஷ்ரிக்காவது முஸ்லிமாவது கொண்டாடி வருகிற நல் நடத்தையைப் பழிப்பதுடன் தன் இஷ்டப்படி ஏதோ ஒரு வணக்கங் கொண்டுத்தான் ஈடேற்றம் பெற்றுக் கொள்வதுபோல் பேசுவதுடன் சில சமயம் நிபாக்கில் ஒருவகையும் அவனிலுண்டாகியிருக்கும்.

இன்னமும் குப்று ஆதிய்யி என்னும் வழமையளவிற் சேர்க்கப்பட்ட குப்றொன்று அதென்னவானால், முன்னோர்கள் கொண்டாடி வந்ததுபோல் நடக்கவேணும் என்பதில் அதுவே சரி என்று நம்புதலாய் சொல்லுகிறது உண்டு. அல்லது சரி, தப்பென்று கருத்துக்கு தோணப்படிருப்பதுன் நாமென்ன செய்கிறது, முன்னோர்கள் ஏற்படுத்தியபடி நடந்து தொலைக்க வேண்டியதுதான் முறைமை என்று தங்களுடைய ஆராய்வில் தோணுதலானதைப் பின் செல்லாமல் வழக்கத்தையே பெரிதாகக் கண்டு காலத்தைக் கடத்திப் போடுகிறது.

இவ்விதமாய் குப்றுகள் பலவிதமிருப்பதில் குப்று ஜஹ்லாக இருப்பவர்களுக்கு தீனுடைய விபரங்களை எவ்வகை விரிவாய்ச் சொல்லிக் காட்டினாலும், குப்றுக்கும் இஸ்லாமுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் இன்னதென்றும் ஒரு போதும் விளங்கிக் கொள்ள மாட்டார்கள்.

அவர்கள் காபிருடைய கோலமாகவே இருந்து மாண்டு போவார்கள். சிலர் முஸ்லிமுடைய கோலமாகவே இருந்தும் குப்றுக்கும் இஸ்லாமுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் இன்னதென்று தெரியாமலிருப்பதுடன், இஸ்லாமுலேயேயிருந்து மாண்டு போவதுடன் இஸ்லாமுடைய ஹுக்குமை அவர்களின் பேரில் நடத்தாட்டி வைத்து தொழுவித்தே அடக்கிப் போடுவோம்.

இந்த முஸ்லிமும் இந்த காபிறும் காரியம் தன்னில் ஒன்றாயிருக்க, அவனை முஸ்லிம் என்றும், இவனைக் காபிர் என்றும் ஹுக்குமுச் செய்வோம். ஆனாலிருவரும் இஸ்லாமுடைய வணக்கத்தைச் சொன்னாலும், குப்பாறுகளுடைய வணக்கத்தைச் சொன்னாலும் இரண்டையும் ஆண்டவனுக்குள்ள பணிவிடையென்றே ஏற்றுக் கொள்ளவார்கள். அதிகமான துஷ்ட்டத்தனங்கள் சொய்யமாட்டார்கள். முனாபிக்கானவன் ஒன்றையும் ஏற்க மாட்டான். முஸ்லிமுடைய கோலத்திலும் முனாபிக்கிருப்பான். காபிருடைய கோலத்திலும் இருப்பான்.

அப்படியிருக்க, வெளி கோலத்தைப் பார்த்தே நாம் ஹுக்கும் செய்வோம். காரியம் தன்னில் இரண்டிலும் அவன் சேரமாட்டான். குப்று ஸந்தக்காவென்னும் ஸிந்தீக் என்ற காபிறு ஒரு மார்க்கத்திலும் சேராதிருப்பதுடன் கோலத்தைப் பார்த்தே ஹுக்குமை நடத்தாட்டி வைக்கிறோம்.

ஆனால் குப்று இனாதென்பது எப்படியிருந்தாலும் நம்முடைய குலஆசாரத்தை விடக்கூடாது. அதற்கு மாற்றமாய் சொல்பவர்களுடன் பொருள் உயிர் இழந்தாலும் போர்ச் செய்வதல்லாது சறுகக் கூடாதென்ற துணிகரத்தோடிருக்கிறது. இவனைப் பார்த்துதான் ஏதும் விவேகமில்லாத ஏழைகள் ஜஹ்லாக குப்ரிலாகிப் போவதும் (ஆதத்தை) வழக்கத்தைப் பார்த்து அதன்படியே இவர்களைத் தொடர்ந்தே குப்ரில் தரிபட்டுப் போறதுமாயிருக்கிறது.

அதற்காகத்தான் குர்ஆனில் பகாத்திலூ அஇம்மத்தல் குப்றி குபுறுக்கும் -இமாம்களென்ற முன்னிலையானவர்களை கொன்று போடுங்கள் என்றுக் குறிப்பாய் ஏவப்பட்டது இப்போது எழுதப்பட்டதை ஆராய்ந்தாயாகில் முஸ்லிமுடைய கோலத்தில் முனாபிக்காய் காபிறைக்காணக் கெட்டவனும் இருப்பான். சிந்தீக்கும் இருப்பான். காபிரென்றும், முஸ்லிமென்றும் சொல்லக்கூடாத யாதொரு அறிவும் இல்லாதவர்கள் இரண்டு கோலத்திலும் இருப்பார்கள். இரண்டிலேயும் வழக்கமொன்றையே மார்க்கமாகக் கண்டு அநேகர் இருப்பார்கள்.

ஆகையால் இஸ்லாமுடைய கோலத்தில் இருப்பவர்களில் அனேகர்களும் வெட்டுக்குப் பாத்திரமாகிய முனாபிக்காவும் சிந்தீக்காகவும் வழக்கமென்றையே மார்க்கமாக்கிக் கொண்டவர்களாயும் இருப்பார்கள். காபிறுடைய கோலத்தில் இருப்பதுடன் யாதொரு பகுத்தறிவும் தெரியாதிருப்பதால் ஹகீகத்தில் அவர்களை கொல்லக் கூடாதவர்கள் அநேகம் இருப்பார்கள். குப்ரிலிருப்பதுடன் அநேகர்கள் இஸ்லாமை உண்மையென்று நம்பாமலுமிருக்கிறார்கள்.

ஒருவன் தொழுகை முதலாகிய நல்ல அமலைச் சாதிமானம் குல ஆசாரத்துக்காகக் கொண்டு வருவதுடன் அறவே அதில் ஒரு பயனில்லை என்றெண்ணி இருக்கிறான்.

ஒருவன் யாதொரு நல் அமலைச் செய்யாதிருப்பதுடன் நிறுணயத்தில் அமல் செய்தால் ஈடேற்றம் பெறலாம், நாம் தப்பிதவாளிதான் என்று எண்ணி இருக்கிறான்.

இவ்விருவரிலும் யார் மூமின், யார் காபிர் என்று ஆராய்ந்து பார். இப்படியெல்லாம் அளவிடக்கூடாத பல பிரிவாக இருப்பதால் மொத்தத்தில் ளாஹிரு நமக்கு தெரியுமல்லாது வேறில்லை. ஆகையால் காபிர்களோடு போர்ச் செய்யும்படி ஏவப்பட்டது.

ஏனென்றால், அவர்கள் அவர்கள் பாட்டிலிருக்கட்டுமென்று விட்டுவிட்டால் அது மேலிட்டு அல்லாஹ்வுடைய வஹ்தானிய்யத்தைத் தரிபடுத்துகிறது நாளிலே மறைந்து போய்விடும் பத்துறத்துடைய காலத்தில் மறைந்து போனதுபோல்.

இதற்காகத்தான் அவர்கள் இஸ்லாமுடைய இராஜதானியத்துக்குள்ளடங்கி ஏதும் திரைக் கொடுப்பதாய்க் கட்டுப்பட்டால் விட்டுவிடும்படியாய் ஏவப்பட்டது. எப்படிப் போலானால், திரேகத்தில் ஒரு உறுப்பில் ஏதும் புழுவெட்டு அல்லது ஒரு நீருண்டாகி அதுமேவிட்டுக் கொண்டுவந்தால் கூர்மையுடைய பரிகாரிகள் அந்தப்பிணி பரவாதிருக்கும் பொருட்டு அந்த உறுப்பை வெட்டி எடுத்துப் போடச் சொல்லுகிறார்கள். மேலிடாமல் அந்த உறுப்பிலே அந்த நீர் தரிபட்டு நின்றால் நாளிலே அதை ஆற்றுகிறது அல்லாது அதை வெட்டமாட்டார்கள். இப்படிப்போல் உயிருடையதெல்லாம் ஒன்றேயல்லாது வேறில்லை.

குப்றென்பது சில உறுப்பில் வந்த நீர் போலாயிருக்கும். அதுவேறே சவுக்கியமுள்ள இஸ்லாமெனும் உறுப்பை கடக்காமல் தன்னிலே அடங்கி நின்றால் நாளிலே அதை அடக்கி மருந்து செய்வதுடன் சவுக்கியத்தையும் ஆசை வைப்போம். தவிரவும் இஸ்லாமென்ற பயிற் செய்ததில் பயிருக்குக் கெடுதலான குப்றெனும் வேறே புற்பூண்டு முளைத்துக் கெடுதல் செய்வதானால் வேர்ப்புடுங்கலாய்ப் புடுங்கி போடுவோம்.

பயிருக்கு தாக்கமாய் அல்லது அதுவும் ஓர் வகை வித்ததைக் கொடுக்கிறதாய் இருந்தால் புடுங்காமல் விட்டு அதனால் சொற்ப புரோஜனத்தைப் பெற்றுக் கொள்வோம்.

ஆனால், மேலே சொல்லப்பட்ட மூவரைக் கொல்லப்படாமல் இரண்டு ரஸூலும் கஷ்புடைய ஒரு ஆரிபும் ஏற்றுக் கொண்டதெல்லாம், இம்மூவரால் அதைபார்க்கிலும் மேற்கடக்க முடியாது என்பதை அவர்கள் தெரிந்து கொண்டதல்லாது வேறில்லை. *குல்லுன் முயஸ்ஸருன் லிமாகுலிக்க லஹு* - சகலதும் எதற்காகப் படைக்கப்பட்டிருக்கிறதோ அந்த ஒன்றையே அதற்கு இலேசாய் இணக்கமாக்கப்பட்டதாயிருக்கும் என்ற ஹதீதில் சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னமொரு கருத்து என்னவானால் அல்லாஹ்வை அறிந்தவன் எந்த ஸூறத்தில் வெளியானாலும் வணங்கப்பட்டதெல்லாம் ஹக்குதானென்றறிவான். புத்துகளானாலும் சரி, மலாயிக்கத்தானாலும் சரி. ஆகையால் மூவரில் விக்கிரகத்தை பூசித்தவர் ஆரிபானதால் அதை மள்ஹறாக எண்ணினாரல்லாது ஷிர்க்காக்க இல்லை. எது எப்படியிருந்தாலும் நாம் ளாஹிறு ஹாலை அறிவோமல்லாது வேறில்லை.

ஹல்லாஜுடைய லாஹிர் பேச்சு குப்றாக விளங்கினதால், கொன்றவர்களுக்கு தவாபு கொடுக்கப்படுமல்லாது வேறில்லை. அப்துல் காதிறு ஜீலானிய்யி ஆண்டவர்கள் '**நானிருந்தால் கொல்லாமல் கைதூக்கி விட்டுவிடுவேன்**' என்றார்கள் அல்லாது கொன்றவர்களைக் குற்றம் சாட்டவில்லை.

குப்பாறுகளில் எத்தனையோ கோடி கத்திக்கு பயந்து கலிமாச் சொன்னார்கள். வெளிரங்கத்தில் திட்டவட்டமாய்த் தெரிய அவர்களைக் கொல்லாமல் இஸ்லாமிலே சேர்த்துக் கொண்டார்கள்.

சஹாபாக்களில் ஒருவர் ஒரு சண்டையில் ஒரு காபிறோடு போராடி வெட்டுவதற்கு ஆரம்பிக்கும் சமயம் அவனுடைய இருதயத்தில் இனி நம்மால் முடியாது. நாம் மாண்டு போவதில் சந்தேகம் இல்லை என்று நிச்சயமாக்கிக் கொண்டபடியால் இனிமேல் தப்பும் வழி கலிமாச் சொல்வது கொண்டல்லாது வேறில்லை என்று எண்ணி கலிமாச் சொன்னதை அவர்கள் அவனுடைய இருதயத்தில் யாதொரு உண்மை நம்புதலில்லாமல் உயிரையும் முதலையும் தப்பிவைத்துக் கொள்ளச் சொல்லுகிறான் என திட்டவட்டமாய் தெரிந்து கொண்டபடியால் அவன் கலிமாச் சொன்னதைப் பாராமல் அவன் கழுத்தை அறுத்துக் கொன்று போட்டார்கள்.

இது சங்கதி நபியுல்லாஹ்வுக்குத் தெரிந்தவுடன் அந்த ஸஹாபியை வரச் செய்து ஏனிந்த வேலை செய்தீர் என்று விசாரணை செய்தபோது, அல்லாஹ்வுடைய ரஸூலே நாயகமே! அவன் அல்லாஹ்வையும் தங்களையும் உண்மையாய் நம்பி கலிமாச் சொல்லவில்லை. ஆகிலும் என்னுடைய வாளுக்குப் பயந்து தன்னைத் தப்பிக் கொள்ள வேண்டி கலிமாச் சொன்னான் அல்லாது வேறில்லை. ஆனதால் கொன்று போட்டேன் என்று சொன்னவுடன்,

நபி நாயகம் அவர்களைக் குறை சொல்லி அவனுடைய கல்பை நீர் பிளந்து பார்த்தீரா? என்று கேட்டார்கள். அதன் கருத்தாவது லாஹிரில் நமக்குத் தலை சாய்த்தால் போதும். அப்பால் அவனுடைய நிய்யத்துக்கு தக்கது அல்லாஹ் கூலி கொடுப்பான் என்றதாயிருக்கும்.

ஆனால், இதையெல்லாத்தையும் விட்டுவிடுவோம். இப்போது நாம் முஸ்லிம் என்று கோலங்கொண்டவனில் நடத்தாட்டி வைப்பதை யோசிப்போம். அதென்னவானால்

ஒரு முஸ்லிம் தொழுகை, நோன்பு பர்ளு என்று சொன்னது யார்? அதுவெல்லாம் வீண் சொல்லென்றான். அதற்காக அவனை கொல்ல ஆரம்பித்தபோது நான் தவ்பாச் செய்து மீளுகிறேன் என்றவுடன் திட்டவட்டமாய் தன்னுடைய உயிரைக் காப்பாற்றும் பொருட்டாய்ச் சொல்லுகிறான். அவனுடைய இருதயத்தில் ஒன்றுமில்லை என்பது பட்டவர்த்தனமாய் தெரிந்திருந்தாலும் விட்டு விடவேண்டுமல்லாது வேறில்லை.

இன்னமும் குப்பாறுகளில் சிலர் நபியுல்லாஹ்விடத்தில் உங்களைக் கொண்டு நாங்கள் ஈமான் கொள்வதானால் ஐந்து நேரத் தொழுகையில் இஷாவென்றும், சுப்ஹென்றும் இரண்டு வேளைத் தொழுகையை நாங்கள் தொழுக மாட்டோம். அது வருத்தமான நேரமாக இருக்கிறது. அப்படி சம்மதமாகி எங்களைச் சேர்த்துக் கொள்ளுகிறதானால் நாங்கள் உம்முடைய மார்க்கத்தில்

வருகிறோம் என்றவுடன் சரியென்று நபியுல்லாஹ் சம்மதித்தப்படியால் அப்படியே அவர்கள் முபாயஆ கொடுத்தார்கள். சொற்ப நாளையில் எல்லோரைக் காணவும் இஷாவுக்கும், சுப்ஹுக்கும் முதன்மையாய் ஹாலிறாகிறவர்களாயிருந்தார்கள்.

இதை ஒரு மஸ்அலாவாக்கி நம்மிடம் ஒரு காபிறு அவ்விதம் கேட்டால், அப்படியே சம்மதித்து இஸ்லாமில் வருத்தலாமா? அப்படியே வருத்தினதில் தொழுக முதலே அவன் மவ்த்தாகிவிட்டால் அவனை தொழுவித்தடக்கிறதா அனந்திரம் முதலானதுகளை காபிறென்றாக்கி பங்கிடுகிறதா? அல்லது இஸ்லாமென்றாக்கிப் பங்கிடுகிறதா? இந்த நிருணயத்துடன் இருக்கும்போதே நம்முடைய பெண்ணை அவனுக்கு விவாகம் செய்து கொடுக்கலாமா?

இவைகள் ஒன்றும் கூடாதென்றால் நபியுல்லாஹ் அவ்விதம் சம்மதித்து முபாயஆ கொடுத்ததில் மற்ற இரண்டு வக்தை தொழாமலும் நிர்ணயம் கொள்ளாமலும் இருக்கும்வேளை அவர்கள் மவ்த்தாகிவிட்டால் எவ்விதம் ஹுக்கும் செய்வார்கள்? இவைகளுக்கெல்லாம் தீர்ப்புண்டாகி இருக்கிறதல்லாது வேறில்லை. அல்லாஹ் வானத்தில் என்ற வெள்ளாட்டியைக் காணவும் செம்மானைக் காணவும் இவன் குறைந்தவன் என்று எப்படிச் சொல்வோம்? ஆராய்ந்துக் கொள்.

ஆகையால் மொத்தத் தொகையில் கோலத்தில் காபிறாயும், உள்ரங்கத்தில் மூமினாயும் இருப்பவனைக் கொன்று போட்டதாலும் வெளிரங்கத்தில் மூமினாயும் உள்ரங்கத்தில் காபிறாயும் இருப்பவனில் இஸ்லாமுடைய சகல ஹுக்குமையும் நடத்தி வைப்பதாலும் நாம் குற்றவாளியாக மாட்டோம். அல்லது முந்தினவனைக் கொன்றதால் ஜிஹாதுடைய தவாபும், அல்லாஹ்வுடைய கலிமாவை மேலாம்பரமாக்கி வைத்த பெரும்பேறும், இவனைச் சேர்த்துக் கொண்டதால் இஸ்லாமைப் பரிபாலனம் செய்த தவாபும் கிடைக்கும் அல்லாது வேறில்லை.

ஏனென்றால் அந்தரங்கம் தெரியாத நாம் ஆகையால் நம் எண்ணப்படிதான் கூலி கிடைக்கும் *அனஇன்த லன்னி அப்தீ பீ பல்யுல்ஸின் பி யல்லன்ன* - நான் என்னுடைய அடிமையுடைய எண்ணத்தை அழகாக்கி வைத்துக் கொள்ளவும் என்று ஹதீது குத்ஸியில் அல்லாஹ் சொன்னதுபோல்.

ஆனால் கஷ்பையுடையவர்களுக்கு மறையாது. ஏனென்றால், சாகிபு ஸிர்ரி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்று சொல்லப்பட்ட ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சிர்ருடைய இல்மைக் கொண்டுச் சொந்தமாக்கி வைத்த ஹுதைபா ரலியல்லாஹு அன்ஹு சில மய்யித்துகளுக்குத் தொழுவிக்கமாட்டார்கள்.

ஏனென்றால், முனாபிக்காக மவ்வத்தாகிறவர்களையும், மூமினாக மவ்த்தாகிறவர்களையும் அவர்கள் களங்கமற அறிவார்கள். அதற்காக உமறு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹுதைபா எந்த மய்யித்துக்கு ஹாளிறாகித் தொழுகிறார்கள் என்று பார்த்து அவர்கள் தொழுதால் தொழுவார்கள். அவர்கள் விலகிக் கொண்டால் இவர்களும் விலகிக் கொள்வார்கள்.

நப்சே! ஆராய்ந்து பார். நபியுல்லாஹ்வுக்குப் பின் சஹாபாக்கள் நாளையிலே தொழுவித்து அடக்கக்கூடாத முனாபிக் உண்டாகியிருந்தால் உன்னுடைய இந்த நாளையில் எப்படி ஆகிலும் உற்றுணர்ந்து பார்த்தாயாகில் செத்திறந்து போகக் கடவதல்லாது வேறில்லை.

அதென்னவானால் சொர்க்கம் கொண்டு நன்மாராயம் பெற்ற அவர்கள் சொல்மொழிக்கு நேராய் குர்ஆன் இறங்கிய அமீறுல் முஃமினீன் உமறு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் எப்போதும் தன்னை பயந்து இந்த ஹுதைபா இடத்தில் றசூலுடைய சிர்ரை உடையவரே! என்னிலே ஏதாவது நிபாக்கிருக்கிறதா? என்று கேட்கிறவர்களாயிருந்தார்கள். அப்படியானால் உன்னுடைய ஹால் எப்படி? உணர்ச்சையாக இருந்து கொள்.

குர்ஆனில் அல்லாஹுத்தஆலா திருவுளமானான்: *யாஅய்யுஹன்னபிய்யு ஜாஹிதில் குப்பாற வல்முனாபிக்கீன ஒவலுள் அலைஹிம் மவுவாவும் ஜஹன்னம்* - நபியே! காபிர்களையும் முனாபிக்குகளையும் நீர் சங்காரம் செய்துபோடும். இன்னும் அவர்கள் மீது கடினமானக இரும். அவர்கள் ஒதுங்கும் தலம் ஜஹன்னம் என்னும் நெருப்புடைய பாதாளக் கிணறாக இருக்கும் என்றும்,

*வஅதல்லாஹுல் முனாபிக்கீன வல்முனாபிக்காத்தி வல்குப்பாற நாற ஜஹன்னம்* - முனாபிக்காகிய ஆண்பெண் சகலருக்கும் குப்பாறுகளுக்கும் ஜஹன்னமென்னும் பாதாள கிணற்றின் நெருப்பை அல்லாஹுத்தஆலா வார்த்தைப்பாடு செய்திருக்கிறான் என்றும் (*இன்னல் முனாபிக்கீனு பித்தற்கில் அஸ்பலிமினன்னாரி*) முனாபிக்கானவர்கள் நரகத்தில் நின்றும் தாழ்ந்த தட்டிலிருப்பார்கள் என்றும் குர்ஆனில் அவ்வல்தொடுத்து ஆகிறு வரைக்கும் அல்லாஹுத்தஆலா முனாபிக்கூன்களுடைய ஹாலை விரிவாகச் சொல்லிச் சகலருக்கும் உணர்ச்சை பூட்டியிருப்பதுடன் சில முனாபிக்குகள் விசயத்தில் (*லாதஃலமுகும் னஹ்னு னஃலமுகும்*) நபியே அவர்களை நீர் அறியமாட்டீர். நாம் அவர்களை அறிவோம் என்றும் அல்லாஹுத்தஆலாச் சொல்லியிருக்கிறான்.

ஆனால், பிற்பாடு சகலதையும் அறிவித்திருப்பதால் இன்னார் முனாபிக்கென்று அறிவித்தபடி ஹுதைபாவுக்கு அறிவித்தார்கள்.

ஆகையால், நிபாக்கை விட்டு நீங்கினால் அல்லாது ஈமானுண்டாக மாட்டாது. ஆனால் இப்போது எழுதிய ஆயத்துக்களைச் சிலர்கள் இதுவெல்லாம் காபிர்களுடைய ஹக்கில் அல்லது முனாபிக்குகளுடைய ஹக்கில் இறங்கினது என்றும் தன்னை மறந்து உளறுவார்கள். அப்பேர்ப்பட்ட அறிவீணர்களுடையச் சொல்லைக் கொண்டு மருளாதே.

முனாபிக்குக்குள்ள உள்ரங்கமான அடையாளங்கள் அநேகமிருப்பதுடன் குர்ஆனுடைய அத்தாட்சி கொண்டு வெளிரங்கமான அடையாளத்தை விட்டு நாம் நீங்கி இருக்கிறோமா என்று ஆலோசிப்பதில் நீங்காதிருப்பதால் நம்மை திட்டவட்டமான முனாபிக் என்று எண்ணி அல்லாஹ்விடத்தில் அதை விட்டு நம்மை நீக்கும்படி அஞ்சி பயந்து கேட்கிறோம்.

குர்ஆனில் *வஇதாகாமு இலஸ்ஸலாத்தி காமூகுஸாலா யுராஊனன்னாஸ வலாயத்கு றூனல்லாஹ இல்லாகலீலா* – முனாபிக்குகள் தொழுகையளவில் நின்றார்கள் என்றால் மனிதர்களை முகத்துதி வைத்தவர்களாய் சோம்புதல் உடையவர்களாய் நிற்பார்கள். இன்னும் அல்லாஹ்வை கொஞ்சமாகவே ஒழிய நினைக்கமாட்டார்கள்.

சோம்புதலாயிருப்பது எஎன்னவென்றால் கல்பு ஹுலூறாகிறத்தளவில் அவர்களுடைய ஆசை இழந்து போனதற்காக வேண்டியும் நப்சுடைய அவாவின் அடந்தேத்தியால் அவர்களுடைய கப்பிலுள்ள தங்கரீகம் இருளடைந்திருப்பதால் அந்த ஹுலூரை விட்டு அவர்கள் விரள்வதற்காக வேண்டியுமாக இருக்கும்.

*வாயவ்த் தூனஸ்ஸலாத்த இல்லாவகும் குஸாலா வலாயுன்பிகூன இல்லாவகும் காரிகூன்* - இன்னும் அந்த முனாபிக்குகள் சோம்புதலுடையவர்களாகவே ஒழிய தொழுகிறதற்கு வரமாட்டார்கள். இன்னும் பொருத்தம் கெட்டவர்களாகவே ஒழிய அல்லாஹ்வுடைய பாதையில் செலவு செய்ய மாட்டார்கள் என்றும் அவர்களுடைய தீர்மானம் காபிறாகவே சாவார்கள் என்று அல்லாஹுத்தஆலா மிகுந்த விரிவாகச் சொல்லியிருக்கிறான்.

ஆகையால் நிபாக்குடைய குணங்கள் அடையாளங்கள் இன்னதென வகைவிபரமாக ஈமானுடைய பாடத்தில் விபரிப்போம். கொஞ்சமெங்கிலும், விவேகமிருப்பவன் தொழுகையில் சோம்பல் இருப்பதும் அல்லாஹ்வுடைய பாதையில் பொருத்தக்கேடாய்ச் செலவு செய்வதும் தன்னுடைய குணமாகயிருந்தால் தன்னை முனாபிக்கென்று நிச்சயித்து அது நீங்குவதுக்குள்ள வழி தேடி நடந்தாலல்லாது கடத்தேற முடியாது.

ஆகையால் இப்பொழுது எழுதப்பட்டதால் விளங்கவேண்டியதென்னவென்றால் காபிரிலும் கொடிய காபிறாக இருப்பவன் இஸ்லாமுடைய கோலத்திலும் அவனில் ஒருவனைக் கொல்வது நூறு காபிரை விட ஏற்றமானதாயும், காபிறுடைய கோலமாயிருப்பவர்களில் அனேகர்களையும் ஹகீகத்தில், கொல்லக் கூடாதவர்களாயும் இருப்பதில் லாஹிர் ஷரீஅத்தில், அல்லாஹ்வுக்கு சொந்தம் பெற்ற அடியார்களில் அனேகர்களைக் கொல்லப்படுவதாயும் இருக்கிறது.

லாஹிருலேயும், பாத்தினிலேயும் ஈடேற்றம் பெற்ற அடியார்கள், உலகத்தில் மிகச் சுருக்கமாயிருப்பதுடன் நேர்வழியான மார்க்கம் தீனுல் இஸ்லாம் என்று தெரிந்திருக்க மனமுரண்டாய் காபிறாகி அந்த குபுரின் மார்க்கப்படிக்கும் பாவமான பொய், கொலை, களவு, அநியாயம் முதலாகியப் பவாங்களையும் பேணாமல் இஸ்லாமையும் அப்போது இகழ்ந்து ஆகத் தீர்மானமான மூதேவிகள் தான் லாஹிரிலும், பாத்தினிலும் கொல்வதற்கு பாத்திரமானவர்களாக இருப்பதுடன் நரகலோகத்திலும் ஊழிகாலம் தரிபடுவார்கள்.

மற்றவர்கள் அவர்களைத் தொடர்வதால் லாஹிரில் கொல்வதற்குப் பாத்திரமாகி நரகலோகம் புகுந்தாலும் அவர்களைப் போல் அதாபை அனுபவிக்கமாட்டார்கள். அனேகர்களை

லாஹிர்காரர்கள் காபிர் என்று ஹுக்குமு செய்வார்கள். ஹகீகத்துக்காரர்களிடத்தில் அவர்கள் அவ்லியாக்களாக இருக்கப் போதும்.

ஏனென்றால், இன்சான் காமிலில், அப்துல் கரீமுல் ஜீலிய்யி ரலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள்: ளாஹிர்காரர்கள் காபிறென்று சொல்லுகிற அப்லாதூனுல் ஹக்கீமை, நான் பார்த்ததில் கய்பிய்யாகிய ஆலத்தையோ ஒளிவாய் நிறப்பி இருக்கவும் அவர் பெற்றிருக்கிற சிறப்பைப் போல் அவ்லியாக்களில் தனித்த ஒருவருக்கே ஒழிய நான் காணவில்லை. அவரை நீர் யார்? என்றேன்.

நானாகிறது அந்தக் காலத்தில் குதுபாகவும், அந்த நேரத்தில் தனித்தவனாகவும் இருந்தேன் என்றார் என்று சொல்வதுடன் அப்பால் இப்படிப் போல் எவ்வளவோ, அற்புதமாகிய நவமாகிய புதுமைகளை நாம் கண்டிருக்கிறோம். அவைகளைப் பரத்தவே கூடாது என்று சொல்லுகிறார்கள்.

லாஹிரையுடையவர்கள் திட்டவட்டமாய் காபிறென்று ஹுக்குமு செய்யப்பட்டவர் குத்துபாயிருந்தால் காரியம் எப்படி என்பதை ஆராய்ந்து பார். உன்னுடையக் கேள்விக்காக நாம் இவ்வளவு மட்டில் நீட்டி நீளப்படுத்திப் பேசினதில் பலவிதமாயுளப்பமாக இருந்தபோதிலும் உன்னுடைய மக்குஸூதுக்குத் தகுந்த ஜவாபு இதில் சொல்லப்பட்டே இருக்கிறது.

நாம் இல்மைப் படித்திருந்தாலும் இதுவரை எனக்கு (தௌக்கெனும்) அனுபவிக்குதல் இல்லாதபடியால் இதுபோல் ஒற்றதில் ஹகீகத்தில் ஆழமாக எழுதுவதற்கு என்னுடைய கலம் நடக்கிறதில்லை. அல்லாஹுத்தஆலா அதிக சீக்கிரம் எனக்கும் உனக்கும் தௌக்கெனும் அனுபவிக்குதலைத் தருவான்.

**இன்சான் காமிலில் சொல்லப்பட்ட மார்க்கங்கள்**

ஆனால், இன்சான் காமில் என்னும் கிதாபில் பல மார்க்கத்தையுடையவர்களும் இன்ன இன்ன காரணத்தால் இன்னதை வணங்குகிறார்கள் என்பதை விபரிப்பதின் சுருக்கம் என்னவென்றால், ஆதம் அலைஹிஸ்ஸாம் அவர்களுக்கு இறங்கி சுஹுபை அவர்களுடைய பிள்ளைகளில் தெரிந்தவர்கள் ஈமான் கொண்டு அதன்படி அமல் செய்தவர்களைத் தவிர ஆறாய்வில்லாமல் சரீர இச்சையைத் தொடர்ந்தவர்கள் காபிறாக இருந்ததில்,

ஆதம் வபாத்தானதின் பின் சிலர்கள் ஆதம் அல்லாஹ்வுக்கு முடுகுதலாக இருந்தபடியால் அவரைப் போலொரு ரூபம் செய்து வைத்துக் கொண்டு அல்லாஹ்வை வணங்கினால் அல்லாஹ்வுக்கு முடுகுதல் பெறலாம் என நாடி அவ்விதம் செய்து வந்தார்கள். அப்பால் சிலர்கள் அந்த ரூபம் தன்னையே வணங்கினார்கள். இவர்கள்தான் புத்தை வணங்குகிறவர்கள்.

அப்பால் சிலர் இது தப்பிதம், லோகத்துக்கு அசலாகிய சூடு, குளிர்ச்சி, வறட்சி, சீதளம் என்ற நான்கு குணாகுணங்களை வணங்குவோம் என்று வணங்கினார்கள். இவர்கள்தான் **தபாயியிய்யாக்கள்.**

அப்பால் சிலர் இது தப்பென்று எண்ணி இதுகளுக்கு அசலான ஸுஹல், முஷ்தரீ, மிர்ரீஹ், ஷம்ஸு, ஸஹ்ரு, அத்தாரித், கமறு என்ற ஏழு நட்சத்திரத்தை வணங்கினார்கள். இவர்கள்தான் **பலாஸிபாக்கள்.**

அப்பால் சிலர் இருளையும், ஒளிவையும் வணங்க வேணுமல்லாது மற்றதை வணங்குவது தப்பென்று அதையே வணங்கினார்கள். இவர்கள்தான் **தனவிய்யாக்கள்.**

அப்பால் சிலர் நெருப்பை வணங்கினார்கள். இவர்கள்தான் **மஜூசிகள்.**

அப்பால் சிலர், வணக்கத்தை விட்டுப் போட்டு கர்ப்பம் வெளியில் தள்ளுவதும், பூமி விழுங்குவதும் அல்லாமல் ஒன்றுமில்லை. வணக்கத்தில் என்ன பலன் என்று எண்ணி இருந்து விட்டார்கள். இவர்கள்தான் **தஹ்ரிய்யாக்கள்** என்றும் **முலாஹிது** என்றும் சொல்லப்படும்.

அப்பால் வேதத்தை உடையவர்கள் பல பிரிவானதில் பறாஹிமிய்யா என்றவர்கள் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய மார்க்கத்தில் இருக்கிறதாயும், அவர்கள் அவர்களுடைய சந்ததிகள் என்றும் சொல்கிறார்கள்.

இன்னும் மூஸவிய்யாகிய யகூதியாகவும், ஈசவிய்யாகிய நஸாறாவாகவும், முஹம்மதிய்யாவாகிய முஸ்லிமாகவும் பிரிந்தார்கள்.

ஆகக் கூடிய மார்க்கம் பத்தானதால் இதுகளில் எல்லா ஒவ்வொரு கூட்டத்தில் நின்றும், சொர்க்கத்துக்குப் பாத்திரமானவர்களும் நரகத்துக்குப் பாத்திரமானவர்களும் உண்டு.

ஏனென்றால், முற்காலத்தில் பல கோணத்தில் இருந்த காபிறுகளுக்கும், ரசூலுடைய அழைக்குதல் ஏற்றாதிருந்தபடியால், நன்மை செய்தவர்களுக்கு சொர்க்கமும், தீமை செய்தவர்களுக்கு நரகமும் அல்லாஹுத்தஆலா கொடுப்பானல்லாது வேறில்லை. ஷரீஅத்துகள் இறங்க முதலே நன்மை என்பது கல்பு ஏற்றுக் கொண்டு றூஹு இன்பமாகக் கண்டதும், தீமை என்பது கல்பு தள்ளி நப்சு பொருத்தக் கெட்டு றூஹு அதனால் வருத்தப்படுவது அல்லாது வேறில்லை.

ஆகையால், இந்தக் கூட்டங்கள் அடங்களும் அல்லாஹ்வை வணங்க வேண்டியபடியே வணங்குகிறார்கள். ஏனென்றால் அவன் தனக்காக வேண்டியே அவர்களைப் படைத்தான். அவர்களுக்காக வேண்டியில்லை. அவர்கள் அவனுக்குடையவர்கள். அவன் பாத்திரமமாயிருக்கிறதுபோல் அப்பால் அல்லாஹுத்தஆலா இந்தக் கூட்டங்களில் அவனுடைய அஸ்மா சிபாத்துகளின் அந்தரங்கங்களை வெளியாக்கி அதடங்களிலும் அவனுடைய தாத்து கொண்டு தஜல்லியாகி இருக்கிறான். ஆனால், சகல கூட்டங்களும் அவனையே வணங்குகிறார்கள்.

இன்சான் காமிலில் வந்ததில் பத்திருபது வரி மட்டிலும் உள்ளதில் அனேகத்தை விட்டு மிகச் சுருக்கமாய் நான் தர்ஜுமாச் செய்திருப்பதுடன் ஜௌஹருல் பலாயிக் பீவுலூமில் ஹக்காயிக் என்ற கிதாபில் ஜான் முஹம்மது லெப்பைஹில் ஆலிம் அவர்கள் தர்ஜுமாச்

செய்திருப்பதையும், இதற்கு அனுசரணையாகப் பார்த்து இந்த சொல்லிலுள்ள முடிச்சுகளை நீ அவிழ்த்துக் கொண்டாயானால், நான் உன்னுடைய கேள்விக்குச் சரியான ஜவாபு எழுத பல குழப்பமாய் கைகூசி எழுதினதைத் தெரிந்து கொள்வாய்.

*(ஷஹ்ஹு*

*நாயகம் ஜான் முஹம்மது லெப்பைஹில் ஆலிம் அவர்கள் தர்ஜுமாவில் நின்றும் இதற்கு அனுசரணையானதை எழுதப்படுகிறது பார்த்துக் கொள்ளவும். அல்பாபுத் தாசிவு பீ சிர்ரில் அத்யானி வல்இபாத்தாத்தி அவர்கள் தர்ஜுமாவில் நின்றும் ஒன்பதாவது பாடமாகிறது தீனுடைய சிர்றையும் இபாத்தாத்துடைய சிர்றையும் பயான் செய்கிற பாடமாயிருக்கும்.*

*அல்லாஹு சுப்ஹானஹுவத்தஆலா கல்குகளைப் படைத்ததெல்லாம் அவனை வணங்குவதற்காக வேண்டியாயிருக்கும். ஆனபோதே, ஆலத்திலுள்ள வஸ்துகள் அடங்களும் அதினுடைய ஹாலைக் கொண்டும், சொல்லைக் கொண்டும் செயலைக் கொண்டும், ஹக்குடைய வழிப்பாட்டை விட்டும் ஒளிந்திருக்கவில்லை. அந்த வஸ்து அடங்கலும் அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு நடக்கிறது.*

*நாலல்லாஹு வத்தஆலா இன்குல்லு மன்பிஸ்ஸமாவாத்தி வல் அற்ளி இல்லா ஆத்திற் றஹ்மானி அப்தா – வானத்திலும் பூமியிலுமுள்ள வஸ்துகள் அடங்களும் ரஹ்மானுக்கு வழிப்பட்ட அடிமையாய் வந்தே ஒழிய இல்லை.*

*அல்லாஹுத் தஆலா வானத்துக்கும் பூமிக்கும் இவுத்தியா தவ்அன் அவ்கர்ஹன் காலத்தாஅதய்னாத் தாயிபீன் - வானத்தை உடையவர்களே! பூமியை உடையவர்களே! நீங்கள் வழிப்பட்டவர்களாகத்தான் அல்லது வழிப்படாதவர்களாகத்தான் வாருங்கள் என்று சொன்னான். நாங்கள் வழிப்பட்டவர்களாக வந்தோம் என்றார்கள். ஆனபோதே படைக்கப்பட்ட வஸ்து அடங்குலும் அல்லாஹ்வை வணங்குகிற அடியார்களாக இருக்கும் என்கிலும், ஹக்குடைய அஸ்மா, சிபாத்துகளுடைய தேட்டமாவும் பேதகமாக இருக்கிறது கொண்டு அவர்கள் வணக்கங்களும் பேதகமாச்சுது.*

*அல்லாஹுத்தஆலா ஹாதீ என்கிற இஸ்மைக் கொண்டு வெளியானது போல் முலில்லு என்ற இஸ்மைக் கொண்டும்; வெளியாகிறான். முன்யிமுன் என்கிற இஸ்முடைய குணபாடு வெளியாகி இருக்கிறது வாஜிபாக இருப்பது போலவே முன்த்தக்கிமுன் என்கிற இஸ்முடைய குணபாடு வெளியாகிறதும் வாஜிபாக இருக்கும்.*

*ஆண்டவனுடைய அஸ்மா, சிபாத்து பேதகமாகிறதற்காக வேண்டி மனிதர்களுடைய அஹ்வால்களும் பேதகமாகிறது. அல்லாஹுத்தஆலா குர்ஆனில் திருவுளமானான்: கானன்னாசு உம்மத்தன் வாஹித்ததன் - மனிதர்களடங்கலும் அஸ்லிய்யத்தாகிய அவாக்ளின் படை கோலத்தின் புறத்தில் நின்றும் அல்லாஹுத் தஆலாவுக்கு வழிப்படுகிறதன் பேரில் படைக்கப்பட்டவர்களாக இருக்கும் ஹாலில் நபிமார்களையும், ரசூல்மார்களையும் அனுப்பி*

*வைத்ததாகிறது ரசூலுக்கு வழிப்பட்டவன் ஆண்டவனுடைய ஹாதீ என்கிற இஸ்முக்கு அவன் மள்ஹறாக இருக்கிற புறத்தில் நின்றும் ஆண்டவனை அவன் வணங்குகிறதற்காகவும்,*

*வழிப்படாதவன் ஆண்டவனுடைய முலில்லு என்கிற இஸ்முக்கு அவன் மள்ஹறாக இருக்கிறபுறத்தில் நின்றும் ஆண்டவனை அவன் வணங்குகிதற்காக வேண்டியுமாயிருக்கும்.*

*ஆகிலும் நபியாகிறவர்கள் முலில்லு என்கிற இஸ்முடைய மள்ஹறில் இருக்கிறவனை ஹாதீ என்கிற இஸ்முடைய மள்ஹறளவில் அழைக்கும்போது ஆண்டவனுடைய நாட்டமும், நேர்பட்டிருந்தால் நேர்வழி பெறுவான்.*

*ஆனபோதே, மனிதர்கள் எல்லாம் பேதகமாகி மார்க்க வழிகள் எல்லாம் பிரிந்து ஒவ்வொரு கூட்டத்தார் இது நல்ல வழி என்று அறிந்து நடந்தார்களே அது அவர்களுக்கு மார்க்கமாச்சுது. அந்த மார்க்கம் மற்ற மார்க்கத்தை உடையவர்களுக்குத் தப்பிதமாக இருந்தாலும் ஒக்கும் என்றாலும் அந்தந்த வழிகளிலும் ஹக்கையே வணங்கப்படுகிறதற்காக வேண்டி அந்தந்த மார்க்கங்களையும் அவன் அவர்களுக்கு அழகாக்கி வைத்திருக்கிறான்.*

*இன்னும் ஹக்குத்தஆலா வமா மின்த்தாப்பத்தின் இல்லாகுவ ஆகிலுன் பினாஸியத்திகா - ஊர்வனவான ஹயாத்தை உடைய வஸ்துக்களில் நின்றும் அல்லாஹுத்தஆலா அவைகளின் முன்னெற்றி ரோமத்தைப் பிடித்தே ஒழிய ஒன்றுமில்லை என்று திருவுளமானான்.*

*எல்லா வஸ்த்துவும் அவனுடைய அஸ்மா, சிபாத்துகளுடைய மள்ஹறானபடியால் அந்த அஸ்மா சிபாத்துகள் தேடி ஹுகுமைக் கொண்டு ஹக்கு அவைகளை நடத்தாட்டுகிறான். அப்படி நடத்தும்போது அவனுடைய நாயகத்தனத்தை ஒருவன் அவனுக்குத் தரிபடுத்தி வைக்கிறது அவனுக்குப் பிரயோசனம் செய்யமாட்டாது.*

*ஒருவன் அதை மறுக்கிறதும், அவனைத் தங்கடம் செய்யமாட்டாது. ஏனென்றால், பலபல வகையான வணக்கங்களைக் கொண்டு வணங்கப்படுவது அவனுடைய நிறப்பத்துக்கு வேணுமாக இருப்பதுபோல் அவன் அவர்களைத் தன் நாட்டப்படி செய்விக்கிறான். வ:ஃலம்.*

*அறிந்து கொள்! அல்லாஹுத்தஆலா ஆலத்தை படைத்தபொழுது ஆதம் நபி அலைஹிஸ்ஸலாம் சுவர்க்கத்தில் வலியாக இருந்தார்கள். அவர்களை துன்யாவில் இறக்கி வைத்தபோது ஹக்குத்தஆலா அவர்களுக்கு நபிப்பட்டத்தைக் கொடுத்தான்.*

*துன்யா தக்லீபு கஷ்டத்தையுடைய வீடானபடியால், நுபுவ்வத்தையும் ஷற்றையும் அந்த வீட்டில் கற்பித்தான். சுவர்க்கம், கறாமத்து சுயதந்திரத்துடைய வீடானபடியால் அவடத்தில் தக்லீபு கஷ்டமும் விதி விலக்குமில்லை. ஆதம் அலைஹிஸ்ஸலாம் சுவர்க்கத்தில் வலியாக இருந்தார்கள். துன்யாவில் நுபுவ்வத்து இறங்கினபோது தங்கள் நப்சுக்கு நபியாகயிருந்து பிறகு தங்கள் பிச்சளங்களுக்கு எல்லாம் நபியாகவும், றசூலாகவும் அனுப்பப்பட்டார்கள்.*

*அவர்களுக்கு சுஹ்பை இறக்கி வைத்து அந்த சுஹ்பை அவர்கள் பிள்ளைகளுக்குப் படித்துக் கொடுத்தார்கள். அந்தத பிள்ளைகளில் மூமினானவர்கள் அந்த சுஹ்பிலுள்ள ஹுக்மைக்*

*கொண்டு அவர்களைத் தொடர்ந்து நடந்தார்கள். காபிறானவர்கள் சுஹ்பைப் படிக்காமலும் அவர்களை தொடறாமல் துன்யாவுடைய இச்சையிலும்;, மருட்டுதலிலும் ஆகிவிட்டார்கள்.*

*ஆதம் அலைஹிஸ்ஸலாம் வபாத்தான பிறகு அவர்களுடைய பிள்ளைகளெல்லாம் பிரிந்துபோய் அவர்களை தொடர்ந்தவர்களிலே ஒரு கூட்டத்தார் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய சூறத்தைப் போலே கல்லினாலே ஒரு ரூபம் உண்டாக்கி ஆதமுக்கு கித்மத்துச் செய்து மஹப்பத்தாக இருந்ததுபோல அந்த ரூபத்துக்கும் கித்மத் செய்து மஹப்பத்தாக இருக்கிறது. அல்லாஹ் அளவிலே எங்களை முடுகுதலாக்கி வைக்குமென்று சொல்லி அந்த சூறத்துக்கு கித்மத் செய்து வந்தார்கள். அப்பால் சிலர் அந்த ரூபம்தன்னையே வணங்கினார்கள். இவர்களுக்கு அபதத்துல் அவ்தான் - புத்தை வணங்குகிற பேர்கள் என்று சொல்லப்படும்.*

*பின்பு ஒரு கூட்டத்தார் அவர்கள் அக்லினாலே யோசித்து புத்தை நம்முடைய கையினால் உண்டுபண்ணி நாம் அதை வணங்குகிறது வணக்கமில்லை. அந்த புத்து நம்முடைய செய்கையினால் உண்டானது. ஆனதால் அதைக் காண நம்மை உண்டாக்கிய அஸ்லு நாலு தபீஅத்து உண்டாயிருக்கிறதே அதை வணங்குறது ஏற்றமாயிருக்கும் என்று ஹறாரத்து - சூடு, புறூதத்து - குளிர்ச்சி, யபூசத்து -வறட்சி, றுதூபத்து - ஈரம் என்ற நான்கு குணாகுணங்களை வணங்கினார்கள். இவர்களுக்கு தபயிய்யூன் என்று சொல்லப்படும்.*

*பின்பு ஒரு கூட்டத்தார் இந்த நாலு தபீஅத்தும் தன் தன் இக்தியார் தெரிவுபடி உசும்பவில்லை. அதை வணங்குறதில் பிரயோசனமில்லை என்று சொல்லி அந்த நாலு தபீஅத்திலேயும் குணம் செய்கிற ஸுஹல், முஷ்த்தரீ, மிர்றீஹ், ஷம்ஸு, ஸஹ்றா, அத்தாரிது, கமறு என்ற இந்த ஏழு நட்சேத்திரங்களில் ஒவ்வொன்றும் அதனுடைய வானத்திலே அது தன்னாலே நடந்து ஆலம்களில் பிரயோசனம் கொண்டும் தங்கடம் கொண்டும் குணபாடு செய்து ஆலம்களில் காரியங்களை நடத்தி வருகிறதே அதை வணங்குகிறது ஏற்றமாக இருக்கும் என்று எண்ணி அந்த நட்சத்திரத்தை வணங்கினார்கள். இவர்களுக்கு **பலாசிபா** என்றுச் சொல்லப்படும்.*

*பின்பு ஒரு கூட்டத்தார் ஆலமடங்கலும் ஒளிவினாலும் இருளினாலும் மட்டுண்டதாயிருக்கும். ஆனதால், நட்சத்திரம் மற்ற ஒளிவுகளைக் கொண்டுத் தனதாக்கப்படாமல் மொத்தமாக ஒளிவையும், இருளையும் வணங்கி ஒளிவுக்கு யஸ்தான் என்றும், இருளுக்கு அஹ்றமன் என்றும் பேர் வைத்துக் கொண்டார்கள். இவர்களுக்கு **தனவிய்யா** என்றுச் சொல்லப்படும்.*

*பின்பு ஒரு கூட்டத்தார் ஆலமடங்கலும் ஹயாத்தாக இருக்கிறது. சூட்டைக் கொண்டாயிருக்கும். அந்தச் சூடு நெருப்பாகயிருக்குமென்று நெருப்பை வணங்கினார்கள். இவர்களுக்கு **மஜூசு** என்று சொல்லப்படும்.*

*பின்பு ஒரு கூட்டத்தார் காலத்தில் நடக்கிற காரியங்களெல்லாம் அததனுடைய தேட்டறிவுபடிக்கு நடந்தேறிப் போகிறது. கெர்ப்பம் வெளியில் தள்ளுவதும், பூமி விழுங்குவதும் அல்லால் ஒன்றுமில்லை என்று வணக்கத்திலென்ன பலன் என்று வணக்கத்தை விட்டுப் போட்டார்கள். இவர்களுக்கு **தஹ்றிய்யா** என்றும் **முலாஹித்** என்றும் சொல்லப்படும்.*

*அப்பால் வேதத்தையுடையவர்கள் பல பிரிவானதில் பறாஹிமிய்யா என்றவர்கள் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய மார்க்கத்தில் இருக்கிறதாயும், அவர்கள் அவர்களுடைய சந்ததிகளென்றும் சொல்லுகிறார்கள். இன்னமும் மூசவிய்யாகிய யகூதிகளாகவும், ஈசவிய்யாகிய நசாராவாகவும் முகம்மதிய்யாவாகிய முஸ்லிமாகவும் பிரிந்தார்கள். ஆகக்கூடிய மார்க்கம் பத்தானதால் இந்தப் பத்து மார்க்கமும், ஆதம் அலைஹிஸ்ஸலாம் தொடுத்து நம்முடைய ஆண்டவர்கள் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஸமானா அளவும் அஸ்லு மார்க்கமாக இருந்தது.*

*இந்தப் பத்துக் கூட்டத்தாரில் நின்றும் சுவர்க்கத்துக்கு பாத்திரமானவர்களும், நரகத்துக்குப் பாத்திரமானவர்களும் உண்டு. ஏனென்றால் முற்காலத்தில் பல கோணத்திலிருந்த காபிர்களுக்கும், றசூலுடைய அழைக்குதல் எற்றாதிருந்தபடியால் நன்மை செய்தவர்களுக்கு சுவர்க்கமும், தின்மை செய்தவர்களுக்கு நரகமும் அல்லாஹுத்தஆலா கொடுப்பானல்லாது வேறில்லை.*

*ஷரீஅத்துகள் இறங்க முதலே நன்மை என்பது கல்பு ஏற்றுக் கொண்டு றூஹு இன்பமாக கண்டதும் தீமை என்பது கல்பு தள்ளி நப்சு பொருத்தக்கெட்டு றூஹு அதனால் வருத்தப்பட்டதுமல்லாது வேறில்லை.*

*ஷரீஅத்து இறங்கினதுக்குப் பின்னாலே நன்மையாகிறது ஹக்குடைய ஏவல்படி நடக்கிறதாயிருக்கும். தீமையாகிறது ஹக்குடைய விலக்கல்படி நடக்கிறதாகயிருக்கும்.*

*ஆகையால் இந்த கூட்டங்கள் அடங்கலும் அல்லாஹ்வை வணங்கவேண்டியபடியே வணங்குகிறார்கள். ஏனென்றால், அவன் தனக்காக வேண்டியே அவர்களைப் படைத்தான். அவர்களுக்காக வேண்டியில்லை. அவர்கள் அவனுக்குடையவர்கள்.*

*மேலும் முந்தின கூட்டத்தார் புத்தை வணங்குகிறவர்கள். ஹக்குடைய தாத்தைக் கொண்டு வணங்குகிறார்கள். ஹக்காகிறவன் ஆலமடங்கலுடைய உஜூதுக்கும் அந்தரங்கமாக இருந்த போது அந்த குப்பாறுகளும் ஆலத்துடைய தொகையிலே சேர்ந்திருந்தபோது தங்களுடைய உஜூதிலே ஹக்குடைய ஹக்கீகத்து உண்டென்கிறதை அறியாமல் தங்களுக்கு ஒரு றப்பு உண்டென்றும் அந்த ரப்புடைய ஹகீகத்து ஹக்குத்தஆலா என்றும் அவனுக்கு றப்பு இல்லை, அவன் முத்துலக்கான ரப்பு என்றும், அவர்களுடைய அஃயான் தாபித்தா தேடினபடி வணங்குகிறார்கள்.*

*இன்னும் ஹக்குடைய உஜூது ஆலத்திலே ஒரு ஆர்ப்பளவு வஸ்துவுலேயும் ஹுலூலு இத்திஹாது எண்ணியே உண்டாகியிருக்கிறதுக்காக வேண்டியே கல்லினால் செய்யப்பட்ட சூறத்திலேயும், அவனுடைய வுஜூது அடைய வளைந்திருப்பதற்காக வேண்டி அதை வணங்கினார்கள்.*

*ஹக்காகிறவன் அவர்கள் வணங்குகிற சூறத்துக்கு ஹக்கீகத்தாக இருப்பதால் ஹக்கையே ஒழிய அவர்கள் வணங்கவில்லை. அவர்கள் நிய்யத்தையும், இல்மையும் பார்க்க நமக்கு தேவையில்லை.*

*இரண்டாவது தபாயிஇய்யாக் கூட்டத்தார்கள் ஹக்குடைய சிபாத்துடைய புறத்தினாலே ஹக்கை வணங்கினார்கள். ஹக்குடைய ஹயாத்து, இல்மு, இறாதத்து, குத்றத்து என்ற இந்த நான்கு சிபத்தும் ஆலம் உண்டானதுக்கு அசலான பொழுது ஹறாறத்து, சூடு றுதூபத்து, ஈரம் யபூஸத்து, வறட்சி புறூதத்து, குளிர்ச்சி என்ற இந்த நான்கு குணங்களும் அந்த நான்கு சிபத்துக்கு மள்ஹறாயிருக்கும்.*

*தண்ணீருடைய குணமான றுதூபத்து இல்முடைய மள்ஹறாகவும், நெருப்புடைய குணமான ஹறாதத்து இறாதத்துடைய மள்ஹறாகவும், மண்ணுடைய குணமான யபூஸத்து குத்றத்துடைய மள்ஹறாகவும்; இந்த நான்கு மள்ஹறென்னும் அவதாரத்துடைய ஹக்கீகத்தைக் கொண்டு வர்ணிப்பு பெற்றது ஹக்குடைய தாத்தாயிருக்கும்.*

*இந்த மள்ஹறுலேயும் ஹக்குடைய வுஜூது உண்டாகி இருக்குதென்று தபீயிய்யூன் கூட்டத்தாருடைய அர்வாஹுகளுக்கு வெளியான பொழுது இன்னமும் இலாஹிய்யத்தான் நாலு சிபத்துக்கும் உண்டாகியிருக்கிற குணத்தை நாலு மிஸாஜும் குணாகுணமும் ஒப்புக் கொண்டு நாலு சிபத்தும் அந்த மிஸாஜுடைய சூரத்துக்கு மஃனாவைப் போலவும் அல்லது மிஸாஜுடைய ஜடலத்துக்கும் நாலு சிபத்தும் றூஹைப் போலவும் ஆகிவிட்டதென்று தபீயிய்யூன் கூட்டத்தார் அறிந்து அந்த சிர்ருக்காக வேண்டி அந்த தபீஅத்தையும் வணங்கினார்கள். அவர்களில் அந்த சிர்றை அறிந்து வணங்குகிறவர்களை அறியாதவர்கள் தொடர்ந்து கொண்டார்கள்.*

*ஆனபோதே அந்த தபீயிய்யூன் கூட்டத்தார் சிபாத்துடைய புறத்தினாலே ஹக்கை வணங்குகிறார்கள். அவர்களுடைய காரியம் சஆதத்தளவில் மீளும். அவர்களுக்கு முந்தினவர்களும் மீண்டதுபோலே.*

*மூன்றாம் கூட்டத்தார் பலாஸிபாக்களாகிறவர்கள் அஸ்மாக்களுடைய புறத்தில் நின்றும் ஹக்கை வணங்குகிறவர்களாக இருக்கும். ஏனென்றால், நுஜூமாகிறது அஸ்மாக்களுடைய மள்ஹறாயிருக்கும். அஸ்மாக்களாகிறது, ஆண்டவனின் தாத்துடைய ஹகீகத்தாக இருக்கும். ஆனபோதே, ஷம்ஸாகிறது அல்லாஹு என்கிற இஸ்முடைய மள்ஹறாக இருக்கும். அல்லாஹ் என்கிற இஸ்மில் நின்றும் மற்றதுமுண்டான அஸ்மாக்கள் எல்லாம் அதுகளுடைய ஹக்காயிக்கை உதவி தேடுவதுபோல சம்சுடைய ஒளிவில் நின்றும் மற்றுமுண்டான நட்சத்திரங்கள் எல்லாம் உதவி தேடுகிறது.*

*ரஹ்மான் என்கிற இஸ்முடைய மள்ஹறாயிருக்கும். சந்திரனாகிறது சூரியனுடைய ஒளிவை சுமந்துக் கொள்கிற நட்சத்திரங்களின் நிறப்பமானதாகயிருக்கும். ரஹ்மான் என்கிற இஸ்மு ஹக்குடைய மற்ற அஸ்மாக்கள் அடங்கலையும் காண பதவியில் ஏற்றமானதாகயிருக்கும்போலே முஷ்த்தரீயாகிறது றப்பு என்கிற இஸ்முடைய மள்ஹறாக*

*இருக்கும். அந்த முஷ்த்தரீ வானத்திலுள்ள நட்சத்திரங்களில் ரெம்பவும் சீதேவியானது. றப்பு என்கிற இஸ்முடைய பதவி ரெம்பவும் சொந்தமானதாக இருக்குமாபோலே வளர்க்கப்பட்ட ஆலம்கள் எல்லாம் றப்பிடத்தில் தன்னுடைய தேவையை றப்பு என்கிற இஸ்மைக் கொண்டு தேடி பெற்றுக் கொள்கிறதாயிருக்கும்.*

*ஸுஹ்லாகிறது வாஹிதிய்யா என்கிறதுடைய மள்ஹறாயிருகு;கும். அப்லாகெனும் மண்டலமடங்களும் ஸுஹல் என்கிற நட்சத்திரத்துக்குத் தாளாலேயிருக்கிறது போல வாஹிதென்கிற இஸ்முக்குத்தாளாலே மற்ற அஸ்மா சிபாத்தடங்கலும் அமைந்ததாக இருக்கும். மிர்ரீஹாகிறதுகுத்றத்துடைய மள்ஹறாக இருக்கும். ஹக்குடைய குத்றத்துச் சகலதையும் அடக்கி ஆளுகிறதுபோல அந்த மர்ரீஹும் அடக்கி ஆளுதலென்கிற சியல்களைக் கொண்டுச் சொந்தமாக்கப்பட்ட நட்சத்திரமாக இருக்கும்.*

*ஸஹ்றாவாகிறது இராதத்துடைய மள்ஹறாயிருக்கும். ஹக்குடைய நாட்டம் எல்லாகோலமும் தன் நாட்டத்தை உடனே செய்து முடிக்கிறதுபோல அந்த ஸஹ்றாவும் தன்னுடைய நப்சுலே பிறளுகிறது தீவிரமானதாக இருக்கும். அத்தாரித்தாகிறது இல்முடைய மள்ஹறாக இருக்கும். ஹக்குடைய இல்மு எல்லாத்தையும் அறிகிறதுபோல அத்தாரித்தும் வானத்தில் சகலதையும் எழுதுகிற காத்திபாக இருக்கும்.*

*அறிப்பட்ட மற்ற நட்சத்திரங்களாகிறது ஹக்குடைய அஸ்மாவுல் ஹுஸ்னா உடைய மள்ஹறாக இருக்கும். அறியப்படாத நட்சத்திரங்களாகிறது ஹக்குடைய சூழ்ந்தறியப்படாத அஸ்மாக்களுடைய மள்ஹறாக இருக்கும். ஆனபோதே பலாசிபாக்களடைய அர்வாஹுகளுக்கு ஹக்குடைய ஹகீகத்து அந்த நட்சத்திரமடங்கலிலும் உண்டாகியிருக்கிறதை ஹக்கு அதுகளுக்குக் கொடுத்த நுட்பமான அறிவைக் கொண்டு அறிந்தபோது அந்த சிர்ருக்காக அந்த நட்சத்திரங்களை வணங்கினார்கள். ஆலத்தில் ஒரு வஸ்துவும் இல்லை. அந்த வஸ்துவை ஆதமுடைய மக்களும் ஹயவானத்தில் சிலதும் வணங்கியே ஒழிய.*

*பொழுதை வணங்குகிற சிகப்பு ஓணானையும் மலத்தை வணங்குகிற பீ வண்டையும் போல இன்னும் ஆலத்தில் ஹயாத்தான வஸ்துவுகளில் நின்றும் ஒரு உயிர்ப்பிராணியுமில்லை அல்லாஹுத்தஆலாவை மள்ஹறைக் கொண்டு மட்டுப்படுத்தி அல்லது மட்டுப்படுத்தாமல் வணங்கியே ஒழிய.*

*மட்டுப்படுத்தி வணங்குகிறது முஷ்ரிக்காயிருக்கும். மட்டுப்படுத்தாமல் வணங்குகிறது முவஹ்ஹிதாக இருக்கும். இவர்களடங்கலுமாகிறவர்கள் அல்லாவுடைய அடியார்களாக இருக்கும். ஹக்குடைய உஜூது அவர்களிலே உண்டாகியிருக்கிறதுக்காக வேண்டி ஹக்குத்தஆலா தாத்துடைய புறத்தினாலே லுஹூறான வஸ்து அடங்கலையும் வணங்கப்பட தேடுகிறான்.*

*ஆலத்துடைய அணுக்கள் எல்லாம் அவன் வெளியாகியிருக்கிற ஹாலுலே மனிதர்களில் நின்றும் சிலர் ஆலத்துக்கு அசல் தபாயிவு என்று தபீஅத்தை வணங்கினார்கள். சிலர்கள் சுவாக்கிபு நட்சத்திரங்களை வணங்கினார்கள். சிலர் நெருப்பை வணங்கினார்கள்.*

*ஆலத்தில் ஒரு வஸ்துவும் இல்லை. அவைகளை வணங்கியே ஒழிய. முஹம்மதியூன்களைத்தவிர அவர்கள் ஆலத்துடைய ஜுஸ்வுகளிலே நின்றும் எதையும் மட்டுப்படுத்துகிற தண்ணியே மொத்தமாக ஹக்கை வணங்கினார்கள். இன்னும் ஜம்வுடைய புறத்தினாலேயும் வணங்கினார்கள்.*

*அவர்களுடைய இபாதாத்து மலாஹிரைக் கொண்டுக் கொளுகுதலாயிருக்கிறதை விட்டும் துப்புறவாச்சுது. அவர்களுடைய இபாதாத்து அல்லாஹ் உடைய தாத்தளவில் சேரும். இதற்காக வேண்டி முஹம்மதியூன்கள் ஹக்களவில் முடுகுதலாக இருக்கிறது கொண்டு ஜெயம் பெற்றார்கள்.*

*நாலாவது தனவிய்யாக்களாகிறவர்கள், ஹக்குடைய நப்சுடைய புறத்தினாலே அல்லாஹ்வை வணங்குகிறவர்களாக இருக்கும். ஹக்குடைய நப்சாகிறது ஹக்கிய்யத்து நாயகத்தனம், கல்கிய்யத்து அடிமைத்தனம் என்ற இரண்டு மர்தபாக்களையும் சேகரித்துக் கொண்டிருக்கிறது போல் மாற்றமான இரண்டு வஸ்துவையும் ஹக்குடைய நப்சில் நின்றும் வெளியாக்கிறது. ஹக்கிய்யத்து அளவில் சேர்க்கப்பட்டது ஒளிவாயிருக்கும். கல்கியத்து அளவில் சேர்க்கப்பட்டது இருளாக இருக்கும். இரண்டு மாற்றத்தையும், இரண்டு ஹுக்குமையும் சேகரித்துக் கொண்டிருக்கிற நப்சுடைய சிர்றை தனவிய்யாக்கள் அறிந்ததுக்காக வேண்டி ஒளிவையும் இருளையும் வணங்கினார்கள்.*

*ஐந்தாவது, மஜூஸிய்யாக்களாகிறவர்கள், அஹதிய்யத்துடைய புறத்தினால் ஹக்கை வணங்குகிறவர்களாக இருக்கும். அஹதிய்யத்துடைய மர்த்தபாவாகிறது அதற்கு தாளாலே உள்ள மற்தபாக்களையும் அஸ்மாசிபாத்து அடங்கலையும் தன்னிலே மறைத்து பனாவாக்கிக் கொண்டிருப்பது போல், நெருப்பாகிறது மற்ற தபீஅத்தைப் பார்க்கிலும் பிலனுடையதாக இருக்கிறதற்காக வேண்டி தன்னளவில் வருகிற எந்த தபீஅத்துடைய வஸ்துவையும் தன்னுடைய தபீஅத்தைக் கொண்டு சுட்டு பனாவாக்கி தன்னுடைய நெருப்புக் குணத்தளவில் திருப்பிவிடும். அப்படிப்போல் அஹதிய்யத்தாகிறது, இஸ்மு, சிபத்து எல்லாத்தையும் தன்னிலே மாய்த்து அழித்துப் போடும்.*

*நெருப்பாகிறது அஹதிய்யத் என்கிற மற்தபாவுக்கு நேராயிருக்கிறதை மஜூசுகள் அறிந்து நெருப்பை வணங்கினார்கள். நெருப்புடைய ஹகீகத்து, ஹக்குடையதாக இருக்கும். யாராவது தஹ்ரிய்யாக்களாகிறவர்கள் உலூஹிய்யத்துடைய புறத்தினாலே ஹக்கை வணங்கினார்கள். உலூஹிய்யத்துடைய மர்தபாவாகிறது, தாத்துடைய மலாஹிருகளில் உயர்த்தியானதாக இருப்பதற்காக வேண்டி உலூஹிய்யத்து உஜூதாகவும் உள்ளமையாகவும், அதமாகவும் இல்லாமையாகவும் வெளியானதை தஹ்ரிய்யாக்கள் அறிந்து கொண்டார்கள். - உலூஹிய்யதுலே அதம் வெளியாகிறது ஹக்குடைய உஜூதிலே அழிந்து மாய்ந்துபோய் விட்டதென்று அறிந்து கொண்டதுபோல் காலத்தில் எல்லாம் வெளியாகி மறைந்து மாய்ந்துபோய் விடுவதை தஹ்ரிய்யாக்கள் அறிந்து காலத்தை வணங்கினார்கள்.*

நபிநாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், லாத்தஸுப்புத்தஹ்ற பஇன்னத்தஹ்ற குவல்லாஹு - காலத்தைத் திட்ட வேண்டாம். காலமாகிறது அல்லாஹ்வாக இருக்கும் என்று திருவுளமானார்கள்.

வமாயுஹ் லிக்குனா இல்லத்தஹ்று - காலமே ஒழிய நம்மை ஹலாகாக்கவில்லை என்றதில் பாயில் ஹக்கீகிய்யாகிய முஹ்லிக்கு - ஹலாகாக்கிறவன் அல்லாஹ்வாயிருக்கும் என்று திருவுளமானான்.

ஏழாவது பறாஹிமிய்யாக்களாகிறவர்கள் நபியைக் கொண்டும் ரஸூலைக் கொண்டும் ஈமான் கொள்ளாமலிருப்பதுடன் மொத்தமாக அல்லாஹ்வை வணங்கினார்கள். மேலும், அவர்கள் சொல்வார்கள் ஆலத்தில் ஒரு வஸ்துவுமில்லை அல்லாஹ்வுக்கு வழிப்பட்ட படைப்புகளாக இருந்தே ஒழிய என்றும், இன்னும் நபிமார்களை ரஸூல்மார்களை மறுப்பதுடன் அல்லாஹ்வுடைய வஹ்தானிய்யத்தை தரிபடுத்தி வைப்பார்கள்.

இன்னும் சொல்வார்கள், நாங்கள் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் உடைய சந்ததிகளாக இருப்பதுடன் ஹக்கை நாங்கள் ரஸூல்மார்களை அனுப்பப்பட்ட முந்தியிருந்தே வணங்குகிறோம் என்பார்கள். இன்னும் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் கைகொண்டு எழுதிய கிதாபு அவர்களிடத்தில் இருக்கிறது என்றும் அந்த கிதாபு இப்றாஹீம் புறத்திலுள்ளது என்றும் அதுலே ஹக்காயிக்குகளுடைய திக்று இருக்குதென்றும் அது ஐந்து ஜுஸ்வு என்றும், நாலு ஜுஸ்வைத்தான் எல்லாரும் படிக்கலாம் என்றும் ஐந்தாவது ஜுஸ்வை ஒருவன் படித்தால் அவன் இஸ்லாமில் வந்து முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய தீனில் புகுதவேண்டுமென்றும் சொல்வார்கள்.

அந்தக் கூட்டத்தை ஹிந்து ராச்சியத்தில் மிகுதமாக காணப்படும். சிலர் புத்தை வணங்கிறத்துடன் அவர்களைக் கொண்டு ஒப்பாகுவார்கள். அவர்களை அவர்களில் ஏற்றி எண்ணப்படாது. மேலே சொல்லப்பட்ட ஏழு வகையாகும். இபாதாத்தை தங்கள் நப்சில் நின்றும் எடுத்ததினாலே அந்த இபாதாத்து அவர்களுடைய மூதேவித்தனத்திற்கு காரணமாகி விட்டது. அவர்களுடைய கருமம் முடிவில் சீதேவித்தனத்தளவில் மீண்டாலும் சரிதான்.

அல்லாஹுத்தஆலா ஒரு நபியை அல்லது ரஸூலை உம்மதுக்கள் அளவில் அனுப்பி வைக்கவில்லை, அந்த நபியை தொடர்ந்தவர்களெல்லாம் சீதேவியாக இருந்தேஒழிய என்றிருப்பதால் ஹக்குடைய ஏவலுக்கு வழிப்பட்டு ரஸூலை தொடர்ந்து நடப்பது சீதேவித்தனத்துக்கு காரணமாயிருக்கும். ரசூலை தொடர்ந்து நடக்காமல் ஹக்கை ஒரு வஸ்துவில் மட்டுப்படுத்தி வணங்குவதுடன் அல்லாஹ்வுடைய கிதாபை தங்கள் மனம் இச்சத்ததுகளைக் கொண்டு மாற்றி ஹக்குடைய ஏவலுக்கு மாற்றமாக நடப்பது மூதேவித்தனத்துக்கு காரணமாக இருக்கும்.

எட்டாவது யகூதிகளாககிறவர்கள் அல்லாஹ்வை தவ்ஹீது செய்கிறது கொண்டும் ஒரு நாளகை;கு இரண்டு வக்த்| தொழுகையை தொழுகிறது கொண்டும் ஆஷூறா நோன்பு பிடிக்கிறது கொண்டும் சனிக்கிழமை இ்்த்திக்காபென்னும் தவத்திருப்பதைக் கொண்டும்

*ஹக்கை வணங்கினார்கள். அவர்களுடைய இ..்த்திகாபிற்கு ஷர்த்தாவது சனிக்கிழமையில் பொருளையும் திண்ணுகிற வஸ்துக்களையும், வீட்;டுக்குள் புகுதி வைக்காமலிருப்பதாயிருக்கும். இன்னும் அந்த நாளையிலே அல்லாஹ்வுடைய இபாதாத்தைத் தவிர கல்யாணம் முடிப்பது, வியாபாரம் போல் ஒத்த நூதனமான கருமங்கள் யொதொன்றும் செய்யக் கூடாது.*

*ஏனென்றால், அல்லாஹுத்தஆலா தவ்றாத்து வேதத்திலே அந்த வஅப்துக்க வஅமத்துக்க லில்லாஹி பீயவ்மிஸ்ஸப்தி - நீரும் உம்முடைய அப்தும் உம்முடைய வெள்ளாட்டியம் சனிக்கிழமை அன்றைய தினத்திலே அல்லாஹ்வுக்காகயிருக்கும் என்று சொன்னான். அதற்காகவேண்டி அன்றைய தினத்திலே துன்யாவுடைய காரியத்தை செய்கிறது அவர்களுக்கு விலக்காயிருக்கும். வெள்ளிக்கிழமை தேடின வஜீபனத்தைச் சனிக்கிழமை திண்பார்கள். சனிக்கிழமையுடைய துவக்கமாகிறது வெள்ளிக்கிழமை பொழுது அடைவதாகயிருக்கும். அதனுடைய முடிவாகிறது சனிக்கிழமை செம்மேகம் மறைவாக இருக்கும். சனிக்கிழமையை அவர்கள் தெரிந்துக் கொண்ட காரணமாகிறது ஹக்குத்தஆலா வானம் பூமி சகலதையும் ஞாயிற்றுக்கிழமை துவக்கம் தொடுத்து வெள்ளிக்கிழமை கடைசிவரை படைத்து சனிக்கிழமை பராக்கொளிந்து அற்ஷின் மேலே சரி ஒத்திருந்தானென்று வந்த சிற்றுக்காக யகூதிகள் அந்த நாளைத் தெரிந்து கொண்டார்கள்.*

*ஒன்பதாவது நஸாராக்களாகிறவர்கள் ஈஸா மர்யம் றூஹுல் குத்ஸ் இம்மூன்றிலும் அல்லாஹ்வை தெரிசித்து வணங்கினார்கள். மேலேச் சொல்லப்பட்ட எட்டுக் கூட்டத்தாரைப் பார்க்கிலும், இவர்கள் ஹக்களவில் முடுகினவர்களாக இருக்கும். இருந்தாலும் ஹக்குடைய பூர்வீகமான உஜூது ஈசா உடைய நப்சுலே இறங்கியிருக்கிறதென்று ஹக்கை தஸ்பீஹு ஒப்பாக்கி ஈஸா மர்யம், றூஹுல் குத்ஸு இம்மூன்றிலிதும் ஹக்கை மட்டுப்படுத்தினபடியால் முவஹ்ஹிதீன்கள் ஹக்கை ஒன்றுபடுத்துகிறவர்களாகிய முஹம்மதிய்யீன்களுடைய தரஜாவை விட்டும் இறங்கினவர்களாக இருக்கும். இன்னும் அவர்கள் முஹம்திய்யீன்களுக்கு, மற்றவர்களைக் காண முடுகினவர்களாக இருக்கும்.*

*ஏனென்றால் ஹக்கை மனிதர்களிலே தெரிசிக்கிறது, மற்ற வஸ்துகளிலே தெரிசிப்பதைப் பார்க்கிலும் நிரப்பமானதாக இருக்கும். இந்த நஸாராக்களுடைய இருதயத்தில் திடனில்லாத்ததால் றுபூபிய்யத்தென்னும் நாயகத்தனம் வெளியாகி இருந்த ஈஸாவையும், மர்யமையும் ஆண்டவன் என்று சொன்னார்கள். தங்கள் தாங்களிலும் றுபூபிய்யத்து மறைந்து இருப்பதை அவர்கள் அறியவில்லை. அறிந்தார்களானால் ஆதமுடைய மக்களடங்கலும் ஒன்றுக்கொன்று நேர்பாடாகிய கண்ணாடிகளாக இருக்கும்.*

*ஒரு கண்ணாடியில் வெளியானது மற்ற கண்ணாடியிலும் வெளியாகி இருக்கிறது. அந்த ஒன்று ஹக்குதான் என்று அறிந்து கொள்வார்கள். ஈஸாவுடைய ஹக்கீக்கத்திலே தெரிசித்த ஹக்கை தங்கள் நப்சுகளிலேயும் தெரிசிப்பார்களேயானால் முவஹ்ஹிதீன்களுடைய பதவிக்கு வந்து விடுவார்கள். எங்கிலும் அவர்கள் ஹக்கை ஈஸாவுடைய உஜூதிலே மட்டுப்படுத்தி வணங்கினதாலே தூரமான பாதையிலாயிருக்கிறார்கள். இன்னமும் நஸராக்கள் 49 நோன்பு கொண்டும் ஹக்கை வணங்கினார்கள்.*

*முந்தின நோன்பை ஞாயிற்றுக் கிழமையைக் கொண்டு துவக்கம் செய்து ஞாயிற்றுக் கிழமையைக் கொண்டு முடிப்பார்கள். இந்த நான்பத்தொன்பது நாள்களில் இடையிலே வருகிற ஞாயிற்றுக்கிழமைகளில் நோன்பை விட்டு விடுவார்கள். அப்போது நாற்பத்தொன்பது நோன்புதான் நிரப்பமாகும். அவர்கள் நோன்புடைய கைபிய்யத்தாகிறது வயிற்றை நிரப்புகிற வஜீபனத்தை இருபத்தி மூன்று ஸாஅத்து வரையிலும் திண்ணாமலிருக்கிறதாக இருக்கும்.*

*நோன்புடைய துவக்கமாகிறது அஸருடைய வக்த்தில் நின்றும் துவங்கி மறுநாள் அஸருடைய வக்த்துக்கு ஒரு ஸாஅத்துக்கு முன்னால் வரையிலுமாயிருக்கும். அவர்கள் நோன்பாயிருக்கிற நேரத்தில் சாராயம் தண்ணீர் குடிக்கிறதும் பசியை போகாத பழங்களை திண்ணுகிறதும் அவர்களுக்கு ஆகும். நோன்பை முறிக்காது இன்னமும் ஞாயிற்றுக்கிழமைகளில் இஃதிகாபு இருக்கிறது கொண்டும் ஒன்பது பெருநாளைக் கொண்டும் ஹக்கை வணங்கினார்கள். இதுவரை பேசினதில் ஒவ்வொரு நுட்பங்களுக்குத் தாளாலே ஆண்டவனுடைய அஸ்றாருகளில் நின்றும் அநேகம் சிற்றும் அருமையான இல்மும் உண்டாகியிருக்கிறது. அதுகளை பயான் செய்யிறதை விட்டும் வாய் மூடிக் கொண்டேன். முஸ்லிமானவர்களுடைய இபாதாத்தில் முக்கியமானதை பயான் செய்கிறேன்.*

*பத்தாவது முஸ்லிமானவர்களாகிறவர்கள், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தொடர்ந்தவர்களாக இருக்கிறதினாலே அல்லாஹுத்தஆலாவை ஓர்மைப் படுத்தி வணங்குகிறவர்களாக இருக்கும். அவர்களை அல்லாஹுத்தஆலா குந்தும் கைற உம்மத்தின் உக்ரிஜத்து லின்னாசி - மனிதர்களளவில் புறத்திப்படுத்தி வைக்கப்பட்ட உம்மத்துகளில் நீங்கள் ஏற்றமான உம்மத்துகளாக இருப்பீர்கள் என்று அல்லாஹுத்தஆலா திருவுளமானான்.*

*அவர்களுடைய நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எல்லா அன்பியாக்களுக்கும் ஏற்றமானபடியால் அவர்களுடைய உம்மத்துகள் எல்லா உம்மத்துகளுக்கும் ஏற்றமானவர்களாக இருக்கும்.*

*இவர்களுடைய தீனாகிறது மற்ற தீன்களுக்கெல்லாம் ஏற்றமானதாக இருப்பதற்காக வேண்டி முஸ்லிமானவர்கள் எல்லோருக்கும் ஏற்றமானதாக இருக்கும். இன்னமும் முஹம்மதர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நபியாக, ரஸூலாக அனுப்பப்பட்டதற்கு பின்னாலே மற்ற உம்மத்துகளிலே நின்றும் அவர்களுக்கு மாற்றம் செய்தவர்கள் எல்லாம் வழிகெட்டு நரகத்தில் அதாபு செய்யப்பட்டவர்களாக ஆகிவிட்டார்கள். முஸ்லிம்கள் அடங்கலும் நபி நாயகத்தை தொடர்வதைக் கொண்டு சீதேவித்தனத்தை பெற்றார்கள்.*

*ஒரு அறபிய்யி, நபி அவர்களை அழைத்து அல்லாஹ்வுடைய றசூலே! நான் ஹலாலை ஹலாலாக்கி ஹறாமை ஹறாமாக்கி பர்ளை இருத்து வருகிறதைத் தவிர அதிக அமலை நான் செய்யவில்லை. நான் செய்யிறதைக் குறைக்கவும் இல்லை. அப்போது சுவர்க்கம் புகுதுவேனா என்று கேட்டார். நபி அவர்கள் அவ்வளவு அமலைக் கொண்டு நீ சுவர்க்கம் புகுதுவாய் என்று திருவுளமானார்கள்.*

*அல்லாஹுத்தஆலா குர்ஆனிலே பமன்ஸுஹ்ஸிஹ அனின்னாரிவ உத்திலல் ஜன்னத்த பகத் பாஸ - இருவனை நரகத்தை விட்டும் நீக்கப்பட்டு சுவர்க்கம் புகுதி வைக்கப்பட்டால் ஜெயம் பெற்றான் என்று திருவுளமானான்.*

*முஸ்லிமானவர்கள் ஸிறாதல் முஸ்தகீம் என்ற சீதேவித்தனத்தளவில் சேர்த்து வைக்குமே அப்படிக்கொற்ற பாதையிலிருக்கிறார்கள். முஸ்லிமானவர்களில், தவ்ஹீதுடைய ஹகீகத்தை அறிந்தவர்கள் அல்லாஹு என்கிற இஸ்முடைய பாதையிலிருக்கிறார்கள். அந்த பாதையாகிறது முஸ்தகீம் என்கிற பாதையை விட ஏற்றமானதாயிருக்கும். அந்த பாதையிலே ஹக்குடைய தஜல்லியை பலவிதமாக காணப்படும். முஸ்தகீம் என்கிற பாதையில் கஷ்பு வெளியாகும். ஆனபோதே தவ்ஹீதை உடைய முஸ்லிமானவர்களையும் ஹக்கீகத்தையுடைய ஆரிபீன்களையும் தவிர உள்ளவர்கள் முஷ்ரிகூன்களாயிருக்கும்.*

*மேலே சொல்லப்பட்ட ஒன்பது மார்க்கத்திலிருந்தாலும் ஒக்கும் முஸ்லிமூன்களைத் தவிர உள்ளவர்கள் முவஹ்ஹிதல்லை. முஸ்லிமான அவாம்களுக்கு அல்லாஹுத்தஆலா தன்னுடைய றப்பு என்கிற இஸ்முடைய புறத்திலே இபாதத்துச் செய்கிறதை கற்பித்தான். அவர்கள் ஹக்குடைய ஏவல்களை கொண்டு கட்டுப்படுவார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களளவில், இக்றவு பிஸ்மி றப்பிக்கல்லதீ கலக - உம்மைப்படைத்தானே, அப்படிக்கொற்ற உம்மை வளர்க்கிற றப்புடைய பெயரை ஓதுமென்று துவக்கமாக வஹி அறிவித்தான்.*

*உம்மை படைத்து வைக்கிறவன் என்ற றுபூபிய்யத்துடைய றப்பு என்கிற இஸ்மைக் கொண்டு சேர்த்துச் சொன்னதினாலே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் றப்புல் ஆலமீனாகிய ஆண்டவன் ஆலத்தை எல்லாம் படைத்து வளர்க்கிறவன். அவனுக்கு வழிப்பட்டு இபாதாத்துச் செய்வது பர்ளென்று துவக்கமாக அறிந்தார்கள்.*

*அதுபோல் முஸ்லிமாகிய அவாம்களும் துவக்கமாக படைத்து வளர்த்து ஆதரிக்கறவனைதான் அறிவார்கள். ஆனதால் வளர்க்கிறவனை, வளர்க்கப்பட்டவன் வணங்குகிறது கடமையாக இருக்கும். முஸ்லிமான அவாம்கள் றப்பு என்கிற இஸ்முடைய புறத்தில் நின்றும்தான் அல்லாஹ்வை வணங்குவார்கள். றப்பு அல்லாத மற்ற அஸ்மாக்களுடைய புறத்தில் நின்றும் அல்லாஹ்வை வணங்குவது அவர்களுக்கு இணக்கமாக மாட்டாது.*

*சிறுபிள்ளை தாயைத் துவக்கமாக அறிவதுபோல் றப்பைத்தான் துவக்கமாக அறிவார்கள். அல்லாஹ்வாகிறவன் றப்பு என்ற இஸ்மைக் கொண்டு மர்பூபுகள் என்ற வளர்க்கப்பட்ட வஸ்துகளின் எண்ணம் கொண்டு வெளியாவான்.*

*அவனவனும் அவனுடைய றப்பை அறிவான். முஸ்லிமான ஆரிபூன்களாகிறவர்கள், றஹ்மான் என்கிற இஸ்முடைய புறத்தில் நின்றும் அல்லாஹ்வை வணங்குவார்கள். ரஹ்மானுடைய ரஹ்மத்து என்னும் கிருபை என்ற பைளு சொரியிலதாகிறது ஆலமடங்களிலும் தொடர்ச்சியாக நடந்துக் கொண்டிருக்கிறதை அறிந்து அந்த உஜூது தங்களின் பேரிலும் தஜல்லியாகி வெளியாகிக் கொண்டே இருப்பதை அந்த ஆரிபீன்கள் அறிந்ததுக்காக வேண்டி, சகலதிலும்*

ரஹ்மானிய்யத்துடைய மற்தபா வெளியாகி பைளாகியிருக்கிறதைக் கொண்டு ரஹ்மானையே காணுவார்கள்.

இன்னும் ரஹ்மானிய்யத்தென்னும் மர்தபா உடைய புறத்தில்நின்றும் ரஹ்மானை வணங்குவார்கள். முஸ்லிமான முஹக்கிக்கூன்களாகிறவர்கள் அல்லாஹு என்கிற இஸ்முடைய புறத்தில் நின்றும் அல்லாஹுத்தஆலாவை வணங்குவார்கள். அவர்கள் அல்லாஹ்வுக்கு பாத்திரமான அஸ்மா, சிபாத்துகளைக் கொண்டு அல்லாஹ்வைத் துதிப்பார்கள்.

இவர்கள் அல்லாத மற்றவர்கள் அல்லாஹ்வென்று அழைத்தாலும் அவர்கள் கட்டுண்டு போய் இருக்கிற நாட்டத்தை நிறைவேற்றுகிற வண்ணிப்பையுடையவனைத்தான் அழைப்பார்கள். அதெப்படி என்றால் பசியினால் அல்லாஹ் என்று அழைத்தால் றஸ்ஸாகு - ரிஸ்க்கு கொடுப்பவனைத்தான் அழைக்கிறான். வியாதிஸ்தன் ஷாபீ - சுகமாக்குகிறவனைத்தான் அழைக்கிறான். முதீவுன் - வழிப்பட்டவன் தய்யான் - கூலி கொடுப்பவனைத்தான் அழைக்கிறான். ஆஸி பாவி ஒபூறு - பிழைபொறுக்கிறவனைத்தான் அழைக்கிறான்.

இதுபோல் ஒத்த நாட்டத்துடன் இந்த முஹக்கீக்கூன்கள் அல்லாஹ்வை அழைக்கமாட்டார்கள். மேலும் ஆண்டவனுடைய விசயத்தில் நேர்வழியான மார்க்கத்தை உடையவர்களும், வழிகெட்ட மார்க்கத்தை உடையவர்களும் அவர்களுடைய தங்கரீகத்தின்படி அகீதா நிர்ணயங்கள் கொண்டிருப்பதையெல்லாம் உதயமாகிப் பார்த்து அவர்கள் பல பல அகீதாவாக அகீதாக் கொண்டிருக்கிற எல்லா வஸ்துக்களிலேயும் ஹக்குடைய உஜூது உண்டாகியிருக்கிறதென்று அறிந்து எல்லாருடைய கொள்கைகளுக்கும் நேர்பட்டவர்களாகத்தான் இருப்பார்கள். இவர்கள் ஒருவிதமான அகீதாவில் கட்டுண்டவர்களாக இருக்கமாட்டார்கள்.

ஏனென்றால் அல்லாஹ் என்கிற இஸ்மு தாத்துடைய இஸ்மு. அல்லாஹ்வுடைய தாத்து வெளியாகிறது விலக்கலாகயிருக்கும். அப்படியிருப்பதால், தாத்துடைய இல்முடைய மள்ஹறாக இருக்கிற முஹக்கிக்கூன்களும் ஒரே நிலைமையில் தரிபடமாட்டார்கள். இவர்களுடைய அமல்களும் வகைவகையாகி கொண்டேயிருக்கும். வாரித்தாத்தான வஹியும் வகைவகையாவதால், தனவ்வஅத் அஜ்னாசுல் நு:மால் பித்தனவ்வுஇ வாரித்தாத்தில் அஹ்வால்.

ஆனபோதே, முஹக்கிகூன்கள் அல்லாஹ்வுடைய அடியார்களாயிருக்கும். ஆரிபூன்கள் ரஹ்மானுடைய அடியார்களாயிருக்கும். முஸ்லிமான அவாம்கள் றப்புடைய அடியார்களாக இருக்கும்.

முஹக்கிக்கூன்களுடைய தலமாகிறது அல்ஹம்து லில்லாஹி - புகழடங்கலும் அல்லாஹ்வுக்காக இருக்கும் என்பதாக இருக்கும். ஆரிபீன்களுடைய தலமாகிறது அற்றஹ்மானு அலல் அற்ஷிஸ்த்தவா வகுமாபிஸ்ஸமாவாத்தி வமாபில் அற்ளிவமாபய்ன குமா வமாதஹ்தத்றா - ரஹ்மானாகிறவன் அர்ஷின் பேரிலே சரி ஒத்திருக்கிறான். வானத்திலிருக்கிறதும், பூமியில் இருக்கிறதும் இது இரண்டுக்கு இடையில் இருக்கிறதும்



www.sufimanzil.org

*பூமிக்குத் தாளாலே இருக்கிறதும் அந்த ரஹ்மானுக்கு ஆட்சியாக இருக்கும் என்பதாக இருக்கும்.*

*முஸ்லிமான அவாம்களுடையத் தலமாகிறது றப்பனா இன்னனா சமிஃனா முனாதியன் யுனாதி லில் ஈமானி அன்ஆமினூ பிறப்பிக்கும் பஆமன்னா றப்பனா பஃபிற்லனா துனூபனா வகப்பிற் அன்னா சய்யி ஆத்தினா வத்தவப்பனா மஅல்அப்றார் - எங்களுடைய ஆண்டவனே! ஈமானளவிலே அழைப்பாரே அப்படிப்பட்ட அழைப்பவரை நாங்கள் கேட்டோம். நீ எங்களுக்கு அனுப்பி வைத்தாய். அவர் உங்கள் றப்பைக் கொண்டு ஈமான் கொள்ளுங்கள் என்று சொன்னார். அப்போது எங்கள் றப்பைக் கொண்டு நாங்கள் ஈமான் கொண்டோம். ஆனதால் எங்கள் பிழையை பொறுத்து எங்களுடைய தீங்கான செயல்களையும் போக்கிவிட்டு நன்றி செய்தபேர்களுடனே எங்களை எங்கள் ஆண்டவனே மவ்த்தாக்கி வைப்பாயாகவும் என்பதாகயிருக்கும்.*

*இதுவரை நாயகம் ஜான் முஹம்மது லெப்பைஹில் ஆலிம் தர்ஜுமா செய்த ஜவ்ஹருல் பவாயிக் பீ உலூமில் ஹக்காயிக் என்ற கிதாபில் நின்றும் எடுத்தெழுதப்பட்டது. இதையும் ஆராயுதல் செய்து விளங்கிக் கொள்ள வேண்டியது.)*

ஆகிலும் இதிலுள்ள முடிச்சுகளை லேசாகிய சைக்கினாயய் உனக்குக் காட்டுவதுடன், உனக்கு விளங்காதிருந்தால் கொஞ்சமென்கிலும் இந்த இல்மில் புழங்கினவரைக் கண்டால் அவரை வைத்து விளங்கிக் கொள். அதென்னவானால், இந்த பத்துக் கூட்டத்திலும் சொர்க்கலோகத்துக்குப் பாத்திரமானவர்களும், நரகலோகத்திற்குப் பாத்திரமானவர்களும் உண்டும் என்றும் முஸ்லிமையும் ஒன்றாகச் சேர்த்தே சொல்லியிருக்கிறார்கள்.

முற்காலத்தில் ரஸூல் உடைய அழைக்குதல் எட்டாதவர்களில் நன்மை செய்தவர்களுக்கு சொர்க்கம் என்றும், தீமை செய்தவர்களுக்கு நரகம் என்றும் ஷரீஅத்து இறங்க முதலே கல்பு ஏற்றுக் கொண்டதுதான் நன்மை அது தள்ளினதுதான் திண்மையென்றதில் ஆராய்ந்து பார்.

இந்த காலத்திலும் ரசூலென்பது இன்னதென்று எவ்வளவோ விரிவாகச் சொன்னாலும் அறவே விளங்காமலும் ஒரு ரசூல் வந்து அழைத்தாரென்றும் அறவே தெரியாமல் உலகத்தில் குப்பாறுகளில் முக்காலய மூன்று வீசம் முக்கால் வீசமிருக்கிறார்கள். தவிரவும் அவர்களும் பாவம் நன்மை இரண்டு உண்டும். நரகம் சுவர்க்கம் இரண்டு உண்டும் என்றும் உண்மை கொண்டே இருக்கிறார்கள். அவர்களிலும் அவர்களிலுள்ள அறிவாளர்களால் நீதி நூல்கள் அனேகமுண்டு பண்ணப்பட்டிருப்பதில் கல்பு ஏற்றுக் கொண்டதையே நன்மையாகவும் கல்பு தள்ளினதையே பாவமாகவும் அவர்கள் கோர்வையாக்கியிருக்கிறார்கள்.

பாவமென்று சொல்வதில் எத்தனையோ கோடான கோடியில் நாலு பத்தைத் தவிரச் சகலதும் நம்முடைய ஷற்யில் சொன்னதற்குச் சரியாகியும் நன்மை என்று சொல்வதில் நாலு பத்ததைத் தவிரச் சகலதும் உண்மையாக இருக்கிறதே அல்லாதுவேறில்லை.

நாவினால் உண்டாகிற இருபது பாவம் கல்பினால் உண்டாகிற சகல பாவங்களையும் செய்கையால் உண்டாகிற சகல பாவங்களையும் ஒன்றையாவது அவர்கள் பாவமல்ல என்று சொல்லவில்லை. ஆனால் உவமையில் அவர்களிடம் பூனையை திண்ணலாமா என்று கேட்டால் சீ அதை திண்ணக் கூடாதென்கிறார்கள். எதுக்காக? எந்த நூலில் சொல்லியிருக்கிறது? ஏனென்றால் இதற்கு முன்னூலேன் மனம் ஒப்பாதபடியால் திண்ணக் கூடாதென்கிறார்கள். அப்படியானல் உங்கள் மார்க்கத்திலே இருக்கிற இன்னச் சாதிக்காரன் திண்ணுகிறானே என்றால் மனம் கொண்டது மாளிகை அவரவர் கொண்ட கோலமென்கிறார்கள்.

ஆனால் அவர்களிடம் பொய், கொலை, களவு செய்யலாமா என்றால், ஆ! அப்பாதகம் கூடாதென்கிறார்கள். அப்படியானால் உங்கள் மார்க்கத்திலுள்ள இன்னின்னான் செய்கிறாரே என்றால் அவனை சிட்;சை செய்யவேணும். அவனில் நின்றும் பழிக்குப்பழி வாங்கவேண்டும். அவன் ஏழு வீட்டு மூதேவி. அவன் நரகவாதியாகிவிட்டபாடியால், தீயாரைக் காண்பதுவும் தீதென்றிருப்பதால் அவன் முகத்தில் முழிப்பதுவும் மகா தோஷமென்பார்கள்.

ஆனால், விலங்கினங்கள் மச்சம் மாங்கிசம் முதலாகியவைகளில் நம்முடைய மத்ஹபுகளுடைய வித்தியாசங்களையும் குர்ஆனில் நஸ்ஸாக ஹராமாக்கப்பட்டு வந்திருப்பதுகளையும் ஆராய்ந்தாயாகில், அதன் சூழ்ச்சமறிவாய்.

ஆகையால் தீர்மானம் என்னவானால், கல்பு ஏற்றுக் கொண்டதை நன்மையாகவும் தள்ளினதைத் தீமையாகவும் இவர்களெல்லாம் கண்டிருக்கிறார்கள். ஆனால் புத்துகளை வணங்குகிறீர்களே என்றால் அவர்களில் நல்லறிவில்லாதவர்கள் மானஃ புதுஹூம் இல்லா லியு கர்ரிபூன இலல்லாஹி ஸூல்பா. - அல்லாஹ் என்ற பராபர வஸ்து ஒன்றளவில் எங்களை முடுகுதலாக்கி வைக்கவே ஒழிய அவைகளை நாங்கள் வணங்கவில்லை என்றும் அவர்களில் நின்றும் மெய்யான கருத்தையுடையவர்கள் அறிவில்லாத ஏழைகளுக்காக அதை வைத்திருப்பதுடன், இதுவும் ஹக்குடைய மள்ஹரில் நின்றுமுள்ளதானபடியால் அதை வணங்குவதுடன் பராபர வஸ்து ஒன்றையே நாங்கள் வணங்குகிறோம் என்றும் நம்முடைய மார்க்க விதிகளையும் யாதொரு இன்காறு செய்யாமல் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் முரண்டாய் மூரியாட்டமாய் இணை வைத்துக் கொண்டு இஸ்லாமுடன் போராடுவதுடன் அவர்கள் மார்க்கப்படிக்கும் மாற்றமாய் நடப்பவர்களும் இருக்கிறார்கள்.

الاثم حزازات القلوب *அல்இத்மு ஹஸ்ஸா ஸாத்துல் குலூப்* - பாவமென்பது கல்பில் வந்து உதித்ததுதான் என்றும் استفت قلبك *இஸ்த்தப்த்தி கல்பக்க* - உன்னுடைய கல்பிடத்தில் தீர்ப்புத் தேடிக் கொள்ளென்று ஹதீதிலும் *இக்றவு கித்தாபக்க சுபாபினப்ஸிக்கல் யவ்ம அலைக்க ஹஸீபா* - உன்னுடைய கிதாபை ஓதிப்பார். இப்போது உன்னுடைய மனம் உன்பேரில் கேள்வி கேட்கிறதால் போதும் *குல்குல்லுன் யஃமலு அலா ஷாக்கிலத்திஹி பறப்புகும் அஃலமு பி பன்ஹூவ அஹ்தா ஸபீலா* - அடங்களும் அதினுடைய படைகோலத்தின்படிதான் அமல் செய்கிறார்கள். பாதையால் நேர்வழி பெற்றவர் யாரென்கிறது கொண்டு உங்களுடைய நாயன் அறிவான் என்று முஹம்மதே சொல்லுமென்று அல்லாஹுத்தஆலா குர்ஆனில் திருவுளமானான்.

ஆனால் காபிரீன்களை நரகலோகத்தில் எறியப்படும் போதெல்லாம் *சஅலஹும் கஸனத்து கா அலம் யவுத்திகும் னதீர்* - அதினுடைய அதிகாரிகள் உங்களிடத்தில் அச்சம்பூட்டி அறிவிக்கிற ரசூல் வரவில்லையா? என்று கேட்டால் *காலூ பலா கத்ஜாஅனா னதீர்* - ஆம். அச்சம் பூட்டி அறிவிக்கிறவர் எங்களிடம் வந்தார். பகத்தப்னா - நாங்கள் பொய்யாக்கி வைத்து *வகுல் மானஸ்ஸலல்லாஹு மின் செய்யின் அல்லா* - ஒரு வஸ்துவையும் இறக்கவில்லை என்று நாங்கள் சொன்னோம் என்று குர்ஆனில் வருகிறபடி சில காபிர்களைத் தவிர சகல காபிருகளிலும் அதை வைத்துப் பார்க்க சூறத்துப் படமாட்டாது.

இதற்காகத்தான் *உல்க்கியபீகா பவ்ஜுன்* - ஒரு கூட்டத்தை அதிலே எறியப்படும் போதெல்லாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் செம்மானையும் வெள்ளாட்டியையும், விக்கிரகத்தை பூசித்தவனையும் ஆராய்வதுடன் நம்மில் போர் செய்து கொன்றுபோடும்படி ஏவப்பட்டிருக்கிறது. இன்னதுக்காக என்பதையும் இன்சான் காமிலில் சொல்லியிருப்பதையும் ஆராய்ந்தாயாகில் எல்லாத்திலும் பாவியும் சொர்க்கலோகத்துக்குப் பாத்திரமானவானும் இருப்பான் என்பதை அறிவாய்.

முஸ்லிம் ஒற்றொருமிப்பாக்கப்பட்ட ஒரு ஹறாமை ஹலாலென்பதாலும், சொல்லால் நினைவாலுள்ள ரித்தத்தைச் செய்வதாலும் கொல்லப்பட பாத்திரமாயிருப்பதுபோல் மற்றவர்களிலும் இருப்பார்கள். மூன்று வக்த்து தொழுகை மட்டில் விதியாக்கி மார்க்கத்தை விளங்கினதின் பேரில் கல்பு ஏற்றுக் கொண்டதின் பின் செய்வாரென்பதைத் தெரிந்து முபாயஆக் கொடுத்ததையும் *வஇன்ஜனஹூ லிஸ்ஸல்மி பஜ்னஹ்லஹா* - அவர்கள் இணக்கத்துக்கு வருவார்களானால் அதற்கு நீரும் இணங்கிப்போகும். *வஇன் அஹதுன் மினல் முஷ்ரிக்கீ னஸ்த்த ஜாரக்க பஅஜிர்ஹு* - முஷ்ரிக்கானவர்களில் நின்றும் ஒருவன் உம்மிடத்தில் கார்மானம் தேடுவானேயானால் அவனைக் காத்துக் கொள்ளும். *பமஸ்த்தகாமுலக்கும் பஸ்த்தக்கீமு லஹும்* - உங்களுக்கு அவர்கள் செவ்வுறுதலாயிருப்பார்களானால் நீங்களும் அவர்களுக்கு செவ்வுறுதலாக இருங்கள் என்றும், அல்லாஹுத்தஆலா திருவுளமாயிருக்கிறான்.

பேசிவரப்பட்டிருக்கிறது: கலீபத்துல்லாவாகிய தாவூது அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பைத்துல் முகத்திஸைக் கட்டினபோது கட்டும்போதெல்லாம் இடிந்து போய் விடுகிறதைப் பற்றி நாயனே! உன்னுடைய வீட்டில் நின்றும் கொஞ்சத்தை நான் கட்டும்தோறெல்லாம் இடிந்தே போய்விடுகிறதே என்றவுடன் தாவூதே இரத்தத்தை ஓட்டி வைத்தவர்கள் கையால் கட்டப்பட்டால் என்னுடைய வீடு நிற்க மாட்டாது என்று அல்லாஹுத்தஆலா சொன்னபோது,

தாவூது அலைஹிஸ்ஸலாம் நாயனே! உன்னுடைய பாதையில் அழைத்துத்தானே காபிர்களை நாங்கள் வெட்டினோம் என்றதற்கு அல்லாஹுத்தஆலா அவர்கள் என்னுடைய அடியார்களல்லவா! என்றான்.

பிற்பாடு சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கட்டினார்கள். ஆனால் எந்த மார்க்கத்திலும் எந்தக் சட்டங்களும் அல்லாஹ்வை வணங்கபோய் நாமழைக்க வேண்டியதென்ன

மாட்டேனென்றால் அவர்களைக் கொல்லவும் நம்மை அவர்கள் கொல்லவும் அவர்கள் நமக்குப் பயந்து ஏதும் திரை மற்றது கட்டி வருவதானால் விட்டுவிடவேண்டியதே என்றும் கேட்பாயாகில்,

அறிந்துகொள். அவர்கள் இஸ்லாமுக்கு பணிந்து நடந்தால் போதும். அதுவே தவிர கட்டாயகமாகக் கொல்ல வேண்டியதில்லை. சகல வணக்கமும் அல்லாஹ்தஆலாவுக்காகவே இருப்பதுடன் அவர்கள் முத்துலக்காகிய நாயனை முகய்யதுடைய சூரத்திலும் நிறப்பமாகிய கமாலிய்யத்தாகிய இபாதத்து இன்னவிதம் என்று அவர்கள் அறியாத்ததாலும் வஹ்தானிய்யத்தை தரிபடுத்தி கமாலியத்தாகிய வணக்கத்தளவில் அவர்களை அழைப்பதற்கல்லாது வேறில்லை.

எப்படிப்போலானால், ஓர் மனிதனை நாமழைக்க வேண்டுமானால் அவனுடைய றூஹானிய்யத்தாகிய குவ்வத்து ஜிஸ்மானியத்தாகிய குவ்வத்து வெளியுறுப்பு, உள்ளுறுப்பு சகலதையும் சேர்த்துக் கொண்டு அவனுக்குள் ஸைது அம்று என்ற பேரைக் கொண்டழைப்பதால் அல்லது மனிதனே என்று கூப்பிடுவதால் அவனைக் கூப்பிட்டதாகுமல்லாது அவனுடைய உறுப்புகளில் ஒன்றைக் குறிப்பிட்டு காலே, கையே என்றழைத்தால் காரியம்தன்னில் அதுவும் அவன்தானாகவே இருப்பதுடன் நிறப்பமாக அவன் மீதில் அறிவிக்காது.

அப்படிப்போல் ஐயறிவுக்குள்ளகப்பட்டதாகிய நட்சத்திரம், புத்து முதலானதுகளை வணங்குவது இன்சானுக்குள்ள வெளியுறுப்பைப் போலும் ஜின் முதலானதுகளை வணங்கப்படுகிறது அவனுடைய கியாலைப்போலும், மலாயிகத்துகளை வணங்கப்படுகிறது அவனுடைய அக்குலிய்யாகிய குவ்வத்துபோலுமாயிருக்கும்.

முஸ்லிமானவர்களுடைய வணக்கம் சகலதையும் சேர்த்து மட்டுத்திட்டம் சகலதையும் விட்டு நீங்கி பேரையும் பேரையுடையவனையும் தன்ஸீஹில்லாமலும் தஷ்பீஹில்லாமலும் இரண்டையும் சேர்த்து தன்ஸீஹு மஹ்லென்ற மக்கு அதுஸ்ஸித்துகாகிய உண்மை குடிகொண்டதுரையில் நின்று வணங்குவதாயிருக்கிறது.

ரசூல்மார்களை அனுப்பப்பட்டதும் காபிர்களோடு போர்ச்செய்வதும் இவ்விதமான மஃரிபாவை உண்டாக்கி வணங்குவதற்காக அல்லாது வேறில்லை. இந்த மஃனாவில்தான் செய்குல் அக்பர் புஸூஸில் சொல்லுகிறார்கள்: அல்லாஹ்வை அறிந்தவன் வணங்கும் வரை எந்த சூரத்தில் வெளியானாலும் வணங்கப்பட்டது பலதாய் மிகுதமாய்ப் பிரிந்திருக்கிறது. ஐயறிவுக்குள்ளகப்பட்ட சூறத்தில் உறுப்புகளைப்போலும் றூஹானிய்யத்தாகிய சூரத்தில் மஃனவிய்யத்தாகிய குவ்வத்துப் போலென்றும் அறிவான் என்றார்கள்.

ஆகையால், வணங்கப்பட்டது அடங்கலும் அல்லாஹ் அல்லாத்ததை வணங்கப்படவே இல்லை. ஏனென்றால், அல்லாஹ் அல்லாத்தது ஒன்றுமில்லை. ஆனதற்காக வேண்டி தாழ்ந்தவன் வணங்கப்பட்டதில் நாயகத்தனத்தை சந்தேகமாய் தோற்றரவு செய்து கொள்வான். அவ்விதமான

தோற்றரவில்லாதிருந்தால் கல்லையாவது, கட்டையையாவது அவன் வணங்குகிறதில்லை. அதற்காக வேண்டித்தான் ஹக்குத்தஆலா காபிர்களை வாய்மடக்கச் செய்வதற்காக குல் சம்மூஹும் - முஹம்மதே! அவர்கள் வணங்கும் வஸ்துவுக்குப் பேரென்ன என்று கேளுமென்றான்.

அதுகளின் குறிப்பின் வீதம் பேர் சொன்னார்களானால் கல்லு, மரம், நட்சத்திரம் என்பார்கள். யாரை வணங்குகிறீர்கள் என்றால் இலாஹென்ற பொருளையுடைய நாயனை வணங்குகிறோம் என்பார்கள். அதுவேயல்லாமல் அல்லாஹ் என்ற பராபரவஸ்துவை அல்இலாஹ் - அந்த இலாஹென்று எல்லோரும் வணங்கப்பட்ட நாயனை வணங்குகிறோம் என்று சொல்லமாட்டார்கள். மேலாம்பரமான அறிவுள்ளவன் இப்படி சந்தேகமாய் தோற்றரவுச் செய்யமாட்டான்.

ஆகிலும் இதுவும் நாயகத்தனத்தளவிற் சேர்க்கபட்ட வெளியாகும் துறைதான். இதை வலுப்பமாக்கி துவக்க வேண்டுமென்று தானும் வணங்குகிறத்துடன் மற்றவர்களையும் இதை வணங்கும்படி ஏவுவான். தாழ்ந்த அறிவுள்ளவன் சந்தேகமாய் நாயகத்தனத்தை அதில் தோற்றரவாக்கிக் கொண்டவன் *மானஃபுதுஹும் இல்லா லியுகர்றிபூன இலல்லாஹி ஸுல்பா* - அல்லாஹ் அளவில் அதுதான் எங்களை முடுகுதலாக்கி வைப்பதற்காக வேண்டியே ஒழிய அவைகளை நாங்கள் வணங்கவில்லை என்று சொல்லுவான்.

அறிவாளியாகிய மேலாம்பரமானவன் *இன்னமா இலாஹுக்கும் இலாஹுன் வாஹிதுன் பலஹு அஸ்லிமூ* - உங்களுடைய நாயனெல்லாம் ஒரே நாயன்தான். ஆனதால் அவனுக்கே வழிப்படுங்கள். மின்ஹய்து லஹற - அவன் எவ்விதமாக வெளியானாலும் வெளியாவதெல்லாம் அவனுடைய மள்ஹறல்லாது வேறில்லை என்று சொல்வான். இந்த மகாமில்தான் குணங்குடியார் (சாதிபேதத்தையும், மாதர் போகத்தையும் தள்ளிவிடுவது சமாதி) என்றார்கள்.

ஆனால், இவ்வளவு மட்டில் நீளமாகப் பேசினதில் ஆராய்வில்லாத நிருமூடன் இப்பேர்ப்பட்ட வாhத்தைகளைக் கேட்டவுடன் எண்ணுகிறான், எல்லா வணக்கமும் ஹக்குத்தஆலாவுக்கே இருப்பதாலும் புத்து முதலானதுகளும் ஹக்குடைய மள்ஹறாக இருப்பதாலும், நாமும் அதுகளை வலுப்பமாக்கத்தானே வேண்டும். ஆகிலும் அதுகளை வணங்கினால்தானென்ன என்று யோசிப்பான்.

*அஸ்தக்பிருல்லாஹ இன்னாவில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்* - நாதாக்கள் இப்பேர்ப்பட்ட வார்த்தைகளைக் கேட்பதால் மடையர்கள் குப்றுகளை உண்டாக்கிக் கொள்வார்கள் என்பதற்காகவே மறைத்தார்கள். ஆனால் அவன் யோசிக்க வேண்டாமா(மத்தா)- எப்ப? என்பதை விட்டும் (ஐன)- எங்கே? என்பதை விட்டும் கைப- எப்படி? என்பதை விட்டும் தூய்மையாகிய பொருளை வணங்கவேண்டியே முஷ்ரிக்கோடும் காபிர்களோடும் போர்ச் செய்யும்படி ஏவப்பட்டிருக்க அவன் எப்படி அந்த ஷிர்க்களவில் மீளலாம்?

ஆனால், குப்பாறுகள் இணை வைத்திருக்கிற வஸ்துவை ஹக்கல்லாத்ததென்று நிர்ணயம் செய்து, ஹக்கு வேறே, அதுகள் வேறே என்று ஹக்குக்கு இணையை உண்டாக்கிப் போடவும் போதும். இதற்காகத்தான் பஸ்ஸு நூஹிய்யாவில் நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கவ்முகள் உத்து, கலாவு,எகூது, யவூக்கு, நஸ்று என்ற விக்கிரகங்களை இதுகளும் ஹக்குடைய மள்ஹரில் நின்றுமுள்ளதுதான் என்று எண்ணாமல் அதுகளை விட்டுவிடுவார்களேயானால் அதுகளில் நின்றும் விட்டுவிட்டார்களே அந்த கத்றுக்கு ஹக்கில் நின்றும் அவர்கள் அறியாதவர்களாக ஆகி விட்டார்கள் என்று சொன்னார்கள்.

தீன் என்ற சொல்லுக்கு பொருள் எழுதினதில் இவ்வளவுமட்டில் ஒரு வார்த்தையோடொன்று கொழுகி நீளமாகிவிட்டதால், அதனுடைய விளக்கம் தலை சாய்க்குதல் வழிப்பாடென்ற மூலப்பொருளை மறந்து விடாதே. வஸ்ஸலாம்.

*பர்உன் பீமுல்த்தக்கித் தாத்தி மினல்ஹதீதி வகலா மிஸ்ஸலபி வல் ஹுக்கமாயி பீ அம்ரித்தீனி* - தீனுடைய கருமத்தில் ஹதீதில் நின்றும் முன்னோர்கள் ஹுக்கமாக்களுடைய வார்த்தைகளில் நின்றும் வரப்பட்டச் சிலதைப் பொறுக்கி எடுக்கப்பட்டதிலேயுள்ள *பர்ஆக இருக்கும். ஹுக்கிய அல்மற்வு அலாதீனி கலீலிஹி* - ஒரு மனிதன் அவனுடைய தோழனுடைய மார்க்கத்தின் பேரில் இருப்பான். இதன் கருத்தென்னவானால், அவனுடைய சினேகிதனுடைய நடைபிடியைத்தான் தொடர்ந்து நடப்பான் என்றது.

ஆகையால், இணக்கமறிந்திணங்கு *ஹுக்கிய அன்னாஸு அலாதீனி முலூக்கிஹிம்* -மனிதர்கள் அவர்களுடைய இராஜாக்களின் மார்க்கத்தின் பேரிலிருப்பார்கள். அதென்னவானால் அவர்களுடைய சட்டதிட்டங்களே கருத்துக்குச் சரியாயிருப்பதுபோல் தோற்றுமென்றது.

இமாம் அலியுன் கற்றமல்லாஹு வஜ்ஹஹு திருவுளுமானார்கள்: (*இன்னாலில்லாஹி பீ அற்லிஹி ஆனியத்தன் வகியல்குலூபு ப அஹப்புஹா இலைஹித் தஆலா அறக்குஹா வஅஸ்பாஹா*) அல்லாஹ்வுக்கு அவனுடைய பூமியில் சில பாத்திரங்கள் உண்டும். அதுகளில் அவனளவில் மிகவும் உவப்பானதும், அதுகளில் மிகவும் மிருதுவானதும் மிகவும் தெளிவானதும் மிகவும் கெட்டியானதுமாயிருக்கும். அப்பால் தீனிலே மிகக் கெட்டியானதும் எக்கீனிலே மிகத் தெளிவானதும் உடன்பிறந்தான்மார்கள் மீது மிருதுவானது என்றுப் பிரிந்துச் சொன்னார்கள்.

பேசிவரப்படுகிறது லுக்மானுடைய மகன் தகப்பனாரைப் பார்த்து, இன்சானுடைய வேலையில் கைறானது ஏதாயிருக்கும்? என்றதற்கு லுக்குமான் 'தீன்' என்னும் வழிப்பாடென்றார்கள்.

இரண்டாகயிருந்தாலோ என்றதற்கு வழிப்பாடும் முதலும் என்றார்கள். மூன்றாகயிருந்தாலோ என்றதற்கு வழிப்பாடும், முதலும், வெட்கமும் என்றார்கள். நாலாக இருந்தாலோ என்றதற்கு வழிப்பாடும், முதலும், வெட்கமும் சற்குணமும் என்றார்கள். ஐந்தாக இருந்தாலோ என்றதற்கு வழிப்பாடும், முதலும், வெட்கமும், சற்குணமும், கொடை கொடுக்குதலும் என்றார்கள். ஆறாக இருந்தாலோ என்றதற்கு இந்த ஐந்தும் ஒருவரில் சேருமானால் அவர் துப்பரவாகவும்,

தக்குவாவையுடையவராயும், அல்லாஹ்வுக்கு வலியாயும் ஷைத்தானை விட்டும் நீங்கினவராகவும் இருப்பார் என்று சொன்னார்கள்.

ஒருவர் பைத்துச் சொல்கிறார்: பலாவல்லாஹி மாபித்தீனி கைறுன் வலத்துன்யா இதாதஹபல் ஹயாவு - வெட்கம் போய்விடுமானால் அல்லாஹ்வின் பேரிலாணையாக தீனிலும், துன்யாவிலும் யாதொரு நலவும் இல்லை. இன்னும் ஹுக்கமாக்களில் ஒருவர் ஏழு காரியத்தைத் தவிழ்ந்து கொள். உன்னுடைய திரேகமும், கல்பும், மானமும் உன்னுடைய தீனும் தரிபடும்.

தப்பிப் போனதின் பேரில் சலிக்காதே. உன்னிலே வந்திறங்காத கவலையை உன்னுடைய கல்புக்குச் சுமத்தாட்டாதே. மனிதர்களை உன்தன்னில் அதுபோல் உள்ள ஐபுண்டாயிருக்கப் பழிக்காதே. (இதில் தன்னில் அய்பில்லாதிருந்தால் பழிக்கலாம் என்று விளங்கக் கூடாது. ஒழுக்கம் விழுப்பம் தரலானொழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்) நீ செய்யாத வேலையின் பேரில் கூலியைத் தேடாதே. உன்னுடைய கோபம் அவனை யாதொரு தங்கடம் செய்யாதே அந்த ஒருவனின் பேரில் கோபிக்காதே. ஒருவன் அவன்தன்னில் நின்றும் நீ புகழ்வதற்கு மாற்றமாக அறிவானே அந்த ஒருவனைப் புகழாதே என்று சொன்னார்கள்.

முன்னோர்களில் ஒருவர், உண்மையாகிறது தீனுக்கு அடித்தளமாயிருக்கும். அதபுக்குத் தூணாகயிருக்கும். சகலரோடும் உவப்பாயிருப்பதற்கு அஸ்லாயிருக்கும். இந்த மூன்றும் உண்மையைக் கொண்டல்லாது நிறப்பமாக மாட்டாது என்று சொன்னார்.

இன்னும் ஒருவர் சொல்கிறார், ஒருவன் தீன் என்னும் வழிப்பாட்டைப் பற்றிப் பிடித்துக் கொண்டானேயானால் அவனுடைய தகுதி மேலாம்பரமாகிவிடும். ஹக்கையே நாடினானேயானால் அவனுடைய பெரியதன்மை நிரப்பமாகிவிடும்.

மூன்று காரியம் பிரயோஜனமில்லாமல் பழுதாகிவிடும். அக்குலில்லாத தீனும் ஒன்றைச் செய்து நிறைவேற்றாமல் அதைச் செய்யக் கூடுமென்ற தத்துவமும் ஈயாமல் வைத்திருக்கிற முதலும் ஆக இம்மூன்றும் பழுதானது. ஆனால், குர்ஆனில் அறுபதே சொச்சம் தலத்தில் தீன் என்ற சொல்லை மடக்கி மடக்கி சொல்லி இருப்பதுடன் அதுகளில் மிகுந்த கலப்பறுதலாக தீனை நிறுத்தாட்டி வைப்பதின் பேரில் கண்டிப்பான உத்திரவாக இருப்பதால் முன்னோர்களுடைய வார்த்தைகளைக் கொண்டு நீளப்படுத்தாதிருப்பதுடன் இது விசயத்தில் குர்ஆனில் வருகிற ஆயத்து முழுவதையும் வருவிக்க நாடினதில் நீளமாவதால் விடப்பட்டது.

ஆகையால் அல்லாஹுத்தஆலா நம்மையும், உன்னையும் ஹக்காயி தீனிலே விளக்கவாளியாக்கி அதையே கலப்பறுதலாக்கி நிறுத்தாட்டி வைத்த முகர்றபீன்களுடைய கூட்டத்தில் சேர்த்து வைப்பானாகவும் ஆமீன்.

**பாபுல் ஈமான் - ஈமானுடைய பாடம்**

ஆனால் மேலே எழுதியபடி ஓர் வழிப்பட்டால் கூலியைப் பெற்றுக்கொள்கிறது உலக வழமையாக இருக்கிறபடியால், வழிப்பாடு கூலி வழக்கமென்றதால் தீனென்ற சொல்லினுடைய

விளக்கமாச்சுது. அப்பால் எதை நம்புகிறதென்ற ஊசாட்டம்தான் ஈமான் என்னும் உண்மை கொள்கிறதாயிருக்கும்.

செய்யிதினா உமர் ரலியல்லாஹு அன்ஹு பேசி வருகிறார்கள், ஒருபோது நபி நாயகத்தின் சமூகத்தில் நாங்கள் இருக்கும்போது ஒரு மனிதன் தூய்மையாகிய வெள்ளைத் துகிலுத்தினவராக அவருடைய ரோமம் கூரிய கறுப்பானவராய் அவரில் சபருடைய அடையாளங்கள் யாதொன்றும் இல்லாதவராய் அத்தாயப் பொருளாய் வந்து உதயமானார்கள். நாங்கள் ஒருவரும் அவரை எப்போதும் அறிய மாட்டோம்.

அவர் நபி நாயகத்தளவிலிருந்து அவருடைய இரண்டு முழந்தாளையும் இரண்டு தொடை மீது வைத்து முஹம்மதே எனக்கு இஸ்லாமைத் தொட்டும் அறிவியுங்கள் என்றார்.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இஸ்லாமாகிறது, அன்த்தஷ்ஹத அல்லா இலாஹ இல்லல்லாஹுவ அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹி *வஅன்த்துக்கீ மஸ்ஸலாத்த வஇவுத்தியஸ்ஸக்காத்த வத்த ஸூமறமலான வத்துஹுஜ்ஜுல் பய்த்தல் ஹறாம இனிஸ்த்த த:்த்த இலைஹி ஸபீலா* – அல்லாஹ்வைத் தவிர ஒரு நாயனுமில்லை. உண்மையாய் முஹம்மதானவர்கள், அல்லாஹ்வுடைய தூதராக இருக்கும் என்று அறிந்து நீர் சாட்சி சொல்லுகிறதும் தொழுகையை நிலைபாடாக்கி வைக்கிறதும் ஸக்காத்தைக் கொடுக்கிறதும் றமலானில் நோன்பு பிடிக்கிறதும் சங்கையாகிய பைத்துல்லாஹ்வில் அதனளவில் பாதையால் தராணி பெற்றால் ஹஜ்ஜு செய்கிறது என்றார்கள்.

அவர் உண்மை சொன்னீர் என்றார்.

நாங்கள் அவர் கேட்பதையும் யாதொரு மறுமொழியில்லாமல் தலை சாய்த்து உண்மையாக்கி வைப்பதையும் பார்த்துப் புதுமையானோம்.

அப்பால் ஈமானைத் தொட்டும் எனக்கறிவியுங்கள் என்றார்கள். நபி நாயகம் அன்த்துவுமின பில்லாஹி வமலாஇக்கத்திஹி வகுத்துபிஹி வருஸ்லிஹி வல் யவ்மில் ஆகிறி வல் கத்ரி கைரிஹி வஷற்றிஹி மினல்லாஹித் தஆலா - அல்லாஹ்வையும் மலாயிக்கத்துக்களையும், வேதங்களையும் றசூல்மார்களையும் ஒடுக்கத்து நாளையும் கட்டளையில் அதில் நலவானது தீங்கானதையும் கொண்டு ஈமான் கொள்கிறதென்றார்கள்.

அவர் உண்மை சொன்னீர் என்றார்கள்.

அப்பால் இஹ்சான் என்னும் மனிதன் அழகாக்கி வைக்கிற காரியம் என்ன என்றார். காலஅன்த் த:்புதல்லாஹ கன்னக்கத்றாஹு பஇல்லம்த்தக்குன்த்தறாஹு பஇன்னஹுயறாகக்க - பராபர வஸ்துவாயிருக்கிறதே அதை கண்ணாரக் கண்டதுபோல் வணங்குகிறது. அவனை நீர் காணவில்லையாயினும் உம்மை அவன் கண்டு கொண்டிருக்கிறான் என்றார்கள்.

அப்பால் அந்த ஹதீதில் அவர் கேட்டதற்கு நாயகம் சொன்னதுமுதல் கடைசிவரை பேசி அப்பால் உமறு ரலியல்லாஹு அன்ஹு சொல்கிறார்கள்: எங்களை விட்டு அந்த மனிதன்

மறைந்து போனதின்பேரில் நபி நாயகம் என்னை நோக்கி உமறே! இதோ வந்து கேட்டது யாரென்றறிவீரோ? என்றார்கள்.

அல்லாஹ்வும் அவனுடைய றசூலும்தான் அறிவார்கள் என்றேன். அப்போது நபி நாயகம் அவராகிறது ஜிப்ரயீலாயிருக்கும். உங்களுடைய தீனை உங்களுக்கு படித்துத் தர வேண்டி உங்களிடம் வந்தார் என்றார்கள்.

இந்த ஹதீதில் தெளிவாய் உன்னுடைய கருத்தைச் செலுத்திப் பார்ப்பதுடன் நீதமாக அல்லாஹ் ஒருவனிருக்கிறான் என்று சிந்தையில் வருகிறது. அக்குலுல் அவ்வலாகிய ஜிப்ரீலுடைய புறத்தில் நின்றுமுள்ளதென்றும் அல்லாஹ் ஒருவன் என்று வஹ்தானிய்யத்தாக்கி ஈமான் கொள்ளும்படி தீர்ப்புச் செய்கிறது. றசூலுடைய புறத்தில் நின்றுமுள்ளதென்றும் நான் எழுதியதும் அல்வாரிதாத்து றுஸ்லுல்லாஹி கருத்தில் வந்து தரிபடுகிற நல்ல எண்ணமடங்கலும் அல்லாஹ்வுடைய தூதராய் இருக்கும் என்று எழுதினதையும் இந்த ஹதீதில் வைத்து ஆராய்ந்து பார்.

அதென்னவானால், கல்பிலே வருகிற வாரித்தாத்தென்னும் றசூலிடத்தில் அக்குலுல் அவ்வலாகிய ஜிப்பரீல் றூஹானிய்யத்தாகிய ஆலத்தளவிற் சேர்க்கப்பட்ட இன்சானுடைய ஊசாட்டத்திலிருந்து தீர்ப்புப் பெற்றுக் கொண்டதுபோல் ஜிஸ்மானிய்யத்தாகிய ஆலத்திலும் அந்த ஜிப்ரீலே ரூபமாய் வந்து மனுரூபமாய் றசூலிடத்தில் தீர்ப்புப் பெற்றுக் கொண்டார்.

அதுபோல் மேலோகத்திலும் கீழ்லோகத்திலும் உன்னை விட்டும் நீங்கினதும் உன்னிலில்லாத்ததும் ஒன்றுமேயில்லை. ஆகிலும், எல்லாத்துக்கும் நீயே அஸ்லானவன் என்று உணர்ச்சையர் இருந்து கொள்.

தன்லீறுன் வத்தப்ஸீர் இதோ போதிக்கும் வசனங்களானது அகப்பார்வையை உண்டாக்கிப் பிரபை ஒளிவைப் பளீரென வீசச் செய்வதாக இருக்கும்.

உடன்பிறந்தானே அறிந்துகொள். ஈமான் என்றும் இஸ்லாம் என்றும் வாய் மதம் பேசிய வீணர்களுடன் சேர்ந்து வாழ்நாட்களைக் கழித்து யாதொரு பயனில்லாமல் வாய்புழுத்து நாய்போல் குழறிக் குழைலத்து வந்த வழியும் இனிமேல் செல்லும் வழியும் தெரியாமல் மதிமயங்கிப் பொறி கலங்கி நிற்பதுடன் நம்முடையச் சீவன் கூட்டை விட்டுக் குடிப்பயணம் போக முடுகியிருப்பதால், எவ்விடத்துக்கு ஏகுமோ என்ன கதி அடையுமோ என்ற விபரத்தை நாம் அறியாத மகாதோஷத்துக்காக, நாம் இரத்தமாய் கதறிக்குளறியழுவோம்.

ஆகையால் எங்களை ஈடேற்றும் நாயனே உனது முக்கிய நாமோதயங்களில் ஒன்றான மூமின் என்ற திருநாமத்துக்கு எங்களை மிர்ஆத் என்னும் சுத்தமயப்படிகமாக்கி இரட்சித்தாண்டருள்வதுடன,; ஹக்கனே! என்னுடைய கல்பில் ஹக்கையே ஹக்காகக் காட்டி கலம் நடப்பதில் கத்தாவை விட்டுக் காத்தருள்வாய் என்று கரைந்துருகிச் சொல்வதை நப்சே! - ஹபீபே! அறிந்து கொள்.

ஈமானாகிறது ஐந்து பங்கின் பேரிலாயிருக்கும். **ஈமானுன் அன்தக்குலீதின்** - ஒருவரையொருவர் தொடர்வதைத் தொட்டும் உண்டாகிற ஈமான். **வஈமானுன் அன்இல்மின்** - அறிவைத் தொட்டும் உண்டாகிற ஈமான். **வஈமானுன் அன்இயானின்**- கண்காட்சியைத்தொட்டும் உண்டாகிற ஈமான். **வஈமானுன் அன்ஹக்கின்** -உண்மையான நிச்சயத்தைத் தொட்டும் உண்டாகிற ஈமான். **வஈமானுன் அன்ஹக்கீகத்தின்** - அந்தரங்கத்தைத் தொட்டும் உண்டாகிற ஈமான். ஆக ஐந்து பங்கின் பேரிலாயிருக்கும்.

இவைகளில் தொடர்வதால் உண்டாகிற ஈமான் என்றது யாதொரு அறிவுமில்லாமல் மாதா, பிதாக்கள், மற்ற யாரும் சொல்வதைக்கேட்டுக் கொண்டு உண்மை கொள்கிற அவாமு கல்குகள் விசுவாசம் கொண்டிருக்கிறதாயிருக்கும்.

ஆனால் இந்த உலகில் உலமாக்கள் என்று பேர் பெற்றவர்களில் கோடியில் ஒன்றைத் தவிர ஈமானுடைய பாபில் அவாமுடைய றுத்பா பதவியைக் கடந்தவர்கள் என்று எண்ணாதே. அறிவைத் தொட்டும் உண்டாகிற ஈமான் ஈமான்தான். அத்தாட்சிக் கொண்டு முன்னூல்களைப் பார்த்து (எ) முகங்களைத் தேடி காலமெல்லாம் அல்லாஹ்வுடைய தாத்திலும் சிபாத்திலும் அப்ஆல்களிலும் அனேக அடித்தளங்களை உண்டு பண்ணி, அதனால் ஈமானை உண்டு பண்ணிக் கொள்கிற நுல்லாறெனும் நோட்டக்காரர்களும் அஹ்லுல் கலாம் என்ற கலாமுடைய உலமாக்களும் கொண்டிருக்கிற ஈமானாயிருக்கும்.

அதெப்படியானால் அல்லாஹ் ஒரு நாயன்தான். ஏனென்றால், இரண்டு நாயனாக இருப்பின், ஒருவன் ஆக்க நினைப்பான். ஒருவன் அழிக்க நினைப்பான். ஆகையால் இருவருடைய நாட்டமும் விரோதிப்பதால் உலகம் சீராகாதென்றும், அவனுக்கு மாதாபிதா பெண்டு,பிள்ளை இல்லை என்றும், அப்படியிருக்குமானால் அவன் இன்னொன்றிலிருந்து உண்டாக வேண்டிவருகிறது என்றும்,

இன்னும் அவனுக்கு அறவே இல்லாமலும், புத்திவான்களுடைய சிந்தைகளிலும் உண்டென்று ஊசாடாதிருக்க விருதாவில், அவனுக்குக் குறைவானதுகளை வருத்தி வெறும் பேச்சாக இதுவெல்லாம் அவனுக்கு இல்லை என்றும் வீண் பேச்சாக பேசுவார்கள். எப்படியானால் அல்லாஹ் கட்டயனும் அல்ல என்று ஈமான் கொள்ள வேண்டும் என்பார்கள். இன்னமும் குருடனல்ல, செவிடனல்ல என்று இருபது சிபத்துக்கும் மாற்றமானதுகளை இழுத்துப் பேசி, இதுபோல் உள்ளதைக் கொண்டே அவர்களுடைய கிதாபுகளை நிரப்பிப் போடுவார்கள்.

காரியம்தன்னில் கொஞ்சமெங்கிலும் ஒரு அணுவளவாவது புத்தியுள்ளவனுடைய சிந்தையில் அதுபோல் உள்ள அல்லாஹ்வுக்குத் தகாத சிபாத்துகள் ஊசாடவே மாட்டாது. பல் ஹயவானுடைய ருத்பாவிலுள்ள ஒரு மடையன் சொன்னால் புத்தியை உடையவர்கள் அவன் மீது கியாமத்தை நிறுத்திப் போடுவார்கள்.

ஆகையால் இப்படிப்போல் உள்ள கிதாபுகள் கோடாகோடியைப் பார்த்ததால் ஈமானை பலவந்தமாக்கி போடமாட்டாது. அந்த உலமாக்கள் குர்ஆனைக் கொண்டு அத்தாhட்சி பிடிப்பது உன்னை மருட்டிப் போட வேண்டாம். அது அவர்கள் நாடினதல்லாத்ததுக்காயிருக்கிறது.

கண்காட்சியால் உண்டாகிற ஈமானாகிறது ஹக்கை விட்டுப் பராக்குப் பூட்டுகிற சகல வஸ்துவையும் விட்டு நீங்கி பசி முழிப்பு தனித்திருக்குதல் வாய் மூடுதல் என்ற தரீகத்துடைய நாலு ருக்னுகளையும் எடுத்து காமில் முகம்மிலாகிய செய்கைத் தொடர்ந்து அவருடைய உத்திரவுபடி கண் கொள்ளாத நடனங்களைக் கண்டுத் தரிசித்த அஹ்லுல் முஷாஹதா என்னும் தெரிசனையுடையவர்களுக்குண்டாகிற ஈமானாக இருக்கும்.

உண்மையான நிச்சயத்தாலுண்டாகிற ஈமானாகிறது, மேற்கூறியபடி சில சமயங்களில் தோற்றரவாகும் தெரிசனைகளை விட்டுத் தாண்டி வுஜூது வேறே இல்லை தங்களுடைய வுஜூதும் அல்லாஹ்வுடைய தாத்து தான் என்றறிந்த ஆரிபூன்களுடைய ஈமானாயிருக்கும்.

அப்பால் அந்தரங்கத்தைத் தொட்டும் உண்டாகிற ஈமானாகிறது எப்போது ஹலறத்திலே தரிபட்டிருக்கிற வாக்கிபூன்களுக்காயிருக்கும்.

இந்த ஐந்தையும் தவிர ஹக்கீகத்:துல் ஹக்கீகா அந்தரங்கத்துக்கும் அந்தரங்கமாகிய ஆறாவதாகிய ஈமான் ஒரு பங்கிருக்கிறது. அதாகிறது, முர்சலான நபிமார்களுக்காயிருக்கும். அதனுடைய அந்தரங்கத்தை இன்னதென்று வெளியாக்கிறதை விட்டும் அல்லாஹுத்தஆலா நம்மை விலகி இருக்கிறான் என்று செய்குல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு சொல்கிறார்கள்.

**உதாரணம்**

ஆனால் மேலே சொல்லிய ஐந்து வகை ஈமானுக்கும் மிதால் சொன்னாலல்லாது நீ சரியாய் விளங்கிறது வருத்தமாகையால் அறிந்துக் கொள். ஒருவன் ஒருவனிடத்தில் றூஹென்பதென்னவென்று கேட்டதில், சரீரத்தை ஆட்டி வைக்கிறது. அல்லது அது நீங்கின உடன் சாவென்ற சொல்கிறது என்றவுடன் யாதொன்றையும் யோசிக்காமல் உண்மையாக நம்பிக் கொண்டான். அப்படிப்போல் அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வது முதல் மற்ற ஐந்து காரியங்களையம் ஒருவர் சொல்லை கேட்பது கொண்டு ஒப்புக் கொள்கிறது. இதுதான் அவாம்களுடைய தக்குலீதுடைய ஈமான்.

அப்பால் றூஹென்பது ஏதாயிருக்கும் என்று யோசித்ததில் அது சரீரத்தைப் போலிருப்பதுடன் அது கொண்டு சரீரம் இரட்டித்து போகிறதில்லை. அது நீங்கினவேளை சரீரம் குறைந்து போகிறது இல்லை. ஓர் குத்து உப்பும், ஓர் குத்து அப்பும் சேர்ந்து ஓர் குத்தாகவே இருப்பதுபோல் என்று அனேக அனேக அத்தாட்சிகள் தேடி றூஹென்று ஒன்று உண்டாகியே இருக்கிறதென்று வைப்பதுபோல் ஈமானுடைய ஆறு காரியத்திலும் கல்புடைய ஆழத்தால் யோசித்து உண்மை கொள்கிறது. இதுதான் இல்மைத் தொட்டும் உண்டாகிற அத்தாட்சிக் கொண்டு ஈமான் கொள்பவருடைய ஈமான்.

அப்பால் றூஹென்பதை ஓர் ரூபமாய்க் கண்டு கொள்வதுதான். கண்காட்சியைத் தொட்டும் உண்டாகிற தெரிசனையுடைவர்களுடைய ஈமான். அப்பால் றூஹைப் பிரத்தியட்சமாய்க் கண்டிருப்பதுடன் அதனுடைய இரகசியம் இன்னதென்று தெரிந்துக் கொள்வதுதான் நிச்சயத்தைத் தொட்டும் உண்டாகிற ஆரிபூன்களுடைய ஈமான். அப்பால் இரகசியத்துக்கும்

ரகசியமானதுதான் எப்போதும் ஹலறத்தில் தரிபட்டிருக்கிற வாக்கிபூன்களுடைய ஈமானாக இருக்கும்.

இன்னமும் இந்த ஐந்து வகை ஈமானிலும் முதலாவதுக்கு ஈமானுன் கல்பிய்யி என்றும், இரண்டாவதுக்கு ஈமானுன் ஸிர்ரிய்யி என்றும், மூன்றாவதுக்கு ஈமானுன் றூஹிய்யி என்றும் நான்காவதுக்கு ஈமானுன் ஸிர்ரிறூஹிய்யி என்றும், ஐந்தாவதுக்கு ஈமானுன் ஸிர்ருஸ் ஸிர்ரிய்யி என்றும் சொல்லப்படும்.

இந்த ஐந்து வகை ஈமானையும் (பல்) வெளியாக்கி வைக்க ஆரிபூன்களுக்கு பில்லாஹி வமலாயிக்கத்திஹி வகுத்பிஹி வறுஸ்லிஹி வல்யவ்மில் ஆகிரிவல்கத்தி கைரிஹி வஷர்ரிஹி மினல்லாஹி தஆலா என்ற சொல் பொதிந்ததாயிருக்கும். அதன் மஃனாவாகிறது பராபரஸ்துவாகிய அல்லாஹ்வைக் கொண்டும், அவனுடைய மலக்குகள் என்னும் தேவாதிகளைக் கொண்டும் அவனுடைய தூதர்களைக் கொண்டும், ஒடுக்கத்து நாளைக் கொண்டும் கட்டளையில் நலவானதும் இடரானதும் மேலாம்பரமாகிய பராபர வஸ்துவில் நின்றுமுள்ளது என்கிறது கொண்டும் உண்மை கொண்டேன் என்றதாயிருக்கும்.

ஆறு காரியத்தையும் சுட்டிக் காட்டிய இந்தச் சொல்லுக்குள் பொதிந்திருக்கிற பொருளை விளங்கி களங்கமறக் கண்டு தேறித் தெளிய வேண்டித்தான் அன்பியாக்கள் முதல் அவ்லியாக்கள் உலமாக்கள் அவாமு கவாஸ்ஸு சகலரும் ஹிம்மத்து வைக்கிறார்கள்.

எனது பிரார்த்தனை நீண்ட காலம் நீ மருட்டுதலுடன் கேட்டிருக்கிற அறிவுகளை ஹபாஅன் மன்தூரா என்னும் பரத்தப்பட்ட புழுதியாக எடுத்தெறிந்து போட்டு மதிமயங்கி மாய்கையாகிய துன்யா மயக்கத்தில் மஸ்தாகி விழுந்து கிடந்த உன்னுடைய முகத்தை உயர்த்தி இதோ ஏகமாய் எரிக்கும் சோதிப் பிரகாசத்தளவில் கூர்ந்து பார்த்து உன்னுடைய அகப்பார்வைத் திறந்தாயாகில், நீ இழந்திருக்கிற நஷ்டத்;துக்கு இந்த லோகத்தில் எதைப் பெற்றிருந்தாலும் நீ இரத்தமாய் அழக் கடமையாக இருக்கும்.

முதலாவது நம்முடைய தகப்பனார் ஆதம் ஸபியுல்லாஹ் எந்த நேரமும் அவர்கள் தங்களை பயந்து அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க ஈமானன் யுபாஷிறுகல்பீ, -நாயனே! உன்னிடத்தில் என்னுடைய கல்பைச் சேர்ந்திருக்குமே அப்படிக்கொற்ற ஈமானைக் கேட்கிறேன் என்று கேட்கிறவர்களாய் இருந்தார்கள்.

உலகத்தில் பலவிதமான மாய்கைகள் அதிகமாக முதலே ஸபிய்யுல்லாவுடைய மகன் காபீல் தன்னுடைய கல்பில் மாய்கையுண்டாயிருப்பதை அறியாமல் தக்குவா இல்லாமல் குர்பான் செய்தபடியால் அவனுடைய குர்பானை ஒப்புக் கொள்ளப்படாமல் தீர்மானம் காபிறாகி விட்டதை ஆராய்ந்து பார்.

ஆனால் நீ எண்ணுகிறாயோ காபீல் மடையன் ஆனபடியால் துன்யாவைக் கொண்டு மருண்டு தக்குவாவை இழந்தபடியால் காபிறானான். நாம் புத்திசாலியாகையால் மருட்டுதல் வரும்வழி

தெரிந்து இருக்கிறோம். ஆனதால் தக்குவாவை விட்டு நீங்கமாட்டோம் என்று எண்ணுகிறாய். காரியம் உன்னுடைய எண்ணம் போல் இல்லை.

பிற்பாடு ஈமானுடைய காரியங்களை குர்ஆன் ஹதீதுடைய அத்தாட்சிக் கொண்டு விபரிக்கும் இடத்தில் உன்னை மூமினென்று நீ எண்ணிக் கொள்வதைப் பார்க்கிலும் மகா பாதகம் ஒன்றுமேயில்லை என்றறிவாய். ஆனால், ஈமானுடைய பாரதூரத்தையும் தீர்மானத்தையும் கண்டுத் தேறினவர்கள் அன்பியாக்களைத் தவிர மற்ற யாரும் இல்லை. அதைப் பற்றிய பயங்கரத்தின் தீர்மானத்தையும் அவர்கள்தான் எட்டினவர்கள்.

யாராகிலும் ஒருவர் எவ்வளவுமட்டில் அதன்பேரில் பயங்கரத்தை மிகுதமாக்கினார்களோ அவ்வளவுமட்டில் அன்பியாக்களுக்கு முடுகினபேர்கள். ஈசா அலைஹிஸ்ஸலாம் ஹவாரிய்யூன்களை நோக்கி, *நஹ்னு மஆஷிருல் அன்பியாவு னகாபுல் குப்ற வஅன்தும் தகாபூனல் மஃஸியத்த-* நீங்கள் அல்லாஹ்வுக்கு மாறு செய்வதை பயப்படுவீர்கள். அன்பியாக்களாகிய நாங்கள் குப்றைப் பயப்படுவோம் என்றுச் சொன்னார்கள். விவேகமுடையவனுக்கு இந்த ஒரு சொல் போதும். இதில் நன்றாக கருத்தைச் செலுத்தி ஆராய்ந்து பார்.

இப்றாஹீமும் இஸ்மாயீலும் *றப்பனா வஜ்அல்னா முஸ்லிமைனிலக்க* - எங்களுடைய நாயனே! எங்களை உனக்கு வழிப்பட்டவர்களாக ஆக்கிவிடு என்றும், யூசுபு நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் *தவப்பனீ முஸ்லிமா* - முஸ்லிமாக என்னை மவ்த்தாக்கிவிடு என்றும்,

இன்னும் அன்பியாக்கள் அவ்லியாக்கள் சகலரும் இந்தஒரு காரியத்தின்பேரில் பயந்திருப்பதும் உலமாக்களில் எத்தனையோ போர்கள் ஈமானை இழந்திருப்பதும் *வத்லு அலைஹிம் னபஅல்லதீ* என்ற ஆயத்தில் சொல்லிக்காட்டப்பட்டிருக்கிற பல் ஆமிப்னு பாவூரா என்பவன் ஈமானை எப்படி இழந்தான் என்று பார்.

முதலாவது காபீல் ரஸூலுடைய மகனாக இருப்பதுடன் அல்லாஹ்வுக்கு குர்பான் கொடுப்பதென்னும் ஓர் இபாதத்தை தக்குவா இல்லாமல் செய்த சங்கதியால் காபிறாகி விட்டான். நூஹு அலைஹிஸ்ஸலாமுடைய மகன் கன்ஆனும் இன்னமும் அவர்களுடைய பெண்சாதியும் லூத்து அலைஹிஸ்ஸலாமுடைய பெண்சாதியும் எப்படி காபிறானார்கள்?

இன்னமும் நபியுல்லாஹ்வுடைய பெண்சாதிகளில் சிலரும் அவர்களுக்கு குர்ஆனுடைய வஹ்யி வருவதை எப்போதும் எழுதிக் கொண்டிருந்த ஒருவரும் இன்னமும் நபியுல்லாஹ்வுடைய கைதொட்டே ஈமான் கொண்டவர்களில் எத்தனையோ பேர்களும் எவ்விதம் ஈமான் இழந்தார்கள்?

இன்னமும் அஸ்ஹாபிகள் என்று வெளிரங்கத்தில் பேர்பெற்றவர்களில் எத்தனையோ பேர்கள் வெளிரங்கத்தில் இஸ்லாமிலேயே மௌத்தாகியிருப்பதால் மற்ற அஸ்ஹாபிகள் எல்லோரும் அவர்களையேகக் கூட்டமாய் ஜனாஸா தொழுவித்தடக்கப்ப பார்த்திருந்த ஹுதைபா

ரலியல்லாஹு அன்ஹு அந்த மய்யித்து ஈமான் நீங்கி மவ்த்தாகி இருப்பதைக் கண்டு தெளிந்தவர்கள் ஆகையால் தாங்கள் அந்த ஜனாஸாவின்மீது தொழுவிக்காமல் நீங்கிக் கொண்டதையும் ஆராய்ந்து பார்.

காரியம் இப்படியிருக்க இஸ்லாம் இன்னதென தெரியாத உன்னுடைய தாய் தகப்பன்மார்களால் அல்லது வெள்ளைத்தாளில் கருப்பு மை கொண்டு கீறியிருந்த *ஆமந்து பில்லாஹி* என்ற சொல்லை வாயால் முணுமுணுத்துச் சொல்வதால் ஈமானை உண்டாக்கிக் கொண்டு மூமின் என்ற பேரை ஏற்றுக் கொள்ள நாடுகிறாயோ,( *இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்*)

ஆஹ்! கைசேதமே! நாம் உள்விளங்கிப் பாராமல் மயங்கினதால் இந்த தீராண்மை நமக்கு வந்ததோ அல்லது இந்த காலத்திலுள்ள கல்விவான்கள் என்ற கள்ளர்கள் நமக்கு மூமின் என்ற நாமோதயத்தை இட்டு அழைப்பதால் கர்வம் கொண்டு கெட்டலைகிறோமோ தெரியவில்லை.

அடப்பாவி சூரத்துல் அன்க்கபூத்து போல் உள்ளதை ஓதிப்பார். *அலிபு, லாம், மீம் அஹஸிபன்னாக அன்யுத்ரகூ அன்ய கூலூஆமன்னா வஹும் லாயுப்த்தனூன் வலகத் பதன்னல்லதீனமின் கப்லிஹிம் பலயஃல மன்னல்லாஹுல்லதீன ஸத்த கூவலயஃல மன்னல் காதிபீன்* - மனிதர்கள் நாங்கள் ஈமான் கொண்டோமென்று அவர்கள் சொல்வதால் அவர்களை சும்மா விடப்படும் என்று எண்ணி இருக்கிறார்களோ, அப்படியவர்கள் எண்ண வேண்டாம். அவர்களுக்கு முன்னுள்ளவர்களை நிச்சயமாக சோதித்தோம். ஆனதால் உண்மையாளர்களையும் திட்டவட்டமாய் அல்லாஹ் அறிவான். பொய்யர்களையும் திட்டவட்டமாக அறிவான்.

*அம்ஹஸிப்த்தும் அன்த்தத் குலுல் ஜன்னத்த வலம்மாயஃல மில்லா ஹுல்லதீன ஜாஹது மின்கும் வயஃல மஸ்ஸாபிரீன்* - சொர்க்கலோகத்தில் நீங்கள் புகுதுவதை எண்ணியிருக்கிறீர்களோ? உங்களில் நின்றும் சப்று செய்தவர்களாய்ப் போர்ச் செய்தவர்களை அறிவதுடன் அல்லாஹ் அறியாதிருக்க ஐ வெளிரங்கத்தில் குப்பாறுகளோடும், உள்ரங்கத்தில் நப்சோடும் போர்ச் செய்வதால் வரும் துன்பங்களுக்கு சப்று செய்து தெண்டிக்காமல் சொர்க்கலோகத்தில் புகுதுறதை நீங்கள் எண்ணவேண்டாம்.

*அம் ஹஸிப்த்தும் அன்த்தத் குலுல்ஜன்னத்த வலம்மா யவுத்திகும் மதலுல்லதீன கலவ்மின் கப்லிக்கும்* - உங்களுக்கு முன் ஒழிந்து போய்விட்டார்களே அப்படிப்பட்டவர்களில் நடந்தவிதம் உங்களுக்கும் வராமல் சொர்க்கலோகத்தில் நீங்கள் புகுதுவதை எண்ணியிருக்கிறீர்களோ, *மஸ்ஸத் ஹுமுல் பவுசாவு வல்லர்றாவு* - அவர்களுக்கு தங்கடங்களும் தரித்திரங்களும் தொட்டுவது *வஸுல்ஸிலூ ஹத்தாயகூலர் றஸூலு வல்லதீன ஆமனூ மஅஹுமத்தானஸ்ருல்லாஹி அலா இன்ன னஸ்றல்லாஹி கரீபு* - றசூலும், றசூலுடனே ஈமான் கொண்டவர்களும், அல்லாஹ்வுடைய உதவி எப்ப வரும்? என்று கேட்கிறவரையிலும் அல்லாஹ்வுடைய உதவி முடுகுதலாக இருக்குமென்று றசூல் சொல்கிறவரையிலும் அவர்களை அழைக்கப்பட்டது.

ஆனால், மனிதர்களில ஈமான் கொள்பவர் சுருக்கமேயல்லாது வேறில்லை. ஏனென்றால் *வமா அக்தருன்னாசி வலவ்ஹறஸ்த்த பிமூமினீன்* - முகம்மதே! நீர் எவ்வளவு ஆவலாயிருந்தாலும் மனிதர்களில் மெத்த மிகுதமானவர்களும் ஈமான் கொள்கிறவர்களில்லை.

*வமாயுவுமினு அக்தறுஹும் பில்லாஹி இல்லாவஹும் முஷ்ரிக்கூன்* - இன்னும் அவர்களிலும் மெத்த மிகுத்தவர்களும் அல்லாஹ்வைக் கொண்டு இணைவைத்தவர்களாகயிருக்கும் ஹாலிலே ஒழிய ஈமான் கொள்ளவில்லை. ஆனால் இந்த ஆயத்தில் மிகுத்தவர்கள் என்ற மஃனா உள்ள கதீரென்ற லப்ளைச் சொல்லாமல் அக்தரென்னும் மிகத்ததிலும் அதிகமாய் மிகுதமென்ற மஃனாவைக் கொண்ட லப்ளை வைத்து அல்லாஹ் தஆலா சொல்லியிருப்பதால், இந்த ஆயத்துபோல் உள்ளது அணுவளவாவது ஈமானுடையர்களுடைய இருதயத்தில் இடிவிழுந்த மாதிரியாக இருக்குமல்லாது வேறில்லை.

தவிரவும் சில காலத்துக்கு முன் சாலிஹுன்களில் ஒருவர் நபியுல்லாஹ்வை மனாமில் கண்டதில் அதிகக் கவனமாயிருப்பதைப் பார்த்துக் கவனமே என்றதற்கு என்னுடைய உம்மத்துகளில் இப்போது சொர்ப்பநாளையில் ஏழு இலட்சம் பேர் மவ்த்தாவதில் ஆறுபேரைத் தவிர மற்றவர்கள் காபிறாய் செத்தபடியால் எப்படி நான் சலிக்காதிருப்பேன் என்று சொன்னதாய் தெரிவித்த மனாமை இந்த ஆயத்துபோல் கொற்றதுடைய விளக்கம் உண்மையாக்கி வைக்கிறது.

இன்னும் மஜ்தூபாக இருந்த நம்முடைய மாமனார் ஒருபோது ஒருவர்ச் சில காரியத்தைப் பற்றி அவர்களிடம் கேட்டத்தில் இந்த சமானில் ஈமானுடையவர்கள் அறவேயில்லை, அறவேயில்லை, அறவே கிடையாதென்று நாலாறு முறை மடக்கி மடக்கிச் சொல்லியிருக்கிறாhக்ள்.

ஆனால் *அன்னாத்திறு கல்மஃதூம்* சுருக்கமானது அறவேயில்லாத்ததுபோல என்று ஹதீதிருப்பதால் சுருக்கமானதை அவர்கள் அறவே யில்லாத்தது என்று சொன்னார்கள் என்று கியாஸு வைக்க வேண்டியதிருக்கிறது.

ஆனால், ஈமானுடைய விசயத்தில் மனிதர்கள் பொடுபோக்காக இருப்பதில் அதிகமாய் விபரிக்க வேண்டியதில்லை. ஏனென்றால், மனிதர்களுக்கிடையில் வீண் தர்க்கங்களும், ஆகங்களும் பெருத்து அதுவே அவர்களிடத்தில் இல்மாக ஆகிவிட்டது. அணுவளவாவது ஈமானிருந்தால்தான் அதைக் கெட்டியாக்குவதளவில் அழைக்கும் அவர்கள் முன்னோக்காதிருப்பதே அவர்களுடைய ஹாலிருக்கிற விதத்தை அறிவிக்கிறதாக இருக்கிறது.

ஆனால் தாய், தகப்பன்மார்கள் தண்டித் தோழர்கள் கிளை கோத்திரத்தார் சொன்னதைப் பார்த்து ஆமன்துபில்லாஹி என்று கடைசிவரை பாடமாக்கிச் சொன்னதுபோதுமென்று வருமானால், அல்லாஹ்வுடைய சொல் வீணாகிவிடும். வல்யியாத பில்லாஹி - அல்லாஹ்வைக் கொண்டு கார்மானம் தேடுகிறேன்.

ஏனென்றால், *யாஅய்யுஹல்லதீன ஆமனூ* - ஈமான் கொண்டவர்களே அல்லது தக்குலீதாகிய ஈமான் கொண்டவர்களே! *ஆமினூ பில்லாஹி வறதூலிஹி வல் கித்தாபில்லரீ னுஸ்ஸில அலா றதூலிஹி வல் கித்தாபில்லதீ உன்ஸிலமின் கப்லு* - அல்லாஹ்வைக் கொண்டும் அவனுடைய ரசூலைக் கொண்டும் அவனுடைய ரசூலின் பேரில் இறக்கப்பட்ட வேதத்தைக் கொண்டும் அதற்கு முற்பட இறக்கப்பட்ட வேதத்தைக் கொண்டும் தஹ்கீகாகிய்ய ஈமானாக ஈமான் கொள்ளுங்கள்.அல்லது இல்மிய்யாகிய ஈமானாக ஈமான் கொண்டவர்களே கண்காட்சியாக ஈமான்கொண்டு ஈமான் கொள்ளுங்கள் என்று அல்லாஹுத்தஆலா திருவுளமாயிருக்கிறான்.

ஈமான் கொண்டவர்கள் சகலரையும் தஹ்கீக் என்னும் நிச்சயமான ஈமான் கொண்டும், யிய்யானிய்யி என்னும் கண் காட்சியாகிய ஈமான் கொண்டும் ஈமான் கொள்ளும்படி குர்ஆனில் ஏவப்பட்டிருக்க அதனளவில் கவனித்துப் பாராமல் குர்ஆனில் ஏவப்பட்டபடி உண்மை கொண்டு தொழுகை முதலாகிய நல்அமலைக் கொண்டு வருவதுடன் இதுபோல் உள்ளவைகளை கவனியாதிருப்பவர்களை பார்த்து *அபதுவுமினூன பிப:லில் கித்தாபி வதக்புறூன பிப:லின்* - வேதத்தில் சிலதைக் கொண்டு ஈமான் கொண்டுச் சிலதைக் கொண்டு காபிறாக ஆகுகிறார்களோ என்று சொல்லப்படும்.

அவர்களுடைய லிஸானுல் ஹாலென்னும் கொள்கை நாவானது *நுவுமினுபி ப:லின் வனக் புறுபி ப:லின்* - சிலதைக் கொண்டு ஈமான் கொள்வோம். சிலதைக் கொண்டு காபிறாக இருப்போம் என்று ஜவாபு சொல்கிறதாக இருக்கும். ஆனால் தக்குலித்திய்யாகிய ஈமானாக ஈமான் கொண்ட அவாமுகளும் அல்லது இன்ன ஒருவருக்கு ஈமானுடைய வகை இவ்விதமென்று சொல்லிக் காட்டுகிற உலமாக்கள் என்று பேர் பெற்றவர்களில் மிகுந்தவர்களும் தங்களுக்கு ஈமானுடைய வகை விபரமின்னதென்று தெரியாதிருப்பதுடன் தாங்கள் ஈமானுடைய ஹக்கீகத்து இன்னதென்றுக் கண்டுத் தேறித் தெளிந்தவர்களைப் போல் தங்களை எண்ணிக் கொள்கிறார்கள்.

*மால ஹும்பிஹி மின் இல்மின் இன்யத்தபி ஊன இல்லல்லன்ன* - அவர்களுக்கு அதுகொண்டு அறிவில்லை. எண்ணத்தையே ஒழிய அவர்கள் தொடரவில்லை. *தாலிக்க மப்லவுஹும் மினல் இல்மி* - அதுதான் அறிவில் நின்றும் அவர்கள் எட்டினது.

ஆனால் ஈமானுடைய பாரதூரத்திலும் மூமினுடைய வலுப்பத்திலும் வந்திருக்கிற ஆயத்துகளையும் ஹதீதுகளையும் அவ்லியாக்களுடைய சொல்களையும் நீ கேட்டாயாகில் அதனுடைய வலுப்பத்தையும் நீ தெரிவதுடன் மூமின் என்று இன்னாரைச் சொல்லலாம் சொல்லப்படாது உன்னில் ஈமானுண்டாகியிருக்கிறது, இல்லை என்பதை அறிவாய்.

முதலாவது குர்ஆனில் ஒரு முகம் ஹக்காயும், ஒரு முகம் ஹல்காயும் வெளியாகிய நாயகத்தை எதுப்பாக்கிச் சொல்லுகிறான். *வக்கதாலிக்க அவ்ஹைனா இலைக்க றூஹன் மின் அம்ரினா மாகுன்த தத்ரீ மல் கித்தாபு வலல் ஈமானு வலாக்கின் ஜஅல்னாஹு நூறன் னஹ்தீபிஹி மன்னஷாவு மின் யிபாதினா வஇன்னக்க லதஹ்தீ இலாஸிறாத்தின் முஸ்த்தகீம்*

- அப்படிப்போலே அல்லது வஹிகொண்டு அல்லது திரைக்கு அப்பாலிருந்து அல்லது தூதனுப்பி நாம் நாடியவர்களோடு பேசிக் கொள்வதுபோல் முகம்மதே! உம்மளவில் நம்முடைய அம்றுடைய ஆலத்தில் நின்றும் சகல ஜீவாத்மாக்களுக்கும் அசலாகிய றூறை உதிக்கச் செய்தோம்.

முற்பட நீர் வேதமென்னும் அந்த பொக்கிஷம் இன்னது அந்த ஈமான் என்னும் உண்மை இன்னதென்று அறிந்திருக்கவில்லை. ஆகிலும் அந்த றூஹை நாம் ஏகமாய் எரிக்கும் சோதிப்பிரகாசமாக ஆக்கியிருக்கிறோம். நம்முடைய அடியார்களில் நின்றும் நாம் நாடியவர்களை அதுகொண்டு நேர்வழிகாட்டுவோம். ஆனால் உமக்கு ஈமான் இன்னின்னது வேதமின்னது என்று நாம் அறிவித்து தந்துவிட்டபடியால் உண்மையாய் கெட்டியாய் நீரும் செவ்வுற்ற பாதையளவில் நேர்வழிகாட்டுவீர்.

இந்த ஒரு ஆயத்தையும் ஆராய்ந்து பார். *இன்னக்க லாதஹ்தீ மன்அஹ்பப்த்த* - நீர் உகந்த பேர்களை நேர்காட்டமாட்டீரென்று வேறே ஆயத்தில் வருவது இதற்கு விரோதிக்காது. ஏனென்றால், அவன் ஆதியில் அந்த ஈமானைப் பெற்றுக் கொள்ள தங்கரீகம் தேடி வராதிருப்பதால் அதைப் பெற்றுக் கொள்வதற்குள்ள தெண்டிப்பும், தெண்டிக்காதிருக்க வெளிப் புழக்கத்தால் நீர் உவந்து கொண்டு அவன் நேர்வழியில் ஆகவும் மாட்டான். நீர் காட்டவும் மாட்டீர் என்று நாடப்பட்டதாக இருக்கும்.

தெண்டிப்பில்லாமல் ஈமானுடைய அந்தரங்கத்தை யாராவது பெற்றுக் கொள்ள கூடுமாயிருந்தால் நபி நாயகம் ஹிரா மலையில் போய்த் தனித்து கல்வத்திருக்க வேண்டியதில்லை. அன்பியாக்கள் முர்ஸலானவர்கள் சகலரும் அப்படியே தெண்டித்திருக்கிறார்கள். அதற்குப் பிற்பாடுதான் அவர்களுக்கு நுபுவ்வத்தைக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்தச் சொல்லைக் கொண்டு நுபுவ்வத்து தெண்டித்து எடுக்கப்பட்டதென்று விளங்காதே. பிற்பாடு விபரிக்கப்படும். ஈமான் எவ்வளவுமட்டில் மூர்க்கமாய் இருந்ததோ அவ்வளவு மட்டில் பயங்கரமும் தன்னை தூஷணிப்பாகக் காண வேண்டியதுவரும்.

நபி நாயகம் அன்பியாக்களைத் தவிர ஆலத்தார் சகலருடைய ஈமானையும் அபூபக்கருடைய ஈமானையும் சீர் தூக்கப்பட்டால் அபூபக்கருடைய ஈமான் முறுகிவிடுமென்று சொல்லி இருக்கிறார்கள். அதெப்படியானால், சந்திரனில்லாத வேளை சகல நட்சத்திரங்களும் கூடி அதுகளும் ஒளிவுடையதாயிருக்க சந்திரனுடைய பிரபையைக் கொடாது. அபூபக்கருடைய ஈமான் சந்திரனைப் போலும், மற்றவர்களுடைய ஈமான் மற்ற நட்சத்திரங்களைப் போலும், அன்பியாக்களுடைய ஈமான் கோடி சூரியன் போலுமாயிருக்கும்.

அப்பேர்பட்ட அபூபக்கறு நான் இந்த ஜென்மமெடுத்ததைப் பார்க்க கானகத்திலுள்ள ஒரு மரமாக இருந்து என்னை ஒடித்து மிருகங்களாவது தின்றுபோட வேண்டாமா என்று சொல்லி இருக்கிறார்கள்.

ஆனால் ஈமானைப் பற்றிய பயங்கரத்தால் அல்லாஹ்வைப் பயந்து மவ்த்தாகிவிட்டவர்கள் கோடானு கோடி சிலதுகளை கவ்புடைய பாடத்தில் விபரிக்கப்படும். ஆனால், ஈமானைப் பற்றிய பயங்கரமும் அந்த இல்மும் சஹாபாக்களுடைய நாளைக்குப் பின் *கைய்பாகி* - மறைவாகிவிட்டதில் கோடானுகோடியிலும் கொஞ்சத்தையே தவிர தரிபடவில்லை.

ஆகையால், நான் சொல்வதை தூரமாகக் காணாதே. மூமினுடைய கல்பாகிறது அர்ஷைக் காண விஸ்தீரமானதென்றும், மூமினுடைய சங்கை க.்பாவுடைய சங்கையைக் காண ஏற்றமானது என்றும் நாம் கேள்வியாகி இருப்பதில் கின்ஸீரைப் பார்க்கிலும் கேடு கெட்டத் தோஷியாகிய நானும் மூமின் என்றுதான் சொல்கிறேன். அப்படிக்கொற்ற என்னை என்போல் உள்ளவர்களை க.்பாவைக்காண சங்கையாகவும் அர்ஷைக் காண விஸ்தீரணமாகிய கல்பையுடையவன் என்று எண்ணுகிறாயோ அல்லது உன்னை உன்போல்கொற்றவர்களை எண்ணுகிறாயோ.

ஆகையால் நாசமாகிய பழைய கருத்துக்களை விட்டுவிடுவோம். ஆனாலும் உறுதிப்பாட்டுக்காக கண்ணீரை வடித்து அசுத்தம் பேக்கிச் சொல்வதைக் காதாரக்கேட்டு கல்பில் எடுத்துக் கதிபெற தெண்டிக்கவும். நீயும் எனக்கு உதவியாக இருக்க வேண்டுமென்று உன்னை மன்றாடுகிறேன்.

ஒரு போதையில் மனோகரப்படி மொழியாத மன்னரான நமதாண்டவர்கள் முகம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இடத்தில் அல்லாஹுத்தஆலா எங்கே இருக்கிறான்? பூலோகத்திலா அல்லது வானலோகத்திலா என்று கேட்கப்பட்டபோது, மூமினாகிய அவனுடைய அடியார்களுடைய கல்பில் என்றார்கள். ( துறந்தவரித யாசனத்திருந்தவனை என்றதில் மூமினென்றதற்கு என்ன பொருள் வைத்திருக்கிறார்கள் என்று பார்)

ஹதீது குத்ஸியில் வானலோகம் பூலோகம் முதலாகிய ஒன்றும் எனக்கு விஸ்தீரணம் கொடுக்கவில்லை. ஒடுங்குதலுடைய மெல்லினம் பூண்ட மூமினாகிய என்னுடைய அடிமையுடைய கல்பு எனக்கு விஸ்தீரனம் கொடுத்தது என்று அல்லாஹுத்தஆலா திருவுளமானான். ஆனால், நம்முடைய மருட்டுதலைப் பற்றி யோசித்துப் பார்க்க நமக்குத் தெரிந்ததையும் கொஞ்சமெங்கிலும் நாம் யோசித்துப் பாராதிருந்தபடியால் கெட்டலைந்து சாக முடுகிறோம்.

ஏனென்றால், தொப்பி போட்டு, தாடி வைத்து சுன்னத்தும் செய்யப்பட்டவனை எல்லாம் மூமின் என்றும் இதுகளுடன் ஒரு பேட்டாவும் கட்டிச் சட்டை போட்டு கையில் ஒரு தஸ்பீஹ் பிடித்து நாலுபத்து கிதாபை சுமந்து வருகிறவர்களை உலமாக்கள் என்றும் மூமினுடைய சங்கைக்கு மேல் சொல்லப்பட்ட ஹதீதுகளையும் உலமாக்களுடைய சங்கைக்கு *உலமாஉ உம்மத்தீ கஅன்பியாயி பனீ இஸ்றாயீல்* - என்னுடைய உம்மத்திலுள்ள உலமாக்கள், பனீ இஸ்றாயீலிலுள்ள நபியைப் போலென்றும் முகம்பிடிக்கிறோம். நானும் இவ்வளவுமட்டில் சொல்வதில் என்னையும் அவர்களோடு சேர்த்துக் கொள்கிறேன்.

ஆஹ்! கைசேதமே நம்முடைய மடமைக்கு என்னதான் சொல்வேன். மேற்படி கோலங்களைக் கொண்டு கூறிய சங்கைக்கு உரித்தாக இருக்கிறதானால் அது அல்லாஹ்வும் ரஸூலும்

சொன்ன மார்க்கமில்லை. நாம் ஏற்படுத்திக் கொண்ட மார்க்கமே அல்லாது வேறில்லை. ஆனால் பின் விபரிப்பதால் அறிவாய்.

ஆகிலும் உமர் வலியுல்லாஹில் காஹிரி அவர்கள் சொல்லியிருப்பதைப் பார்.

***பொல்லாப் பொழியும் புலனும் கரணமும் போக்கி ஜமாலை ஷுஹூது செய்யாதவர் எல்லா கிதாபும் எழுத்தறிவும் ஓதினும் எரிநரகிற் சென்று வீழ்வரது நிஜம்.***

அபுல் அப்பாஸில் முர்ஸிய்யி ரலியல்லாஹு அன்ஹு சொல்கிறார்கள்: அல்லாஹ்வுக்கு மாறு செய்கிற மூமினுடைய ஒளிவைத்தொட்டு மூடலை வெளியாக்கப்பட்டதானால் அந்த ஒளிவானது வானலோகம் பூலோகத்துக்கிடையிலுள்ளது சகலதையும் இடைவிடாமல் நிரப்பிப்போடும். அப்படியானால் அல்லாஹ்வுக்கு வழிப்பட்டவனுடைய ஒளிவுடைய பாரதூரத்தைக் கொண்டு நீ என்ன எண்ணுகிறாய் என்றும்,

இன்னமும் ஒரு வலியுடைய அந்தரங்கத்தைத் தொட்டு மூடலை வெளியாக்கப்பட்டதானால் அவரை உலகத்தில் சகலரும் வணங்குவார்கள் என்றும் இன்னமும் நாற்பதுவருடக் காலமாய் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விட்டு என்னைத் தடுக்கப்பட வில்லை. கண்மூடி முழிக்கும் நேரம் அவர்களை விட்டு எனக்குத் திரை போடப்பட்டால் என்னை முஸ்லிம் என்று எண்ணமாட்டேன் என்றார்கள்.

ஆனால், இப்படி நீளமாக நான் பேசுவதில் உனக்குக் கதையாகத் தோற்றும். ஏனென்றால் நீண்டகாலம் நாம் கேட்டும் விளங்கியும் இருப்பதற்கு அனேகமும் விரோதமாக இருப்பதால். ஆகையால் உனக்கு ஈமானுடைய பணர்கள் இவ்வளவுஎன்று அதன் விபரங்களை சுருக்கமாக காட்டினால் அல்லாது தெளிவாக விளங்கமாட்டாது. மூமின் என்ற பேரும் உலமாக்கள் என்ற பேரும் ஏற்றவர்கள் உலகமுழுவதும் நிரம்பியிருப்பது உன்னை மருட்டிப் போட வேண்டாம்.

இதற்காகத்தான் *மன்அறபல் ஹக்கபிர்ரிஜாலி தாஹபீ மத்தா ஹாத்தில்லலாலி ப:ரிபில் ஹக்க த:ரிபு அஹ்லஹு* - யாராகிலும் ஒருவன் மனிதர்களுடைய நடைபிடியைப் பார்க்கிறது கொண்டு ஹக்கான காரியத்தை அறிவானேயானால் வழிகேடென்னும் தட்டளிவில் தட்டளிந்து கிடப்பான். ஆகையால் ஹக்கான காரியம் இன்னதென்று அறிந்து கொள். அறிந்து கொண்டாயானால் ஹக்கான காரியத்தின்படி நடக்கிறவர்களையும் அதற்குப் பாத்திரமானவர்களும் இன்னாரென்று அறிவாயென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதன்கருத்தென்னவானால் ஆகிறத்தளவிலாவது துன்யாவளவிலாது சேர்க்கப்பட்ட எந்த காரியமானாலும் அந்த காரியத்தின் தீர்மானம் இன்னதென்று களங்கமறத் தெரிந்து கொண்டால்தான் அதன்படி நடப்பவர்கள் இன்னார் என்று தெரிந்து கொள்ளக்கூடும். அதுபோல் ஈமான் என்பது இன்னதென்று தெரிந்தால்தான் மூமின் இன்னாறென்றும் ஆலிம் இன்னாறென்றும் தெரியலாம்.

அப்படித் தெரியாமல் இவர் மூமினானவர் என்றும் ஆலிமானவர் என்றும் உலகத்தில் எவ்வளவும் ஆராய்வில்லாதவர்கள் சொல்வதைக் கேட்டு அதுவே அறிவாக இருக்குமானால் அவன் வழிகேட்டிலும் தட்டளிவிலும் இருப்பார்கள் என்றதாயிருக்கும்.

## فصل في شعب الايمان

### பஸ்லுன் பீ ஷு஼பில் ஈமான்

ஈமானுடைய பணர்களில் ஒரு பிரிவாகயிருக்கும். ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்: *அல்ஈமானுபில்வுன் வஸப்ஊன ஷு஼பதன் பஅப்லலுஹா கவ்லு லாஇலாஹ இல்லல்லாஹு வஅத்னாஹா இமாத்ததுல் அதாமினத்தரீக்கி வல்ஹயாவு ஷு஼பதுன் மினல் ஈமானி* - ஈமானாகிறது பணரால் எழுபது சொச்சம் பணறாக இருக்கும். அதுகளில் மிகவும் வருசையானது **லாஇலாஹ இல்லல்லாஹு** என்ற சொல்லாயிருக்கும். அவைளில் தாழ்ந்ததாகிறது நடக்குற பாதையில் நின்றும் நோவினையை நீக்குகிறதாக இருக்கும். வெட்கமாகிறது ஈமானில் நின்றும் ஓர் பணராக இருக்கும் என்றார்கள்.

ஆனால் சொச்சமென்பது எவ்வளவு என்பதில் உலமாக்கள், இக்திலாபானார்கள். அப்துல்லாஹில் இஞ்ஜிய்யி என்பவர்கள் ஏழு என்றார்கள். அஷ்ஷெய்குல் அக்பர் முஹ்யித்தீனுல் அரபி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் எட்டென்றும் அதற்கு அநேக அத்தாட்சிகளும் சொல்வதுடன் குர்ஆனில் இருபத்தொன்பது சூறத்துடைய துவக்கத்தில் ஹர்புகளாக வருகிற எழுபத்து எட்டு ஹர்பில் ஒவ்வொரு ஹர்பெல்லாம் ஈமானுடைய ஒரு பணரென்றும் இந்த ஹர்புகளுடைய அந்தரங்கங்களை அறிந்த அடிமையே அல்லாது ஈமானுடைய அஸ்றாருகளை நிறப்பமாக ஏற்றிக் கொள்ளமாட்டார்கள் என்றும் சொல்கிறார்கள். அந்த ஹர்புகளாகிறது:

**الم الم المص الر الر الر المر الر الر كهيعص طه طسم طس طسم الم الم الم الم يس ص حم حم حم حمعسق حم حم حم حم ق ن**

(அலிபு – லாம் - மீம்) ஆக இருபத்தொன்பது ஸூறத்திலுள்ள எழுபத்தி எட்டு ஹர்பில் மடங்கி மடங்கி வந்தபோதிலும் ஒக்கும் எல்லா ஒவ்வொரு ஹர்பும் ஈமானுடைய ஒவ்வொரு பணரின் இரகசியத்தைப் பொதிந்திருப்பதாயிருக்கும்.

ஆனால் இப்போது இந்த கிதாபில் நான் லாஹிரின் படிக்குள்ள எழுபத்தேழு பணரையும்தான் வருவிக்கிறேன். அதனுடைய அஸ்றாருகளை இதுவரை நான் அறியவில்லை. இருந்தாலும் இந்த ஹர்பை எழுதி வேறே ஒரு ஹர்பை எழுதுவதற்குள் அல்லாஹுத்தஆலா அதனுடைய அஸ்றாருகளை எனக்குத் தெளிவாக அறிவிக்கப் போதுமென்ற ஆதரவை பரிபூரண ஹிக்மத்தாய் வைத்திருக்கிறேன்.

ஆகையால் அல்லாஹுத்தஆலா எனக்கும் உனக்கும் அதினுடைய அஸ்றாருகளை அறிவித்துக் கமாலிய்யத்தாகிய ஈமானைத் தருவானாகவும் ஆமீன.

ஆனால் நம்மால் எவ்விதம் அறியக் கூடுமென்ற ஆசை முறிந்த எண்ணத்தை எடுத்து எறிந்துவிடு. அவ்லியாக்களில் அனேகர்களும் அறவே எழுதப்படிக்கத் தெரியாமலும் ஆகிலும்

பாத்திஹா மட்டிலாவது சரியாய் ஓதத் தெரியாமலிருப்பதுடன் தங்களுடைய ஹிம்மத்தால்தான் பெற்றுக் கொண்டதையெல்லாம் பெற்றுக் கொண்டார்கள். அவ்விதம் பெற்றுக் கொண்டவர்கள் இன்னார் இன்னாறென்று கொஞ்சப் பேர்களையாவது குறிப்பிட்டுக் காட்ட இந்த கிதாபு இடம் பெறாது.

பாத்திஹாவில் இரண்டு இலட்சம் இல்மை எடுத்த அலிய்யுல் கவ்வாஸ்ஸு ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் அறவே எழுதவும் ஓதவும் தெரியாதவர்களில் நின்றுமுள்ளவர்கள்தான். அந்த இல்மினில் நின்றும் ஒன்றையாவது உலகத்திலுள்ள கிதாபடங்களிலும் காணக்கூடாது.

அல்லாஹுத்தஆலா படைத்திருக்கிற கல்குகளில் மூதேவியில் எவ்வளவு சீதேவி இவ்வளவென்று அறிந்து கொள்வது அதிலே நின்றும் ஒரு இல்முதான் அப்படிப் போல் மற்றதில் உன்னுடைய கருத்தெட்டின மட்டில் யோசித்துப் பார்த்துக் கொள்.

ஆனால், மொத்தத்தில் ஈமான் என்பது அல்லாஹ்வுடைய புறத்தில் நின்றும் அடிமையுடைய கல்பில் வருகிறதேயல்லாது வேறில்லை.

இதற்காகத்தான் அஷ்ஷெய்குல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு சொல்கிறார்கள்: அறிந்து கொள். ஈமானாகிறது மூமின் தன்னுடைய கல்பில் காண்பானே அப்படிக்கொற்ற அவசியமாயுள்ள அறிவாகயிருக்கும். அந்த அறிவைத் தட்டுவதின் பேரில் அவன் தகுதி பெற மாட்டான். அத்தாட்சியைத் தொட்டும் ஈமான் கொள்வானே அப்படிப்பட்டவனுடைய ஈமானைக் கொண்டு விசுவாசம் கொள்ளக் கூடாது. அதில் குற்றுப்பாடுகளுண்டாகக் கூடிய பிசகுதலுக்கு அது குறுக்கிட்டதாக இருக்கும்.

ஏனென்றால், நினைக்காத புறத்தில் அவசியமாய் வராமல் நோட்டத்தளவில் சேர்க்கப்பட்ட அறிவாக இருப்பதால் இன்ன ஒரு நோட்டம் அதைக் குத்துப்படுத்தும். இதுவிசயத்தில் நீளமாகப்பேசி அப்பால் தீர்மானம் ஈமான் என்பதெல்லாம் அல்லாஹுத்தஆலா அவனுடைய அடியார்களில் நின்றும் தான் நாடியவர்களுடைய கல்பில் எடுத்துப் போடுவானே அப்படிக்கொற்ற ஒளிவாகயிருக்கும் என்றும் அப்பால் மூடலாகிய இரகசியத்தின் பேரில் இது விசயத்தில் உனக்கு உணர்ச்சை பூட்டியிருக்கிறேன். எல்லோரும் இந்த நுணுக்கத்தை அறியமாட்டார்கள் என்றார்கள்.

வக்கதாலிக்க அவ்ஹைனா என்ற ஆயத்தில் எழுதப்பட்டதை இதற்கு ஒற்றுப் பார்த்தாயாகில் குர்ஆனுக்கும் இந்தச் சொல்லுக்கும் வித்தியாசமில்லை என்றறிவாய். ஆகையால் என்னுடைய நாட்டத்தை கலப்பறுதலாக்கி நப்சே ஈமானுடைய பணருகளை உனக்கு விபரிக்கிறேன்.

ஒவ்வொரு பணரிலும் நின்று ஆராய்ந்து அதில் ஒன்றாவது உண்மையாய் உன்னிடத்தில் காணப்படாதிருப்பதால் அதுகளை உணர்ச்சியோடு நீ உண்டாக்கிக் கொண்டாலல்லாது அல்லாஹ்வின் பேரில் ஆணையாக நீ ஈடேற்றம் பெறமாட்டாய் என்பதை நிச்சயமாக அறிந்து கொள்.

بسم الله الرحمن الرحيم

*பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் வல்ஹம்துலில்லாஹி வஸ்ஸலாதது வஸ்ஸலாமு அலா ரசூலில்லாஹி வல்லாஹு யகூலுல் ஹக்க வஹுவ யஹ்திஸ்ஸபீல்.* முதலாவது **லாஇலாஹ இல்லல்லாஹு** என்ற சொல்லாக இருக்கும். காலல்லாஹுத் தஆலா **பஃலம் அன்னஹு லாஇலாஹ இல்லல்லாஹு** - அல்லாஹ்வைத் தவிர ஒரு நாயனுமில்லை என்று அறிந்து கொள்ளென்று குர்ஆனில் அல்லாஹுத்தஆலா திருவுளமானான்.

இன்னமும் (ஹதீதில்), **மன் மாத்த வஹுவ யஃலமு அன்னஹு லாஇலாஹ இல்லல்லாஹு தகலல் ஜன்னத்த** - யாராகிலும் ஒருவன் அல்லாஹ்வைத் தவிர வேறே நாயனில்லை என்றறிந்தவனாக மவ்த்தாகுவானாகில், சொர்க்கம் புகுவான் என்று ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள். ஆனால், வாயினால் சொல்லாமல் கல்பால் அறிவனில் மூமின் என்பதில் கிலாபுண்டாகி இருப்பதில் பலவந்தமான சொல் மூமின் என்றதாயிருக்கும்.

நீ விளக்கமுள்ளவனாக இருப்பின், முன் நானெழுதி இருப்பதுகளை ஆராய்ந்து தரிபடுத்தி இருந்தாயானால், இதுபோல் ஒத்ததுகளை இன்னும் ஒருவருடைய சொல்லைப் பார்க்காமல் உன்னுடைய கல்பே உனக்கு ஹுக்கும் செய்யும்.

எப்படியானால் வாளுக்குப் பயந்தும் சோற்றுக்கு ஆசைவைத்தும் கலிமாச் சொல்பவனை லாஹிரில் மூமின் என்று ஒப்புக் கொள்வோம். கல்பை பார்க்க மாட்டோம். அப்பபடிப்போல் கல்பில் கலிமாப் பொருளை அறிந்திருக்கிறதுடன் வெளியில் சொல்லாதபடியால் காபிறென்று சொல்வோம். ஆனால் இந்த கிலாபெல்லாம் அல்லாஹ்விடத்தில் மூமினா அல்லவா என்று கிலாபுண்டானதில் சிலர்கள் வெளியில் சொல்லாதபடியால் அல்லாஹ்விடத்திலும் காபிர்தான் என்றதில் சிலர் அல்லாஹ்விடத்தில் அவனுடைய அறிவை ஒப்புக்கொள்ளவே படுமென்று சொன்னபடியால் அந்தச் சொல்லையே பலவந்தமானது என்று எழுதப்பட்டது.

*உமிர்த்து அன்உகாத்தி லன்னாஸஹத்தா யஷ்ஹதூ அல்லாஇலாஹ இல்லல்லாஹு லாஇலாஹ இல்லல்லாஹு* - என்று சாட்சி சொல்லும் வரை மனிதர்களைக் கொல்லும்படி என்னை ஏவப்பட்டிருக்குதென்று நபி நாயகம் திருவுளமாயிருப்பதுடன், கானகங்களில் தவம் செய்து கொண்டிருந்த சில தபோதிகள் என்னும் ராஹிபுகளைக் கொல்ல வேண்டாம் என்று கட்டளை செய்திருக்கிறார்கள்.

ஆனால் எழுபத்தேழு பணர்களையும் மூடலாய் எழுதியபின் ஒவ்வொன்றாக விரிவாக்கும் இடத்தில் முதலாவதாக கலிமாவுடைய விபரத்தை பயான் செய்யுமிடத்தில் அல்லாஹுத்தஆலா நமக்கும் உனக்கும் கண்ணையும் கல்பையும் குளிரச் செய்வானாகவும். இரண்டாவது, மலாயிக்கத்துக்களைக் கொண்டு ஈமான் கொள்கிறது. மூன்றாவது, வேதங்களைக் கொண்டு ஈமான் கொள்கிறது. நான்காவது, அன்பியாக்களைக் கொண்டு ஈமான் கொள்கிறது.

ஐந்தாவது ஒடுக்கத்து நாளைக் கொண்டு ஈமான் கொள்கிறது. ஆறாவது கத்றெனும் கட்டளையைக் கொண்டு ஈமான் கொள்கிறது. ஏழாவது மவ்த்துக்குப் பின் எழுப்புவதைக் கொண்டு ஈமான் கொள்கிறது. எட்டாவது சகலரையும் எழுப்பி மஹ்ஷறெனும் தலத்தில் சேகரிப்பது கொண்டு ஈமான் கொள்கிறது. ஒன்பதாவது, மூமினானவர்கள் மீளும் தலம் சொர்க்கம் என்றும், காபிர்கள் மீளும் தலம் நரகம் என்றும் ஈமான் கொள்கிறது.

பத்தாவது, அல்லாஹுத்தஆலாவை உசுப்பு வைக்கிறது. பதினொன்றாவது, அல்லாஹ்வை பயப்படுகிறது. 12ஆவது அல்லாஹ்வுடைய ரஹ்மத்தை ஆசை வைக்கிறது. 13ஆவது அல்லாஹ்வின் பேரில் தவக்கல் என்னும் பரஞ்சாட்டுகிறது. 14ஆவது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உகப்பு வைக்கிறது. 15ஆவது அவர்களை வலுப்பமாய் கனதியாய் காணுகிறது.

16ஆவது மூமின் தன்னுடைய தீனில் ஒரு அணுவளவும் செலவு செய்யாமல் லுத்தத் தனமாயிருக்கிறது. 17ஆவது ஷற்அளவில் சேர்க்கப்பட்ட அறிவையும் அல்லாஹ்வை அறிகிற அறிவையும் தேடுகிறது. 18ஆவது ஷற்வுடைய இல்மை படித்தவன் மற்றவுன்கு மறைக்காமல் சொல்லிக் காட்டுகிறது. 19ஆவது குர்ஆனைப் பாரதூரமாக்கி வைக்கிறது. 20ஆவது துப்புரவாக ஒலுச்செய்கிறது. அதில் புகுந்ததுதான்.

21ஆவது ஐந்து வக்த்தும் தொழுகிறது. 22ஆவது ஸகாத்து கொடுக்கிறது. 23ஆவது நோன்பு பிடிக்கிறது. 24ஆவது இஃதிகாப் என்னும் பள்ளியில் தரிபடுகிறது. 25ஆவது ஹஜ்ஜு செய்கிறது.

26ஆவது தீனுக்கு உதவியாய் ஜிஹாது யுத்தம் செய்கிறது. 27ஆவது பீசபீலில்லாஹி அல்லாஹ்வுடைய பாதையில் போர் செய்வதற்காக பகையர் வரும் வழிகளை எதிர்பார்த்து அதற்கான ஆயுதம் குதிரை முதலானதுகளைத் தங்கரீகம் செய்திருக்கிறது. 28ஆவது பின் வாங்காமல் பகையரோடு போர் செய்வதில் தரிபட்டிருக்கிறது .29ஆவது போர்களத்தில் கொள்ளை கொண்டவைகளில் ஐந்தில் ஒன்'றை இமாமளவில்சேர்ப்பி வைத்துப் போடுகிறது. 30ஆவது கழுத்தெனும் அடிமையை உரிமையாக்குகிறது.

31ஆவது கப்பாறத்தென்னும் தெண்டங்களைக் கொடுக்கிறது. 32ஆவது அறுதிமானங்களை நிறைவேற்றுகிறது. 33ஆவது அல்லாஹ்வுடைய நிஃமத்துகளை அறிந்து சுக்று செய்கிறது. 34ஆவது வேண்டாத்ததை விட்டு நாவைப் பேணுகிறது. 35ஆவது அமானிதப் பொருள்களைக் காப்பாற்றி உடையவர்கள் அளவில் ஒப்புவிக்கிறது.

36ஆவது மார்க்கத்தின் உத்தரவண்ணியில் கொல்வதையும், ஏதாவது வருத்தப்படுவதையும் தவிர்ந்துக் கௌ;கிறது. 37ஆவது ஜினாவையும் அதற்கு முர்ச் செயல்களையும் தவிர்ந்திருக்கிறது. 38ஆவது ஹறாமாகிய பொருட்களை விட்டு விலகிக்கொள்கிறது. 39ஆவது ஊண், தீனில் ஹறாமை விட்டுத் தவிழ்கிறது. 40ஆவது உடை கோலம் பாத்திரங்களில் விலக்கப்பட்டதுகளைத் தவிர்ந்து கொள்கிறது.

41ஆவது மார்க்கத்தில் விலக்கப்பட்ட விளையாட்டுப் பராக்கை விட்டும் நீங்குகிறது. 42ஆவது சிலவு செய்வதில் சுருக்காமலும் கடப்பு செய்யாமலும், நீதியாய் நடுத்தரமாய் செய்கிறது. 43ஆவது வஞ்சகம் சூது, மடிப்பு முதலானவைகளை விட்டு விடுகிறது. 44ஆவது முஸ்லிமானவர்களை மானக்கேடு செய்வதையும் அவர்களில் குற்றுப்பாடு சொல்வதையும் விட்டு தவிர்ந்து கொள்கிறது. 45ஆவது முகத்தாட்சி கீர்த்தியை விட்டு நீங்கி அல்லாஹ்வுடைய பொருத்தத்தை தேடியே அமலை கலப்பறுதலாக்கி வைக்கிறது.

46ஆவது தன்னில் நின்றும் நன்மையான காரியம் நடந்ததற்காய் சந்தோசமும், தீமை நடந்ததற்காகய் வியாகூலமும் உண்டாகிறது. 47ஆவது அல்லாஹ்வுக் மா|று செய்வது என்னும் வியாதிகளுக்கு தவ்பாவைக் கொண்டு மருந்து செய்கிறது. 48ஆவது குர்பான் கொடுக்கிறது.49ஆவது சுல்தானுக்கு வழிப்படுகிறது. 50ஆவது முஸ்லிமானவர்களில் நீதிவான்களாகிய மிகுந்த கூட்டங்கள் எதன்பேரில் இருக்கிறார்களோ அதையே ஒரேபிடியாய் பிடித்து நிற்கிறது.

51ஆவது மனிதர்களுக்கிடையில் நீதியாய் ஹுக்கும் செய்கிறது. 52ஆவது நன்மையைக் கொண்டு ஏவி தீமையைக'; கண்டு விலகுகிறது. 53ஆவது தக்குவாச் செய்வதின் பேரிலும் மற்றும் நன்மையான காரியத்தின் பேரிலும் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கிறது. 54ஆவது வெட்கம். 55ஆவது தாய், தகப்பனுக்கு நன்றி செய்கிறது.

56ஆவது குடல்வாய் ஜனமென்னும் சுற்றத்தாரைச் சேர்ந்து நடக்கிறது. 57ஆவது சற்குணத்தை எடுத்;துத் துர்குணத்தை விட்டு விடுகிறது. 58ஆவது ஆளடிமைகள் அளவிலும் உபகாரம் செய்து அவர்களைச் சீராய் நடத்தி வைக்கிறது.59ஆவது கொண்ட எஜமானுக்கு அடிமை சரியாய் நடக்கிறது. 60ஆவது பிள்ளைகளுக்கும் தன் குடும்பத்துக்கும் ஷற்யின் ஒழுங்கின்படி நடத்தி வைத்து அவர்களுக்குச் செய்ய வேண்டியவிதம் செய்கிறது.

61ஆவது தீனோர்களை உகந்தும் அவர்களோடு இணக்கம் பொருத்தமாயும் சலாமை மிகுதமாக்கியும் கைதொட்டு முத்துவது முதலாகிய மற்றும் மஹப்பத்துகளை உண்டாக்குகிற கருமங்களை கவனித்து எடுத்து நடக்கிறது. 62ஆவது சலாமுக்குப் பதில்சொல்கிறது. 63ஆவது பிணியாளரை சுகம் விசாரித்து வருகிறது. 64ஆவது முஸ்லிமாய் மவ்த்தானவன் மீது தொழுவிக்கிறது. 65ஆவது தும்மினவனுக்கு பதில் சொல்கிறது.

66ஆவது காபிர்களையும் அழிச்சாட்டியக்காரர்களையும் விட்டுத் தூரப்பட்டு அவர்களோடு உரமாய், கடினமாய் பேசுகிறது. 67ஆவது அயல்வீட்டாரை அனுசரித்துப் போவது 68ஆவது விருந்தாளியை சங்கை செய்கிறது. 69ஆவது முஸ்லிமானவர்களுடைய ஐபுகளை மறைக்கிறது. 70ஆவது இபாதாத்துகளைக் கொண்டாடி வருவதிலும் துன்பங்களின் பேரிலும் சரீர இச்சைகளை விரும்புவதின் பேரிலும் நப்சை தடுக்குதல் என்னும் சப்ரு செய்துக் கொள்கிறது.

71ஆவது துன்யாவை வெறுத்து மேலெண்ணத்தைச் சுருக்கி கொள்கிறது. 72ஆவது மார்க்கத்தின் ஹத்தை கடந்து நாணமில்லாமல் ஆண், பெண் கூடி மகிழ்வரை விட்டுவிடுகிறது 73ஆவது வீண்பேச்சை விட்டுப் பிறக்கணிக்கிறது. 74ஆவது தர்மம் செய்கிறது 75ஆவது சிறியவர்கள்

பேரில் கிருபையும், முதியோரைச் சங்கையாக்கியும் வைக்கிறது. 76ஆவது மனிதர்களுக்கு இடையிலுண்டான வழக்குகளை சுல்ஹு செய்து போடுகிறது. 77ஆவது தனக்கு உகப்பானதை முஸ்லிமானவர்களுக்கும் உகந்து தனக்குக் கோபமானதை முஸ்லிமானவர்களுக்கும் கோபமாகி இருக்கிறது. ஆக இந்த 77 ம் ஈமானுடைய பணர்களாக இருக்கும்.

அறிந்து கொள்! இந்த பணர்களில் சிலது நிருணயத்தில் சேர்க்கப்பட்டதாயும் சிலது சொல்லளவில் சேர்க்கப்பட்டதாயும் சிலது அவனது இயற்கைக்குத் தக்கது செய்ய வேண்டியதாயும் சிலது விடவேண்டியதாயும், சிலது செய்ய வேண்டியதாயும் சிலதை இழப்பதால் ஈமானை அடியோடு இழக்கப்படுகிறதாயும் சிலதை இழப்பதால் ஈமானுடைய நிறப்பத்தை இழக்கப்படுகிறதாயும்

அந்தரங்கத்தில் இந்த 77 பணரில் ஒன்றையாவது யாராவது ஒருவன் விட்டானேயானால் ஈமானில் ஓட்டை உண்டாகி விடும் என்பதைக் கொஞ்சமெங்கிலும் விவேகமுள்ளவன் எல்லாம் அறிவான். ஆகையால் இதற்கு அத்தாட்சித் தேடவேண்டியதில்லை. இந்தச் சொற்களுடைய மூடலை பிற்பாடு இந்த பணர்களுடைய அந்தரங்கத்தை நாம் விபரிக்கும் இடத்தில் அறிவாய்.

ஆனால், ஈமானும் இஸ்லாமும் வேறென்றும் ஒன்றென்றும் உலமாக்களுக்கடையில் கிலாபுண்டாகி இருப்பதில் குர்ஆனிலும் சில விசயங்களில் சொல் இரண்டாகவும், சில விசயங்களில் ஒன்றாகவும் வருவதில் காரியம் தன்னில் சொல் இரண்டானாலும் பொருளொன்றே அல்லாது வேறில்லை.

ஜிப்ரீலுடைய கேள்விக்கு நமதாண்டவர்கள் இஸ்லாம் வேறேயாகவும், ஈமான் வேறேயாகவும் சொல்லியிருப்பதுடன் வேறே ஹதீதுகளில் முஸ்லிமென்று சொல்ல வேண்டிய இடத்தில் மூமினென்றும் மூமினென்று சொல்ல வேண்டிய இடத்தில் முஸ்லிமென்றும் பாராட்டுதல் இல்லாமல் சொல்லி இருப்பதால் இரண்டும் பொருள் ஒன்றென்று சொல்லப்படும்.

எப்படியானால் உவமையில் ஒருவன் ரஸூல்மார்கள் சொன்னதுக்கெல்லாம் தலைசாய்ந்து வழிப்பாடாய்க் கேட்டுக் கொண்டிருந்தான் என்றும், அல்லது அந்த சொற்கள் எல்லாத்தையும் உண்மை கொண்டான் என்றும் அதுகளுக்கெல்லாம் உண்மையாய் தலைசாய்த்துக் கொண்டான் என்றும் வார்த்தைகளை எவ்விதமாய் மொழிந்தாலும் பொருள் ஒன்றேயல்லாதுவேறில்லை.

ஆனால், உலகதில் இப்போது வழங்கிவருகிறதைப் பிடித்து யோசித்துப் பார்ப்போமாகில்,இரண்டும் வேறென்று சொல்லவேண்டியதிருக்கிறது. குர்ஆனிலும், ஹதீதிலும் இரண்டையும் வௌ;வேறாகச் சொல்லப்பட்டதெல்லாம் மனிதர்களுடைய நடப்பையும் அவர்கள் நடத்தி வைப்பதையும் பார்த்து வந்ததே அல்லாது வேறில்லை.

ஏனென்றால், ஒருவன் ஈமான் இஸ்லாம் இரண்டையும் கல்பில் அறவே ஒப்புக்கொள்ளாமல் வெளிப்பாவனைக்கு ஈமானுடைய பணர் முதல் சகலதையும் இஸ்லாமுடைய பர்ளுகள் சகலதையும் கொண்டாடி வருவதைப் பார்த்து அவனுக்கு முஸ்லிம் என்றும், மூமின் என்றும்

பேர் கொடுத்து மூமினுடைய பிள்ளையையும் கலியாணம் முடித்துக் கொள்கிறான். காரியந்தன்னில் சுத்தக் காபிறாகயிருக்கிறான்.

இன்னுமொருவன் இவைகளொன்றையும் வெளிரங்கத்தில் சொல்லாமல் சகலதையும் உண்மை என்று ஒப்புக் கொண்டு தலை சாய்த்திருக்கிறான். அப்படிக்கொற்றவனை காபிர் என்று சொல்கிறோம். ஆனால் இதை எல்லாம் விட்டுவிட்டு முஸ்லிம், மூமின் என்று அறிவதற்காக இலேசாகிய இரண்டு அடையாளத்தை வைத்திருப்பதால் அதிகமாய் ஒருவன் விஷயத்தில் ஆலோசிக்க வேண்டிய வருத்தமும் அவசியமும் இல்லாமல் இலேசான ஹுக்குமாக உண்டாக்கிப் போட்டார்கள்.

அதென்னவானால், என்னேரமும், சிரைக்க வருத்தப்பட்டதற்காகவும், சாதி வழக்கப்படி அவர்களுக்கு அழகாக தோற்றின தாடியையும் காரியம் தன்னில் குத்துபாய் இருந்தாலும் மானியை அறுக்கப்படாதிருந்தால் அவரை காபிர் என்று சொல்லும்வரை அவர்கள் மார்க்கமாக்கிக் கொண்ட சுன்னத்தையும் நிறைவேற்றுவதால் முஸ்லிம் மூமின் என்ற ஹுகுமை உண்டாக்கிப் போடுகிறார்கள்.

ஆஹ்! கைசேதமே! *இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்* அரபு ராச்சியத்தில் குறைசி காபிர்களுக்கு சுன்னத்தும் செய்து தாடியும் வைத்திருந்தது அல்லவா அல்லது லஃனத்துல்லாஹ்வாகிய அபூஜஹ்லுக்கு தாடியும் வைத்து சுன்னத்தும் செய்து இருப்பதை நீ கேட்டும் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு முன்னுள்ள அன்பியாக்களுக்கு சுன்னத்துச் செய்யப்படாதிருப்பதையும் நீ கேட்கவில்லையா! இன்னமும் அவன் ஆராய வேண்டாமா!

வடதேசங்களில் மாராஷ்ட்டர் ரஜபுத்திரர்களில் ஒரு கூட்டத்தார்களும் எஹூதிகளில் ஒரு வகையாரும் தாடி வைத்து சுன்னத்தும் செய்தே இருக்கிறார்கள். காரியம்தன்னில் கத்னாச் செய்வது ஈமானில் ஒரு பணராய் அல்லது இஸ்லாமிலுள்ள பற்ளு ஷர்த்துகளில் ஒன்றாக இருக்கவில்லை. தவிரவும் கத்னாச் செய்வது வாஜிபென்பதில் கிலாபு உண்டாகி இருக்கிறது.

தாடியைச் சிரைத்துப் போடுகிறது ஆகுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னமும், யோசித்துப் பார் முஸ்லிமானவனில் தாடி வைக்கிறதில் மிகுந்தவனும் அல்லது கத்னாச் செய்வது, கலியாணம் முடிப்பது முதலாகிய சில காரியங்களில் அல்லது உடுமானம் உடுத்துவதிலாவது அல்லாஹ்வுடைய முகத்தை நாடி வாஜிபை அல்லது சுன்னத்தை நிறைவேற்றுவதை நாடுகிறானா என்று பார்!

ஆனால் இது விசயத்தில் நான் கொஞ்சம் சைக்கினை உனக்கு காட்டினது எல்லாம், இதை ஒரு அசலாக நீ எடுத்துக் கொண்டு மற்ற நடைபிடிகளில் யோசித்து நாமெல்லாம் நெடுங்காலம் ஈமான் இஸ்லாம் என்ற வெறும் பேரை ஏற்று அதன் ஹகீகத்தை அறியாமல் வாழ்நாளைத் தொலைத்து விட்டோம் என்பதில் உணர்ச்சையாய் தெண்டிப்பதற்கல்லாது வேறில்லை.

ஆனால், காரியம்தன்னில் ஈமானும் இஸ்லாமும் ஒன்றாக இருக்க, துவக்கத்தில் தீனுக்கு நாலு றுக்னில் முதலாவது ஈமான் என்றும், இரண்டாவது இஸ்லாம் என்றும் நாம் கூறியபடி இதில் ஈமானையும் அதன் கொம்புகளையும் அப்பால் இஸ்லாமையும் அதில் விபரங்களையும் வருவிப்போமாகவும்.

ஆனால் இந்த 77 பணரையும் சுட்டிக்காட்டினதில் ஒரு நுணுக்கமாகிய கேள்வியுண்டாயிருக்கிறது. அதென்னவானால், முதலாவது நீ கேட்கவேண்டியது ஈமான் என்பதற்கு பொருள் என்னவென்று.

அப்போது உண்மை கொள்கிறது என்று உனக்குச் சொல்லப்பட்டால், அது கல்பளவில் சேர்க்கப்பட்டதாச்சுதே வெளியுறுப்பிலுள்ள அமல்களை அதினுடன் சேர்க்க வேண்டியதென்னவென்று நீ கேட்கப்போதும், அப்படியானால் அறிந்துகொள்! அந்த 77ஐயும் கல்பால் உண்மை கொள்ள வேண்டியதுதான் ஈமானாகும்.

ஆனாலும் அதில் சிலது கல்பால் உண்மை கொள்வதற்கு மட்டும் இடம்பாடாகும். அதில் உசும்புதல் ஒடுங்குதல் முதலாகியவைகளுக்கு வையாளி போடுதலில்லை. அதாவது அல்லாஹ்வைக் கொண்டும் மலாயிகத்துமார்களைக் கொண்டும் ஈமான் கொள்வது முதலாகிய ஙைய்பாகிய மறைவாகிய காரியத்தைப்போல இன்னும் சிலதுகளை கல்பால் உண்மை கொள்வதுடன் வெளியுறுப்பால் நடத்தி வைப்பதற்கு இடமாகும்.

தொழுகை முதலாகிய செய்கைகளைப் போலே சிலது சிலபேர்களிலுண்டாவதற்கு இடம்பாடிருந்தபோதிலும் சிலர்களிடத்தில் உண்டாவதற்கு இணக்கமாகமாட்டாது. கொண்ட எஜமானுக்கு அடிமைச் சரியாய் நடப்பதுபோல் சிலதுகள் கல்பிலுண்டாகிற ஒரு குணமாயிருக்கும். அல்லாஹ்வை பயப்படுவதுபோல் ஆகிலும் அதனுடைய அதிகாரம் வெளியுறுப்பில் நடந்துக் கொண்டுதானிருக்கும்.

ஆகிலும் மொத்தத் தொகையில் ஈமான் என்பது உண்மை கொள்வதும் இஸ்லாம் என்பது வழிப்பாடும், இஹ்சான் (இஹ்சான் என்னும் சொல்லுக்குப் பொருள் அழகாக்கல், செய்யும் காரியத்தைத் திருந்தச் செய்தல்) என்பது காணுகிறது அல்லது காணுகிறதுபோல இருக்கும். ஆகிலும் ஒருவன் இந்த மூன்றுக்கிடையிலும் சேர்த்தானேயானால் ஆகிறத்தில் ஹக்குத்தஆலா தஜல்லியாகும் வேளை இன்காறு செய்யமாட்டான். இல்லாதவரை இன்காறு செய்வான்.

ஆனால், ஈமானுடைய *நூறு*டன் - ஒளிவுடன் இல்முடைய நூறு சேருவது தான் *நூறுல் அலாநூறென்*று சொல்லப்படும். ஈமானுடைய நூறு மட்டில் பலவந்தமாக இருக்குமானால் இல்முடைய நூறை இழுத்துக் கொண்டு வரும். இல்மு மட்டிலிருந்து ஈமானுடைய நூறு சேராதிருந்தால் அதற்கு சிறப்பில்லை.

ஃ**பாயிதா**- ஈமானுக்கு அல்லாஹ் என்கிற இஸ்மும் '**ஹூ**' என்கிற இஸ்மும் கூடிய எண்ணப்படி எழுபத்தேழு பணராயிருப்பதுடன் நமதாண்டவர், அஷ்ஷெய்குல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு எழுபத்தெட்டு என்று சொல்வது கொண்டே நாம் ஈமான் கொள்வோம்.

அப்படியானால் அல்லாவென்ற இஸ்மின் மொழித்தலில் உண்டாகிற அலிபுடைய எண்ணமொன்றைச் சேர்த்தால் எழுபத்தெட்டு சரியாகிவிடுகிறது. ஆனால் ஈமானுடைய பணர் இந்த நாயகம் அனுபவித்ததின்படி எழுபத்தி எட்டாயிருக்கும்.

ஆகிலும் ஈமானுடைய தரஜாவென்னும் படியேற்றமாகிறது முன்னூற்றிப் பதிமூன்று என்றும் முற்சலீன்களுடைய எண்ணப்படிக்கென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்படி எல்லாம் இருந்தால் அவைகளை எல்லாம் எவ்விதம் அறியக்கூடுமென்று பாரமாக எண்ணாதே. ஏனென்றால் இந்த விசயத்திலேயே ஒன்றுக்கொன்று விதற்பமாய் முன்னூற்றி பதிமூன்று என்றும் முன்னூற்றி முப்பத்தி மூன்றென்றும் இருபது வித்தியாசமாய் (கிலாபுண்டாகி இருப்பதால் அதை திட்டவட்டமாய் ஹத்திட்டு அறியவேண்டியதில்லை என்றாச்சுது.

ஆனால் மொத்தத் தொகையில் நல்நடத்தையாயும் நல்லறிவையும் நிறப்பமான ஷுஹூதையும் அல்லாஹ்வுடைய அலமத்தை கமாலிய்யத்தாய் நினைக்கக் கூடிய ஒவ்வொரு உணர்ச்சைகளை எல்லாம் ஒவ்வொரு தரஜா என்று எண்ணி ஏற்றி இருக்கப்போதுமென்ற உறுதிப்பாட்டை உன்னுடைய கல்பில் தியானமாக்கிக் கொண்டு நீயும் சுலூக்குடைய வழிநடப்பாயாகில் அவரவருக்கு எட்டினமட்டில் முன்னூற்றி முப்பத்தி மூன்று தரஜாவைப் பார்க்கிலும் முவ்வாயிரம் தரஜா உண்டுமென்று அனுபவிக்குதலால் எத்தினமட்டில் சொல்லலாம். இவ்வளவுமட்டில் சொன்னதிலும் உன்னுடைய கல்பில் இஷ்கால் சந்தேகம் நீங்கி இராது என்று சந்தேகிக்கிறேன்.

அப்படியானால், அறிந்துகொள். உவமையில் நீ கேட்டிருக்கிறாய். மன் அறப நப்ஸஹு பகத் அறபறப்பஹு - தன்னை அறிந்தால் தன் தலைவனை அறிவான் என்ற நபி நாயகம் சொல்லியிருக்கிறார்கள் என்று கேட்கிறாய்? அந்தச் சொல்லைக் கொண்டு சரியான ஈமான் அவ்விதம் அனுபவித்ததின் பேரில்தான் உண்டாகும். அப்போது ஈமானில் ஒரு தரஜாவை கடந்து விட்டாய். இதிலும் எல்லா ஒவ்வொருவருடைய தரஜா விதற்;பமாகும்.

எப்படியானால், ஒருவன் வெறுங் கேள்வியாகக் கேட்டிருக்கிறான். ஒருவன் அவ்விதம் அனுபவிக்காதிருந்த போதிலும் தன்னுடைய கருத்துக்கேற்ப இது உண்மையானச் சொல்தான். அவ்விதமே அறிவுண்டாகுமென்று நிச்சயம் கொண்டான். இப்படிப்போல் ஆராய்ந்துக் கொள்.

ஆனால் இந்தவகை அனேக இல்மைக் கொடுக்கிறதாக இருப்பதால் உன்னுடைய மருட்டுதலை விட்டு நீங்கி ஆராய்கிறாயோ எப்படியோ என்று மிகுதியும் நொம்பலப்படுகிறேன்.

ஆனாலும் அறிந்துகொள். உவமையில் நபி நாயகம் *அத்துன்யா சிஜ்னுல் மூமினி வஜன்னத்துல் காபிர்* - துன்யா மூமின்களுக்கு சிறைச்சாலையாகவும், காபிர்களுக்கு

சுவர்க்கமாகவும் இருக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சொல்லின் சூட்சமம் அறிந்து திருவுளமருளியபடி கண்டவன் ஈமானுடைய தராஜாவில் ஒன்றை எட்டினவனாவான்.

இன்னமும் குர்ஆனில் வஹுவ மஅகும் அய்னமா குன்தும் - அவன் நீங்கள் எங்கேயிருந்தாலும் உங்களுடனே இருக்கிறான் என்றும் பய்அன மாத்து வல்லூ பதம்ம வஜ்ஹுல்லாஹி - உங்களை எங்கே திருப்பி வைக்கப்பட்டாலும் அவ்விடத்தில் அல்லாஹ்வுடைய முகம் என்றும் இப்படிப்போல் எண்ணறாத படிக்குள்ளதுகளில் நிருணயம் கொள்ளவும், உண்மை கொள்ளவும் வேண்டியவைகள் சகலதையும் குர்ஆன் பொதிந்திருப்பதால் அவரவருடைய மர்தபாவுக்குத் தக்கது எட்டிக் கொள்வதில் ஈமானுடைய தரஜா வித்தியாசமாகும்.

அவைகள் எல்லாம் குர்ஆனைக் கொண்டு ஈமான் கொள்வதில் அடங்கிப் போகிறதாயிருந்த போதிலும் ஒவ்வொருவருடைய தரஜா வித்தியாசமாவது மறையாது. இதற்காகத்தான் புத்தூஹாத்துல் மக்கிய்யா முன்னூற்றி ஐம்பத்து ஏழாவது பாபிலும் மற்ற இடங்களிலும், புஸூஸிலும், பமாவிவுன்னுஜூமிலும் மூமின் அடங்கல் பேரிலும் அவனுடைய ஈமானை குறைக்கிறதை விட்டுப் பேணிக் கொள்வது வாஜிபு.

அப்படிப் பேணவில்லையானால், அவனுடைய ஈமானில் குறைபாடு உண்டாகுமென்றும், அதெப்படிப்போலானால் கீழ்லோகம் மேலோகம் வெளிலோகம் மறைவான லோகம் சகலதிலும் கல், கரடு, புல்பூண்டு சகலதும் ஹயாத்துடையதென்று அவன் ஈமான் கொள்ளாதிருப்பதுபோல்.

ஏனென்றால் குர்ஆனில் வஇன்மின்செய்இன் இல்லாயுஸப்பிஹு பி ஹம்மதிஹி -அவனைப் புகழ்வது கொண்டு தூய்மையாக்கி வைய்யாத ஒருவஸ்துவுமில்லை என்று வருவதால் என்றும் துறந்தவர்கள் இதைக் கண்காட்சியாய்க் காண்பார்கள். மற்றவர்கள் அதுகொண்டு ஈமான் கொள்வார்கள் என்றும், கற்கரடுகளுக்கு யாதொரு உசும்புதலை நாம் காணவில்லை என்றும்,

தங்களுடைய புத்தியால் யோசித்து அது வெறும் சொல்லென்று உண்மை கொள்ளாமலும் அல்லது ரியாலத்தென்னும் நடைபழக்குதல், கல்வத்து தனித்திருக்குதல் கொண்டு அதைக் கண்காட்சியாக காணாமலிருப்பவர்கள் ஈமானில் குறைத்தலை உண்டாக்கிக் கொள்வார்கள். துறந்தவர்கள் கண்டதாகச் சொன்னாலும் அவர்கள் மனம் ஏற்கமாட்டாது.

ஆகையால், இப்பேற்பட்டவர்களுக்கு நுல்லாறெனும் நோட்டக்காரர்கள் என்றும் அஹ்லுல் பிக்குறெனும் யோசனைக்காரர்கள் என்றும் சொல்லப்படும். அவர்களுடைய வார்த்தைகளின் நளினத்தாலும் மிகுதியாய் பேசுவதாலும் மற்றவர்களை வாய் மடக்கப் பேசி கற்கரடு, புற்பூண்டு தஸ்பீஹ் செய்ய கண்ணாறக் காணவும் இல்லை. காதாறக் கேட்கவும் இல்லை என்றும், குர்ஆனில் தஸ்பீஹ் செய்வதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறதெல்லாம் லிசானுல் ஹாலென்னும் கொள்கைவேளையெனும் நாவென்றும் சொல்வார்கள்.

அதென்னவானால் அதின்படைகோலமே நாயன் ஒருவன் தூய்மையானவன் இருக்கிறான் என்று எவ்வகைப் புகழ்ச்சியாய் எவரவர்கள் புகழ்வார்களோ அதுவெல்லாம் அவனுக்கே உடையதென்று எப்போதும் அதன் கொள்கை அறிவிக்கிறதே தவிர, அதற்கு ஒரு நாவும் ஒரு பாசையும் கிடையாதென்றும் சொல்வார்கள்.

இவ்விதமான நிருணயத்தின் பேரில் இமாம்கள் என்று பேர்பெற்றவர்களில் இலட்சக்கணக்கானோர் அன்னாள் தொடுத்து இன்னாளிலும் இருப்பதும் தவிர ஆரிபூன்கள் கற்கரடுகள் சகலதுடைய தஸ்பீஹையும் காதாறவும் கண்ணாறவும் நாங்களடங்கலும் கண்ணாகவும் காதாரவும் இருந்து கொள்கிறோம் என்று சொல்வதை இன்காறு செய்வதும் தவிர அவர்களைப் பைத்தியக்காரர் என்றும் சொல்கிறார்கள்.

அவ்லியாக்களோடு சில கற்கரடுகள் பேசுகிறதை அவர்கள் கேட்டாலும் நபியுல்லாஹ்விற்கு கற்கரடுகள் சலாம் சொல்லியதும், ஈத்தங்குச்சி அழுததையும், நஞ்சை ஏற்றி கறி சமைத்திருந்த ஆட்டுச் சந்து நான் நஞ்சாக இருக்கிறேன் நபியே! என்னைத் திண்ண வேண்டாமென்று சொன்னதையும், அவர்களுடைய கையில் கரளக்கல் தஸ்பீஹ் செய்ததை சஹாபாக்கள் கேட்டிருப்பதையும் ஒருபோது ஒஜீபனம் தஸ்பீஹ் செய்ததை சஹாபாக்கள் கேட்டிருப்பதையும் இதுகள் அடங்களிலும் அந்த வேளையில் அல்லாஹுத்தஆலா ஹயாத்தைப் படைக்கிறதேயல்லாமல் எப்போதும் அதுகள் ஹயாத்துடையதாக இருந்து தஸ்பீஹ் செய்யவில்லை என்றும் இன்காறு செய்கிறார்கள்.

புஸூஸில், *பமாபில் கவ்லின ம மவ்ஜூதுன் தருஹு மாலஹுநுத்துகு* - லோகத்தில் உண்டாக்கப்பட்டதில் நீ காணப்பட்டவைகளில் மொழித்தலில்லாத்தது யாதொன்றுமில்லை என்றும் புதூஹாத்தில் பனிரண்டாவது பாபில் கற்கரடுகள் சகலதும் ஹயாத்துடையதாய் அல்லாஹ்வை திக்று செய்ய கேட்டிருக்கிறோம் என்றும் நீளமாகச் சொல்லுகிறார்கள்.

இமாம் அப்துல் வஹ்ஹாபுஷ் ஷஹ்ரானி ரலியல்லாஹு அன்ஹு **லவாக்கிஹுல் அன்வாறுல் குத்ஸிய்யா** என்ற கிதாபில் கற்கரடு பேசுவதும் ஹயாத்தாக இருக்கிறதை அல்லாஹுத்தஆலா எனக்கு வெளியாக்கித் தந்தும் சகலதுடைய மொழித்தலையும் தஸ்பீஹையும் நான் கேட்டேன். அதில் நான் மிஸ்ரிலிருக்கும்போது சமுத்திரத்திலுள்ள ஒரு பெரிய மீன் *சுப்ஹானல்லாஹி றப்பில் அக்வாத்தி வல்அற்ஸாக்கி வன்னபாதாத்தி வல் ஹயவானாத்தி* என்று சொல்லக்கேட்டதில் பலவஸ்துக்களின் சத்தங்களால் என்னுடைய அக்குலின்பேரில் தட்டழிவை நான் பயந்தபோது அல்லாஹ்விடத்தில் அதுகள் எனக்கு கேளாதிருக்கும்படித் திரை போட்டு மறைக்கவும் அந்த அனுபவிக்குதலின் அறிவை என்பேரில் தரிபடுத்தி வைக்கவும் கேட்டேன். அதுபோல் அல்லாஹுத்தஆலா செய்தான் என்று சொன்னார்கள்.

இதுவிசயத்தில் நீளப்படுத்தினதெல்லாம் ஈமானுடைய பாபில் ஆரிபூன்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் குறைத்தலானவர்கள் என்றும் அவர்களுடைய சொல்லை நம்பினவர்கள் இல்லாமல் குறைந்த அவாமாக இருந்தபோதிலும் சரிதான். ஈமானை உண்டாக்கிக் கொள்ளப்

போதுமென்பதையும் தங்களுடைய அக்குலும் இல்முமே பெரிதென்று லாஹிருடைய இல்மிலே தரிபட்டு ஆரிபூன்களுடைய சொல்லை அக்குலுக்குச் சரியாக இருக்கவில்லை என்று எண்ணினவர்கள் இமாம்கள் என்றும் பேர் பெற்றிருந்தாலும் ஈமானில் குறையுள்ளவர்களே அல்லாது வேறில்லை என்பதை நீ தெரிந்து கொள்ளவும்.

நமதாண்டவர் ஷெய்குல் அக்பர் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்களுடைய பணர் எழுபத்தெட்டென்றதில் ஒருக்கால் கற்கரடு சகலதும் ஹயாத்துடையதென்று ஈமான் கொள்வதை எழுபத்தெட்டாவதாக எண்ணி இருக்கப்போதுமென்ற நம்முடைய உத்தேசத்தை நீயும் உத்தேசிக்கப்போதும் என்று எண்ணியும் இவ்வளவு மட்டில் பேசப்பட்டது.

இன்னமும் நீ ஆராய்ந்து பார். நாம் ஈமானுள்ளவர்கள் என்று நம்மை எண்ணி இருக்கிற திஷ்டாந்தமாகிய தீராண்மையாகியப் பொய் உனக்கு வெளியாகும்.

அதென்னவானால், இப்போது நமக்கு இராஜாவாக இருக்கிற நஸாரா இப்போது நமக்கொரு கட்டளையிடுகிறான். யாராவதொருவன் ஐந்து வக்த்துத் தொழுகையில் ஒரு தொழுகையை விட்டால் அவனைக் கொன்று போடுகிறது. அவ்வல் வக்த் பிந்தினால் அபராதம் போடுகிறது அல்லது அடிக்கிறது. பொய், புறும் கோள் முதலான நாவால் வரும் பாவங்களுக்கெல்லாம் அததற்குள்ளத் தண்டனையும் மற்றப் பாவங்களுக்கு எல்லாம் அததற்குள்ள தண்டனைகள் செய்வதென்றும்

எல்லா ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் செய்யிற நன்மை, தீமைகளை எழுதி பிடிக்கவும் என்னேரமும் அவனை விட்டுப் பிரியாமலிருக்கும்படி மகா தகுதியும், சங்கையும் நீதத்தையுடை இரண்டு சேவகர்களையம் சாட்டியிருப்பதுடன் இராஜாவுமோ முகக்குறியைப் பார்த்து நல்லவன் கெட்டவனைத் தெரிந்து கொள்வதுடன் நீதியையும் நடத்தி அவனுக்குத் தகுந்த தண்டனை கொடுக்கத் தகுதியுள்ளவனாக இருப்பதும் தவிர அவனைத் தூக்கில்போட்டுச் செத்துப் போனாலும் நெருப்பில் போட்டுச் சுடுகிறது என்று சொல்லி சட்டமும் ஏற்படுத்தி அந்த சட்டத்தையும் எல்லோரையும் பார்க்கும்படியாகக் கட்டளை இட்டிருந்தால் யார்தான் பார்க்காமல் பொடுபோக்காகி என்னத்தை விடப்போகிறார்கள்? அப்படிப்போல் ஆராய்ந்துபார்.

*அபலாயத்த தப்பறூனல் குர்ஆன அம் அலாகுலூபின் அக்பாலுஹா* - குர்ஆனை அவர்கள் ஆராயவில்லையா அல்லது கல்புகளின் பேரில் பூட்டுப் போட்டிருக்கிறதா *வலகத் யஸ்ஸர்னல் குர்ஆன லித்திக்ரி பஹல்மின் முத்தகிர்* - யாவரும் நினைத்துப் பார்க்க குர்ஆனை லேசாக்கி வைத்திருக்கிறோம். நினைத்துப் பார்க்கிறவனுண்டா அல்லவா *வலாறத்பின் வலாயாபிசின் இல்லா பீக்கித்தாபின் முபீன்* - உலர்ந்தது பச்சை ஏதாவதொன்றாவது வெட்ட வெளிச்சமாக்கி வைக்கிற வேதத்தில் தரிபட்டே ஒழிய இல்லை.

ஆகையால் சகலதிலும் பாவமின்னது, நன்மை இன்னதென்று அந்த குர்ஆனில் சொல்லியபடி *பமன் யஃமல் மித்காலதர்றத்தின் கய்றன் யறஹு வமன்யஃமல்மித் காலதர்றத்தின் ஷர்றன் யறஹு* - யாராகிலும் ஓரணுப்பிரமானம் நன்மை செய்தாலும் கண்டுக் கொள்வான்.

யாராகிலும் ஓரணுப் பிரமானம் தின்மை செய்தாலும் கண்டுக்கொள்வான். ஏதாவது மறைக்கக் கூடுமோ கூடாது.

*யஃலமு காயினாத்தல் அஃயுனிவமாத்துக் பிஸ்ஸுதூறு* - நெஞ்சுகள் மறைந்திருப்பதையும் கண்கள் சுறுட்டி விழிப்பதையும் அறிவான். அறிந்து சும்மா விடுவானோ *இன்துப்தூ மாபீ அன்புசிக்கும் அவ்துக் பூஹு யுஹாஸிப்கும் பிஹில்லாஹு* - உங்கள் மனதுகளில் உண்டாகி இருப்பதை நீங்கள் வெளியாக்கினாலும், அல்லது அதை மறைத்தாலும் அதுகொண்டு அல்லாஹுத்தஆலா உங்களை நிற்க விசாரணை செய்வான். அப்படிச் செய்து உங்களில் அக்கிரமித்து நடந்தவர்களுக்கு *பல்யவ்ம துஜ்ஸவ்ன அதாபல் ஹூனி* -அன்னாளையிலே தூஷணிப்பாகிய வேதனையை உங்களுக்குப் பிறத்தியாக்கப்படும்.

நாமறிந்திருப்பதுடன் *வஇன்ன அலைக்கும் லஹாபிலீன் கிறாமன் காத்திபீன யஃலமூனமாதப் அலூன்* - ஒன்றையும் விடாமல் மனனமிட்டுக் கொள்கிற எழுதிப்பிடிக்கிற சங்கையானவர்களாகிய மலக்குகள் உங்கள்மீதில் இருக்கிறார்கள். நீங்கள் செய்வதை எல்லாம் அறிவார்கள். எவனும் ஒரு வார்த்தையாவது விட்பபடுமென்று எண்ணுகிறானோ *மாயல்பிலு மின்கவ்லின் இல்லாலதைஹி றகீபுன் அதீது ஹாலிறா* - இருந்து வழிபார்த்துக் கொண்டு நிற்கிற ஆண்டவனுடைய தூதர் அவனிடத்தில் உண்டாகி இருந்தே ஒழிய.

ஒருவனும் ஒருச் சொல்லையும் மொழிகிறதில்லை. ஆகையால் மருட்டுதலில் முங்கிக் கவிழ்ந்துக் கிடந்து அல்லாஹ்விடத்திலிருந்து வந்த நேர்வழியை யோசிக்காமல் பொய்யாக்கி வைத்தவன் *அலம்யஃலம் பிஅன்னல்லாஹ யறா* - அல்லாஹுத்தஆனா சகலதையும் கண்டுகொண்டிருக்கிறனர் என்கிறது கொண்டு அறிந்தவனாக இருக்கவில்லையா? அப்படி எவனும் அறியாதிருக்கக் கூடாது.

பஇன்னக்க பிஅஃயுனினா - நீ நம்முடைய கண் பார்வையில்தான் இருக்கிறாய். தூரத்திலிருந்து பார்க்கிறதாக எவனும் மதிக்க வேண்டாம். *நஹ்னு அக்றபு இலைஹிமின் ஹப்லில் வரீது நாம் ஹப்லுல்* - வரீதென்ற உயிர்நிலை நரம்பைக்காண அவனளவில் மிகவும் முடுகுதலாவனாக இருக்கும்.

*இன்ன றுஸ்லனா யக்த்து பூன மாதம் குறூன்* - நம்முடைய தூதர்கள் நீங்கள் செய்கிற குபாடங்களை எழுதிக் கொண்டே இருக்கிறார்கள். *இன்னறப்பக லபில் மிற்ஸாதி* - உன்னுடைய நாயன் கழி பார்க்கிறது கொண்டே இருக்கிறான்.

இவ்விதமெல்லாம் சொல்வதில் அவர்கள் உணர்ச்சைப் பெற்று நீதியாய் நடக்கவேண்டியது அவசியமாயிருக்க அவர்கள் நேர்வழியாகி விடுவார்களே *கல்லா (பல்) றான அலாகுலூபிஹிம் மாகானூ யக்ஸிபூன்* - அப்படிஇல்லை. ஆகிலும் அவர்கள் சம்பாதிக்கிறவர்களாக இருந்தார்களே அந்த ஒரு கெடுதலே அவர்களுடைய கல்புகளின் பேரில் சவாலாகிவிட்டது.

ஆகையால் எதைச் சொன்னாலும் அவர்களுக்குப் படாது. ஆகையால், *லாயஉற்றன்னக்க தகல்லுபுஹும் பில்பிலாத்* - பட்டணங்களில் அவர்கள் பிரண்டு உருண்டு திரிவது முஹம்மதே!

உம்மை மருட்டி விடவேண்டாம். மத்தாஉன்கலீல் - சொற்பச் சுகண்டி *தும்ம மபுலாஹும் ஜஹன்னம்* - அப்பாலவர்கள் ஒதுங்கும் தலம் ஜஹன்னம் என்னும் நரகமாயிருக்கும்.

எப்படிச் சொன்னாலும் யாது பூட்டினாலும் பஇன்னத்திக்றா அந்த யாகம் பூட்டுகிறது தன்பவுல் மூமினீன் - ஈமானுடையவர்களுக்குத் தான் பிரயோஜனம் கொடுக்கும். ஸயத்தக்கறு மன்யக்ஷத-அல்லாவைப் பயந்தவன்தான் நினைத்துப் பார்ப்பான்.

ஆனால், இந்த இடத்தில் அல்லாஹ்வுடைய ஏவலையும் விலக்கலையும் நஸறா உடைய சட்டங்களைப் போலவும் நாம் எண்ணவில்லை என்று நம்முடைய நப்சில் ஆலோசித்ததில் என்னை அறியாமலும் அறிந்தும் கலம் கடந்துவிட்டதால் அந்தந்த பணரில் குர்ஆனுடைய ஆயத்துக்களைக் கொண்டு நிறப்பிவிடலாம் என்று நிறுத்திக் கொண்டேன்.

இப்போது இந்த ஆயத்துக்களை எழுதினதில் உசாராக வேண்டியதென்ன என்றால் குர்ஆனைக்கொண்டு ஈமான் கொண்டவனாக இருந்தால் இப்பேர்ப்பட்ட நீதிமொழிகளாயுள்ள பொருட்கள் எப்போதும், அவனுடைய கல்பில் யாது பூட்டுகிறதாயும் அச்சம் பூட்டுகிறதாயும் பயங்கரம் பூட்டுகிறதாயும் இருப்பதுடன் துன்யாவை வெறுத்து ஆகிறத்தளவில் முன்னோக்கக் கருத்துவைத்து முன்னோக்கி விடவேணும். அப்படியில்லாமல் குர்ஆனைக் கொண்டு அவன் ஈமான் கொண்டவனாக மாட்டான்.

ஆனால் அறபி தெரிந்தவர்களுக்குத்தானே குர்ஆனுடைய மஃனாத் தெரியும். அறபி ஓதாதவர்களுக்கு எப்படித் தெரியுமென்று குர்ஆன் என்பது இன்னதென்றியாத அறிவீனன் எண்ணினதுபோல் எண்ணாதே. அறபியைப் படித்து அவாமுகல்குகள் ஆலிம் என்று அழைக்கப்படுகிறவர்களில் எவ்வளவோ பேர்கள், குர்ஆன் என்பது எவ்விதம் வந்தது அதினுடைய லாஹிர் என்ன? பாத்தின் என்ன? ஹத்தென்ன மத்தளவு என்பதென்ன என்றியாதிருப்பதுடன் வஃலு உபதேசத்தில் மழைமாரி பொழிவதுபோல் நூறு, இருநூறு ஆயத்தை ஓதி மஃனாச் சொல்வது உன்னை மருட்டி விடவேண்டாம்.

வேதத்தைக் கொண்டு ஈமான் கொள்கிறதை விபரிக்கும் இடத்தில் சொல்கிற சொல்லில் சக்கையை எடுத்தெறிந்து போட்டு அதன் சத்தை எடுத்துக் கொள்வாயாகில் விளங்கிக் கொள்வாய். ஆகையால், ஈமானுடைய பணர்களில் ஒன்றொன்றாய் விபரிக்கிறேன்.

முதலாவது எழுபத்தேழு பணர்களையும் யோசிப்பதில் ஒவ்வொரு பணரையும் சொன்னபடி கல்பால் நம்பிக் கொள்கிறதுதான் ஈமானாகும், வெளியில் நடத்தாட்டுவதுதான் இஸ்லாம் என்னும் வழிப்பாடாகும்.

ஏனென்றால் உண்மை என்பது கல்பளவில் சேர்க்கப்பட்டது ஆகிலும் பானையிலிருந்தால் அகப்பையில் வருமென்ற பழமொழிபோல் வெளியில் வருமேயல்லாது வேறில்லை. இஸ்லாம் என்பது வழிப்பாடும் தலைசாய்க்குதலுமாயிருப்பதால் வெளியுறுப்பிலிருந்தால் இஸ்லாம் என்று சொல்வோம்.

ஆகிலும் கல்பும் வழிப்பட்டு தலை சாய்த்தால்தான் அது நிறைவேறும். லாஹிரின் வெட்டுக்குத்து முதலானவைகளுக்காக கோலத்தை பார்த்துக் கொள்வது அதினுடைய அந்தரங்கத்தை விளங்கிக் கொள்வதை விட்டு உன்னை மருட்டி விட வேண்டாம்.

ஆகையால் அது இரண்டுமொன்றுதான் அல்லது வேறேதான் என்ற விளக்கத்தில் முற்பட இலேசாகிய சைக்கினை காட்டியிருப்பதும் தவிர விளக்கமுடையவன் அது இரண்டும் அறபிச் சொல்லானதால் தன்னுடைய பாஷையில் அதற்கு வழிப்பாடென்றும் உண்மை என்றும் பொருளை வைத்துப் பார்த்தால் அதினுடைய விதற்பத்தையும் இரண்டும் ஒன்றுதான் என்பதையும் விளங்கிக் கொள்வான். விளக்கமில்லாதவனுக்கு எவ்வளவுச் சொன்னாலும் உழப்பமாகத் தோற்றமல்லாது வேறில்லை.

பஸ்லுன் பீதஹ்க்கீகி ஷுஃபில் ஈமான் - ஈமான் உடைய பணருகளை இன்னதென நிச்சயமாகத் தீர்ப்புச் செய்வதிலுள்ளப் பிரிவு முதலாவது அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்கிறது. அதெப்படியானால், **லாஇலாஹ இல்லல்லாஹு** என்ற சொல்லுடைய மூலப்பொருள் அவனுடைய கல்பில் யாதொரு துளும்புதலில்லாமல் நிச்சயமாய் அமைந்து விடுகிறதுதான் அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வதாகும். அதில் வெளிரங்கமாய்ச் சொல்வதிலுள்ள கிலாபை முற்பட எழுதிப்போட்டோம். ஆனால் இந்தச் சொல்லையும் பொருளையும் எந்தப்பாஷையால் சொன்னாலும் சரிதான். அதன் பொருள் நாயன் அல்லாஹ் என்ற பராபர வஸ்துவே ஒழிய இல்லை என்றதாக இருக்கும்.

இந்த ஒரு சொல்லில் கலிமா உடைய வெளிப்பொருளும் மூலப்பொருளும் அகப்பார்வையுடைவர்களுக்கு வெளியாகி விட்டது. ஆகையால் இது கல்பில் வேற்றுமையன்றி உறைந்து போகும்படித் தெண்டிப்பதில் மற்ற பணர்களை கல்பால் உண்மையாக்கி வெளியுறுப்பால் தெண்டிப்பதால் ஈமான் நிரப்பமாகுமே தவிர விருதாவில் கலிமாவுடைய மஃனாவென்று பலதையும் இழுத்துப் பேசுவதால் யாதொரு பலனில்லை.

நம்முடைய நாயகமார்களாகிய சஹாபாக்களுடைய நாளையில் இல்லாத பேச்சுக்களை கலாமுடைய இல்மையுடையவர்களும் சாஹிபுன்னளரு என்னும் நோட்டக்காரர்களும் கித்தாபுகளாய் கோர்வை செய்திருக்கிறதுகளைச் சிலர்கள் தமிழ்ப் பாஷையிலும் தர்ஜுமாச் செய்து ஏழைகளுடைய விளக்கங்களை தூரமாக்கி விட்டார்கள்.

அதுகளைப் பார்த்து மருண்டு போகாமல் சொல்வதைக் கேட்டு உடனே கல்வத்திலாகி *அஸ்லு ஹாதாபித்துன் வபற்வுஹாபிஸ்ஸமாஇ* - அந்தக் கலிமா உடைய அடிமூடென்னும் வேர் மண்ணிலும் அதனுடைய பணர் விண்ணிலுமாகி *துவத்தீ உக்லஹா குல்லஹீனின் பிஇத்னிறப்பிஹா* - அதையுடையவனுடைய உத்திரவு கொண்டு எவ்வேளையிலும் வாக்காலும் கருத்தாலும் அளவிடக்கூடாத அதன் ரசத்தை ஒழுகச் செய்வதால் அந்த அமிர்தத்தை அருந்தி கலி தீரும்படிக்கும் தீர்ந்தாலும் தாங்காத மையலில் மஸ்தாகி விடத் தெண்டித்துக் கொள். அதுவே தவிர மேலைக்கு வாக்கப்படலாம். கழுத்தே சுகமாயிரு என்ற பழமொழிபோல் செத்ததின் பின்னால் பெற்றுக் கொள்ளலாம் என்ற பேதமைக் கருத்தை எடுத்தெறிந்து விடு.

ஆனால் கருத்தையுடையவனுக்கு கலிமா உடைய பொருளுக்கு மேலே எழுதப்பட்டதே போதுமானது. ஆகிலும் பலபேர்களுடைய பலக்குழப்பச் சொற்களைப் பார்த்து பலரும் மதிமயங்கிப் பரிதவிப்பதுபோல் பாவியாகிய நப்சே நீயும் மயங்குவதால் உணர்ச்சையாகக் கேட்டு உறுதி பெற்றுக்கொள்.

அதென்னவானால் அல்லாஹ்வென்ற பராபரவஸ்து கருத்தாலும் நினைவாலும் ஊசாட்டத்தாலும், சொல்லாலும், செய்கையாலும் ஒன்றென்றும், இரண்டென்றும், பலதென்றும், பெரிதென்றும், சிறிதென்றும், ஆணென்றும், பெண்ணென்றும,; அலியென்றும், கருமை, வெண்மை என்ற பஞ்சவர்ணத்தில் ஒன்றென்றும்; அறு சுவையில் ஒன்றென்றும், இருளென்றும், ஒளிவென்றும், சூடு, வறட்சி, குளிர்ச்சி, சீதளமென்ற குணங்கள் என்றும், வெளியென்றும், உள்ளென்றும் வெளியில் ரூபமில்லாமல் கருத்தால் அவைகள் உண்டென்பதைத் தட்டக் கூடாத குல்லியய்யாகி உமூறென்ற புத்தி யோசனை அறிவென்பதுபோல்கெ உள்ளது என்றும் சொல்லப்படாது.

இன்னமும் இந்த அல்லாஹ்வெனும் பராபர வஸ்துவென்ற சொல்லால் அதன் பொருளடங்கிப் போறதை விட்டும் கடந்து அதற்கும் மேலுக்கு மேலாக இருக்கிற இப்போதும் எப்போதும் அப்போதும் சொல்லப்பட்டடிருக்கிற எந்தச் சொல்லும் சுட்டிக் காட்டாத ஓர் உண்மைக்குச் சொல்லப்படுகிறது. அப்படியானால் கண்டிப்பு, ரூப சொரூப அரூபமான எந்த வஸ்துவாது அதைத் தவிரவேறேயாகுமா? ஆகமாட்டாது.

ஏனென்றால், வேறே உண்டுமென்றால் பராபர வஸ்துவென்ற பொருள் நிற்கமாட்டாது. நீ நெடுநாளாகத் தோன்றிக் கொண்டிருந்த வேற்றுமையை விட்டுவிடு. அதுமோட்டுத்தனமான ஷிர்க்காக இருக்கும்.

ஏனென்றால் அல்லாஹ் எங்கே இருக்கிறான் என்றால், தூணுக்குள்ளும், துரும்புக்குள்ளும் இருக்கிறான் என்று உன்தன்னை ஈமானுள்ளவனைப் போல் உன்னுக்குள்ளே உன்னை நீ மெய்த்தவனாகச் சொன்னதே சுத்தப்பிசகாக இருக்கிறது. ஏனென்றால் தூணுக்குள்ளே என்றால் வெளியிலா இருக்கிறது. அல்லது தூணைப் பிளந்தால் உள்ளே இருப்பானோ அல்லது தூணுடைய கண்டிப்பை ஒர் எள்ளில் 70,000 ஆகப் பிளந்தாலும் நீங்கி விடுவானோ?

அல்லது ஒருவுன் இந்த தூண் ஹக்காக இருக்குமோ என்றால் அல்லவென்று சொல்ல நாவுண்டோ அல்லது ஆம் என்று சொல்ல நாவுண்டோ லாஷரீகலகு- அவனுக்கு இணையில்லை என்று நீ தௌஹீது செய்தாயே! அப்போது உனக்கு புத்தி எங்கே போயிருந்தது? இணையென்பது வேறே வஸ்து உண்டாகியிருந்தால் இணையென்ற இரண்டாச்சுது அல்லவா?

ஆனால் உன்னுடைய மடத்தனம் பெரிதல்ல. உனக்குச் சொல்லி தந்தவனும் அப்படியே சொன்னான். ஆனால் சொல்வார்கள் சொன்னால் கேட்பாருக்கு மதி இல்லையா? ஆனால் லாஹிரையுடையவர்கள் எல்லாத்தையும் நீக்கிப்போட்டு ஹக்கென்பது கண்டிப்பான வஸ்துவு ஒன்றுமில்லை என்று அவர்கள் கருத்திலே எண்ணுகிறார்கள்.

ஆகத் தீர்மானமான ஒளிவென்பதுபோல் அப்படியானால் கோடிச் சூரியனுடைய பிரகாசத்தைப் பார்க்கிலும் கடந்ததென்று எண்ணுகிறார்கள். அப்போது தீர்மானம் ஒளிவென்று அவர்களுடைய கல்பில் ஊசாடினால் ஒருவேளை பஞ்சவர்ணத்தில் ஒன்றை இழுத்துக் கொண்டு வரும். அப்படியானால் நிறத்துக்கெல்லாம் அசலாகிய வெண்மையைத்தான் எண்ணப்போதும். அப்படியானால், அவர்கள் வெளிரங்கத்தில் நிறமில்லையென்று சொன்னதை கல்பில் உண்டென்று தரிபடுத்தினதாச்சுது. சிற்றெறும்புக்குப் பயந்து சிங்கத்தின் குகையில் அகப்பட்டு ஜீவனை இழந்தாச்சுது.

அப்படியானால், ஒரு வஸ்துவு அது தன்னைவிட முந்தினதாச்சுது. ஏனென்றால், நிறத்தை உண்டாக்கினவன் அவன்தானாகயிருக்க நிறத்தை அதிலேயே வைத்தால் படைக்கப்பட்டதாச்சுது.

ஆனால் அஷ்அரிய்யாக்களிலும், மாத்துரீதிய்யாக்களிலும் சிலர்கள், லாஇலாஹ என்றால் ஒருநாயனுமில்லை. என்பதற்கு இலாஹு என்பது இலாஹுன் பாத்திலென்றும், இலாகும் முகய்யதென்றும், இலாகுன் ஹக்கென்றும் இலாஹுன் முத்லக்கென்றும் பிரித்ததில் அந்த மஃனாவை களங்கமற அவர்கள் சொல்லவும் இல்லை. அல்லது விளங்குகிறவர்கள் விளங்குகிறார்கள் இல்லை.

நீ கருத்தை உடையவனாக இருந்தால் அல்லாஹ்வை தவிரவுள்ள வஸ்துவை வணங்கப்படவே இல்லை என்றும், வணங்கப்படுவதில் இன்சானிய்யத்தாகிய சூரத்தில் வெளியுறுப்பையும், உள்ரங்கமான ஐயறிவையும் குவ்வத்துகளையும் போலென்றும் நாம் சைக்கினை காட்டி இருப்பதை களங்கமற விளங்கி இருந்தாயாகில் இதுபோல்கொற்றதில் உனக்கு மூடலாகமாட்டாது.

ஆனால் ஒரு நாயனுமில்லை என்று நபிச் செய்த கருத்தை அஷ்அரிய்யாக்களில் சிலர் சொன்னதைப் பார்த்து மயங்காமல் நாம் மஃனா எழுதினதை ஆராய்ந்தால் உனக்குப் போதும்.

ஆகிலும், நம்முடைய நாயகம் அப்துல் கரீமுல் ஜியல்லி ரலியல்லாஹு அன்ஹு சொல்வதை இதில் வைத்துப் பார். குப்பாறுகள் முஷ்ரிகுகள் சகலரும் வணங்குகிற ஒரு நாயனும் அல்லாஹ்வென்ற பராபர வஸ்துவைத் தவிரவுள்ளது இல்லை ( இதன் கருத்து மேல் சொன்ன லாஇலாஹ இல்லல்லாஹு என்னும் கலிமாவுடைய அடிமூடு மண்ணிலும், பணர் விண்ணிலும் நிறைந்தது. ஏதோ அதை விட்டும் இவர்கள் வணங்குகிற நாயன் நீங்கியதில்லை. அப்படி நிறைந்தது ஏதோ அதை மறந்து குறைந்ததை வணங்குகிற குப்பாருகளை நேர்காட்டக் கருதியே அப்படி எழுதினார்கள். அப்படிகொற்றக் கருத்தைத் தாறுமாறாய் விளங்குகிறது. அறியாமை அல்லது பொறாமை) என்றாக இருக்கும்.

இதற்காகத்தான் நூஹு அலைஹிஸ்ஸலாமுடைய கவ்முகள், வுத்தது, ஸுவாவு எகூது, எவூகு, நஸ்று என்ற புத்துகளை ஹக்குடைய மள்ஹறல்லை என்று விட்டு விடுவார்களானால் அந்த கத்ருக்கு ஹக்கில் நின்றும் அவர்கள் அறியாதவர்களாக ஆகிவிடுவார்கள் என்று

நமதாண்டவர்கள் ஷெய்குல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னதை முற்பட எழுதப்பட்டது.

இப்போது எழுதப்பட்ட மஃனாவின்படி ஹக்குத் தஆலாவுக்கு வாஜிபான ஸிபாத்திருப்பதும், ஹக்குடைய வுஜூதில் மாய்ந்து போவதுபோல் முஸ்தஹீலான சிபாத்திருப்பதும் ஹக்குடைய வுஜூதில் மீளுமேயல்லாது வேறில்லை. உன்னை இந்தச் சொல் அமளி வருத்த வேண்டாம்.

*(ஷர்ஹு*

*ஐ முஸ்தஹீலான ஸிபாத்து இருபதும் ஹக்குடைய உஜூதில் மீளுமென்று நான் சொன்னச் சொல் உன்னை அமளி வருத்தவேண்டாம் என்று உனக்கு நான் சொன்னபோதிலும், நீயாகிறவன் ஹக்குடைய நாற்பது மர்தபாவில் ஐந்தாவது மர்தபாவாகிய உலூஹிய்யத்துடைய மற்தபாவில் அவன் அவதாரமெடுத்து வெளியாகிற விதத்தை இன்னவிதமென்று அறியாதவரை உனக்கு அமளி வருத்தாமலிருக்க மாட்டாது.*

*ஆனதால், ஹக்குடைய அஹதிய்யத்து, வஹ்தத்து, வாஹிதிய்யது, உலூஹிய்யத்து என்ற மர்தபாக்களுடைய வித்தியாசம் இன்னதென்றும், ஹக்குடைய உஜூதின் தனஸ்ஸுலாத் என்ற இறங்குதல்கள், இன்னவிதம் என்றும் குல்ல யவ்மின் ஹுவ பீஷானின் எல்லாநேரமும் ஷுவூனுல் ஹுவிய்யத் என்றும் வெளியாகுதலுடைய காரியத்திலிருக்கிறான் என்பது இன்னவிதமென்றும் இன்னும் **ஹூ** என்கிற இஸ்முடைய அதிகாரம் சகல ஆலம்களிலும் அதன் சறாயத்து என்னும் விஷமேறுதல் நேமமாய் நடந்து கொண்டேயிருக்கிறது இன்னவிதமென்றும்*

*இன்னமும் உஜூதுடைய நாற்பது மற்தபாக்களாகிய நாற்பது மலாஹிர் என்னும் அவதாரங்களைக் கொண்டு ஹக்குடைய உஜூது வெளியாகி ஒவ்வொரு மர்தபாவும் தனித்த ஒவ்வொரு குணாகுணத்தைக் கொண்டு குணபாடு செய்து கொண்டிருந்தபோதிலும் அந்தந்த குணபாடுகளெல்லாம் ஹக்குடைய குணபாடே அல்லாது வேறில்லை என்று அறிந்துக் கொள்வதுடன்,*

*அந்த நாற்பது மர்தபாவில் உலூஹிய்யத் என்ற ஐந்தாவது மர்தபாவில் அவன் வெளியாகி அந்த மர்தபாவுக்குத் தக்க அவதாரங்களைக் கொண்டு குணம் கொள்கிற விதத்தை நாயகம் இன்சான் காமில் அப்துல் கரீமுல் ஜியல்லிய்யி ரலியல்லாஹு அன்ஹு தங்களுடைய இன்சான் காமிலென்னும் கிதாபில் நான்காவது பாடமாகிய உலூஹிய்யத்துடைய பாபில் சொன்னபடி களங்கமற அறிந்து கொள்வாயாகில் இதுபோல் ஒத்த சொற்களை இனிமேல் கேட்டாலும் உன்னை அமளி வருத்தப்படமாட்டாது. ஆனதால், உலூஹிய்யத்துடைய மற்தபாவில் அவன் வெளியாகிற விதத்தை கொஞ்சம் சொல்கிறேன் கேள். வஃலம்.*

*அறிந்து கொள்: நாற்பது மர்தபாவில் ஒன்றாவது தாத்து. இரண்டாவது அமா. மூன்றாவது அஹதிய்யத்து. நான்காவது வாஹிதிய்யத்து. ஐந்தாவது உலூஹிய்யத்து. தாத்து அமா*

*அஹதிய்யத்து இந்த மூன்றும் தாத்து தனக்கே சொந்தமாகிய கதீம் பூர்வீகமாகிய மர்தபாவாக இருக்கும்.*

*இந்த மூன்றிலும் ஒரு சிபத்துக்கும் வெளியாகும் துறை கிடையாது. மேலும் வாஹிதிய்யத்தாகிறது அஹதிய்யத்தென்ற தாத்தில் நின்றும் ஹக்குடைய முந்தின தனஸ்ஸுலாத் என்ற இறங்குதலாக இருக்கும். உலூஹிய்யத்தாகிறது ஹக்குடைய மழாஹிறுகளில் நின்றும் மேலான நிறப்பமான மர்தபாவாகயிருக்கும்.*

*ஏனென்றால், அந்த மர்தபாவில் தாத்து, சிபாத்து அஸ்மா, அப்ஆல் சகலதுக்கும் மழாஹிர் என்னும் வெளியாகும் துறைகளாகிய அவதாரங்களுண்டும். அதுபோல் இந்த உலூஹிய்யத்தாகிறது ஹக்குடைய தாத்து, சிபாத்து அஸ்மா, அப்ஆல் சகலதிலும் வெளியாகும். இன்னமும் ஹக்குடைய இந்த உலூஹிய்யத்தென்ற மர்தபாவில் சகலதும் மாய்ந்து போகும்.*

*ஆனதால்தான் இந்த உலூஹிய்யத் என்ற மற்தபாவாகிறது நாயகத்தனத்தளவிற் சேர்க்கப்பட்ட மற்தபாவையும் அடிமைத்தனத்தளவில் சேர்க்கப்பட்ட மர்தபாவையும் சேகரித்துக் கொள்ளும். இதற்காகத்தான் ஹக்குத்தஆலாவுக்கு இந்த உலூஹிய்யத்தென்ற மர்தபாவில் அல்லாஹ் என்கிற பேர் உண்டானது.*

*ஏனென்றால் அல்லாஹு என்கிற இஸ்மு எல்லா அஸ்மாக்களையும் சேகரித்துக் கொண்டிருப்பதால்தான் அதற்கு இஸ்முல் அஃலம் என்று சொல்லப்படும். இன்னமும், கீழக்கரை தைக்கா சாஹிபு வலியுல்லாஹ் நாயகமவர்கள் தங்களுடைய நாற்பது மாலைகளில் ஒன்றான புதூஹாத்து மாலையில் சொல்கிறார்கள்,*

*'அல்லா வென்றது அஸ்மாவினில்*

*அஃலமென்றதுக்கு அத்தாட்சி கேள்*

*எல்லா இஸ்முக்கும் மாற்ற முண்டும்*

*இது எல்லாத்தையும் கூட்டிக் கொள்ளும்*

*இல்லாமை என்ற அதமென்றது*

*இதுக்கு மாற்றமாம் உஜூதென்றது*

*கல்லாகும் கல்கும் இதுபோலொற்ற*

*மாற்றம்களை எல்லாம் சேர்த்ததாமே*

*என்றும் உண்டானவனில் ஒரு வஸ்துவும்*

*உடயோனல்லாமல் இல்லையது*

*உண்டானது எல்லாம் அவனைக் கொண்டு*

*உண்டானது அதுதன்னைக் கொண்டு*

*உண்டானதுவல்லை அதுக்கு நியாயம்*

*இல்லை என்ற நியாயமது*

*என்று இதுதனை லவாக்கிஹூல்*

*அன்வாறுல் கிதாபில் மொழிந்தார்.'*

*இன்னமும்*

*'அவனேயல்லாமல் அவடத்திலே*

*இல்லை என்றதின் அர்த்தமறி*

*அவனேயல்லாமல் தாத்து கொண்டு*

*உண்டான வனல்லால் இல்லை என்றும்*

*அவனின் படைப்புகளுண்டானது*

*அவனுண்டாக்கி வைத்தது கொண்டுதான்*

*அவனின் படைப்பை வேறேன்ற சொல்லும்*

*அதற்குமாற்றமும் குற்றமாமே'*

*இன்னமும் ஹகீகத்து மாலையில்,*

*'அல்லாயிரக்கிய இக்லாஸுலே*

*அவனும் இன்சானும் ஒன்றாமென*

*சொல்லியிருக்கிற சொல்லைப் பார்க்கில்*

*சிர்றுல் இன்சான்தான் அவனாமென்றும்*

*எல்லாற்கும் இது வெளியாகுமே*

*இன்சான் காமிலில் வந்ததனால்*

*சொல்லாத சொல்லைச் சொன்னபேர்க்கு*

*சுவர்க்கம் தூரமென்று அருளச் செய்தார்'*

*இன்னமும்,*

*'அல்லா பெரியவனானதினால்*

*அவனில் மறையவே நான் தேடினேன்*

*அல்லாமலிக்கிப்ப மறைவானதால்*

*அவனே கியாமத்தில் ராஜாவானோன்*

*அல்லா ஹக்கும் கல்குமானதால்*

*அவனே இய்யாக்கவென்றுரைத்தான்*

*அல்லா றதூலாக வந்த சிர்றை*

*அறிந்த பேர்கள்தான் அறிவார்களே'*

*என்றும் சொல்லி இருக்கிறார்கள்.*

*இன்னமும் ஹக்குடைய உஜூது - உள்ளமை, அதம் - இல்லாமை இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று மாற்றமானது. இது இரண்டையும் இந்த உலூஹிய்யத்து பொதிந்து கொள்ளும். அதுபோல், கதீம் பூர்வீகம், ஹதீது புதுசு, ஹக்கு நாயன் கல்கு அடிமை என்பதுபோல் ஒன்றுக் கொன்று மாற்றமாகிய இரண்டு மாற்றத்தையும் இந்த உலூஹிய்யத்து சேகரித்துக் கொள்ளும்.*

*இன்னமும் இந்த உலூஹிய்யத்துடைய மர்தபாவில் வாஜிபுல் உஜூதாக வெளியானது முஸ்தஹீலாக வெளியாகும். வாஜிபுல் உஜூதாக வெளியானதுக்குப் பின்னாலே, இன்னமும் முஸ்தஹீலாக வெளியானது வாஜிபுல் உஜூதாக வெளியாகும்.*

*முஸ்தஹீலாக வெளியானதுக்குப் பின்னாலே இன்னமும் இந்த உலூஹிய்யத்துடைய மர்தபாவில் ஹக்காகிறது கல்குடைய சூறத்தைக் கொண்டு வெளியாகும். அதாவது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் றஜத்து றப்பீ பீஸூறத்தி ஷாபின் அம்றத - எனது நாயனை முகவரை கீறாத வாலிபனுடைய சூறத்தில் கண்டேன் என்று சொன்னதுபோல் இன்னமும் கல்காகிறது ஹக்குடைய சூறத்தைக் கொண்டு வெளியாகும்.*

*அதாவது அல்லாஹுத்தஆலா கலகல்லாஹு ஆதம அலா சூறத்திஹி - ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை தன்னுடைய சூறத்தில் படைத்தேன் என்று அல்லாஹுத்தஆலா சொன்னதுபோல் இன்னமும் இந்த உலூஹிய்யத்தில் ஹக்குடைய உஜூது வெளியாகுகிறதாகிறது ஹக்கு, கல்கு இரண்டையும் சேகரித்துக் கொள்வதில் நின்றும், இரண்டையும் பிரிக்கிறதில் நின்றும் இந்த மர்தபா தகுமாகயிருக்கிறது என்பதின் படிக்காக இருக்கும்.*

*இன்னமும் இந்த உலூஹிய்யத்தில் ஹக்குடைய உஜூதில் அதம் வெளியாகுகிறதாகிறது கல்குகளுடைய சகல காரியங்களும் ஹக்குடைய உஜூதில் நின்றும் வெளியானதுபோல்*

*மடங்கியும் ஹக்குடைய உஜூதிலேபோய் அமைந்து போய்விட்டது. மாய்ந்து விட்டது என்பதாகயிருக்கும். அதுவே தவிர ஹக்கை விட்டும் தப்பிப் போய்விட்டது, இழந்து போய்விட்டது என்ற பொருள் இல்லை.*

*இன்னமும் அறிந்து கொள். ஹக்குடைய அஸ்மாக்கள் இரண்டு வகையாக இருக்கும். ஒருவகை ஆலத்தளவில் வெளியாகும். மற்றது ஆலத்தளவில் வெளியாகமாட்டாது. அப்படி வெளியாகுவதில் முஜ்மல் - மொத்தமாய் மூடலாக வெளியாகுகிறது ஒரு வகை. முபஸ்ஸலுன் - பிரிவாக வெளியாகுகிறது ஒருவகை.*

*மூடலாகச் சகலதையும் பொதிந்து கொண்டு வெளியானது இன்சானாகயிருக்கும். பிரிவாக தனித்தனியே வெளியானது இன்சானைத் தவிர உள்ள படைப்புக்கடங்கலுமாக இருக்கும். இதற்காகத்தான் மாலஹர்த்து பீசையின் கலுஹூர்பில் இன்சானி - அல்லாஹூத்தஆலா இன்சானிலே நான் வெளியானதுபோல் வேறே ஒரு வஸ்துவுலே நான் வெளியாகவில்லை என்று சொன்னான்.*

*மேலும் இன்சானைத் தனக்கு கலீபாவாக ஆக்கி ஆலத்திலுள்ள ஆலோசனைகள் நுஸூலாலும்(இறக்கத்தாலும்) உறூஜாலும்(ஏற்றத்தாலும்) உண்டான காறுபாருகள் சகலதையும் அவன்வசம் சாட்டி ஆதி முதலாய் நூறு முஹம்மதிய்யா படையுண்ட நாள் தொடுத்து **கதீபுல் அப்யலு** என்கிற தலம் வருமளவும் அதற்கு அப்பால் **மலானி ஹாயத்த** - தீர்ச்சையற்ற தலமாகவும் (தஸர்றுபாத்து) ஆக்கி அளிக்க உத்தரவும் கொடுத்து,*

*அவரை தனக்கும் தன்னுடைய மக்லூகாத்துகளுக்கும் நடுவே வாஸித்தாவாக நிறுத்தி படைக்கப்பட்ட வஸ்துகள், ஆண்டவனுடைய தஜல்லியைக் கொண்டு கரிந்து போகாமல் காப்பாற்றக் கூடியத் திரையாக ஆக்கி இருப்பதால் இந்த இன்சானாகிறவன் ஹக்குடைய உலூஹிய்யத்துடைய தஜல்லியில் வெளியாகிவிட்டான்.*

*அவ்விதம் உலூஹிய்யத்துடைய தஜல்லி ஒருவனில் வெளியாகி விடுமேயானால் அந்த ஒருவன் ஹக்கிடத்தில் சில சொந்தமான தரஜா பதவிகளைப் பெறுவான். அப்படிப் பெறும்போது அவன் ஆலத்தார் சகலருக்கும் ரஹ்மத்தாக ஆகிவிடுவான். ஆனதால் அவன் ஆலத்திலுள்ள மனிதர்களில் இல்லை ஐ நேர்வழியான மார்க்கத்தையுடையவர்கள், நிஹலை - வழிகேடான மார்க்கத்தையுடையவர்கள் சகலருடைய யோசனைகளையெல்லாம் சரிகாணுவது அவருடைய சொந்தத்தில் நின்றுமுள்ளதாயிருக்கும்.*

*மேலும் அவர்போல் உள்ள நிரப்பமாகிய முஹக்கிகீன்களைத் தவிர முஸ்லிமீன் மூமினீன் முஹ்ஸினீன் ஆரிபீன் சகலரும் உள்பட இல்லை. நிஹலையுடையவர்கள் சகலருடைய யோசனைகளை எல்லாம் சரி காணாதிருப்பதும் அவருடைய சொந்தத்தில் நின்றுமுள்ளதாக இருக்கும்.*

*ஏனென்றால், அவராகிறவர் அந்த மில்லை நிஹலையுடையவர்களில் நின்றும் சீதேவியானவர்கள் இன்னகாரணத்தால் சீதேவியானார்கள் என்றும், மூதேவியானவாக்ள் இன்ன*

*காரணத்தால் மூதேவியானார்கள் என்றும் அந்தந்த காரணங்கள் சகலதும் ஹக்கில் நின்றுமுள்ளதென்று களங்கமற அறிவார். அறிந்துக் கொண்டதின் பின்னால் எல்லாக் கருமங்களையும் அவனளவிற் சாட்டிப்போடுவார்.*

*மேலும் அல்லாஹுத்தஆலா அலா இலல்லாஹி தஸீறுல் உமுறு அறிந்து கொள். சகல காரியங்களும் அல்லாஹ் அளவில் மீளும். அவனிடமிருந்து வந்ததுபோல் இவ்விதமாக நீயும் களங்கமற அறிந்து தெளிந்திருப்பாயாகில் இதுபோல் உள்ள அமளி வருத்துகிற காரியங்களில் தட்டழிய மாட்டாய்.)*

ஏனென்றால் *மரில்லத்து பலம் தஉத்னீ* - நான் நோயுற்று இருந்தேன். என்னை நலம் விசாரிக்கவில்லை என்பது போற்கொற்ற ஹதீதுகளையும் ஆகமொத்த தொகையில் *குல்லுசெய்யின் யர்ஜிவு இலா அஸ்லிஹி* - எல்லாம் அசலளவில்தான் மீளுமென்பதையும் பார்த்துக் கொள்.

வாஜிபான சிபத்துக்களை அறிந்திருப்பாய். ஆகிலும் அதை பலவிதமாக விளங்காதே. அதில் சொல்லுகிற நுணுக்கம்போல் ஆராய்ந்துபார். எப்படியானால், ஹயாத்தென்னும் சீவனென்ற ஹக்கீகத்து ஒன்றேயல்லாது வேறில்லை. அல்லாஹ்வுக்கு *ஹய்யுன்* - சீவனுடையவன் என்றும், மலக்குக்கும் ஹய்யுன் சீவனுடையவர்கள் என்றும் சொல்லப்படும். இன்சானுக்கும் மற்றும் ஹயவான்களுக்கும் ஹய்யுன் சீவனுடையவன் என்று சொல்லப்படும். அதில் அல்லாஹ்வுடைய சீவனுக்குப் பூர்வீகமானதென்றும் மற்றதுகளுடைய சீவனுக்குப் புதுசானதென்றும் சொல்லப்படும்.

அதில் அல்லாஹ்வுக்கு பாத்தின் என்னும் மறைவானவன் என்கிற இஸ்முண்டாகி இருப்பதுபோல் லாஹிறென்னும் வெளியானவன் என்கிற இஸ்முண்டாகி இருக்கிறது. அடிமை என்னும் குறிப்பு உண்டானதே அவ்வல் என்கிற இஸ்மை அவனுக்குத் தரிபடுத்தி வைத்தது அடிமை என்பது பனாவாகி விடுகிறதே. ஆகிறென்கிற இஸ்மை தரிபடுத்தி வைக்கிறதற்காயிருக்கிறது அடிமையிலும் அவ்வல் ஆகிர், லாஹிர், பாத்தின் என்கிற இஸ்மை நடத்தாட்டி வைக்கப்படுகிறது.

அப்படியானால் சிபாத்து இருபதும் உம்முஹாத்துல் அஸ்மாவாகிய இந்த நாலு இஸ்மும் யாருக்கு இருக்கிறது என்று பார். இதைப் பார்க்கிலும் விபரமாக எழுதக் கூடாது. பொன் என்பது பூர்வீகம். அதிலே நின்றும் பலவிதமாகிய ஆபரணங்கள் உண்டானவுடன் வாளியென்றும், மணியென்றும் புதுசான பேர் உண்டானதால் பொன்னுடைய ஹகீகத்து நீங்கிப் போகுமா? அந்த பூர்வீகமான பொன்தான் மணியென்ற பேர் கொண்டதா? வேறே எதுவும் கொண்டதா? இந்த ஒரு அசலை களங்கமற அறிந்து கொண்டாயாகில் சிபாத்திய்யாத்தாகிய அஸ்மாக்களையும் விளங்கிக் கொள்வாய். அப்படியானால், வேற்றுமையே கிடையாது என்று அறிவாய்.

ஆகையால், பராபரவஸ்து என்றதுதான் பல பல சூறத்தென்னும் உடுமானம் உடுத்தி வெளியாகுதேயல்லாது வேறில்லை. இன்சான் என்ற ஹகீகத்து பலவிதமாய் வெளியாகி இருப்பதுபோல் ஹக்கையும், கல்கையும் சேகரித்துக் கொண்டது இன்சான் என்னும் நுஸ்கா

என்ற பிரதியேயல்லாது வேறில்லை. இன்சான் காமிலில் எல்லாம் பட்டுருகி நிற்கும். மற்றவனில் எல்லாம் உண்டாகி இருப்பதுடன் மறைவாக இருக்கும்.

கல்லு அல்லது கரிகட்டை, தண்ணீர் மற்றும் நீத்த வஸ்து, இரும்பு, வெள்ளி, செம்பு ஆக மொத்தத் தொகழயின் ஸபாது வதி முதலானவைகளில் சந்திர, சூரியனுடைய பிரபை விழுவதுபோலும் சுத்தமயப்படிகத்தில் அதன் பிரபை வீசுவதுபோலும் இன்சான் காமிலுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் அதன் தகுதிக்குத் தக்கது பிரித்துக் கொள்ளவும்.

இதற்காகத்தான் *கலகல்லாஹு ஆதம அலாசூறத்திஹி* - அல்லாஹுத்தஆலா ஆதமை அவனுடைய சூறத்தில் படைத்தான் என்றும் *மன் அறப நப்சஹு பகத் அறப றப்பஹு* - தன்னை அறிந்தால் தன் நாயனை அறிவான் என்றும், கலீபாவென்னும் மனு ஈசன் என்றும் இவனுக்குச் சொல்லப்பட்டது.

ஆகையால் குணங்குடியார் கலிமாவுடைய மஃனாவில் சைக்கினை காட்டினதே குறியான மஃனாவாகவும் அதி தீபர பக்குவத்தையுடையவர்களுக்கு அதுவே போதுமானதாகவும் இருக்கிறது.

(அவனு மிவனு மவனை யறியார் அவனை யறியில் அறிவானு மில்லை. அவனும வனு அவனை யறியில் அவனும் அவனு மவனிவனாமே)

நரம்பு தசைத்தோலெலும்பு

கொண்டு நாட்டும் வினைகளும் காட்டுத் துரும்பு

நிறம்புந்துயர் கொள்ளுடம்பு

என்று நில்லாதென்றெண்ணி இல்லல்லாவை போற்றி

இரக்கத் துணிந்து கொண்டேனே என்ற ஆனந்த களிப்பிலும் இன்னமும் முஹம்மதிப்னு ஹபீபு நெய்னாவென்ற காட்டானை செய்கு வலியுல்லாஹ்வுடைய கைபிடிச் சீசர் சொன்னதும் இதற்குச் சரியாகயிருக்கிறது. (லோகமூன்று அஹது ஒன்று வுரைய்ந்தெழும் அஹ்மதாகும்.

லாஇலாஹவென்னும் பொருள் நானாகுவேன் எனவும்

இல்லல்லாஹு என்ற இருதயம் அஹ்மதாகும்

சொல்லெல்லாம் அல்லவாஹ் என்று ஒருவன் என்றும் பேருமுள்|ளோன்

கலிமாவுடைய மஃனாவில் விளக்கத்தையுடையவனுக்கு இவ்வளவு போதும். கலிமாவுடைய நாலு பர்ளு நாலு ஷர்த்து என்றும் பிரித்துச் சொல்லப்படுகிறதும் அல்லாஹ்வுடைய தாத்தில் பத்து அஸ்லும் ஸிபாத்திலும் அப்ஆலிலும் ஸித்க்கு றசூலிலும் சொல்லப்படுகிறது.

சகலதும் இப்போது எழுதப்பட்ட மஃனாவிலும் தீனுடைய விபரத்தில் அல்லாஹ் ஒருவன் உண்டாகியிருக்கிறான். ரசூலும் உண்டென்று எழுதினதிலும் இன்னும் இஸ்லாமாகிறதற்கு ஷஹாதத்துக் கலிமா சொல்லுகிற விபரத்திலும் இன்னும் ரஸூலைக் கொண்டு ஈமான் கொள்கிற பணரில் பேசுவதிலும் சகலதும் சொல்லப்பட்டுப்போய் விடுவதுடன் காரியமல்லாத்துகளை விடப்பட்டிருப்பதில் உஷாராகி, இதில் சக்கையை எடுத்தெறிந்து விட்டு சத்தை எடுத்துக் கொள்.

அந்த கிதாபில் இன்னதெல்லாம் பற்லென்று சொல்லி இருக்கிறார்களே அதுக்கு இது விரோதமாகுதே என்ற மனப்பக்குவத்தை வையாதே. ஆகிலும், அன்னப்பட்சி போலாகி அதையும் இதையும் பார்வையிட்டுப் பாலையும் தண்ணீரையும் பிரித்துவிடு. ஆகிலும் அந்த பர்ளு ஷர்த்துகள் எல்லாம் கலாமுடைய உலமாக்களால் கோர்வையாக்கப்பட்டிருப்பதுடன் அணுவளவாவது அறிவுள்ளவனுடைய சிந்தையில் அந்த பர்ளு ஷர்த்து ஊசாடியிருக்குமே அல்லாது வேறில்லை.

எப்படியானால், கலிமாவுக்கு நாலு சர்த்து. முதலாவது **இக்றாருன் பில்லிசான்** -நாவினால் விண்ணப்பம் செய்கிறது. அப்பால் **தஸ்தீகுன் பில்ஜனான்** - கல்பு கொண்டு உண்மை கொள்கிறது. அப்பால் **இக்லாஸு அமலில் அத்யான்** -வழிப்பாடுகளையுடைய அமல்களை கலப்பறுதலாக்குகிறது. அப்பால் **தவுதியத்துல் அற்கான்** - பர்ளுகளை இருத்து வருகிறது.

அப்படிப்போல் சொல்லப்பட்டிருப்பதற்கு மாற்றமாக கொஞ்சமெங்கிலும் அக்லுள்ளவனுடைய சிந்தையில் ஊசாடவே மாட்டாது. இந்த நாலு சர்த்தையும் நாலு பர்ளையும் மனனமாய்ப் பாடமிட்டாலும் வாஜிபான ஸிபாத்து முஸ்தஹீலான ஸிபாத்து, ஜாயிஸான ஸிபாத்துகளைப் பாடமிட்டாலும் யாதொரு புண்ணியமில்லை. பாடமிடாதிருப்பதில் கொஞ்சமெங்கிலும் அக்லுள்ளவனுடைய சிந்தையில் அல்லாஹ்வுக்கு வாஜிபானது வேண்டியதுதான் என்றும் முஸ்தஹீலானது அவனுக்கு அறவேயில்லை என்பதும் நிச்சயமாயிருக்குமல்லாது வேறில்லை.

அப்படியானால் சில காபிர்கள், இன்னல்லாஹ பகீறுன் என்றும் எஹூதிகள், யதுல்லாஹி மக்லூலா என்றும் தகாத பேச்சுக்களை சொல்லி இருக்கிறார்களே. அப்படி இருக்க முஸ்தஹீலான சிபாத்துகளை ஒருவன் தெரியாதிருந்தால் அதை எண்ணி விடுவானே என்று நீ கேட்கபோதும். அவைகளை எல்லாம் சரியான தப்ஸீறு கொண்டு அறிவாயாகில் இந்த நாளையிலுள்ளக் கொடிய காபிர்கள் அல்லா பக்கீறென்னும் தரித்திரியம் பிடித்தவன் என்று சொல்லுகிறானா?

அப்படியே முரண்டுக்குச் சொன்னாலும் அவனுடைய மனம் ஏற்காது என்றறிவாய். பிர்ஔனும் அன றப்புக்குமுல் அஃலா என்றான் அல்லாது அனல்லாஹு என்று சொல்லவில்லை.

அபூயஸீதுல் பிஸ்த்தாமி ரலியல்லாஹு அன்ஹு அனல்லாஹு என்றுச் சொல்லி இருப்பதற்கும், அழகான முறாது வைக்கப்பாத்தியமானதுதான். ஆனால், கலிமாவுக்கு நாலு பாதையின்படி நாலு மஃனாவென்று சொல்வதில்

ஷரீஅத்தின்படி லோகத்தில் உண்மை கொண்டு வணங்கப்படுகிற நாயன் யாருமில்லை. அல்லாஹ்வைத் தவிர.

தரீகத்தின்படி மஃனா செய்து முடிக்கிறவன் அல்லாஹ்வைத் தவிர ஒருவனுமில்லை என்றும்,

ஹக்கீகத்தின் படி சீவனுடையவன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்றும்

மஃரிபத்தின்படி அல்லாஹ்வைத் தவிர வேறொரு வஸ்துவுமில்லை என்றும் சொல்லுகிறார்கள்.

ஆனால் ஷரீஅத்துக்காரர் என்பவர்கள் அல்லாஹ் எங்கும் இருக்கிறான் என்று வாயினால் சொல்கிறார்கள். புத்தைக் கண்டால் அல்லது தீட்பாகிய எந்த வஸ்துவைக் கண்டாலும் அல்லது ஏழுவானத்துக்கும் அப்பால் சென்றாலும் ஹக்கு எங்குமிருக்கிறான் என்று எண்ணுகிறார்கள் அல்லாது கண்டது எல்லாவற்றையும் ஹக்கல்லாத்தது என்றே எண்ணுகிறார்கள்.

சிலர் எந்த வஸ்துவுக்கும் உள்ளாலிருக்கிறதுபோல் உத்தேசிக்கிறார்கள். சிலர் வானலோகத்துக்கு மேலாலிருக்கிறது போலும் அவனுடைய தஜல்லி எங்கும் நடப்பதில் சூரியனைப் போல் என்றும் அப்படி இவர்கள் எண்ணியிருப்பதால் சிலர் நபியுல்லாஹ் மிஃறாஜுக்குப் போனதில் அல்லாஹ்வைக் கண்டார்களே திரைபோட்டுப் பேசிக் கொண்டார்களா? அல்லது திரை நீங்கிப் பேசிக் கொண்டார்களா என்று கேட்பதில் அவர்களுக்கிடையில் உள்ள உலமாக்களில் ஒருவர் ஒரு விதம், ஒருவர் ஒருவிதமும் சொல்வதுடன் அதுவே ஒரு இல்மாகவும் பேசிக் கொள்கிறார்கள்.

தன்ஸீஹ் - ஒப்புவமை அற்றது என்றும் மத்தா அய்ன கய்ப - எப்ப எவ்விடம் எங்கே என்ற கேள்வியே கூடாதென்றும் இவர்கள் சொன்ன சொல்லெங்கே? ஆகையால் ஈமானை உண்டாக்கிக் கொள்ள இப்படிக்கொற்ற அறிவுகளை விட்டுவிட்டு இப்போது கைகூசி எழுதப்பட்டதைக் கருத்தால் விளங்கினாயாகில் நீ இரத்தமாக அழக்கடவதல்லாது இதைவிட இறங்கி எழுத கலம் நடக்குறதில்லை. சொல்லில் அல்லது வார்த்தைகளில் யாதொரு குழப்பமிருக்கிறது என்று எண்ணாதே.

ஆகையால் கலிமாவுக்கு மஃனா முற்பட நான் எழுதினதுதான். ஆகத் தீர்மானமான மஃனாவாக இருக்கும். இந்த கிதாபில் வருகிறது அந்தக் கிதாபில் வருகிறது அவர் ஒருவிதம் இவர் ஒருவிதம் சொல்கிறார் என்று மடத்தனத்தை விட்டுவிடு. லாஇலாஹ இல்லல்லாஹு என்றால் அறபிச் சொல். தமிழில் அதற்குப் பொருள்: அல்லாஹ்வென்ற பராபர வஸ்துவைத் தவிர ஒரு நாயனும் இல்லை. அல்லது நாயன் அல்லாஹ் வென்ற பராபரவஸ்துவே ஒழிய அல்ல என்றதாகயிருக்கும்.

குப்பாருகள் வணங்குகிற நாயனும் அல்லாஹ்வென்ற பராபர வஸ்து அல்லாதது இல்லை என்றால் ஒரு வஸ்துவும் பராபர வஸ்து அல்லாத்ததில்லை என்றாச்சுது. மஃனா துலாம்பரமாக இருக்க மற்றதுகளில் விர்தாவில் விழுந்து மயங்க வேண்டாம்.

ஆனால் ஹக்கைத் தவிரவுள்ளதற்கு உஜூதில்லை என்று வாயினால் சொன்னால் யாதொரு பாயிதாவும் இல்லை. தவிரவும் ஒருக்கால் அதனால் குப்ருண்டாகவும் போதும். அதுவெல்லாம் ரியாலத்தென்னும் நடை பழக்குதல் கொண்டு பெற்றுக் கொள்ளவேண்டுமல்லாது வேறில்லை.

நாலு பாதையின்படி நாலு மஃனாவென்று சொன்னது ஏதுக்காகவானால் ஒரு ஆரிபானவர் லாஇலாஹ இல்லல்லாஹு என்று சொல்ல ஒரு அவாமிய்யானவன் அல்லது லாஹிருடைய இல்மில் பெரிய இமாமாக இருந்தாலும் சரி அப்படிக்கொற்றவர்கள் கேட்டார்களானால் ஷரீஅத்தின்படிக்குள்ள மஃனாதான் அவர்கள் கல்பில் ஊசாடும்.

ஏதாவதொரு செய்கை நடப்பதை எல்லாம் அல்லாஹ்வால் நடக்குதென்றக் கருத்து அவனில் தரிப்பட்டவனுடைய கல்பில் தரீகுத்தின்படிக்குள்ள மஃனாதான் உண்டாகும். சீவனுடையவன் அல்லாஹ்வே ஒழிய வேறில்லை. ஹக்குதான் சீவனுடையவன் என்றெண்ணுகிறவனுடைய கல்பில் ஹக்கீகத்துடைய மஃனாதான் உண்டாகும். அந்த ஆரிபுடைய கருத்திலுள்ளது அவரைப் போல் உள்ளவர்களுக்குத்தான் தெரியும். இதற்காகத்தான் சொல்லப்படுகிறது

பெரியோர் கருத்தைப் பியர்த்தறியலாக

உரியோரெவைக்கு முரியோர் பெரியோர்க்குச்

சொல்லும் பொருளும் தொடராதிரண்டாகும்

புல்லும் பொழுதிற் பொருள்

இப்படிப்போல் நபியுல்லா சொன்னதை அவரவர்கள் விளங்கினமட்டுக்கு நாலு பாதையாக பிரித்தே அல்லாது வேறில்லை. மஃரிபாவிலும் இதுபோல் வைத்துக் கொள்ளவும்.

ஷரீஅத் என்பது பெரும்பாதையாக இருப்பதாலும், மிகுந்தவர்களுடைய கருத்திலும் ஹக்கென்பது இன்னதென்பதில் குறிப்பிலாதிருப்பதாலும் கல்கை தரிபடுத்தி ஹக்கை தன்ஸீஹாகவே வைத்துக் கொண்டதால் அதுவே மேலிட்டு தீர்மானம் வாள்க் கொண்டே மிகுத்தவர்களுடைய ஹக்கிலும் அது நிலை நின்றது.

ஆகையால் *அஷ்ஷரீஅத்து அக்வாலீ வத்தரீகத்து அப்ஆலீ வல்ஹகீகத்து அஹ்வாலீ வல்மஃரிபத்து அஸ்றாரீ* - ஷரீஅத் என்னும் பெரும்பாதை என்னுடைய சொல்லாக இருக்கும். அது இது நான் எனக்குடையது அவனுக்குடையது நான் செய்தேன் அவன் செய்தான் என்று வெளிப்பார்வையில் எல்லாம் வேற்றுமை போல் பாவித்து நான் சொல்கிற சொல்லாயிருக்கும்.

இன்னமும் இதுபோல் அனேகத்தைச் சோடித்துப் பார்த்துக் கொள்ளவும். எப்படியானால் பெரு வியாதிக்காரனைக் கண்டால், புலியைக் கண்டு விரண்டோடுவதுபோல் ஓடென்றும், பெருவியாதிக்காரர் வந்து முபாயஆ கேட்டதற்கு கையைக் கொடாமல் முபாயஆ செய் கலியாணமுடி என்றதுபோல்.

ஆனால் எல்லாத்திலும் பல *தப்ஸீலு* - பிரிவு இருந்தபோதிலும் கலியாணத்தில் மிகுந்த தப்ஸீலு இருக்கிறது. ஆராய்ந்து கொள். அவ்விதம் நடத்தி வைப்பது தான் சகலருக்கும் தாராளமாக நடப்பதற்குள்ள பெரும் வழியாக இருக்கும்.

குர்ஆனில் சிலதைத் தவிர முழுவதும் அப்படியே இறங்கியிருக்கிறது. தரீகத்தாவது என்னுடைய செயல்களாகயிருக்கும். அதென்னவானால், சகலரும் விளங்கும்பொருட்டு நான் செய்தேன் என்று நான் சொன்னபோதிலும் அது அல்லாஹ்வால் நடந்ததாகக் கருதுவேன் அல்லாது வேறில்லை.

அதற்காகத்தான் *வமாறமைத்த இத்றமைத்த வலாகின்னல்லாஹ றமா* - முஹம்மதே பத்ரில் நீர் எறிந்த நேரத்தில் நீர் எறியவில்லை. ஆகிலும் அல்லாஹ் எறிந்தான் என்று அல்லாஹ் சொன்னான். இன்னமும் அதில் அவர்கள் பசித்திருந்து முழித்திருந்து பெருவியாதிக்காரரைக் கூட ஒன்றாக வைத்து ஒஜீபனித்தது முதலானதுகளை வைத்துப் பார்த்துக் கொள்.

ஹகீகத்தாவது என்னுடைய ஹால்களென்னும் கொள்கைகளாக இருக்கும். அதற்கு இந்த ஆயத்தும் *காத்திலூஹும் யுஅத்திபுஹுமுல்லாஹு பிஅய்தீக்கும்* - அவர்களை நீங்கள் கொல்லுங்கள். அல்லாஹுத்தஆலா உங்களுடைய கைகளைக் கொண்டு அவர்களை வேதனை செய்வான் என்ற ஆயத்தும் அத்தாட்சியாகும்.

மஃரிபாவாகிறது என்னுடைய இரகசியங்களாக இருக்கும். அதாகிறது மேலேச் சொல்லப்பட்டதுகளின் இரகசியங்கள் சகலதும் ஹக்காகவே இருக்கிறது. *கிப்யா முஹம்மது இன்ன றப்பக்க யுசல்லீ* -முஹம்மதே நில்லும். உம்முடைய றப்பு தொழுகிறான் என்று மிஃறாஜில் சொல்லப்பட்டதுபோல் அஷ்ஷரீஅத்து என்ற ஹதீதை மிகுத்தவர்களும் எழுதுவதுடன் கருத்தைக் கண்டு பிடிக்காதிருக்கிறார்கள். நான் எழுதினதிலுள்ள சொல்கொண்டு பாராட்டுதலில்லாமல் கருத்தை விளங்கிக் கொள்.

இன்னமும் ஒரு நுணுக்கம் என்னவென்றால் நபி நாயகம் தொழுகும்படியாக ஏவினார்கள். தொழுகாதவனைக் கொல்லப்படும் என்பதற்காக பயந்து அல்லது ஊர்கட்டுப்படி ஜாதி வழக்கத்துக்கு அழகில்லை என்று சிலபேர்கள் தொழுகிறார்கள். அல்லது *அல்ஆதத்து தபீஅத்துன் காமிசத்துன்* - வழக்கம் ஐந்தாவது குணமென்று சொல்லப்பட்டபடி அவர்களுக்கு வழக்கமே தச்செயல் குணமாகி இஸ்லாம் மார்க்கம் இரண்டாது தொழுகைதானே என்று தொழுது வருகிறார்கள்.

சிலர் தொழுகாதிருந்தால் அல்லாஹ்விடத்தில் குற்றக்காராராகி விடுவதை பயந்து தொழுவதுடன் இந்தச் செய்கையை நம்மில் நின்றும் நடத்தாட்டுகிறவன் அவனே என்று நிச்சயிக்கிறது.

தரீகத்துக்காரனுடைய தொழுகை, அப்பால் நம்முடைய ஹகீகத்து அவனேயல்லாது வேறில்லை என்று நிச்சயிக்கிறது. ஹக்கீகத்துக்காரனுடைய தொழுகை, அப்பால் தொழுகிறவனும் தொழுகையும் தொழுகப்பட்டவனும் ஒன்றே ஒன்றென்ற கருத்தைத்தான்

வருத்தாமல் தன்னிலே அந்தக் கருத்தை வாய்பேசா மௌனமாகயிருக்கிறது. மஃரிபத்துக்காரனுடைய தொழுகை தரீகத்துக்கு தௌஹீதுல் அப்ஆலென்றும் ஹகீகத்துக்கு தௌஹீதுஸ் ஸிபாத்தென்றும் மஃரிபத்துக்கு தௌஹீது தாத்தென்றும் சொல்லப்படும்.

ஆனால் இதில் வெட்டுக்குப் பயந்து தொழுகிறதை ஷரீஅத்துடைய வணக்கமென்று சொன்னதை வெளிரங்கமாகிய ஹுக்குமில் வைத்துப் பார்த்துக் கொள்ளவும். அதுவே தவிர காரியம் தன்னில் அவன் காபிரிலும் கெட்ட காபிராக இருக்கும்.

ஆனால், அல்லாஹ்வைப் பயந்து தொழுவதுடன் பாயில் ஹக்கீக்கி அல்லாஹ்வென்று எண்ணாமல் செய்யிரவன்தான் காரியம்தன்னில் ஷரீஅத்துக்காரன். ஆகிலும், *ப ஷரீஅத்துன் ஆத்திலத்துல் பிலாஹக்கீக்கத்தின் வஹக்கீக்கத்துல் பாத்திலத்துன் பி லாஷரீஅத்தின் ஹக்கீகத்தில்லாத* - ஷரீஅத்து பழுதானது ஷரீஅத்தில்லாத வீணானது என்று சொல்லப்பட்டிருப்பதால் அவனுடைய வணக்கத்தில் பலனில்லை.

இந்தச் சொல்லை சகலரும் சொல்வது வழக்கமாகவே இருக்கிறது. கோடியில் ஒன்றைத் தவிர இரண்டையும் சேர்ந்தவர்கள் கிடையாது. ஒன்றிருக்கில் ளாஹிறுலேயே உறைந்து வன்நெஞ்சகனாக அல்லது பாத்தினையே பிடித்து அதன்படிக்கும் யாதொரு வணக்கம் இல்லாத வழிகேடாகிய பேச்சையுடைய ஸின்தீக்காக காணுகிறோமே அல்லாது வேறில்லை. இரண்டையும் சேகரித்த ஸித்தீகூன்களுடைய பாத தெரிசனையை அல்லாஹ்தஆலா தீபரம் தருவானாகவும்.

**இரண்டாவது:** மலாயிகத்துகளைக் கொண்டு ஈமான் கொள்கிறது. மலாயிக்கத்துகள் என்பதற்கு தமிழால் தேவாதி(தேவாதிகள் என்பது மலக்குகடைய அஸ்லுக்கும் அன்பியாக்கள் முதலானவர்களிடத்தில் அவதாரமெடுத்தது வருபவர்களுக்கும் தேவத் தூதர் என்றும் சொல்லலாம்) என்ற அர்த்தம் சொல்லப்படுவதில் தேவாதி என்று இன்ன வஸ்துவுக்குச் சொல்ல வேண்டுமென்பது நிச்சயமாகாதபடியாலும் அறபிலுள்ள அகராதியில் மிகுத்ததையும் பார்வையிட்டதில் சரியான அர்த்தம் எழுதாதபடியாலும் இதற்கு மஃனா எழுதவில்லை.

இதற்காகத்தான் இமாம் கஸ்ஸாலீ ரஹிமஹுல்லா அவர்கள் ஒருவனுக்கு அல்லாஹ்வை அறியிறதற்காக கஷ்பு உண்டாகும்போது சில இல்முகள் கல்பில் வரும் என்று சொல்லி வருவதில, மலாயிகத்தென்பதுடைய மஃனா உடைய அந்தரங்கத்தை அறியிரதை அதில் ஒன்றாக எண்ணி ஏற்றினார்கள்.

ஆனால் மலாயிகத்துகளுடைய வருணிப்புகளைக் கொஞ்சம் விபரிப்பதால் நீ கருத்துள்ளவனாக இருப்பாயாகில் அதுவிசயத்தில் யோசனையை அதிகப்படுத்தி இந்தப் பணரிலுள்ள கனியை அருந்திக் கொள்வாய்.

ரஸூல் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்: *கலகல்லாஹு ஆதமஅலா சூறத்திஹி* - அல்லாஹுத்தஆலா ஆதமை அவனுடைய சூறத்தின் பேரில் படைத்தான் என்று ஆதமென்பது இன்சானாக இருக்கும். ஆதம் ஹகீகி அல்லது ஹகீகத்துல்

இன்சானாகிறது முஹம்மதிய்யாகிய றூஹாயிருக்கும். ஆலத்துக்குப் பெரிய இன்சான் என்று சொல்லப்படும். ஹக்குத்தஆலாவுக்கு லாஹிறென்னும் வெளியானவன் என்றும் பாத்தினென்னும் மறைந்தவன் என்றும் அப்படிப்போல் ஆலம் கய்பெனும் மறைவான ஆலம், ஆலம் ஷஹாதத் என்னும் வெளியான ஆலம் என்றும்சொல்லப்படும்.

ஆகையால், ஆலமென்னும் பெரிய இன்சான் அல்லாஹ் என்கிற இஸ்முடைய சூறத்தாகவும் அதினுடைய மள்ஹறாகவும் அதுகள் எல்லாத்தையும் பொதிந்த அந்த சூறத்தாகவும் மளுஹராகவும் வெளியானது. பஷரிய்யத் என்னும் பஞ்ச பூதத்தின் புளவு சேர்ந்து வெளிரங்கத்தில் மட்டுத்திட்டத்துக்குள்ளடங்கியும் ஹக்கீகத்தில் அடங்காமலும் வெளியாகிய வாலிதுல் கபீரென்னும் பெரிய தகப்பனார் ஆதமாக இருக்கும்.

றூஹு முஹம்மதிய்யாவுக்கு வாலிதுல் அக்பர் என்னும் எல்லாத்துக்கும் பெரிய தகப்பன் என்று சொல்லப்படும். ஆகையால், மொத்த தொகையில் அல்லாஹ்வெனும் சூறத்துக்கு மாதிரி றூஹு முகம்மதிய்யாவும் அதற்கு மாதிரி ஆலமென்னும் இன்சான் கபீறும் அப்பால் அது சகலதையும் அடக்கிக் கொண்ட இன்சானுடைய எல்லா ஒவ்வொற்றைகளாக இருக்கும்.

ஆலத்தைப் பார்க்கிலும் இன்சானுடைய எல்லா ஒவ்வொற்றையும் வெளி சூறத்தால் மிகச் சிறியதாக இருந்தபோதிலும் ஹகீகத்தில் இரண்டும் ஒன்றாக இருப்பதுடன் மறதபாவில் இது பாரதூரம் கொண்டதாயிருக்கும். ஏனென்றால் ஆலமென்னும் அடையாளம் என்பதெல்லாம் இன்சானில் சுருண்டிருக்கும் வஸ்துவின் பிரிவே அல்லாது வேறில்லை. இன்சானாகிறவன் ரூபத்தில் மூடலாக்கப்பட்ட சின்ன ஆலமாக இருக்கும். ஆலமாகிறது அந்த இன்சானின் பிரிவாகிய பெரிய இன்சானாக இருக்கும்.

ஆகையால், இன்சான் ஆலத்துக்கு அல்லாஹ்வுடைய கலீபாவாகையால் பதவியால் பெரிய ஆலமாயிருக்கும். ஆலம் என்பது இந்த இன்சானுக்குள்ளடங்கி நடப்பதால் பதவியால் சின்ன இன்சானாக இருக்கும். இப்போது எழுதப்பட்டதில் சொற்கள் எப்படியிருந்த போதிலும் அதைப் பாராட்டாமல் கருத்தையும், பொருளையும் விளங்கிக் கொண்டாயாகில் மலாயிகத்துகள் என்பது பெரிய இன்சானிலும் அதுகளுக்கு கலீபாவாகிய எல்லா ஒவ்வொற்றைகளிலும் ஒரே மாதிரியாக இருந்து ஆட்டி வைக்கிற குவ்வத்துகளாயும் றூஹாயும் கல்பாயும் இருப்பவர்கள் தான் என்றறிவாய்.

ஆனால் ஆலத்துக்கு மலாயிக்கத்துகளாகிறது இன்சானிலுள்ள றூஹானிய்யத்தாகிய குவ்வத்துகளைப் போலும் ஐயறிவளவிற் சேர்க்கப்பட்ட குவ்வத்துக்களைப் போலுமாக இருக்கும். நோட்டத்தளவிலும் அமலளவிலும் சேர்க்கப்பட்ட அக்லாகவும், வஹ்மு கியாலாகவும், அவைகளுக்கு ஒப்பானதாகவும் இருக்குதே அப்படிக்கொற்ற றூஹானிய்யத்தாகிய குவ்வத்துகளைக் கொண்டும் இன்னும் வெளிரங்கமாகிய ஐயறிவு போல் உள்ள ஹயவானியத்தாகிய குவ்வத்துக்களை கொண்டும் இன்னும் திண்ணுகிறது, வளருகிறது, பெறுகிறது, இன்னும் இதல்லாத நபாத்தியத்தாகிய விருட்சாதிகளிலுள்ள குவ்வத்துகளைக் கொண்டும் இன்சானுடைய திரேகத்தைப் பரிபாரணம் பண்ணி ஆட்டி வைக்கிற

நாத்திக்கத்தாகிய நப்சு ஆட்டி வைப்பதுபோல் குல்லியத்தாகிய நப்பு ஆலமடங்கலையும் மலாயிகத்துகளைக் கொண்டு ஆட்டி வைக்கிறதாக இருக்கும்.

ஆனால் காரியம் தன்னில் இன்சானிலுள்ள நாத்திகத்தாகிய நப்சும் ஆலத்துக்குள்ள நப்சு குல்லியும் ஒன்றேயல்லாது வேறில்லை. எப்படிப்போலானால், ஆலமென்னும் பெரிய இன்சானுக்குள்ள வெளிரங்கமாகிய ஐயறிவை ஐந்து நட்சத்திரமென்று சொல்லப்படும். இன்சானில் அதை ஐம்பொறி என்று சொல்லப்படும். ஆலத்துக்குள்ள அந்த ஐயறிவுடைய உள்ரங்கம் மலக்கேயல்லாது வேறில்லை. அதை இன்சானில் ஐம்புலன் என்று சொல்லப்படும்.

அது ஷற்வுடைய ஒழுங்கின்படி நடந்தால் மலக்கானியென்று சொல்லப்படும். அல்லாதவரை ஷைத்தானி என்று சொல்லப்படும். மலாயிகத்துகளுடைய வருணிப்பில் அனேக விரிவாய் எழுத வேண்டுமென்கிற நற்கருத்து வைத்திருந்ததில்விளக்கமில்லாதவன் பல குழப்பமாக எண்ணுவான் என்பதை உத்தேசித்துச் சுருக்கமாக்கிக் கொண்டேன்.

ஆகிலும், பழவரக்காட்டு ஜான் முஹம்மது லெப்பைஹில் ஆலிம் தர்ஜுமாச் செய்திருக்கிற கிதாபையும் இந்த இடத்துக்கு அ|ணுசரனையாகப்பார்த்துக் கொள்வதுடன் ஒரு அணுவளவாவது உன்தன்னை விட்டு ஒன்றையாவது நீங்கினதாய் விளங்காதே.

*(ஷற்ஹு*

*ஆனதால், நாயகம் ஜான் முஹம்மதுலெப்பைஹில் ஆலிமவர்கள் தர்ஜுமா செய்த கிதாபில் நின்றும் இந்த இடத்துக்கு தேவையானதை கொஞ்சம் நான் எடுத்து எழுதுகிறேன். உணர்ந்துக் கொள்ளவும்.*

*அதாவது ஆலத்துக்குள்ள ஐயறிவும,; இன்சானுக்குள்ள ஐயறிவும் ஹகீகத்தில் ஒன்றாயகிருக்குமென்றிந்து கொள். மேலும் இன்சானில் சம்வு -கேள்வி பஸறு- பார்வை ஷம்மூ -முகர்;தல் தவ்கு -சுவைக்குதல் லம்ஸு -தொடுதல் என்ற வெளிரங்கமாகிய ஐயறிவுடைய ஹகீகத்தும் மலக்காயிருப்பதுபோல் அந்தரங்கமாகிய ஐயறிவுடைய ஹகீகத்தும் மலக்காக இருக்கும்.*

*அந்த அந்தரங்கமாகிய ஐயறிவுகளில் முந்தினதாகிறது ஹிஸ்ஸுல் முஷ்த்தரிக்கு என்னும் எல்லாத்துக்கும் பொதுவான உணர்ச்சையாக இருக்கும். இந்த ஹிஸ்ஸுல் முஷ்த்தரிக்கு என்னும் உணர்ச்சையாகிறது வெளிரங்கமாகிய அந்தரங்கமாகிய ஐயறிவுகளில் நின்றும் எல்லா ஒவ்வொன்றும் இந்த ஹிஸ்ஸுல் முஷ்தரிக்கு என்னும் உணர்ச்சியின் தத்துவத்தைக் கொண்டுதான் அதனதின் உணர்ச்சையை உணர்ந்து கொள்ளும்.*

*இந்த உணர்ச்சையாகிறது மூளையிலிருக்கிறது. அது கண்ணில் சேராது போனால், ஒரு வஸ்துவை இரண்;டு வஸ்துவாய் காண்பான். அதாவது, ஒருவன் ஒரு வஸ்துவை இரண்டு கண்ணைக் கொண்டு பார்த்தாலும் ஒரு கண்ணை மூடிக் கொண்டு பார்த்தாலும் ஹிஸ்ஸுல் முஷ்த்தரிக்குள்ளவன் ஒன்றாகத்தான் காண்பான். இந்த ஹிஸ்ஸுல் முஷ்த்தரிக்கு இல்லாத மாலைக் கண்ணன் ஒரு வஸ்துவை ஒருகண்ணால் பார்த்தால் இரண்டாக காண்பான்.*

*ஆனதால்தான் இதற்கு ஹிஸ்ஸுல் முஷ்த்தரிக்கு எல்லாத்துக்கும் பொதுவான உணர்ச்சை என்று சொல்லப்பட்டது.*

*இந்த ஹிஸ்ஸுல் முஷ்த்தரிக்காகிய அக்லுல் அவ்வல் என்னும் முந்தின உணர்ச்சையாகிறது கியால் என்னும் தோற்றவராகயிருக்கும். இந்த தோற்றவராகியது ஆலம் சகீர், ஆலம் கபீர், நாஸூத்து, மலக்கூத்து, ஜபறூத்து, லாகூத்து என்ற ஆலமடங்களுடைய கருவாகிய அஸ்லாக இருக்கும்.*

*யஃனி திடனாக கியால் என்னும் தோற்றரவாகிறது ஆலமடங்களுடைய றூஹு என்னும் உசும்புதலுடைய ஹயாத் என்னும் உயிராக இருக்கும். அந்த ஆலமாகிறது இன்சானுடைய ஜடலத்துக்கு அசலாகயிருக்கும். அந்த ஆலமாகிய கியாலுக்கு அசலாகிறது ஆதமுடைய மக்களாகிய இன்சானாக இருக்கும்.*

*ஆனதால், கியாலை அறிந்தவனிடத்தில் உஜூதெனும் ஆலமடங்கலும் கியாலாகிய தோற்றமென்னும் மாயையே அல்லாது வேறில்லை. என்கிலும் கியாலெனும்; தோற்றரவடங்களுடைய அசலாகிறது இரண்டு பங்காகயிருக்கும்.*

*அதில் ஒரு பங்காகிறது ஆலமுஷ் ஷஹாதத்து வெளிரங்கமாக ரூபமாகி தோற்றுர ஆலத்தை கல்பில் ரூபடுத்தி பார்க்குதலாக இருக்கும்.*

*இரண்டாவது ஆலமுல் கைபு மறைவாகிய ஆலத்தை கல்பில் ரூபபடுத்தி பார்க்குதலாக இருக்கும்.*

*காரியம் தன்னில் இரண்டும் தரிபாடானதில்லை. ஏனென்றால், கியாலாகிய இந்த இரண்டு ஆலமும் வெளிரங்கத்தில் உஜூது உள்ளமையுடையதாக தோற்றின போதிலும் ஹகீகத்தில் அதம் - இல்லாமை என்னும் திரையில் நின்றும் இரண்டும் வெளியாகிருப்பதால் அதனுடைய ஹகீகத்து அதம் இல்லாமையாகயிருக்கும்.*

*ஏனென்றால், அல்ஆலமு மாசிவல்லாஹி - ஆலமாகிய தோற்றரவாகிறது ஆண்டவனைத் தவிர உள்ளதாக இருக்கும். ஆண்டவனைத் தவிர உள்ளதாகிறது அதம் இல்லாமையாக இருக்கும். அறிந்துக் கொள். அந்தந்த ஆலத்திலுள்ளவர்களும் அந்தந்த ஆலத்திலுள்ள கியாலாகிய தோற்றரவென்னும் வசனிப்பைக் கொண்டே கண்டுண்டவர்களாகயிருப்பதற்காக வேண்டி ஆண்டவனை விட்டும் மறதியிலேயே இருக்கிறார்கள்.*

*அதற்காகத்தான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அன்னாக நியாமுன் இதாமாத்தூ இந்தபஹூ - மனிதரடங்களுமாகிறது தன்னை மறக்குதல் என்னும் தூக்கத்திலிருக்கிறார்கள். அவர்கள் மவ்த்தாகுவார்களானால் நினைவும் திரையும் அன்றி தன்னை ஹக்காக கண்டு விழிப்பு பெற்று உணர்ச்சை அடைவார்கள் என்று திருவுளமானார்கள்.*

*ஆனதால், அஹ்லுல்லாக்களாகிய ஹக்கை உடையவர்களுக்கே ஒழிய உணர்ச்சையில்லை. ஏனென்றால், இந்த துன்யாவிலிருக்கிற ஒவ்வொரு மனிதர்களும் அவர்களுடைய துன்யா*

*காரியங்களைக் கொண்டு தோற்றவரவு செய்யும்படியாகிய கியாலிலேயே கைது தலைப்பட்டவர்களாகவும், ஆண்டவனை மறந்தவர்களாகவும் இருப்பதுபோல்*

*பர்ஜகு கப்ரையுடையவர்கள் துன்யாவில் நல்ல அமல் செய்திருந்தால் நல்ல ரூபங்களைக் கொண்டு மருகுதல் அடையுதல் என்ற கியாலுலேயும், கெட்ட அமல் செய்திருந்தால் கெட்ட ரூபங்களைக் கொண்டு விரட்சியடையுதல் என்ற கியாலுலேயும் நரகத்தையுடையவர்கள், நரகத்துடைய அதாபுகளைக் கொண்டு துன்பப்படுதலென்ற கியாலுலேயும் சுவர்க்கத்தையுடையவர்கள் சுவர்க்கத்துடைய நிஃமத்துக்களை கொண்டு இன்பமடையுதல் என்ற கியாலுலேயும் இருப்பதுடன் ஆண்டவனை மறந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.*

*அப்படி இருக்கும்போது சுவர்க்கவாதிகளில் நின்றும் அஃறாபு, கதீபு என்ற இரண்டு தானத்தையுடையவர்களைத் தவிர மற்றவர்களுக்கு உணர்ச்சி கிடையாது. இந்த அஃறாபு, கதீபு என்ற இரண்டு தானத்தையுடையவர்கள்தான் ஆண்டவனுடைய தரிசனையிலிருப்பார்கள். இவர்களைத் தவிர உள்ளவர்கள் துன்யாவில் இருக்கும்போது துன்யாவை உடையவர்களாக இருப்பார்களேயானால் ஆகிறத்துடைய அமலுடைய கியாலுலேயிருப்பார்கள். கியாமத்தை உடையவர்கள் கேள்விகணக்குடைய தோற்றரவாகிய கியாலுலே இருப்பார்கள்.*

*இவ்விதமாகிய கியாலுலே இருப்பதெல்லாம் ஆண்டவனை விட்டும் மறதியாக இருக்கிற நித்திரையாக இருக்கும். இருந்தாலும் துன்யாவுடையவர்களுடைய நித்திரையைப் பார்க்கிலும் பர்ஸகுடையவர்களுடைய நித்திரையாகிறது லேசானதாக இருக்கும். அதுபோல் கியாமத்தை உடையவர்களுடைய நித்திரையாகிறது பர்ஜகுடையவர்களுடைய நித்திரையைப் பார்க்கிலும் லேசானதாக இருக்கும்.*

*ஆனதால் அஃறாபு, கதீபை உடையவர்களுக்கே ஒழிய உணர்ச்சையில்லை. இவர்கள் அல்லாஹ்வுடனே இருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களுடைய உணர்ச்சியாகிறது ஹக்குத்தஆலா அவர்களின் பேரில் வெளியாகியிருக்கிற தகுதியின் படிக்காகயிருக்கும்.*

*அந்த அஃறாபையுடையவர்களுக்கு வெளியாகிற ஹக்குத்தஆலா இந்த துன்யாவில் யாருக்காவது வெளியாகுவானேயானால் அவனாகிறவன் துன்யாவிலேயே உணர்ச்சையடந்தவனுக்கு எல்லா ஆலம்களும் அவனுடைய உஜூதில் நின்றும் வெளியாகிற கியாலாக இருக்கும். அப்போது எல்லா ஆலத்துக்கும் அஸ்லாகிறது கியாலாகிய மாயைதான் என்றறிவான்.*

*அறிந்து கொண்டதின் பின்னால் திடனாக ஹக்குத்தஆலாவாகிறவன் அவனுக்கு மிகுதமான ஆலம்களுண்டு என்றும் பின்பு இன்சானுடைய வாஸித்தாவைக் கொண்டு அந்த ஆலம்களளவில் நோட்டமிடுகிற ஆலமடங்கலுக்கும் ஆலமுஷ்ஷஹாதா வெளிரங்கமாகிய ஆலமென்று பேர் வைக்கப்படும். இன்சானுடைய வாஸித்தாவல்லாமல் நோட்டமிடுகிற ஆலம் அடங்கலுக்கும் ஆலமும் கைபு மறைவான ஆலம் என்று பேர் வைக்கப்படும்.*

*ஆனதால் இன்சான் இந்த ஆலத்தில் தரிபாடாக இருக்கும் காலமெல்லாம் ஹக்குடைய நோட்டமும் அந்த ஆலத்தில் இன்சானுடைய வாஸித்தாவைக் கொண்டிருக்கும். இந்த இன்சான் துன்யா என்கிற ஆலத்தை விட்டும் ஆகிறத்தளவில் திரும்பி விடுவானேயானால் இந்த துன்யாவாகிறது ஆலமுல் ஙைபு - மறைவான ஆலமாக ஆகிவிடும். ஆகிறத்தாகிறது ஆலமுஷ்ஷஹாதா வெளிரங்கமான ஆலமாக ஆகிவிடும்.*

*ஏனென்றால் இன்சாகிறவன் ஆலத்தில் அல்லாஹ்வுக்கு நாடப்பட்ட குறிப்பானதாகவும் ஹக்கான கலீபாவாகவும் இலாஹிய்யத்தாகிய அஸ்மாக்களுடைய வெளியாகுதலுக்கு தானமாகவும் ஆலமடங்கலுடைய அந்தரங்கங்களையும் சேகரித்துக் கொண்டவராகவும் இன்னமும் மலாயிகத்துகளுடைய ஆலம், வானங்களுடைய ஆலம், அர்வாஹுகளுடைய ஆலம் அஜ்ஸாமுகளுடைய ஆலம், தபீஅத்துடைய ஆலம், ஜமாதாத்துடைய ஆலம், நபாதாத்துடைய ஆலம் ஹயவானாத்துடைய ஆலம் இன்னமும் இலாஹிய்யத்தாகிய அஸ்மாக்களுடைய இல்முக்கு சொந்தமாகிய ஆலமடங்களுடைய ஹக்காயிக்குகள் எல்லாம் இன்சானாகிறவன் சின்ன ஆலமாக இருக்கிறதுடனே சேகரித்துக் கொண்டவனாக இருக்கிறதற்காக வேண்டி ஹக்குத்தஆலா இன்சானுடைய சூறத்தை ரஹ்மானுடைய சூறத்தாக படைத்து ஆலமடங்களுடைய தாயிரா வட்டவளையமாகிய கூடாரத்துக்கும் வானத்துடைய குப்பாவுக்கும் இன்சானை தூணாக ஆக்கி*

*இன்சானுடைய தரிபாட்டைக் கொண்டே வானங்களையும், ஆலம்களையும் தரிபடுத்தி வைத்திருக்கிறான். இன்சான்தான் ஆலமடங்கலுக்கும் தூணாக இருந்து அதன் பாரத்தை தாங்கிக் கொண்டிருக்கிறான். அப்படியிருக்கும்போது இன்சானுடைய சூறத்தெல்லாம் அழிந்து பனாவாகி பூமியுடைய முகத்தின் மேலே மூச்சு விடுகிறவர்கள் ஒருவரும் இல்லாமல் போனால் இதன் ஷக்கத்திஸ்ஸமாவு பஹிய யவ்மயிதின் வாஹியா - அப்பொழுது வானம் பிளந்து அந்நாளையிலே பலக்குறைவானதாக ஆகிவிடும்.*

*அந்தசமயம் இன்சானாகிறவன் ஆகிறமென்கிற வீட்டளவில் திரும்புகிறது கொண்டு துன்யா சுறாபாகி அழிந்து போகும். இன்சானுடைய இமாறத்து - பரிபாலணம் ஆகிறமென்கிற வீட்டில் நடக்கும். ஆனதால் இன்சானுடைய ஜடலத்துக்கு அசலாகிய ஆலமடங்கலுக்கும் ஹயாத்தாகிறது இன்சானுடைய அந்தரங்கமாகிய ஐயறிவில் ஒன்றான கியாலாக இருப்பதற்காக வேண்டி இன்சான்தான் ஹக்குத்தஆலாவுடைய தாத்துடைய மள்ஹறாக இருக்கும்.*

*அவனுடைய தாத்து கொண்டு இன்சானில் வெளியாகி இன்சானுடைய வாஸித்தாவைக் கொண்டு மற்ற ஆலம்களில் அவனுடைய சிபாத்து கொண்டு வெளியாகுகிற மலாஹிறென்னும் ஆலமடங்கலும் மலாயிகத்துகளாக இருக்கும் என்று அறிந்து கொள்ளவும்.*

*இன்னமும் அந்தரங்கமாகிய ஐயறிவுகளில் நின்றும் மூன்றாவதாகிறது வஹ்மு என்னும் சித்தமாக இருக்கும். இந்த வஹ்மு என்னும் சித்தமாகிறது மலாயிக்கத்துகள் அடங்கலுக்கும் குவ்வத்தால் மிகைத்த இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாமுடைய ஹகீகத்தாக இருக்கும். அந்த*

*இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாம் ஆகிறவர்கள் ரெம்பவும் குவ்வத்தை உடையவர்களாக இருப்பதற்காக வேண்டித்தான் மனிதர்களுடைய றூஹை கைப்பற்றுகிற வேலையை அவர்களுக்கு ஆண்டவன் சாட்டியிருக்கிறான்.*

*இன்னமும் அந்த இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாம் ஆகிறவர்கள் அவர்களுக்கு ஒரு சூறுத்து அல்லது ஒரு ரூபம் சொந்தமல்ல. பலபல விதமாக ரூபமெடுப்பார்கள். அதாவது, தாஅத்து வழிப்பாட்டையுடையவர்களுக்கு அவர்களுக்கு உகப்பாகிய ரூபங் கொண்டு வருவார்கள். மஃஸியத்து பாவத்தை உடையவர்களுக்கு பயங்கரமாகிய கோலம் கொண்டு வருவார்கள்.*

*அதெப்படி என்றால், மான் மரை போல் உள்ள மிருகங்களை வேட்டையாட புலி, கடுவாய் சிறுத்தை வருகிறதுபோல் ஆட்டை வேட்டையாட ஓனாய் வருகிறதுபோல் அந்தந்த பறவைகளை வேட்டையாட வைரிவல்வத்தான் வருகிறதுபோல் அந்தந்த இனங்களுக்குத் தகுந்த மாதிரியாக வருவார்கள். ஒரே சூறத்தில் கட்டுப்பட்டவர்களாக இருக்கமாட்டார்கள்.*

*ஆனதால், அந்த மலக்கு இஸ்றாயீல் அலைஹிஸ்ஸாமுடைய தத்துவமாகிய வஹ்மென்னும் சித்தமாகிறது மனிதர்களில் பலபல விதமான கோலம் கொண்டு பலபல சந்தேகங்களை உண்டு பண்ணும். அப்போது மனிதன் தன்னுடைய எல்லா தத்துவங்களையும் மிகைத்துக் கொள்வான். இந்த சந்தேகத்தை மிகைத்துக் கொள்ள முடியாத மாட்டாங்கியாகி விடுவான். மிகைத்துக் கொள்வானேயானால், இந்த வஹ்மென்னும் சந்தேகமில்லாமல் பிறக்கப்பட்ட ஈஸா மர்யம் அலைஹிஸ்ஸலாம் இவர்களைப் போல ஆகிவிடுவான். ஏனென்றால், இவர்களிருவருக்கும் அந்த வஹ்மென்னும் சந்தேகம் அறவே கிடையாது.*

*இதுபோல் ஆதம் ஹவ்வா அலைஹிமிஸ்ஸலாமும் சுவர்க்க லோகத்தில் இருக்கும்போது இந்த வஹ்மென்னும் சந்தேகமும் கியால் என்னும் தோற்றரவும் அவர்களுக்கு கிடையாது. அப்போது ருபூபிய்யத் என்னும் நாயகத்தனம் இவர்களுக்கெல்லாம் வெளியாகியிருந்தது.*

*கல்பில் ஒரு வஸ்துவை தோற்றவரவு செய்தால் உடனேயே வெளியில் ரூபமாகி தங்கள் ஹலறத்தில் வந்து விடும். ஏனென்றால், ருபூபிய்யத் என்ற நாயகத்தனமாகியது ஒரு நொடியில் ஒன்றை உண்டாக்கியும் போடும். அழித்தும் போடும். அப்படியிருக்க ஆதம் ஹவ்வா அலைஹிமிஸ்ஸாம் இருவர்களுக்கும் சொர்க்க லோகத்தில் வெளியாகி இருந்த ருபூபிய்யத்தாகிறது அவர்களுக்கு துன்யாவில் மறைந்து போய்விட்டது. அது மறைந்த உடனே தான் வஹ்மென்னும் சந்தேகமும், கியால் என்னும் தோற்றரவும் (கற்பனையும்) அவர்களுக்கு வெளியாகிவிட்டது.*

*அதுபோல் துன்யா மனிதரடங்கலுக்கும் அந்த ருபூபிய்யத்து மறைந்திருக்கிறது. துன்யாவை விட்டும் நீங்கி ஆகிறத்தளவில் திரும்பி விடுவார்களேயானால், ருபூபியத்து வெளியாகிவிடும்.*

*ஏனென்றால், சொர்க்கவாதிகளடங்கலுக்கும் ஆண்டவன் ருபூபிய்யத் என்ற நாயகத்தனத்தை வெளியாக்கிக் கொடுத்துதான் சொர்க்க லோகத்தில் புகுத வைப்பான். அச்சமயம் ஒஜீபனம் வேணுமென்று நாடுவார்களேயானால், உடனே உண்டாகிவிடு என்று சொல்வார்கள்.*

*உண்டாகிவிடும். அந்த ருபூபிய்யத்து துன்யாவில் ஒருவருக்கு வெளியாகி விடுமேயானால், அவர்களுக்கும் அதுபோல் உடனே உண்டாகிவிடும். அப்போது கல்பில் ஒருவஸ்துவை தோற்றரவு செய்தால் உடனேயே வெளியில் ரூபமாகி விடும். அந்த ருபூபிய்யத்து வெளியானவர்களுக்கு வஹ்மும் கியாலும் கிடையாது.*

*ஒருபோது மர்யம் அலைஹிஸ்ஸலாம் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமை அழகான மனிதனுடைய தோற்றத்தில் கண்டவுடன் தங்கள் கல்பில் ஸூஹ்பத்தை போலொரு தோற்றரவாகிய கியால் உண்டானது. அந்த கியால் உண்டானதற்காக அந்த ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமை பார்த்து நீர் தகிய்யி என்கிற மனிதனாக இருப்பீரேயானால், உம்மை விட்டும் ஆண்டவனிடத்தில் கார்மானம் தேடுகிறேன் என்று தேடினார்கள்.*

*தேடியும் ருபூபிய்யத்து அவர்களில் வெளியாகி இருந்ததால் உடனேயே அந்த கியாலைக் கொண்டே பிள்ளையுண்டாகி ஒரு சாஅத்துலேயே பிள்ளையை பெற்றுவிட்டார்கள்.*

*அதுபோல் அவ்லியாக்களுக்கும் அந்த நாயகத்தனம் துன்யாவில் வெளியாகியிருக்கும். அவர்கள் கல்பில் ஒரு வஸ்துவை தோற்றரவு செய்தால் உடனேயே வெளியில் ரூபமாகிவிடும். அவர்களுக்கு வஹ்மென்னும் சந்தேகம் கிடையாது. மலக்குல் மவ்த்து இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாம் அந்த வலிய்யுக்கு வசப்பட்டுப் போவார்கள். அந்த மலக்கு அவர்களுக்கு வசப்பட்டு போனால் ஒரு சமயம் அந்த மலக்குக்கு பகரமாகவும் இவர்களிருப்பார்கள். அப்போது ஆண்டவனுடைய முமீத்து - மவ்த்தாக்கி வைக்கிறவன் என்ற இஸ்முக்கு இவர்கள்தான் மள்ஹறாக இருப்பார்கள் என்று அறிந்து கொள்ளவும்.*

*இன்னமும் அந்த வஹ்மு என்னும் சந்தேகமும் கியாலு என்னும் பல தோற்றரவுமாகிறது ஆதம் ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் இருவர்களும் சொர்க்கலோகத்தில் இருந்து பூலோகத்துக்கு இறங்கின அன்றைய தினம்தான் அவர்களிலே போய் குடிகொண்டது. அந்த வஹ்மும், கியாலும் அவர்கள் மக்களடங்களையும் பற்றிப் பிடித்துக் கொண்டது. அது நீங்காதவரையிலும் ஒருவர் மனதிலுள்ளதை மற்றவர்களுக்கு அறிய முடியாது. அது நீங்கிவிடுமேயானால் மனிதர்களுக்கு இடையில் உண்டான விதர்ப்பங்களும் ஜாதி பேதமும் போய்விடும்.*

*இந்த துன்யாவுடைய கோர்வை இருக்கிற வரையிலும் அந்த வஹ்மும் கியாலும் நீங்கமாட்டாது. துன்யா அழிந்து ஆகிறத்துக்குப் போய்விட்டால் வஹ்மும் கியாலும் போய்விடும். இன்னமும் அறிந்து கொள். துன்யாவில் ஹக்குக்கும் கல்குக்கும் இடையில் திரையாக இருக்கிறது இந்த வஹ்மும் கியாலுமாக இருக்கும். இந்த திரை துன்யாவில் நீங்க மாட்டாது துன்யாவை விட்டும் நீங்கினவர்களுக்கே ஒழிய. அவர்களுக்கு நீங்கினதுபோல் நம்மளடங்கலுக்கும் நீக்கிவிடுவானாகவும்.*

*பின்பு அந்தரங்கமாகிய ஐயறிவுகளில் நின்றும் நாலாவதாகிறது ஹிப்லு என்னும் எதையும் பாடமிட்டு பேணிக் கொள்கிற தத்துவமாக இருக்கும். ஹிப்லாகிறது லவ்ஹுல் மஹ்பூலாக*

*இருக்கும். லவ்ஹூல் மஹ்பூலாகிறது இலாஹிய்யத்தாகிய இல்முகள் ரூபமாகி அமைந்திருக்கிற பலகையாக இருக்கும்.*

*அந்த பலகையில் நின்றும் அக்லுல் அவ்வலாகிய ஜிப்ரீலுடைய வாஸித்தாவைக் கொண்டு ஆலம்களில் இலாஹிய்யத்தான இல்முகள் வெளியாகிறதுபோல் இன்சானுடைய ஹிப்லென்னும் தத்துவமாகிய லவ்ஹில் நின்றும் இன்சானுடைய அக்குலுடைய வாஸித்தாவைக் கொண்டு துன்யாவில் பலபல இல்முகளும் வெளியாகிறது.*

*ஆனதால் இன்சானுடைய ஹிப்லில் நின்றும் வெளியாகிறதும் லவ்ஹூல் மஹ்பூலில் நின்றும் வெளியாகிறதும் ஹக்கீக்கத்தில் ஒன்றாவென்று அறிந்து கொள்ளவும். பின்பு அந்தரங்கமாகிய ஐயறிவுகளில் நின்னும் ஐந்தாவதாகிறது பிக்றென்றும் ஆலோசனையாக இருக்கும். இந்த பிக்றென்னும் யோசனையாகிறது பாக்கியான மலாயிகத்துகளுடைய ஹகீக்கத்தாக இருக்கும்.*

*ஏனென்றால் உலகத்தில் சகல காரியங்களும் மனிதர்களுடைய யோசனைகளைக் கொண்டு நடக்கிறதுபோல் எல்லா ஆலம்களிலேயும் எல்லா காரியங்களும் மலாயிகத்துக்களைக் கொண்டுதான் நடக்கிறது. அந்த ஆலம்களில் நடத்தகிறதும் இன்சானில் நடத்துகிறதும் ஹக்கீக்கத்தில் ஒன்றே ஒன்றென்பதை அறிந்துக் கொள்வதுடன் எல்லாத்துக்கும் இன்சான்தான் அஸ்லாகிய நூஸ்கா-நமூனா மாதிரியாக இருக்கும் என்பதையும் இன்சான்தான் ஆலடமடங்கலுக்கும் ஒப்பாகிய நமூனா மாதிரியாக இருக்கும் என்பதையும் விளங்கிக் கொள்வாயாக.*

*ஆனதால் இன்சானுடைய ஜடலமாகிறது ஆலத்துடைய நுஸ்கா அல்லது பிரதியாகயிருப்பதுடன் வானத்துக்கும் பூமிக்கும் வருஷத்துக்கும் பட்டணத்துக்கும் ஒப்பானதாகவும் இருக்கும்.*

*பூமிக்கு ஒப்பாக இருக்கிறதாகிறது பூமியில் மலைகள் உண்டாகி இருக்கிறதுபோல் ஜடலத்திலும் மலைகளாகிய எலும்புகள் உண்டாகி இருக்கிறது. பூமியில் மரங்கள் உண்டாகி இருக்கிறது. சரீரத்திலும் தலைமுடி தாடி முடிபோல் மரங்கள் உண்டாகி இருக்கிறது. சரீரம் அடங்கலிலும் மிருதுவான மயிர் உண்டாகி இருக்கிறது. பூமி ஏழு கோணமாக இருக்கிறது. சரீரத்திலுள்ள ஏழு உறுப்பும் அதற்கு ஒப்பாக இருக்கிறது. அதாவது தலை இரண்டு கை இரண்டு கால், வயிறு, முதுகு இவ்வேழுமாக இருக்கும்.*

*பூமியில் துளும்புதல் உகண்டாகியிருக்கிறது. தும்முறது துளும்புதலுக்கு ஒப்'பு.பூமியில் ஆறுகள், கால்வாய்கள் உண்டாகி இருக்கிறது. நரம்புகளிலும் குடல்களிலும் ஆறுகள், கால்வாய்கள் ஓடிக்கொண்டிருக்கிறது. பூமியுடைய ஆறுகளில் சிலது உப்பு சிலது கசப்பு சிலதுதுவர்ப்பு சிலது இனிப்பு. அதுபோல் வாய்நீர் இனிப்பு கண்ணீர் உப்பு நாசின் நீர் துவர்ப்பு காதின் நீர் கசப்பு, நித்திரையில் புழுப்பூச்சிகள் காதில் புகுதாமலிருப்பதற்காக வேண்டியாக இருக்கும்.*

*வானத்துக்கு சரீரம் ஒப்பாகிறதாகிறது வானத்தில் 12 புறூஜென்னும் கூடுகளுண்டாகி இருக்கிறது. சரீரத்திலும் பிரண்டு கூடுகளான துவாரங்களுண்டாகி இருக்கிறது. வானத்தில் இருபத்தி எட்டு மன்ஸில் என்னும் தானங்கள் உண்டாகி இருக்கிறது.*

*சரீரத்திலும் இருபத்தி எட்டு சவ்வுண்டாகி இருக்கிறது. வானத்தில் 360 தரஜா உண்டாகி இருக்கிறது. சரீரத்திலும் 360 நரம்புண்டாகி இருக்கிறது. வானத்தில் ஏழு நட்சத்திரம் நடந்துக் கொண்டிருக்கிறது. சரீரத்திலும் ஏழு உறுப்பும் அதன் வேலையை நடத்துகிறது.*

*வானத்தில் நடக்காமல் தரிபட்டிருக்கிற நட்சத்திரங்கள் மிகுதமுண்டாகியிருக்கிறது. சரீரத்திலும் ஹவாஸ்ஸுல் கம்சு என்ற ஐயறிவுகள் குவ்வத்து பலவிதமான உணர்ச்சிகளும், மிகுதம் உண்டாகியிருக்கிறது. வானம் நாலு அனாஸிறுகளைக் கொண்டு சூழ்ந்து கொண்டிருக்கிறது. சரீரத்திலும் நாலு அக்லாது (அ) நாடி குணங்களைக் கொண்டு சூழ்ந்து கொண்டிருக்கிறது.*

*அதாவது ஸப்றா பித்தம், சவ்தா வாதம், தமுன் சிலேர்ப்பனம், பல்ஙம் சிலேத்துமம் இந்த நான்கு அக்லாத்தின் பேரிலும் பொதிந்து கொண்டிருக்கிறது. வருடத்தைக் கொண்டு ஒப்பாகிறதாகிறது வருடம் பன்னிரண்டு மாசமாக இருக்கிறது. சரீரத்திலும் பனிரண்டு துவாரமுண்டாகி இருக்கிறது.*

*வருடத்துக்கு நாலு புஸூல் பிரிவு உண்டாகி இருக்கிறது. சரீரத்திலும் நாலு அக்லாத்து உண்டாகி இருக்கிறது. வருடத்துக்கு ஏழு நாளுண்டு. சரீரத்திலும் ஏழு உறுப்புண்டும். வருடத்துக்கு 360 நாட்கள் உண்டு. சரீரத்திலும் 360 நரம்புகள் உண்டு.*

*பட்டணத்துக்கு ஒப்பாகிறதாகிறது பட்டணத்தில் சுல்தானும் மக்களும் உண்டு. தச்சனைப் போல, வண்ணானைப்போல அதுபோல் சரீரத்திலும் றூஹு சுல்தானாகவும், அக்லு மந்திரியாகவும், கோபம் காவல்காரனாகவும், ஆசை தஹ்ஸீல்;தாறனாகவும், ஐயறிவுகள் வேவுகாரர்களாகவும் இன்னும் மற்றும் ஹவாஸ்ஸுகளும் குவாக்களும் குடிஜனங்களாகவும் இருக்கும்.*

*அந்த தொழிலாளராவது ஜாதிபா - வஜீபனத்தை உள்ளே இழுக்கிற தத்துவம் மாஸிக்கா - அதை பிடித்துக் கொள்கிற தத்துவம் ஹாளிமா - செமிக்க பண்ணுகிறது முமய்யிஸா - சக்கை வேறாகவும் சத்தை வேறாகவும் பிரிக்கிறது. தாபிஆ- சக்கையை வெளியில் தள்ளுகிறது, முஸவ்விறா- சரீரத்தில் குறைவுபட்;டதற்கு அந்த குறைவை நிறப்ப ரூபத்தை உண்டுபண்ணுகிறது.*

*முவல்லிதா - சரீரத்தில் நின்றும் பிள்ளைகளையும் புற்பூடுகளில் நின்றும் வித்துகளையம் பிறக்கச் செய்கிறது என்பது போல் உள்ள குவ்வத்துகள் எல்லாம் பட்டணத்திலுள்ள தொழிலாளர்களுக்கு ஒப்பாக இருக்கும். இன்னமும் ஹக்குத்தஆலா இன்சானை ஹயாத்து, இல்மு, இராதத்து, குத்றத்து, சம்வு, பஸறு, கலாம் இந்த ஏழு சிபத்துக்களை கொண்டு வன்னிப்புப் பெற்றவனாக ஆக்கினான்.*

*எங்கிலும் இன்சானாகிறவன் இந்த ஏழு சிபத்துகளும் தங்கி நிற்கிற உறுப்புகளளவில் தேவையானான். அதாவது காதளவிலும் கண்ணளவிலும் நாவளவிலும் தேவையானது போல் இன்சான் கண்ணில்லாமல் பார்க்க மாட்டான். காதில்லாமல் கேட்க மாட்டான். நாவில்லாமல் பேசமாட்டான். ஹக்குத்தஆலா இந்த ஏழு சிபத்தைக் கொண்டு வன்னிப்புப் பெற்றிருக்கிறதுடன் இந்த ஏழும் தங்கி நிற்கிற உறுப்பளவில் தேவையாக மாட்டான். அவனுடைய சூறத்தைக் கொண்டு எல்லா செயல்களையும் செய்வான்.*

*மேலும் இன்சானுடைய றூஹு அந்த கண், காது, நாவு போல் உள்ள உறுப்படங்களிலும் நடக்காமல்போனால் நாக்கு பேசுவதற்கும், கை ஒரு வஸ்துவை பிடிக்கிறதற்கும், கால் நடக்கிறதற்கும் சக்தி பெற மாட்டாது. அப்படிப் போலதான் ஹக்குத்தஆலாவுடைய அம்று (அ) அவனுடைய காரியமாகிய ஊட்சிதம் சகல வஸ்துவிலும் நடக்காமல் போனால் வானமும் நட்சத்திரங்களும் நாலு அனாஸிறும் உசும்ப மாட்டாது. அப்போது பூமியில் ஜமாதாத்து, நபாதாத்து, ஹயவானாத்து என்ற மூன்று பிள்ளைகளும் பிறக்கமாட்டாது. அது அப்படியில்லை. ஆலமடங்களிலும் ஹக்குத்தஆலாவுடைய தஸற்றுபாத்து நடந்து கொண்டே இருக்கிறது.*

*அதுபோல் சரீரத்திலும் றூஹு தஸற்றுபாகி கொண்டேயிருக்கிறது. விளக்கு எரியும் காலமெல்லாம் எண்ணெய் ஏறிக் கொண்டேயிருக்குமாபோல் அதுபோல் ஆண்டவனுடைய ரஹ்மத்தென்னும் பைளு சொறியுதல் ஆலமடங்களிலும் Nநுமமாய் சொறிந்து கொண்டே இருக்கும். மேலும் நாம் ஒரு கத்தை எழுத நாடினால் றூஹுடைய நாட்டம் துவக்கத்தில் கல்பளவில் வருகிறது. அந்த கல்பு நரம்புகளையும், சவ்வுகளையும் உசுப்புது. அந்த நரம்புகள் விரல்களை உசுப்புது. விரல்கள் கலத்தை உசுப்புது. கலமை மையை உசுப்புது. மை காகிதத்தில் நாம் நாடினதெல்லாம் எழுத இணங்கி வருகிறது. அறபி பாஷையிலும், தமிழ் பாஷையிலும் நள்மு கோர்வையாலும், நத்று கோர்வையாலும் எழுதுகிறோம்.*

*அப்படிப்போலேதான் அல்லாஹுத்தஆலா ஆலத்தில் ஒரு வஸ்துவை படைக்க நாடினால் அவனுடைய நாட்டம் துவக்கத்தில் அர்ஷளவில் வருகிறது. அர்சில் நின்றும் மலாயிகத்துகளளவில் வருகிறது. மலாயிகத்துகளில் நின்றும் வானங்களளவில் வருகிறது. வானங்களில் நின்றும் நட்சத்திரங்கள் அளவில் வருகிறது. நட்சத்திரங்களில் நின்றும் அனாஸிறு பூதங்கள் அளவில் வருகிறது. வந்த உடன் ஹக்குத்தஆலா நாடின வஸ்துவுகள் எல்லாம் ஆலத்தில் உண்டாகிறது.*

*அதாவது ஜமாதாத்து, கற்கரடு நபாதாத்து விருட்சாதிகள், ஹயவானாத்து உயிர்பிராணிகள் என்று மூன்று பிள்ளைகளும் ஹக்குடைய நாட்டப்படி துன்யாவில் உண்டாகிறது. அதுபோல் இன்சானுடைய றூஹு கல்பைக் கொண்டு நாடுகிறதாவது ஹக்குத்தஆலா அர்ஷைக் கொண்டு நாடுகிறதுபோல் இருக்கும். ஏனென்றால், கல்புல் மூமின அர்ஷுல்லாஹி - கல்பாகிறது அர்ஷுடைய தலத்திலும் நரம்புகள் மலாயிகத்துகளுடைய தலத்திலும் விரல்கள் வானத்துடைய தலத்திலும் கலம் நட்சத்திரத்துடைய தலத்திலும், மையாகிறது அனாசிருடைய தலத்திலும் பிறக்கப்பட்ட 3 பிள்ளைகளும் கத்துடைய தலத்திலுமாக இருக்கும் என்று அறிந்து கொள்.*

*ஆனால் ஒரு சாலிஹ் என்கிற ஆண்டவனுடைய பாதையில் நடக்கிறவன் இந்தப்படி அறிந்து அந்த மகாமில் வாஸிலாகிவிடுவானேயானால் படைக்கப்பட்ட வஸ்துவடங்களையும் அழகாகவே காண்பான்.*

*ஏனென்றால், எல்லாம் ஹக்குடைய குத்றத்து என்னும் கை கொண்டுதான் எழுதப்பட்ட சித்திரமாக இருக்கிறதென்றும் இன்னும் ஹக்குத்தஆலாதான் தன்னுடைய இக்தியார் தெரியுதலைக் கொண்டு தானாகவே தனியே எல்லாக் காரியங்களையும் செய்து முடிக்கிறான் என்றும் அறியும்போது ஒரு வஸ்துவையும் பொருத்த கெடமாட்டான். அப்படி பொருத்தக் கெட்டால் ஆண்டவனை பொருத்தக் கெட்டதாக யிருக்கும்.*

*அதற்காகத்தான் ஒருவர் பைத்துச் சொல்கிறார்கள்: பால அபதுன் வல்கல்கு லம்யுக்லகூசுதா வஇன்லம்த்தகுன் அப்ஆலுஹூம் பிஸ்ஸதீதத்தி - கல்குகளை வீணாகவும், விளையாட்டுக்காகவும் படைக்கவில்லை. அவர்களுடைய செயல்கள் திருத்தமில்லாமல் போனாலும் சரிதான். அலாஸிமத்தில் அஸ்மாயி தஜ்ரீ உமூறுஹூம் வஹிக்மத்து வஸ்பித்தாத்திலில் ஹுகுமி அஜ்றத்தி - ஹக்குடைய அஸ்மாக்களின் தேட்டறவின் பாதையின் பேரில்தான் கல்குடைய காரியங்கள் நடக்கிறது. இன்னும் ஹக்குடைய ஸிபத்தின் பூறாயமாகிறது கல்குகளின் ஹுக்மை நடத்தாட்டி வைக்கிறது.*

*ஆனதால் எல்லா ஆலம்களையும் ஹக்குத்தஆலா மலாயிகத்துகளைக் கொண்டுதான் நடத்துகிறான். இன்சானும் அந்த மலக்குடைய இனத்திலுள்ளவன்தான். இந்த இன்சானும் மலக்குகளுடைய குணத்தைக் கொண்டு குணம் கொள்வதுதான் இன்சானுக்கு பூரணப் பதவியாக இருக்குமென்று அறிந்து கொள்வதுடன் இப்போது சொல்லப்பட்டதடங்கலில் நின்றும் ஒரு அணுவாவது உன்தன்னை விட்டு ஒன்றையாவது நீங்கினதாய் விளங்காதே.)*

அப்படியானால், கதையாக முடியுமல்லாது ஒரு அறிவும் உண்டாக மாட்டாது. அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வதில் கலிமாவுடைய மஃனாஎழுதினதில் உன்தனை மறக்காமல் உன் தன்னுடைய ஹகீகத்தைக் கொண்டே ஈமான் கொள்ள வேண்டும் என்று மிகவும் புதைத்தலாகிய சைக்கினையாய் சைக்கினைக் காட்டியிருக்கிறது. (நமதாண்டவர்கள், அஷ்ஷெய்குல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு சொல்கிறார்கள்:

(பைத்து) *றாஹுல் வுஜூதுல் கபீர் ஹாதல்வுஜூதுஸ்ஸகீர்* - பெரிய வுஜூது என்னும் ஆலமடங்கலுக்கெல்லாம் இந்தச் சிறிய வுஜூது றூறாக இருக்கும். *லவ்லாஹு மாகால இன்னீ அனல்க்கத்தி றுல்கபீறு* - இது இல்லாதிருக்கில் அது நான் கதீறு எல்லாத்துக்கும் தகுதியை உடையவனென்றும் கபீறென்னும் பெரியவனென்றும் சொல்லுகிறதில்லை.

*லாயஹ்ஜி பன்க்க ஹுதூதீ வலல்பனாவன்னு ஷூறு* - நான் புதுசாக இருப்பதும் பனாவாகி விடுவதும் அப்பால் என்னை எழுப்பிப் பரத்துரதும் உன்னைத் தடுத்துப் போட வேண்டாம். *பஇன்த்த அம்மல்த்த அன்னீ அனல் முஹீத்துல்க்கபீறு* - ஆராய்ந்து பார்த்தாயாகில் திட்டவட்டமாய் நானாகிறது நானே சகலதையும் சூழ்ந்து கொண்ட பெரியவனாக இருக்கும். *பலில்க் கதீமி பிதாத்தீ வலில் ஜதீதி லுஹூறு* - பூர்வீகமானதற்கும், புதிதானதற்கும்

என்னுடைய உள்ளமை கொண்டே வெளியாகிறதுண்டும். *வல்லஹு பர்துன் கதீறு லாத:தரீஹிகுஸூறு* - அல்லாவென்பது பூர்வீகமாகிய ஒற்றையாக இருக்கும். அதற்கு யாதொரு கட்டைக் குறைவுக் குறுக்கிட மாட்டாது.

இந்த பைத்தை இன்னமும் கொஞ்சம் நீளமாகச் சொல்கிறார்கள். ஆனால் இந்த பைத்தாவது இதுபோல் எந்த பைத்துமாவது அவர்கள், மகுலூபாக (ஐ) ஐதுபில் மற்றவர்கள் சொல்வதுபோல் சொல்கிறார்கள் என்று எண்ணி அனேகர்களும், செய்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கலாமை விளங்காமல் பேர்கெட்டுப்போனது போல் எண்ணி அதிலுள்ள இல்மை விளங்காமல் விட்டு விடாதே.

இன்னமும் சிலர்கள் காத்திமுல் அவ்லியாவாகிறய இந்த நாயகத்துடைய சொற்களை குப்ரளவில் சேர்த்து மோசப்பட்டுப் போனார்கள். இந்த பைத்துடைய தீர்மானம் நமக்குத் தெரியாதிருப்பதுடன் தெரிந்த மட்டில் எழுதினால் அதிக நீளமாகிவிடும். இந்த இடத்தில் இதை வருத்தினதெல்லாம் மலாயிகத்துகள் இன்ன என்பதில் உன்தன்னை மறந்து நீ யோசிக்காதிருப்பதற்காக அல்லாது வேறில்லை. மலாயிகத்துகளுடைய விபரத்தை கஷ்புக்குப் பின்னால் கண்காட்சியாகக் காண்பது கொண்டல்லால் அறியக்கூடாது.

ஏனென்றால் **ஹக்கீகத்துன் முகம்மதிய்யா** என்றும், **றூஹுல் அ:லமென்**றும், **றூஹுல் இன்சானிய்யி** என்றும், **மலுஹறுத்தாத்தில் இலாஹிய்யா** என்றும், இன்னமும் பின் விபரிக்கிறபடி பலபேர் கொண்டும் அந்தந்த மள்ஹறுக்குத் தக்கதுபேர் சொல்லப்படுகிறதெல்லாம் மலக்கே அல்லாது வேறில்லை.

ஏனென்றால் இன்சான் காமில் என்னும் கிதாபில் 51ஆவது பாபில் மலக்குடைய விபரம் பேசுவதில் சொல்கிறார்கள்: றூஹென்று ஒரு மலக்குண்டும். சூபிய்யாக்கள் அதற்கு **ஹக்குல் மக்லூக்** என்னும் படைக்கப்பட்ட ஹக்கென்றும் ஹக்கீக்கதுன் முஹம்மதிய்யா என்றும் பேர் சொல்வார்கள்.

அல்லாஹுத்தஆலா இந்த மலக்களவில் அவன் தன்னளவில் நோட்டமிடுவானே அந்த ஒன்று கொண்டே நோட்டமிட்டான். அந்த மலக்கைத் தன்னுடைய நூறில் நின்றும் படைத்து அவரில் நின்றும் ஆலத்தை எல்லாம் படைத்தான். இன்னமும் அவரை ஆலத்தில் நின்றும் அவன் நோட்டமிடுகிற தலமாக ஆக்கிக் கொண்டான். இன்னும் அவருக்கு அம்றுல்லாஹ் என்றும் சொல்லப்படும்.

அவர் உண்டாக்கபட்டதுகள் எல்லாத்திலும் மிகச் சிறப்பானவர். அவருக்கு மேலாலொரு மலக்கும் கிடையாது. அல்லாஹ்வுக்கு முடுகுதலாக்கப்பட்டவர்கள் சங்கையாக்கப்பட்டவர்கள் எல்லோருக்கும் நாயகமானவர் மிக வருசையானவர் மற்ற மலாயிக்கத்துகளை எல்லாம் அவரளவில் சேர்த்துப் பார்க்குமிடத்தில் அவர் கரையில்லாச் சமுத்திரம் போலும் அவர்களெல்லாம் துள்ளிகள் போலும் என்றும் அர்ஷை சுமக்கிற எட்டு மலக்குகளையும் அவரளவில் சோத்துப் பார்க்கிறதாகிறது இன்சானுடைய றூஹில் நின்றும் இன்சான் அளவிற்

சேர்க்கப்பட்ட உஜூது அதுகொண்டு நிலைநிற்குதே அப்படிக்கொற்ற எட்டையும் சேர்த்துப் பார்க்கிறது கொண்டாயிருக்கும்.

அதுகளாகிறது அக்குலென்னும் புத்தி, வஹ்மென்னும் சித்தம், பிக்று என்னும் யோசனை, கியால் என்னும் பலதோற்றரவு, முஸவ்விருறா என்னும் எதையும் ரூபமாக்குகிறது, ஹபிலா என்னும் எதையும் ஞாபகமாய் பேணிக் கொள்கிறது, முத்ரிக்கா என்னும் எதையும் எவ்விதமென்று எட்டிக்கொள்கிறது, நப்சென்னும் மனம் ஆக இந்த எட்டுமாக இருக்கும்.

அந்த மலக்குடைய நிறப்பங்கொண்டு ஹக்கீக்கத்துன் முகம்மதிய்யாவில் வெளியானான் என்று நீளமாகப் பேசி அப்பால் சொல்கிறார்கள். அறிந்து கொள். இந்த மலக்கை அல்லாஹுத்தஆலா தன்னுடைய உள்ளமை அவரில் வெளியாகி இருக்கிற கண்ணாடியாக ஆக்கினான். அவனுடைய தாத்து கொண்டு இந்த மலக்குலே ஒழிய வெளியாகமாட்டான். மற்ற கல்குகளில் அவன் வெளியாகி இருக்கிறதெல்லாம் அவனுடைய சிபாத்து கொண்டுதான். இவர்தான் துன்யாவளவிலும், ஆகிறத்தளவிலும் சேர்க்கப்பட்ட ஆலத்துக்கெல்லாம், குத்பானவர்.

சொர்க்கவாதிகள், நரகவாதிகள், கதீபை உடையவர்கள், அ◌ஃறாபை உடையவர்கள், சகலருக்கும் குத்பானவர். அல்லாஹ்வுடைய கல்குகளில் இன்சான் காமிலைத்தவிர ஒருவரளவிலும் தெரிகிறவராக இருக்கமாட்டார். ஒரு வலி இவரை அறிந்தாரானால், எல்லா வஸ்துவையும் அறிந்து கொள்வார். அந்த வஸ்துக்களைக் கொண்டு நிச்சயமாக அறிந்து கொண்டாராகில் உஜூதெனும் திருகை அவரில் சுத்தியாடுகிற குத்பாகிவிடுவார்.

ஆகிலும் அந்த மலக்குக்கு இவர் பகரமாகத்தானிருப்பார். ஏனென்றால், இந்த உஜூதிலே குத்துபிய்யாவென்பது அடிமூட்டில் இந்த மலக்கைக் கொண்டுதான் மற்றவர்களுக்குப் பகரம் இரவலுடைய ஹுக்கும் கொண்டாக இருக்கும். ஆகையால் அவரை அறிந்து கொள்.

அல்லாஹ்வுடைய வேதத்தில் *யவ்ம யகூமுற்றூஹு வல்மலாயிக்கத்து* என்று சொல்லப்பட்ட றூஹுதான் அவர் என்றும் அப்பால் நீளமாகப் பேசி முகர்றபீன்களாகிய மலாயிக்கத்துகள் அடங்கலும் அவரில் நின்றும் படைக்கப்பட்டவர்கள். ஜிப்ரயீல், மீகாயீல், இஸ்றாபீல், இஸ்றாயீல் அவர்களுக்கு மேலாலுள்ள லௌஹுல் மஹ்பூலுக்குத் தாளால் நிற்கிற நூன் என்று பேர் வைக்கப்பட்ட மலக்கும் கலம் என்று பேர் வைக்கப்பட்ட மலக்கும், குர்சிக்கு தாளால் நிற்கிற முத்தத்தி என்று பேர் வைக்கப்பட்ட மலக்கும், இமாமுல் முபீனுக்குத் தாளால் நிற்கிற முஸ்ஸம்மிலென்று பேர் வைக்கப்பட்ட மலக்கும் அவரில் நின்றும் படைக்கப்பட்டவர்கள்தான்.

இந்த கூட்டங்கள் தான் ஆதமுக்கு ஸுஜூது செய்யும்படி ஏவப்படாத ஆலூன்கள் என்று சொல்லப்பட்டவர்கள். ஏனென்றால், ஆதமுக்கு ஸுஜூது செய்வது கொண்டு அவர்களை ஏவப்பட்டிருந்தால் அவருடைய பிச்சளங்கள் எல்லோரும் அவர்களை அறியக்கூடும். நீ பார்க்கவில்லையா? ஸுஜூது கொண்டு ஏவப்பட்ட மலக்குகள் ஆதமுடைய மக்களடங்கள் பேரிலும் எப்படி வெளியாகுகிறார்கள். நித்திரையில் அதுகளைக் கொண்டு வெளியாகுமே அப்படிக்கொற்ற மிதால்களைக் கொண்டு ஹக்குத்தஆலா எவ்விதம் ரூபமாக்கி வைக்கிறான்.

ஆகையால் அந்த ஸூறத்துகள் அடங்கலம் அல்லாஹ்வுடைய மலாயிகத்துகளாக இருக்கும். அந்த மலாயிகத்துகளை ஏவுவானே அந்தஒரு ஹுக்கும் கொண்டு மிதால்களை எடுத்துக் காண்பிக்கிறது கொண்டு சாட்டப்பட்ட மலக்கு இறங்குவார். ஆகையால் உறங்குகிறவனுக்கு ரூபம் அடங்கலைக் கொண்டும் ரூபமாவார். இதற்காக வேண்டித்தான் உறங்குகிறவன் கற்கரடு அவனோடு பேசிக் கொள்ளம். கற்கரடுடைய ரூபங்கொண்டு ரூபமாக்கப்பட்ட றூஹாக இருக்கவில்லையானால் பேசமாட்டாது.

ஆகையால்தான் நபி நாயகம் உண்மையாகிய கனவு அல்லாஹ்வுடைய வஹீ என்றார்கள். ஏனென்றால், மலக்கு அதுகொண்டு இறங்குகிறபடியால் இன்னமும் ஒரு ஹதீதில் உண்மையாகிய கனவு நுபுவ்வத்தில் நின்றும் 46 பகுதியிலொன்று என்றார்கள். (நுபுவ்வத்துடைய காலம் இருபத்தி மூன்று வருடத்தில் ஆறுமாதம் நாற்பத்தாறு பங்கில் ஒன்றாக இருக்கும். முந்தின ஆறு மாதமும் வஹீ நபி அவர்களுக்கு மனாமிலேயே வந்தது. ஆகையால், உண்மையான கனவு நுபுவ்வத்தில் நாற்பத்து ஆறு பங்கில் ஒன்று என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்.)

ஆனால் இப்லீசு அலைஹி லஃனத்துல்லாவும் ஸுஜூது கொண்டு ஏவப்பட்டு மறுத்தவனாகையால் அவனுடைய பிச்சளங்களையும் பிள்ளைக் குட்டிகளையும் உறங்குகிறவர்களுக்கு மலாயிகத்துகள் ரூபமாவதுபோல் ரூபமாகும்படி ஏவினான். அதனால் பொய் மனாம் வெளியாகிறது. ஆனால் ஆலூன்கள் என்று சொல்லப்பட்டவர்களை ஆதமுக்கு ஸுஜூது செய்யும்படி ஏவப்படவில்லை.

இதற்காக வேண்டித்தான் ஆதமுடைய மக்களில் நின்றும் தேக சம்பந்தங்களை விட்டு ஆதமிய்யாகிய பண்புகளையும் விட்டு நிவாரணையாக இலாஹிய்யூன்களைத் தவிர மற்றவர்கள் அவர்களை அறியிறத்தளவில் சேரமாட்டார்கள்.

இப்லீசு ஸுஜூதை விட்டு மறுத்தபோது அல்லாஹுத்தஆலா நீ பெருமையாயிருந்து விட்டாயோ? அம்குன்த மினல் ஆலீன் அல்லது ஆலூன்களில் நின்றுமாயிருந்தவனோ? என்று உருக்குதலாகக் கேட்டான்.

இன்னமும் இதில் நீளுமாகப்பேசி அப்பால் சொல்கிறார்கள்: இந்த மலக்குக்கு அவருடைய முகத்தின் எண்ணப்படி மிகுத்தத் திருநாமங்கள் உண்டு. அதென்னவானால், **கலமுல் அஃலா** என்றும, **றூஹுல் முஹம்மதெ**ன்றும், **அக்லுல்அவ்வல்** என்றும், **றூஹுல் இலாஹிய்யி** என்றும் சொல்லப்படும். இதுவெல்லாம் பறுஜக்கொணடு அசலுக்குப் பேர்வைப்பதில் நின்றுமுள்ளது. அப்படியில்லையானால், அல்லாஹ்வுடைய ஹலறத்தில் அவருக்கு றூஹென்கிற ஒரு பேரைத் தவிர வேறேயில்லை.

ஆகையால் புதுமைகளில் நின்றும் நவநீதமாகிய அற்புதங்களில் நின்றம் இந்த மலக்குப் பொதிந்திருப்பதை விரிவாகப் பேச நாம் தொடுத்தோமாகில் பைண்டுகுளாக்கப்பட்ட மிகுந்த கிதாபுகள் அளவில் நாம் தேவையாவோம். இன்னமும் ஒருபோது நாயகத்தனத்தளவில் சேர்க்கப்பட்ட தூய்மையாகிய சமூகங்களில் சிலதில் அந்த மலக்கைக்கொண்டு நான்

சேர்ந்தேன். என்னளவில் தெரிவுதலாகி எனக்கு சலாம் சொன்னார். அவருடைய பாரதூரமாகிய ஆரவாரத்தால் நான் பாவாக உருகிவிடவும் அவருடைய வஜீகரதத்தின் அலங்கிர்தத்தால் நான் அழிந்து பனாவாகிவிடவும் முடுகினதின் பின்னால் சலாமுக்குப் பதில் சொன்னேன்.

சலாம் சொன்னதின்பின் அவரது செழுசெழுப்பாகிய மருகுதல் கொண்டு என்னோடு சமாளமாகிவிட்டபோது அவரிடத்தில் அவருடைய தலத்தில் அவருடைய தலத்தைத் தொட்டும் அவருடைய அஸ்லைத் தொட்டும் அவருடைய சமூகத்தைத் தொட்டும் அவருடைய தெரிசனையைத் தொட்டும் அவருடைய தந்தை தாய் பிள்ளையைத் தொட்டும் அவருடைய தண்ணீரைத் தொட்டும் அவருடைய சுனையைத் தொட்டும் அவருடைய வருணிப்பைத் தொட்டும் அவருடைய ஆபரணாதியைத் தொட்டும் அடையாளத்தைத் தொட்டும் கேட்டேன்.

அப்போது என்னைப் பார்த்து நீ கேட்டாயே, அப்படிப்போல் உள்ள கருமம் நீ தேடினாயே அப்படிப்போல் உள்ள வஸ்து நாடுகிறதற்கும் அறவே கிடையாத்தது. அதில் தரிபடுகிறது பாரதூரமானது அதைக் கலப்பறுதலாயச் சொல்லிக் காட்ட இணக்கப்படாது சைக்கினைச் சொல்லாலும் கண்ணால் கையால் சைக்கினை செய்வதாலும் விளங்கிக் கொள்வதற்கு இடம்பாடாகாது என்று சொன்னார்.

அப்போது சைக்கினைச் சொல்லாகவும் சாடை சைக்கினையாய் கையால் கண்ணால் காட்டினாலும் அல்லாஹுத்தஆலாவுடைய இனாயத்து ஐ உதவி எனக்கு முந்தியிருந்தால் நான் விளங்கிக் கொள்ளப் போதுமென்று நான் சொன்னேன். அப்போது நானாகிறது அவனுடைய தகப்பன் அவனுடைய மகனாக இருக்கிறானே அப்படிப்போல் பிள்ளையாக இருக்கும்.

இன்னமும் அதனுடைய முந்திகைக் கொடி அதினுடைய பாத்திரமாய் இருக்கிறதே அப்படிப்போல் சாராயமாக இருக்கும். இன்னமும் அதனுடைய தாயை ஈணுமே அப்படிப்போல் குட்டியாகயிருக்கும். இன்னமும் அதனுடைய வில்லு அதனுடைய நாணாகயிருக்குமே அப்படிப்போல் அம்பாக இருக்கும். தாய்மார்களெல்லாம் சேர்ந்து என்னைப் பெற்றார்கள். அவர்களைக் கலியாணம் செய்துகொள்ள அவர்களைப் பெண் பேசினேன். என்னைக் கல்யாணம் செய்து கொண்டார்கள். அஸ்லுகளுடைய வெளிரங்கத்தில் நான் சரியாக்கி வைத்தபோது உண்டான சூறத்தைக் கட்டுப்படுத்தி என் தன்னிலே மடக்கிக் கொண்டு என்னுடைய ஐயறிவிலேயே சுத்திக் கொண்டிருக்கிறேன்.

இன்னமும் ஹயூலா என்னும் புவனாதிகளுடைய அமானத்தெல்லாம் சுமந்து கொண்டேன். முந்தினதென்று வருணிக்கப்பட்ட சமூகத்தை நான் கெட்டியாக்கிக் கொண்டேன். அடங்கலுக்கும் என்னைத் தகப்பனாகவும் பெரியாருக்கும் பாலகராகிய சிறியாருக்கும் தாயாகவும் காண்பாய். இது தான் ஹலறத்தென்னும் சமூகமும் அமானமும் மூலமும் தலமும் ஆக இருக்குமென்று இன்னமும் நீளமாய்ப்பேசுகிறார்கள்.

மத்லவுகுஸூஸில்கலிம்பீ ஷற்ஹில்மஆனி புஸூஸில் ஹிக்கம் என்ற கிதாபில் தாவூது இப்னு மஹ்மூதுல் கைஸரிய்யி ரஹியமஹுல்லாஹ் அவர்கள் பத்தாவது பஸ்லில் இந்த

மலக்குடைய விபரத்தைப் பேசிவருவதில் மலக்கென்ற பெயரை அறவே காட்டாமல் றூஹுல் அஃலமையும், அதனுடைய மர்தபாக்களையும் ஆலம் இன்சானில் அதனுடைய திருநாமங்களையும் பயான் செய்கிற பஸ்லாகயிருக்குமென்று சொல்லி அப்பால் சொல்கிறார்கள்:

அறிந்துக் கொள். ஹகீகத்தில் றூஹுல் அஃலமாகிறது இன்சானிய்யத்தாகிய றூஹாக இருக்கும். இலாஹிய்யத்தாகிய தாத்துடைய மள்ஹராக இருக்கும். அப்பால் அதனுடைய பாரதூரத்தை நீளமாகப் பேசி அதனுடைய தீர்ச்சையை அல்லாஹ்வைத் தவிர யாரும் அறியார்கள் என்றும், பெரிய இன்னாசன் என்னும் ஆலத்தில் அதற்கு மலாஹிரென்னும் அவதாரங்கள் என்ற பெயர்களுமுண்டு. அதென்னவானால் அக்லுல் அவ்வலென்றும் கலமுல் அஃலா என்றும், நூறென்றும் நப்சுல் குல்லிய்யா என்றும் இதல்லாத்ததுகளுமுண்டும்.

ஆனால் இதுவெல்லாம் இன்சானுடைய ஹகீகத்துதான் ஆலமென்னும் பெரிய இன்சானாக வெளியானது. இப்படிப்போல் சின்ன இன்சானாகிய இந்தக் கண்டிப்பையுடைய இன்சானிலும் அதற்கு மலாஹிரென்னும் அவதாரங்களும் அந்ததந்த அவதாரங்களுக்குத் தக்கபடிக்கும் அதனுடைய மர்தபாவுக்குத் தக்கபடிக்கும் அல்லாஹ்வுடைய சொர்க்கம் பெற்ற அடியார்களிடத்திலும் அவர்களல்லாதவர்களிடத்திலும் அவர்களிடம் வழங்கும் வார்த்தைக்குத் தக்கபடி திருநாமங்களும் உண்டு.

அதுகளாகிறது சிர்றென்னும் ரகசியமென்றும் கபியென்னும் மறைவானதென்றும், றூஹென்னும் கல்பென்றும் கலிமாவென்றும், றூவு என்றும், புஆதென்றும், ஸத்தென்றும், அக்குலு என்றும் நப்சு என்றும் சொல்லப்படுகிறதென்று அதுகளுக்கெல்லாம் காரணமும் முகாந்திரமும் சொல்லி அப்பால் சொல்கிறார்கள்: ஒருவன் இவைகள் எல்லாத்தையும் ஒன்றென்று சொன்னாலும், உண்மை சொன்னான். வேறென்று சொன்னாலும் உண்மை சொன்னான் என்றார்கள்.

அப்பால் நான் சொன்னதை ஆராய்ந்து கருத்தை ஆழமாக்கி வைத்தானேயானால் அவனுக்கு வேறே அனேக இரகசியப் பொருட்களெல்லாம் வெளியாகும் என்றார்கள். ஆனால் இந்த மலக்குடைய விபரத்தில் நமது நாயகமார்களுடைய கிதாபு இரண்டில் வந்ததில் இந்த சிற்றடிமைக்கு விளாத்தது முழுவதையும் விட்டுப் போட்டு அப்பால் விளங்கினதிலும் அனேகத்தை விட்டுப் போட்டு மிகச்சுருக்கமாய் எழுதியிருப்பதுடன் உனக்கு விளங்கும் பொருட்டாய் நமக்கெற்றின மட்டில் கொஞ்சம் விபரிக்க நாடினதில் ஒருக்கால் அதுவும் நீளமாகத் தோற்றுவதால் சடைவாக விட்டு விடுகிறாயோ எப்படியோ என்ற சந்தேகத்தால் இதுமட்டில் நிறுத்திக் கொண்டேன். ஆனால் இதில் எழுதினது சாயக்காரன் எழுதினதுபோல் நான் எழுதினேன் என்று எண்ணாதே. குணங்குடியார் அந்த மலக்குடைய விபத்தில் சொல்லுகிறார்கள்:

கரும்பு சர்க்கரை கற்கண்டாலே

பாகம்காய்ச்சி வடித்துத் திரட்டியபாலை

அரும் பாவிக்கருங்கையாலே

அணைத்தாட்கொள்ளும் நாயகன்றாட்களைப் போற்றி

இரக்கத் துணிந்து கொண்டேனே என்றும்

வேதக்கருவே விழைக்கருணைக் குஞ்சரத்தை காதலித்தேனா தரித்தான் கண்ணே ரஹ்மானே என்றும்

இன்னமும் இன்சான் காமிலில் கல்பாகிறது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களில் நின்றும் இஸ்றாபீலுடைய மூலமென்றும் அந்த மலக்குடைய புகழ்ச்சியில் இன்சான் காமிலாகிய எனது நாயகம் அப்துல் கரீமுல் ஜியலி ரலியல்லாஹு அன்ஹு தங்களுடைய ஆனந்த சத்தசாகரமாகிய சமுத்திரத்தில் நின்றும் சில நன்கொடைகளை ஆணிமுத்துத்தாவடமாய் நல் மென்னும் கோர்வையாய் சலி பைத்துச் சொல்கிறார்கள். அதுகளை இதில் எடுத்துக் காட்டுவதில் ஹவாதுன்யா ஆசையுள்ள கல்புக்கு விளங்காதென்று விடப்படுகிறது.

அக்குலுல் அவ்வல் என்று சொல்லப்பட்டது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களில் நின்றும் ஜிப்ரீலுடைய மூலமென்றும் அப்பால் அது அக்குலுல் குல்லென்றும் அக்குலல் மஆஷிய்யி என்றும் மூன்று பிரிவாய் பேசுவதில் முன்தீனுடைய கிதாபில் நாம் பிற்பாடு அதுகளை விபரிப்பதாய் வார்த்தைப் பாடு செய்திருந்தாலும் இப்போது அதில் நமக்கு தஹ்கீக்கான இல்மு உண்டாகவில்லை என்பது தெரியபடியாலும் தெரிந்தமட்;டில் எழுதுவதில் இதில் நான் அதிகத் தட்டளிவாக இருப்பதுபோல் நீயும் தட்டளியப்போதுமென்று விட்டுவிட்டேன். ஆகிலும் முஹம்மதிய்யாகிய நாத்திகெனும் மொழியிரவர் றப்பிஸித்னீ பீக்க தஹய்யுறா நாயனே உன்னில் தட்டளிவை அதிகப்படுத்தென்று சொல்வதுபோல் சொல்லுகிறேன்.

*(ஷற்ஹு*

*ஆனால், நமக்கு நம்மைப் போல் உள்ளவர்களுக்கு உண்டாகிற தஹய்யுறென்னும் தட்டளிவானது அஹ்லுல்லாக்களாகிய காமிலீன்களுக்கு இலாஹிய்யத்தாகிய அஸ்மா சிபாத்துக்களுடைய தஜல்லியாத்து என்னும் வெளியாகுதல்களாகிறது அவர்களுடைய அக்லை மிகைத்ததாகவும் பிக்றை கடந்ததாகவும் மிகுதமாகிறது கொண்டும் வகைவைகயாகிறது கொண்டும் உலூஹிய்யத்துடைய தஜல்லிக்கு அவர்கள் மவ்லிவு என்னும் தானமாக இருக்கிறதளவில் அவர்களுக்கு உண்டாகிற தஹய்யுறென்னும் தட்டளிவைப் போல் ஒத்த தட்டளிவாக இருக்குமென்று எண்ணாதே.*

*ஏனென்றால், தஹய்யுறென்னும் தட்டளிவானது இரண்டு வகையாக இருக்கும். அதில் முந்தினதாகிறது ஹய்றத்துன் மதுமூமா என்னும் பழிக்கப்பட்ட தட்டளிவாக இருக்கும். அதாவது ஸாலிக்கீன்களுடைய ஸுலூக்கீன் ஆரம்பத்தில் உண்டாகிற கவ்பு, ரஜா, கப்லு, பஸ்த்து, ஹய்பத்து, உன்சு, ஜலால், ஜமால், மஹ்வு, ஸஹ்வு என்பதுபோல் உள்ள நிலைமை*

*மாறுதல் அவனுக்கு உண்டாகாமல் இருக்கிறபோது ஸுலூக்குடைய ஆரம்பத்தில் ஸாலிக்குக்கு வெளியாகிற பாரிகாத் என்னும் மின்னல்களாகிய இலங்குதல்களைக் கண்டு தட்டளியிறதாக இருக்கும்.*

*இரண்டாவதாகிறது ஹய்றத்துன் மக்பூலத்துன் மஹ்மூதா - ஆண்டவனிடத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட புகழப்பட்ட தட்டளிவாக இருக்கும். அதாவது மேலே சொல்லப்பட்ட மக்காமுகளில் நின்றும் ஒன்றிலாவது தரிபடாமல் கடந்து ஆண்டவனிடத்தில் வாசிலாகி சேர்ந்து இனுமேல் அவனுக்கு தஹய்யுறென்னும் தட்டளிவைத் தவிர மகாம் என்னும் தரிபாடில்லை என்று தட்டளிவானே அப்படிப் போல் உள்ள ஆண்டவனுடைய உலூஹிய்யத்துடைய தஜல்லியின் மிகுதத்தைக் கொண்டும், வகைவகையாகிறது கொண்டும் மஹ்வு என்னும் மயக்கத்தைக் கொண்டும் ஸஹ்வு என்னும் தெளியுதலைக் கொண்டும் தட்டளிகிறதாய் இருக்கும்.*

*அதற்காகத்தான் ஆண்டவனே உன்னிலே தட்டளிகிறேன். என்னுடைய தட்டளிவை அதிகப்படுத்து என்று ஆண்டவர்கள் சொன்னார்கள். ஆனால் மேலே சொல்லப்பட்ட மகாமுகளில் ஸாலிக்கு சேருகிறதற்காக நடக்கிறபோது ஆரம்பத்தில் பாவத்தை விட்டும் நீங்குதல் என்ற தவ்பாச் செய்ததுக்குப் பின்னாலே.*

*ஆனால், எல்லார் பேரிலும் எல்லா நேரமும் தவ்பா வாஜிபென்றதில் ஒருவன் பாலிகானால் அவன் காபிராயிருப்பானாயின் குப்றை விட்டும் தவ்பாச் செய்வது அவன் மேல் வாஜிபு என்றும், முஸ்லிமாயிருப்பானாயின் தாய் தந்தையருடைய தக்லீது என்னும் பின்பற்றலால் நாவைக் கொண்டு மாத்திரம் கலிமா சொல்லி மனதால் அதை அறியாமல் மறந்திருந்தால் அந்த மறதியை விட்டும் நீங்கி ஈமான் இன்னதென்று அவன் மனம் அறிந்து உணர்வடைகிறவிதமாக செய்வது அவன்மேல் வாஜிபு என்றும் நீ அறிந்திருக்கிறாய்.*

*மனம் அறிந்து உணர்வையடைகிற விதமாய் என்றதில் இல்முல் கலாமில் சொல்கிறபடி அதன் அத்தாட்சிகளை அவன் படிக்க வேண்டுமென்பதில்லை நமது கருத்து. ஏனென்றால் இது எல்லோர் பேரிலும் வாஜிபில்லை. என்றாலும் ஈமானாகிய சுல்தான் இவனுடைய கல்பை அடக்கி அதன் மேல் மிகைத்து விடவேண்டும். சர்வ அதிகாரமும் அந்த சுல்தானுக்கே இருக்க வேண்டும்.*

*எதுவொன்று சரீரமாகிய ராச்சியத்தில் நடக்கின்றதோ அதுவெல்லாம் ஷைத்தானுடைய உத்திரவைக் கொண்டில்லாமல் ஷற்வுடைய உத்திரவைக் கொண்டிருந்தால் அப்போது தான் ஈமானாகிய சுல்தானுக்குச் சர்வ அதிகாரமுமிருக்கும். அந்த ராட்சியத்தில் பாவம் நடக்கும்போது ஈமான் பூர்த்தியாயிராது.*

*உதாரணமாக ஜினா செய்கிற நேரத்திலும் திருடுகிற நேரத்திலும் மூமினாயிருந்து கொண்டு எவனும் ஜினாச் செய்கிறதுமில்லை. திருடுகிறதுமில்லை என்று ரசூல் ஸல்லல்லாஹு*

*அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இதில் நாயகமவர்களின் கருத்து அந்த நேரங்களில் அவன் காபிராயிருப்பான் என்பதல்ல.*

*எங்கிலும் ஈமானுக்கு அநேக கிளைகளும் பணர்களும் இருக்கின்றன. ஜினாவானது கொல்லுகிற நஞ்சாயிருக்கிறது என்று அவன் அறிவது அந்த ஈமானுடைய கிளைகளில் ஒன்றாம். நஞ்சைத் திண்ணுகிறேன் என்று அறிந்தவன் திரும்ப அதை திண்ணமாட்டான். ஆகவே அதைத் திண்ணுகிற நேரத்தில் இச்சை என்னும் சுல்தான் ஜினா கெட்டதென்று வாதிக்கிற அவனுடைய ஈமானை தோற்றோடும்படி செய்திருக்கும். அல்லது மறதியினால் அந்த ஈமான் தென்படாமற் போயிருக்கும். அல்லது இச்சை என்னும் இருளான புகையில் அந்த ஈமான் மறைந்து போயிருக்கும். ஆகவே முதலில் குப்றை விட்டும் தவ்பாச் செய்வது வாஜிபென்றும், காபிராயில்லாமற்போனால் வழக்கமும் தக்லீதுமான ஈமானை விட்டும் தவ்பாச் செய்வது வாஜிபு என்றும் நீ தெரிந்துக் கொண்டாய்.*

*பின்பு ஒருவன் இப்படியும் ஈமான் கொண்டிருந்தால் அநேகமாய் அவன் பாவத்தை விட்டும் ஒழிந்திருக்க மாட்டான். அதைவிட்டும் தவ்பாச் செய்வது வாஜிபாகும். அவனுடைய வெளியிரங்கமான உறுப்புகளை எல்லாம் பாவத்தில் நின்றும் நீக்கியிருந்தால் அந்தரங்கத்தில் அந்தப் பாவங்களின் கருவில்லாமலிறாது. எதுபோலெனில் ஊணாசை, பேச்சுப்பிரியம், பொருளாசை பெரியதனவிருப்பம், இவைபோலவும் பொறாமை, பெருமை, ரியா இன்னுமிவை போன்ற முஹ்லிகாத்துகளைப் போலவுமாம். இவை எல்லாம் கெட்டவைகளாகவும், பாவங்களுக்கு மூலமாயும் இருக்கின்றன. இவை எல்லாவற்றையும் விட்டு தவ்பா செய்வது வாஜீபாகும்.*

*ஏனென்றால், இக்குணங்களில் ஒவ்வொன்றையும் மிதமான ஹத்தில் கொண்டு வரவும் இவ்விச்சைகளை ஷற்வுக்கும், புத்திக்கும் பணியும்படி செய்யவுமேயாம். இதுவோ நீண்டகாலப் பழக்கமான பிரையாசையினால் உண்டாகுவதாம். இவைகளையும் விட்டு ஒழிந்திருந்தால் வஸ்வாஸான விபரீத எண்ணத்தையும், நப்சின் வசனிப்பையும் தகாத யோசனைகளையும் விட்டு ஒழிந்திருக்க மாட்டான். இதையும் விட்டு தவ்பாச் செய்வது வாஜிபாகும்.*

*இதுவும் ஒழிந்திருந்தால் சில சமயங்களில் அல்லாஹுத்தஆலாவுடைய திக்ரை மறக்காமலிருக்க மாட்டான். இந்த மறதியையும் விட்டு தவ்பாச் செய்வது வாஜிபாகும். எல்லா நஷ்டங்களுக்கும் மூலமாயிருப்பது அல்லாஹுத்தஆலாவை மறந்துபோவதேயாம். அப்படி மறந்ததெல்லாம் ஓரிமைப் பொழுதாயிருந்தாலும் அதையும் விட்டு தவ்பாச் செய்வது வாஜிபாகும்.*

*பின்பு உவமையில் ஒருவுன் திக்ரு பிக்ருகளை விட்டு ஒழியாமல் எப்போதும் அதில் இருக்கிறவிதமாக ஆகிவிட்டானாகில் அதற்கும் ஏற்ற வாட்டங்களான பல ஸ்தானங்களிருக்கின்றன. அந்த ஸ்தானங்களில் ஒவ்வொன்றையும் அதற்கு மேலாலுள்ள ஸ்தானத்துடன் சேர்த்துப் பார்க்க அது குறைவு உள்ளதாயிருக்கும். குறைவாயிருப்பதைப்*

*பூர்த்தியாக்கிக் கொள்ள இடம்பாடிருக்க அந்தக் குறைவைப் போதுமெனப் பொருந்திக் கொள்வது நஷ்டமேயாகும். இதை விட்டும் தவ்பாச் செய்வது வாஜிபாகும்.*

*நான் தினந்தோறும் எழுபதுதரம் தவ்பா செய்யவும், இஸ்திக்பாரும் செய்கிறேன் என்|று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள். அந்த தவ்பா இதுவாகவேயிருந்திருக்கலாம். ஏனென்றால், அவர்களுடைய காரியமானது இடைவிடாமல் எப்போதும் விருத்தியடைந்து அதிகரிப்பதாயும் அவர்கள் எடுத்து வைக்கிற ஒவ்வொரு அடியின் போது ஓர் நிரப்பமான காட்சி அவர்களுக்குத் தென்படுவதாயும் சென்று போன முந்தின அடியைப் பிந்தின அடியுடன் சேர்த்துப் பார்க்க அது மிகவும் குறையுள்ளதென்று அவர்களுக்குத் தெரிவதாயும் இருந்ததினால் அந்த சென்ற அடிக்காக அவர்கள் தவ்பாவும் இஸ்திக்பாரும் செய்கிறவர்களாக இருந்தார்கள்.*

*அது ஏனென்றால், ஒருவன் ஒரு திர்ஹம் என்னும் வெள்ளி நாணயத்தை சம்பாதிக்கக் கூடிய ஓர் வேலையைச் செய்து அதைக் கைப்பற்றுவானாகில் சந்தோஷப்படுவான். ஒரு தீனார் என்னும் பொன்னாணயத்தை அப்போது சம்பாதித்திருக்கலாமென்று அறிந்தானாகில் ஒரு வெள்ளி நாணயத்தைப் போதுமாக்கிக் கொண்டதற்காகத் துக்கப்படுவான். அன்றியும் தான் செய்த குறைவைப் பற்றி வெட்கப்படுவான். பின்பு தீனாருக்குமேல் ஒன்றுமேயில்லை என்று அவன் மருண்டு போயிருக்கிறவரையில் அந்த தீனார் கைவசமாகும் போது அவன் சந்தோஷமாவான். பின்பு ஆயிரம் தீனார் போதுமான ஓர் இரத்தினத்தைச் சம்பாதிக்க கூடியவனாக இருந்தேன் என்று அவன் அறிந்தானாகில் முன் செய்த குறைவை நினைத்து வெட்கப்பட்டு தவ்பாச் செய்வான்.*

*இதனாலேதான் ஹஸனாத்துல் அல்றாரு செய்யிஆத்துல் முகர்றபீன் அப்றாறர்களிடத்தில் நன்மையாயிருப்பவை முகர்றபீன்களிடத்தில் தீமையாக இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிதுகளின் ஹக்கில் நிறப்பமானது பெரியோர்களின் ஹக்கில் குறைச்சலானதாம். ஆகவே அவர்கள் அதை விட்டும் தவ்பாச் செய்வார்கள். சுவால் குப்றையும், பாவத்தையும் விட்டுத் தவ்பாச் செய்தால் அதன்பிறகு பெரும்பதவிகளை அடைவதற்காக மறதி, குறை முபாஹான இன்பம் இவைகளை விட்டும் தவ்பாச் செய்வது பற்லுகளில் சேர்ந்தது இல்லை என்றும் வரிசைப்பாடுகளைச் சேர்ந்ததென்றும்,*

*அப்படியிருக்க அதையும் விட்டுத் தவ்பாச் செய்வது வாஜிபென்று ஏன் சொன்னீர்கள் என்று யாரேனும் கேட்கிறபட்சம் அதற்கு நாம் சொல்லும் ஜவாபு வாஜிபு என்பது இரண்டு வகையாயிருக்கிறது. அவாமுன்னாஸ் என்னும் சாமானிய ஜனங்களின் தராதரப்படி அவர்கள் எவ்வளவாகப் பராக்காவதினால் அவர்களுடைய துன்யா மோசம் போகாமல் அவர்கள் துன்யாவை நடத்திவரக் கூடுமோ அவ்வளவாக நாம் வெளிப்படையான பத்துவாவில் சொல்வது ஒருவகை வாஜிபாகும். இந்த வாஜிபானது அவர்களை நரகவேதனையில் நின்றும் நீக்குவதாம்.*

*மற்றொரு வகை வாஜிபு சாமானியரால் செய்ய முடியாத வாஜிபாகும். ஒருவன் அதைச் செய்யாமல் போனால் அவன் நரகவேதனைக்கு ஆளாவதில்லை என்றாலும் உன்னதபதவியை அடையாத்ததினால் உண்டாகிற கைசேதமென்னும் வேதனையில் நின்றும் விடுபடமாட்டான். உதாரணமாக வானத்தின் மேல் நட்சத்திரத்தைப் பார்பப்து போல் ஒருவன் ஆகிரத்தில் தனக்கு மேலால் ஒரு கூட்டத்தைப் பார்ப்பான்.*

*அப்போது அவனுக்கு உண்டாகிற பரிதவிப்பும், கைசேதமும் இதுவும் ஒரு வேதனையாயிருக்கும். இந்த வேதனையில் நின்றும் மீட்சி பெறுவதற்காக நாம் சொன்ன தவ்பா வாஜிபாகும். இன்னும் இவ்வுலகத்தில் நாம் பார்க்கிறோம். அக்கம்பக்கத்தில் யாருக்காவது அதிக மேம்பாடான பெருமையும் அந்தஸ்தும் உண்டானால், அங்கிருக்கிற மற்றொருவன் கண்ணுக்கு உலகம் சயிக்காமல் நெருக்கமும் இருட்டுமுள்ளதாகப் போகிறது. பரிதவிப்பினாலும் கைசேதத்தினாலும் அவனுடைய உயிருக்குள் ஓர் நெருப்பு விழுகின்றது. கழியடி கையறுப்பு, அபராதம் விதித்தல் இவைகளால் உண்டாகும் வேதனையில் நின்றும் அவன் நீங்கி இருந்தபோதிலும் உயிருக்குள் விழுந்த நெருப்பு அவனை கொளுத்துகின்றது. இதனாலேதான் கியாமத்து நாளை யவ்முத்தஙாபுன் - கைசேதத்துடைய நாள் என்று சொல்லுகிறார்கள்.*

*ஏனென்றால் அந்த நாளில் எந்த மனிதனும் கைசேதப்படாமலிருக்க மாட்டான். இபாதத்துச் செய்யாதவன் ஆ! நான் ஏன் இபாதத்து செய்யாமலிருந்தேன் என்று கைசேதப்படுவான். இபாதர்துச் செய்தவனும் ஆ! நான் இன்னும் அதிகமாக இபாதத்துச் செய்யாமற் போனேனே என்று கைசேதப்படு:வான். இன்னும் இதனாலேயே அன்பியாக்களும், அவ்லியாக்களும் அவர்களால் கூடியமட்டும் கொஞ்ச நேரமும் இபாதத்தை விட்டும் நீங்காத வழியை எடுத்தக் கொண்டதும் அன்றி நாம் குறை செய்தோம் என்ற கைசேதம் நாளை கியாமத்தில் நமக்கிலாமல் போவதற்கே இந்தப் பிரயாசை என்றும் சொல்லியிருக்கிறார்கள்.*

*பசியின்போது உணவருந்துவது ஹராமல்ல என்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குத் தெரிந்திருந்தும் அவர்கள் தங்களைப் பசியோடிருக்க வைத்திருந்தார்களே, இதற்கு நீ என்ன சமாதானம் சொல்லுகிறாய்?*

*ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் சொல்லுகிறார்கள்: நான் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வயிற்றின் மீது என் கையை வைத்தேன். அவர்கள் மேல் எனக்கு இரக்கம் வந்ததினால் அழுது நாயகமே! என் உயிர் தங்களுக்கு குர்பானியாகக் கடவது. தாங்கள் துன்யாவில் ஏதும் உணவை வயிறாற உண்டால் என்ன? என்று கேட்டேன்.*

*அதற்கவர்கள் ஓ! ஆயிஷாவே! உலுல் அஜ்மிகளான என் சகோதரர்கள் எனக்கு முன்னே போய்விட்டார்கள். அவர்கள் சங்கையான மேலான பதவிகளையும் பரிவட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள். நான் துன்யாவின் பாகத்தை அடைவேனாகில் என்னுடைய பதவியானது அவர்களுடைய பதவியினும் குறைந்துபோகும் என்று பயப்படுகிறேன். என்*

*சகோதரர்களிலும் நான் குறைச்சலுள்ளவனாகயிருப்பதை விட கொஞ்சநாள் கிஞ்சித்து சப்று செய்து கொள்வதை நான் அதிகமாய் நேசிக்கிறேன் என்று அருளிச் செய்தார்கள் என்பதே.*

*ஆனால், அந்த சாலிகை அல்லாஹ்வுடைய பாதையில் நடப்பவன் நப்சு லவ்வாமா உடைய மகாமில் தரிபட்டிருக்கும்போது அவனுக்கு உண்டாகிற ஹாலுக்கு கவ்லு என்னும் ஆண்டவனுடைய அதாபைப் பயப்படுதலும் றஜா என்னும் ஆண்டவனுடைய ரஹ்மத்தை ஆதரவு வைக்குதலும் என்று சொல்லப்படும்.*

*அப்பால் அவன் நப்சு முல்ஹிமா உடைய மகாமில் தரிபட்டிருக்கும்போது அவனுக்கு உண்டாகிற ஹாலுக்கு கப்லு என்னும் மனமடிவும் பஸ்து என்னும் மகந் சமானமுமாகியருக்கும் என்று சொல்லப்படும். அதாவது, ஆண்டவனுடைய தஜல்லியைக் கண்டு மனமகிழ்கிறதும் அது மறைந்த உடன் மனம் மடிந்து துக்கப்படுதலுமாயிருக்கும்.*

*அப்பால் அவன் நப்சு முத்மயின்னா உடைய மகாமில் தரிபட்டிருக்கும்போது அவனுக்கு உண்டாகிய ஹாலுக்கு கய்பத்து என்னும் தான் பனாவாகி மறைந்து போதலும் உன்சு என்னும் தன் உணர்வில் வரும்போது ஆண்டவனுடைய மருகுதலுமாக இருக்குமென சொல்லப்படும்.*

*அப்பால் அவன் நப்சு காமிலா விஸ்தரிக்கப்பட்டிருக்கும்போது அவனுக்கு உண்டாகிற மகாமுக்கு மஹ்வு என்னும் மயக்கமும் ஸஹ்வு என்னும் தெளியுதலுமாக இருக்குமென்று சொல்லப்படும்.*

*இந்த மயங்குதல் தெளியுதல் என்ற மகாமில்தான் நாயகம் சல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஜலால், ஜமாலிய்யத்தான தஜல்லியுண்டாகும் போது சொன்னார்கள்: அன அஃறபுக்கும் பில்லாஹி வஅஷத்துக்கும் கவ்பா, பமாகாப ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மினர் றப்பி வலாமினர்றஹீமி வலாமினர் ரஹ்மானி வஇின்னமாகாபமினல்லாஹி. அதாவது நான் உங்களைப் பார்க்கிலும் ஆண்டவனை ரெம்பவும் அறிந்தவனாகவும் ரெம்பவும் கடினமாக பயப்படுகிறவானகாவும் இருக்கிறேன் என்று திருவுளமானார்கள்.*

*இன்னமும், ஆண்டவனுடைய உலூஹிய்யத்துடைய தஜல்லியில் நின்றும் வெளியாகிறது இன்னதுதான் என்று, நானறிய மாட்டேன் என்றும், இன்னும் அல்லாஹ்வுடைய சிபாத்துடைய அஸ்மாக்களாகிய றப்பு, ரஹ்மான் ரஹீமுடைய தஜல்லியாகிய தோற்றம்களை நான் பயப்படவில்லை.*

*மேலும் நான் பயப்படுகிறதெல்லாம் தாத்துடைய இஸ்மாகிய அல்லாஹ் என்கிற இஸ்மில் நின்றும்தான். ஏனென்றால் அந்த தாத்துடைய இஸ்மின் தஜல்லியாகிய உலூஹிய்யத்துடைய மற்தபாவில் உஜூது உள்ளமையில் நின்றும் அதமும் இல்லாமையும், அதம் இல்லாமையில் நின்றும் உஜூது உள்ளமையும் வெளியாகிறதற்காகவே காமிலீன்கள் எல்லாம் தட்டளிந்தவர்களாக ரெம்பவும் பயப்பட்டு அந்த பயங்கரம் நீங்குகிறதற்காகவே தட்டளிவை ஆண்டவனித்தில் கேட்டு அதை அதிகப்படுத்தும்படிக்கும் விரும்பினார்கள்.*

*ஏனென்றால், தாங்கக்கூடாத வருத்தம் வந்து அதை சிக்கக் கூடாதபோது அந்த வருத்தம் தெரியாமல் தட்டளிந்துபோய் விடுகிறது. ஆண்டவனுடைய கிருபையில் நின்றும் உள்ளதாயிருக்கும். அந்த சமயத்தில் தட்டளிவு வந்து அப்பாலது நீங்கிவிடுமேயானால் திரும்ப அதுபோல் வருத்தம் வந்தால் தட்டளிவு வரமாட்டாது.*

*ஏனென்றால் ஒரு வருத்தம் வருகிறபோது அதை சகித்துக் கொள்ளக்கூடிய தத்துவம் வந்துதான் அந்த வருத்தம் வரும். அந்த வருத்தம் நீங்குகின்றபோது அதை சகித்த தத்துவமும் நீங்கி போகமாட்டாது. ஏனென்றால் ஒருவருக்குத் தத்தை சகித்|துக் கொள்ளக் கூடிய தத்துவத்தை ஆண்டவன் ஒருவனுக்கு கொடுத்து ஒரு வருத்தத்தைக் கொடுத்தால் அந்த வருத்தத்தை நீக்குகிறபோது அதை சகித்த தத்துவத்தைப் பிடுங்கிக் கொள்ள மாட்டான். ஏனென்றால் ஆண்டவன் ஒரு நிஃமத்தை நன்கொடையாக கொடுத்து போட்டு அப்பால் அதை மீட்டிக் கொள்ளமாட்டான்.*

*அதற்காகத்தான், நரகவாதிகளுக்கு ஒரு வேதனையை அனுபவிக்கச் செய்கிறபோது அதை சகித்துக் கொள்ளக் கூடிய தத்துவத்தை கொடுத்துத்தான் அந்த வேதனையை அனுபவிக்கச் செய்வான். அப்பால் அந்த வேதனையை நீக்குகிறபோது அதை சகித்த தத்துவத்தையும் நீக்க மாட்டான். அதற்காக வேண்டித்தான் நரகவாதிகள் நரகலோகத்தில் ஊழி ஊழிகாலம் தரிபட்டிருப்பார்கள் என்று வந்திருக்கிறது. அதாபில் அல்லது வேதனையில் ஊழி ஊழிகாலம் தரிபட்டிருப்பார்கள் என்று வரவில்லை என்று அஷ்ஷெய்குல் அக்பர் முஹ்யித்தீன் இப்னுல் அரபி ரலியல்லாஹு அன்ஹு சொல்லியிருக்கிறார்கள்.*

*அப்படி சொல்லியிருக்கும்போது அந்த நரகவாதிகளுக்கு அதாபுடைய காலம் தீர்ந்து அவர்கள் நரகத்திலேயே இருக்கிறவர்களாக ஆகிவிடுவார்களானால் அந்த நரகவாதிகளுக்கு உண்டாகியிருக்கிற இன்பத்தை காமிலீன்களாகிய தனித்த ஒவ்வொருவருக்கே ஒழிய அதை சகித்துக் கொள்ளக் கூடாதென்றும் சொல்லியிருக்கிறார்கள்.*

*அதுபோல், சொர்க்கவாதிகளக்கும் நிஃமத்து இன்பசுகங்கள் புதுசு புதுசாகி கொண்டிருப்பதால் அவர்களுக்கும் தத்துவம் புதுசு புதுசாக அதிகரித்துக் கொண்டேதானிருக்கும். ஏனென்றால் ஆகிறத்துடைய வீட்டில் நின்றும் சொர்க்கவாதிகளாகிறவர்கள் ஒரு நிஃமத்தைக் கொண்டு சுகமடைந்து விடுவார்களனானால் அந்த நிஃமத்துடைய ஆசை தீர்ந்துபோய் விடும். மறுநாள் வேறே நிஃமத்தைக் கொண்டுதான் சுகமடைவார்கள்.*

*அதுபோல் நரகவாதிகளும் ஒரு அதாபைக் கொண்டு துன்பமடைவார்களானால் அது அவர்களுக்கு பழகிப்போன ஊழியத்தைப் போல் ஆகிவிடும். மறுநாள் அவர்களுக்கு வேறே அதாபைக் கொண்டுதான் அவர்களை வேதனை செய்யப்படும்.*

*அதுபோல் துன்யாவிலும் ஒருவருக்கு ஒரு வருத்தம் வந்து நீங்கிவிடுமானால் அதுபோல் வருத்தம் மடங்கி வருகிறபோது முன்னிருந்த வருத்தம் இருக்க மாட்டாது. ஏனென்றால் அந்த வருத்தத்தை இன்னதுதான் என்று அறிந்திருப்பதினாலும் அதை சகிக்கக்கூடிய தத்துவம் இருப்பதினாலுமாக இருக்கும். அப்படிப்போலதான் ஆண்டவனுடைய ஜலாலிய்யத்தாகிய*

*தஜல்லியாத்துகளில் நின்றும் ஒரு தஜல்லியை - தோற்றத்தை கண்டு மயங்கி தட்டளிந்து அடித்து விழுந்துபோய் தெளிவடைந்தபோது அந்த தஜல்லி போல் ஒத்ததை மறுதடவை காணுகிறபோது முன்வந்த மயக்கமும் தட்டளிவும் உண்டாக மாட்டாது.*

*அதற்கு உதாரணமாகிறது ஆகிறத்தில் அல்லாஹுத்தஆலா வெளியாகிறபோது கல்குகள் அடங்கலும் தட்டளிந்து அடித்து விழுந்து மயங்கி விடுவார்கள். அப்போது நாயகம் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தட்டளிந்து மயங்கி அடித்து விழ மாட்டார்கள். ஏனென்றால் முன் தூறுஸீனா மலையில் ஆண்டவனைக் கண்டு மயங்கி அடித்து விழுந்து அப்பால் தெளிவு பெற்று விட்டார்கள். அந்த தெளிவும் திடனுமிருந்தபடியால் கல்குகள் அடங்கலும் மயங்கி அடித்து விழுகிறபோது தாங்கள் அடித்து விழவில்லை.*

*அதுபோல் துன்யாவிலும் ஒருவருக்கும் ஆண்டவனுடைய தஜல்லியைக் கொண்டுண்டான தட்டளிவு நீங்கமாட்டாது. ஏனென்றால் ஹக்கு சுப்ஹானஹுவத் தஆலா இந்த துன்யாவில் ஒருவருக்கும் ஒரே மாதிரியான ரூபத்தில் இரண்டு விடுத்தம் வெளியாக மாட்டான். அப்படியே பல விடுத்தமும் ஒரே மாதிரியான ரூபத்தில் ஒருவனுக்கு வெளியாகிவிட்டால் ஆண்டவனைப் பார்க்க ஆசை கொண்டவனுக்கு மேலும் மேலும் அவனைப் பார்க்க ஆசையிருக்கமாட்டாது.*

*இன்னமும் ஒரே நேரத்தில் இரண்டு பேருக்கு ஒரே ரூபத்தில் வெளியாக மாட்டான். அப்படியே பல பேருக்கும் ஒரே நேரத்தில் ஒரே ரூபத்தில் வெளியாகி விட்டால் ஆண்டவனுக்கு இன்னது தான் சூறத்தென்னும் ரூபமென்று திட்டப்படுத்திப் போடுவார்கள். அப்போது அவர்களுடைய நாட்டங்களும் நிறைவேற மாட்டாது.*

*ஏனென்றால் பல பேர்களுடைய நாட்டங்கள் பலதாக இருப்பதால் அவனுடைய ரூபமும் பலதாகத்தான் இருக்க வேண்டும். அப்பதான் நாட்டம் நிறைவேறும். மேலும், அவனுடைய உலூஹிய்யத்தென்னும் நாயகத்தனத்துடைய தஜல்லி என்னும் வெளியாகுதலாகிய தோற்றங்களுக்கு ஹத்தென்னும் ஒரு அளவும் இன்திஹாவென்னும் ஒரு தீர்ச்சையும் அறவே கிடையாது.*

*ஆனதால் அவனும் அவனுடைய தஜல்லியாத்தென்னும் தோற்றங்களும் ஒரு ஹத்தில் அடங்காத்ததாக இருப்பதால் அடங்காத்ததை அடங்காத்ததென்று அறிந்து கொள்வதுதான் அறிவும் புகழப்பட்ட தட்டளிவுமாக இருக்கும் என்று அறிந்து ஆனந்தமடைவாயாக.)*

இன்னமும் அந்த நாத்திக்கில் ஒருவர் சொன்னதுபோலும் சொல்கிறேன், *கத்த ஹய்யற்து பீக்க குத் பிய தய்ய யாத லீலன் லிமன் தஹய்யற பீக்கா,* உன்னிலே நான் தட்டளிகிறேன். என்னுடைய கையைப் பிடித்துக் கொள். உன்னிலே தட்டளிந்தவனுக்கு அத்தாட்சியானவனே. அல்லது அறிவிக்கிறவனே அல்லது அறியப்பட்டவனே என்றும் இந்த தலத்தில்தான் குணங்குடி நாயகம்

'பாங்காக ஞானம் படைக்கும் ஐந்து

பாழடம்புல வேடரைப் புல்லையுடைக்கும்

தாங்காததமையல் கிடைக்கும்'

என்று சாதுரியமாக தடுத்தருளித்தான் என்று எங்கள் குணங்குடியானே என்ற பாட்டில் திருவாய் மலர்ந்தருளினார்கள். அப்பால் வஹ்மென்னும் சித்தமாகிறது, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களில் நின்றும் இஸ்றாயீலுடைய மூலமாக இருக்குமென்றும் அப்பால் ஹிம்மத்தென்னும் மன துணிகரம் மெய்யான வைராக்கியமென்றது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களில் நின்றும் மீக்காயிலுடைய அடிமூலமென்றும் அதில் அனேக அற்புதமாகிய பைத்துகளும் சொல்லி ஹிம்மத்துடைய பாரதூரத்தில் தீர்மானம் ஹிம்மத்துச் சரியாக வைத்தால் ஏதுவந்தாலும் பின்னடி வைக்க வேண்டியது வராது.

அப்படி வந்தால் மேலோகம் கீழ்லோத்திலுள்ள எந்த வஸ்துவை நாடினாலும் ஏழு கடலுக்கப்பால் உள்ளதை விரும்பி சருகாத ஹிம்மத்தாகயிருந்த ஏழை பக்கீர் சுல்தானுடைய மகனைப் பெண் பேசிப்போனதில் பஹ்ருமானென்ற மாணிக்கத்தில் ஜோடியாக இரண்டு கொடுத்தால் பெண்ணைக் கல்யாணம் செ;யது கொடுக்கிறதாய்ச் சொல்லி சைலானிலுள்ள கடலில் அந்த மாணிக்கம் இருப்பதாய்ச் சொல்லியபடி கடலை இறைத்து மாணிக்கம் எடுத்து வந்து கல்யாணம் செய்து கொண்ட ஆகத்தின் விபரம் சகலருக்கும் பிரஸ்தாபமாயிருக்கிறதையும் சொல்லி, இன்சான் காமிலென்னும் கிதாபில் சொல்லுகிறார்கள்:-

*(ஷற்ஹு*

*அல்லாஹுத் தஆலாச் சகல ஒளிவுகளையும் படைத்து தன் சமூகத்தில் நிறுத்தாட்டினான். அதடங்கலும் தன்னுடைய ஹாலைக் கொண்டே பராக்காகயிருந்தது. அப்போது மன துணிகரமென்னும் ஹிம்மத்தானது அல்லாஹ்வைக் கொண்டே பராக்காயிருந்தது. அப்போது அல்லாஹுத்தஆலா திருவுளமானான். ஏ ஹிம்மத்தே உன்னை எல்லா ஒளிவிலும் உயர்ந்ததாக ஆக்கினேன். என் கல்குகளில் நின்றும் ஒருவருக்கல்லாது நற்பேரை கொடுக்கப்படுகிறதில்லை. அந்த ஒருவர் என் இரகசியங்களை எட்டிப்பார்த்தே ஒழிய.*

*ஒருவன் என்னளவிற் சேர்வதை நாடினால் உன்னுடைய பாதையினாலே அல்லாது வரக்கூடாது. நிய்யாகிறது முரீதூன்களுக்கு மிஃறாஜாகவும், ஆரிபூன்களுக்கு புறாகாகவும், வாஸிலூன்களுக்கு வய்யாளி போடும் மைதான வெளியாகவும், முந்தினவர்களுடைய முந்துதலும் பிந்தினவர்களுடைய கூடுதலும் முஹக்கிக்கூன்கள் வெடிப்பாகிறதும் முகர்றபூன்கள் லோகுறதும், உன்னைக் கொண்டல்லாது வேறில்லை என்று உரைத்து பின்பு அதளவில் கறீபுன் முடுகினவன் என்ற இஸ்மைக் கொண்டு வெளியாகி பின்பு ஸரீஉன் முஜீபுன் தீபரமானவன், ஜவாபு கொடுக்கிறவன் என்ற இஸ்மைக் கொண்டு பார்த்தான்.*

*ஆனதால், அந்த தஜல்லி என்னும் நோட்டமாகிறது அந்த ஹிம்மத்தை உடையவுன்கு தூரமானதை முடுகுதலாக்கி வைத்து நாட்டம் தேட்டமடங்கலையும் நிறைவேற்றிக் கொடுத்துப் போட்டது. அதுபோல் ஒரே ஹிம்மத்தாக இருந்த ஏழை பக்கீர் சுல்தானுடைய மகளைப்பெண் பேசிப் போனதில் பஹ்றமான் என்னும் மாணிக்கத்தின் ஜோடியாக இரண்டு கொடுத்தால்*

*பெண்ணை கல்யாணம் செய்து கொடுக்கிறதாக சொல்லி அந்த மாணிக்கமாகுறது கிஸ்றா அனூஷர்வான் அல்லது காக்கான் இந்த இராஜாக்களுடைய கஸானாவிலேயே அல்லாது காணக் கூடாதென்று சொன்ன உடன் பக்கீர் அந்த இரத்தினம் விளையும் தலமெங்கே என்று கேட்டார். சைலான் தேசத்து கடலென்ற உடன் இன்ஷாஅல்லாஹ் அதைக் கொண்டு வருகிறேன் என்று சொல்லி போய்விட்டார்.*

*பின்பு பக்கீர் சைலான் தேசத்தில் கடற்கரைக்கு வந்து நின்று தன்னுடைய குண்டாவினால் கடல் தண்ணீரை அள்ளி கடலை வத்தவைத்த பின்பு அந்த பஹ்றமான் என்ற மாணிக்கத்தை எடுத்து வந்து மஹர் கொடுத்து விடலாமென யோசித்து இரவும் பகலும் ஓயாமல் ஒளியாமல் இறைத்துக் கொண்டு ஊண் தீன் உடைய கவனமில்லாமல் இருக்கும்போது இவருடைய ரப்பினால், கடல் வத்திப் போகுமென்று மீன்களுடைய சிந்தையில் பயங்கரமும் வருத்தமும் உண்டாகி அல்லாஹுத் தஆலாவிடம் முறையிட்டது.*

*அந்த முறைப்பாட்டுக்காக அல்லாஹுத்தஆலா அந்த பஹ்றமான் என்ற முத்தை அவருடைய குண்டாவில் கொண்டுபோய் போடும்படி கடலுடைய அதிகாரிக்கு உத்திரவு கொடுத்தான். உடனே அவர் கொண்டு வந்து கொடுத்து விட்டார். பக்கீர் அதை எடுத்துக் கொண்டு வந்து சுல்தானிடத்தில் கொடுத்த மாத்திரம் பெண்ணை கல்யாணம் முடித்து கொடுத்த ஆகத்தின் விபரம் சகலருக்கும் பிரஸ்தாபமாயிருக்கிறதையும் சொல்லி,)*

இதைப் பாரதூரமாக எண்ணாதே. நம்மில் இதைக் காண அற்புதமாகிய அதிசயங்கள் எண்ணத்திலும் கணக்கிலும் அடங்காத்ததாய் நடந்திருக்கிறது என்றார்கள். ஆகிலும், இப்னு நபாத்தா சொன்னதை நீ பார்.

*அஃஜபக்கல் அஜபு வஅந்த அஃஜபு மிம்மா அஃஜபக்* - புதுமை உன்னைப் புதுமை வருந்துது உன்னை புதுமை வருந்துவது எல்லாத்தைப் பார்க்கிலும் நீ அதிக புதுமையானவனாயிருக்கும்.இதில் குணங்குடி நாயகம்

வஞ்சவேல்கொடு மார்பி லெறியினும்

விஞ்ச வேதனல் மீட்டி யெரிக்கினும்

நஞ்சி னாரழ காக நலியினும்

அஞ்சிடாதவராந்தவமாவரே

என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். ஆனால் இந்த ஸமானில் சாலிக்கூன்கள் அதிகக் குறைவாக இருப்'பதால் அவர்களுடைய கல்பு திடப்படவேண்டி றஸூல் உடைய ஹலறத்தில் நின்றும் சகலர் மீதும் இரங்கி நன்கொடையாக கொடுக்கப்பட்ட ஹின்துல் வலிய்யி அதா உர் ரசூல் குவாஜாமுயீனுத்தீனில் ஜிஷ்திய்யி ரலியல்லாஹு அன்ஹு ரஸூலுடைய நன்கொடையாகிய ஹிந்து ராச்சியத்துக்கு வலிய்யாகிய குவாஜா முயீனுத்தீனில் ஜிஷ்தி

ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய றவ்லாவில் போய் ஹிம்மத்துடன் நிற்பவர்கள் அவரவர் வைத்த நாட்டங்கள் யாதொரு குறைவில்லாமல் நடந்து வருகிறது.

சாலிக்கூன்களுடைய கல்பு திடப்படுவதற்குல்லாது வேறில்லை. பரமாத்தக்காரர்களாகிய சில பக்கீருகள் எனக்கு இரசவாதமென்னும் கீமியாத் தொழிலைத் தெரிவிக்க வேண்டும் என்று ஒரே ஹிம்மத்தாயிருப்பதில் அனேகர்களும் அப்படியே பெற்றுக் கொள்கிறார்கள். ஆகையால், எக்கீனையுடையவனுக்கு இதெல்லாம் வேண்டியதில்லை. சந்தேகமுடையவன் யாதொன்றைக் கொண்டும் பிரயோசனம் பெறமாட்டான்.

அப்பால் பிக்றென்னும் யோசனையாகிறது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களில் நின்றும் மற்ற மலாயிக்கத்துகளுடைய அடிமூலமாக இருக்கும் என்றார்கள். உடன்பிறந்தானே இதில் இவ்வளவு மட்டில் எழுதினது கொண்டு ஒன்றையாவது உன் தன்னை விட்டகல நினையாதே.

இன்னமும் றூஹென்ற மலக்கு மூலாதாரமென்னும் புவனாதிகளுக்கு அஸலாகவும் ஜிப்ரீல் மண்ணுக்கும், மீகாயீல் தண்ணீருக்கும், இஸ்றாபீல் காற்றுக்கும், இஸ்றாயீல் நெருப்புக்கும் ஹக்கீகத்'துன் முகம்மதிய்யா ஆகாயத்துக்கும் அஸலாகயிருப்பதுடன் இவைகளெல்லாத்தையும் உன்னுக்குள்ளே பார்த்துக் கொள்.

எருக்கிடந்தக் குழித்தாண்டி

இரண்டு விரக்கிடைமேல் தாண்டிக்

கருக்கிடக்கு தடையாளம்

அதை கண்டுக் கொள்ளடி ஞானப்பெண்ணே.

ஈமானுடைய மூன்றாவது கொம்பு வேதங்களைக் கொண்டு ஈமான் கொள்வதாயிருக்கும். வேதங்களில் இத்தனை என்பதையும் அதின் விபரங்களை பல கிதாபுகளாலும் உன்னுடைய வழக்கமென்னும் ஈமானால் தெரிந்திருப்பாய். அனேக நிறுமூடர்கள் அது படைக்கப்பட்டதா அல்லவா என்றும் பலவிதமாக உளறினதும் தவிர வேதமின்னதென்று அறியாத அறிவீனர்களில் அனேகர்களும் அதற்கு தப்ஸீறு செய்து உலக முழுவதையும் தப்ஸீறாக நிரப்பிப் போட்டார்கள்.

அதுகளில் மிகுந்ததும் மூடத்தன்மையே அல்லாது வேறில்லை. அறபி படித்தவர்கள் எல்லாம் தப்ஸீறு செய்யிறதாகயிருந்தால் நபி நாயகம் ஒரு போதையில் தொழுகையில் இருபது தடைவ பஸ்மலாவை மடக்கி வைத்தது வீணாகி விடும். ஆனால் இதில் அதிக விரிவாய்ப் பேசக் கருத்து இருப்பதும் தவிர அல்லாஹ்வுடைய கலாமென்பது இன்னதென்று தோற்றும்படிக்கும் அப்பால் வேதமென்பது இன்னதென்று அதிக விபரமாய் எழுதிப் போட வேணுமென்பது அதிக ஆசையிருந்தும் நமதாண்டவமார்களுடைய திருவாக்குகளால்

களங்கமற அதுகளை விபரித்தபடி எழுதுவதில் நீ விளங்குகிறாயோ? எப்படியோ என்று யோசிக்கிறேன்.

ஏனென்றால் இந்த ஜமானில் உலமாக்களில் அனேகர்களும் அதை அன்னதென்று கண்டுக் கொள்ளாதிருக்கிறார்கள். ஆகையால், எனது நாயகமார்களுடைய கலாமில் சைக்கினை காட்டியபடிச் சொல்லுகிறேன்.அதில் நான் யாதொரு பயானும் செய்யவில்லை. உனக்குக் கருத்திருந்தால் விளங்கிக் கொள்.

அப்துல் கரீமுல் ஜியலிய்யி ரலியல்லாஹு அன்ஹு சொல்கிறார்கள்: *இன்னல்க்கலாம ஹுவல் வுஜூதுல் பாஸு பீஹி ஜறாஹுக்குமுல் வுஜூதில் ஜாயிஸு* - பேச்சாகிறது அதுதான் வெளியாகிய வுஜூதாயிருக்கும். அதிலேதான் வுஜூதுடைய ஆமாகிய ஹுக்கும் நடந்தது. *பஹியல்லத்தீ பில்இல்மி கானத் அஹ்றுபா லாத்தன் கரீ இத் லய்ஸ தம்மத்த மாயிஸு* - அதுதான் அறிவிலே சத்தம் தொணி, ஓசை இல்லாத அட்சரங்களாயிருந்தது. ஏனென்றால் அந்த அறிவிடத்தில் பிரிக்கிறதொன்றும் இல்லையே ஆனதற்காக வேண்டி. பத்தமய்யஸத் இன்தல் லுஹூரி பஅப்பறூ அன்ஹு **பிலப்லத்தி குன் லியத்ரில் பாயிஸுலுஹூர்** என்னும் அவதாரத்திடத்தில் பரிவாகிவிட்டது.

ஆகையால், அதன் சூட்சத்தைக் கண்டு பிடித்து ஜெயம் பெறுகிறவன் அறிய வேண்டி குன் என்ற மொழித்தலைக் கொண்டு அந்த அவதாரத்தைத் தொட்டு வக்கணையிட்டுப் பேசினார்கள். *வஃலம் பி அன்னல்லாஹ ஹக்கன் இன்யகுல் லிஷ்ஷய்இ குன் பயகூனு மாஹுவ ஆஜிஸு* - உண்மையாக அறிந்து கொள். அல்லாவாகிறவன் ஒரு வஸ்துவுக்கு உண்டாகென்று சொல்வானேயானால் அது உண்டாகிவிடும். அவன் இலாமையானவன் இல்லை. *பலஹுலுக்கலாமு ஹக்கீக்கத்தன் வலஹூ மஜா ஸன் குல்லுதாலிக்க கான வஹுவல் ஜாயிஸு* - அவனுக்குடையது தான் அந்தரங்கத்தில் பேச்சாகயிருக்கிறதும் காரியம் தன்னில் பேச்சில்லாதிருக்கப் பேச்சென்றுச் சொல்லப்படுகிறதும் அவனுக்குடையது தான். இதடங்கலும் உண்டாகியேயிருக்கிறது. அப்படி உண்டாகியிருக்கிறது ஆகுமானதுதான்.

இன்னமும் குணங்குடி நாயகம் சொல்லுகிறார்கள்: போக்குவரவற்ற போதம் பஞ்ச பூதாதியாலடங்காதெழுநாதம் வாக்கில் அமையாத வேதம் தன்னை வடித்துப் புகட்டு மகத்துவைப் போற்றி இரக்கத் துணிந்துக் கொண்டேனே என்ற பாட்டில் ஆனால் இந்த பாட்டுடைய கருத்தையும் பைத்துடைய கருத்தையும் விளங்கிக் கொண்டாயாகில் அல்லாஹ்வுடைய கலாமின்னதென்றும் வேதமின்னதென்றும் விளங்கிக் கொள்வாய்.

ஆனால், அல்லாஹ்வைக் கொண்டும் மலாயிக்கத்துக்களைக் கொண்டும் ஈமான் கொள்வதில் உன் தன்னைவிட்டு அகலாமலிருக்க வேண்டுமென்று எழுதினதுபோல் இவ்விடத்திலும் உன் தன்னைவிட்டு வேதத்தை நீங்குதலாக எண்ணாதே. நீதான் வேதமாகயிருக்கும். ஹக்கும் கல்கும் நீயாக இருப்பதால் இருவருடைய வார்த்தையும் வெளிப்பட்டாலும் மறைந்திருந்தாலும் உன்னை விட்டு நீங்காது.

அலிய்யுன் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு சொல்லுகிறார்கள்: *தவாவுக்க பீக்க வமாத்தஷ்வுறு வதாவுக்க மின்க்க வமாத் தப்ஸுறு* - உனக்கு மருந்து உன்னிலே இருக்கிறது. நீ அறிகிறாய் இல்லை. உன்னுடைய வியாதி ஒன்றில் நின்றும் தான் உண்டாகிறது. நீ பார்க்கிறாய் இல்லை. *வதஸ்அமு அன்னக்க ஜிர்முன் ஸயீர் வபீக்கன் தவல் ஆலமுல் அக்பறு* - பெரிய ஆலமெல்லாம் உன்னில் சுருண்டிருக்க உன்னை சிறிய கண்டிப்பென்று எண்ணுகிறாய்.

*அவன்த்தல் கித்தாபுல் முபீனுல்லதீ பி அஹ்றுபிஹியல் ஹறுல் முல்மறு* -அதினுடைய அட்சரங்களைக் கொண்டு மறைக்கப்பட்டதெல்லால் வெளியாக்கிற வெளிச்சமாக்கி வைக்கிற வேதம் நீதான். *வஅன்த்தல் வுஜூது வநப்ஸுல் வுஜூதி வவமாபீக்க மவ்ஜூதுன் லாயுஹ்ஸறு* - நீதான் சொல்லாலும் ஊசாட்டத்தாலும் அளவிடக்கூடாத முடுத்துலக்காகிய வுஜூதும் அடையவளைந்தலாகிய வுஜூதுமாயிருக்கும். உன்னிலே உண்டாகியிருக்கிற மட்டுப்படுத்தப்படாத மவ்ஜூதாகயிருக்கும். *வலா ஹாஜத்தன் லக்க பீகாரிஜி பயுக்பிறு அன்க பிமாயுஸ்த்தறு* - நீ ஆராய்ந்து நேர்வழி பெற யாதொன்றிலும் வெளியில் உனக்குத் தேவையில்லை.

ஏனென்றால், வரிப்படுத்தப்பட்டது எதுண்டோ அதுவெல்லாம் உன்னைத் தொட்டே சமாச்சாரம் சொல்கிறதற்காக வேண்டி. இன்னமும் அஷ்ஷெய்குல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்கிறார்கள்: *அனல் குற்ஆனு வஸ்ஸப்வுல் மதானி வறூஹுர்றூஹி லாறூஹுல் அவானி* - நான் குர்ஆனும் புகழப்பட்ட ஏழு ஆயத்தும் உயிருக்கெல்லாம் உயிருமாகயிருக்கும் . சரீரத்துக்கு மாத்திரம் நான் றூஹென்கிறதில்லை என்றார்கள்.

ஆனால், அல்லாஹ்வுடைய பேச்சென்பது இன்னதென்பதற்கு இமாம் அப்துல் கரீமுல் ஜியலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பைத்தே அதிக பயானாக இருப்பதுடன் '*அல் மவ்ஜூத்தாத்து கலிமாத்துல்லாஹி*' உண்டாக்கப்பட்டதுகளெல்லாம் அல்லாஹ்வுடைய கலிமாக்களாகயிருக்கும் என்பதையும் திட்டவட்டமாக விளங்கிக் கொள். மறுட்டுதலாலும் மாய்கையாலும் இரண்டு புண்ணைக் கண்ணென்று நம்பிய ஞானமில்லாத பொட்டையன் என்னத்தைத் தெரிவான்.

உண்டாக்கப்பட்டதுகள் எல்லாம் அல்லாஹ்வுடைய பேச்சுகள் என்றது உனக்கு மிக தூரமாகயிருக்கும் போலெனக்குத் தோணப்படுகிறது. அடா யோசித்துப் பார். இதோ எழுதப்படுகிற ஹர்புகள் மை கூட்டில் கட்டி மையாக அவதாரமெடுத்தும் என்னுடைய கல்பில் தொயியில்லாத அட்சரமாயும் இருந்தது. அதை நான் கருத முதலே என்னுடைய தரத்தில் அல்லது பஸீத்தாகிய என்னுடைய உஜூதில் அப்படி அப்படியே படிபடியாயிருக்கும் விதத்தில் ஏறிப்பார்த்தாயாகில் ஆகத் தீர்மானம் எவ்விதமாக அமா என்னும் யாதொன்றும் வாய்விட்டு அள்ளுவதற்கு அரிதாகிய குருடாகவும் ஆகிவிடுகிறது.

அப்படிக்கொற்ற அட்சரங்கள் இந்த வெள்ளைக் கடிதத்திலும் அவதாரமெடுத்து இனிமேல் அதைப் பார்ப்பவர்களுடைய சிந்தையில் எவ்விதமாகுமென்றும் அறபில் அல்லது வேறே எந்த பாஷையிலும் இதை தர்ஜுமாச் செய்வதால் எவ்விதமான ஹற்பாகுதென்று பார். இப்படிபோல்

ஒரே மாதிரியாய்ச் சிறசிலிருந்து நுத்துபா எத்தனை நிறமும் குணமும் ரூபமும் கொண்டு அவதாரமெடுக்குதென்று பார்.

ஆனால் இதில் மிகுந்து நீளமாகப் பேசுவதில் கருத்தில்லாதவனுக்கு பலனில்லை. ஆகையால் வெளியாக்கப்படுகிற வஸ்துவெல்லாம் ஹக்குத்தஆலாவுடைய இல்மில் அச்சரம் தொணியில்லாத ஹர்பாக இருந்ததுதான் இப்படியாக இருக்குதோ அல்லவோவென்று பார்.

நீயே சகலதும் உன்னில் சுருண்டு கிடப்பதற்குள்ள பிரிவாகையால், நீயே வேதமென்பதை நமதாண்டவர்கள் அஷ்ஷெய்குல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு சொல்கிறார்கள்: *லகத் குன்னாஹுறுபான் ஆலியாத்தி னஸல்னா பீஸுத்தூறின் ஸாபிலாத்தி பமல் அக்வானு இல்லா னஹ்னு ஹக்காவ இன்னா காயினாத்துன் மும்கினாத்தி* – நாம் உயர்த்தியாகிய அட்சரங்களாயிருந்து தாழ்ந்த உருவங்களில் இறங்கினோம். உண்டானதெல்லாம் நாமேயல்லாது வேறில்லை. உலகமென்பது நாம் தான் குன் என்னும் வித்தில் நின்றும் விளைந்தோம்.

***(ஷற்ஹு - விளக்கம்***

*ஆனால் நாம் உயர்த்தியான அட்சரங்களாயிருந்து தாழ்ந்த உருவங்களில் இறங்கினோமென்றதின் கருத்தாவது: நாம் துவக்கம் அஃயான் தாபித்தாவில் தரித்து வாஹிதிய்யா என்கிற மள்ஹரு ஆதமிய்யாவிலும் றூஹு தூய்மையாக்கப்பட்ட றூஹு குத்ஸியி என்கிற றூஹு முஹம்மதிய்யாவாகிய றப்புல் அற்பாபிலும், நூறு முஹம்மதிய்யா என்கிற அக்குலுல் அவ்வலில் நின்றும் ஸஹாபுல் வஹ்யி என்கிற வேதாந்த மேகத்திலும் அஸ்மாஉன் இலாகிய்யா என்கிற இருபத்தேழு அஸ்மாவாகிய அற்பாபிலும் அஸ்மாவுல் கியானிய்யாகிய இருபத்தேழு மற்பூபிலும் ஆலம் அற்வாஹு, ஆலம் மிதால், ஆலம் அஜ்ஸாம், ஆலம் இன்ஸான் என்ற ஸத்றாவென்னும் உருவங்களில் இறங்கினோம் என்று முஹ்யித்தீன் இப்னு அறபி ரலியல்லாஹு அன்ஹு சொன்னதாக இருக்கும்.*

*இன்னமும் கலிமா என்கிற ஹர்பாகிய 'உஜூது, இல்மு, நூறு, ஷுஹூது' என்றுச் சொல்லப்பட்ட நாலும் இஃத்திபாறு ஸல்பிய்யி என்கிறதாக இல்மில் முத்துலகில் தோன்றினபடியால் இந்த இல்முல் முத்துலக்கு உஜூதுல் முத்துலக்காக கரைந்து போகும். அந்தபடி கரைந்து போனால் 'அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹு' நிறப்பமாச்சுது. அவனும் துப்பறவானான்.*

*அப்படியானபின் உஜூதுல் முத்துலக்கு இவனை இல்லாமையாக உஜூதில் தரிபடுத்தி பகாவில் சேர்த்து ஏறின துறையின் வழியே இறக்கி தஷ்பீஹு முகமும் உஜூதாக தரிபடுத்தின பின்பு உபூதிய்யத்து கொண்டு வஹ்தானிய்யத் என்கிற மறதியான கடலில் அமுதங்களை அருந்தினவன் தனக்கு 'வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வறஸூலுஹு' நிறப்பமாகத் தரிபாடாக தரிப்பான்.*

*'பைத்து வபிஸ்ஸஹ்வி பஷதல்மஹ்லி லம்அக்கு ஒய்றஹா' நான் பனாவான பின்னும் பகாவான தெளிவிலும் அந்த உஜூதிய்யா என்கிற மஹ்பூபு நாயகியல்லாதவனாக*

*இருக்கவில்லை. 'வதாத்தி பிதாத்தீ இன் தஜல்லத் தஜல்லத்தி' அது அவன் வெளிப்பட வேணுமென்கிறபோது என்னுள்ளமை அது தன்னில் அவளாக வெளியாகும்.*

*'தஜல்லத் பீத்தஜல்லீஹல் உஜூதுலினாலிறி' அந்த மஹ்பூபு நாயகி வெளியாகிறத்திலே என்னுடைய உள்ளமைதான் என் பார்வைக்கு அவளுடைய உஜூதாக வெளியாச்சுது. 'வபீகுல்லிமிர்ஆத்தீ அறாஹா பிருவுயத்தீ ஆனபோதே காணப்பட்டதங்களிலும் அவள் தன்னையே காண்கிறது என்தன்கை காண்கிறதாக இருந்தது.*

*ஆகையால் இந்தபடி அறிந்து உறூஜு நுஸூலுமாய் ஏறி இறங்கி ஹக்கையும் கல்கையும் ஒன்றென்றும் இரண்டென்றும் காணாமல் தாங்கள் அதமாக ஒரு பார்வையாக கண்டு இருந்தார்களே அந்தக் கூட்டத்தில் நம்மனைவரையும் சேர்ப்பானாகவும்.)*

உலூமுத்தீன் முடிவு பெற்றது.

ஆனால், நாம் உயர்த்தியான அட்சரங்களாயிருந்து தாழ்ந்த உருவங்களில் இறங்கினோம் என்றதின் கருத்தாவது நாம் துவக்கம் அஃயான் தாபித்தாவில் தரித்து வாஹிதிய்யா என்கிற மள்ஹறு ஆதமிய்யாவிலும்,றூஹு முஹம்மதிய்யாவாகிய றப்புல் அற்பாபிலும் நூறு முஹம்மதிய்யா என்கிற அக்குலுல் அவ்வலில் நின்றும் ஸஹாபுல் வஹ்யி என்கிற வேதாந்த மேகத்திலும் அஸ்மாஉன் இலாகிய்யா என்கிற 27 மற்பூபிலும் ஆலம் அர்வாஹு, ஆலம் மிதால், ஆலம் அஜ்ஸாம் ஆலம் இன்சான் என்ற ஸத்றாவென்னும் உருவங்களில் இறங்கினோமென்று முஹ்யித்தீன் இப்னு அரபி ரலியல்லாஹு அன்ஹு சொன்னதாக இருக்கும்.

இன்னமும் கலிமா என்கிற ஹற்பாகிய உஜூது இல்மு, நூறு, ஷுஹூது என்றுச் சொல்லப்பட்ட நாலும் இஃத்திபாறு ஸல்பிய்யி என்கிறதாக இல்மில் முத்துலக்கில் தோன்றினபடியால் இந்த இல்முல் முத்தலக்கு உஜூதுல் முத்தலக்காக கரைந்து போகும். அந்தப்படி கரைந்து போனால் அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹு நிறப்பமாச்சுது. அவனும் துப்புறவானான். அப்படியாயின் உஜூதுல் முத்தலக்கு இவனை இல்லாமையாக உஜூதில் தரிபடுத்தி பகாவில் சேர்த்து ஏறின துறையின் வழியே இறக்கி தஷ்பீஹ் முகமும் எஜூதாக தரிபடுத்தின பின்பு உபூதிய்யத்து கொண்டு வஹ்தானிய்யத் என்கிற மறதியான கடலில் அமுதங்களை அருந்தினவன் தனக்கு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வறஸூலுஹு நிறப்பமாக தரிபாடாக தரிப்பான்.

பைத்து வலிஸ்ஸஹ்லி பஃதல்மஹ்லி லம் அக்கு ஒய்றஹா - நான் பனாவான பின்பும் பக்காவான தெளிவிலும் அந்த உஜூதிய்யா என்கிற மஹ்பூபு நாயகியல்லாதவனாக இருக்கவில்லை.

வதாத்தீ பிதாத்தீ இன் தஜல்லத் தஜல்லத்தி - அது அவன் வெளிப்பட வேண்டுமென்கிறபோது என் உள்ளமை அது தன்னில் அவனாக வெளியாகும்.

தஜல்லத் பீத்தஜல்லீஹல் உஜூதுலினாலிறி -அந்த மஹ்பூபு நாயகி வெளியாகிறத்திலே என்னுடைய உள்ளமைதான் என்பார்வைக்கு அவளுடைய உஜூதாக வெளியாச்சுது.

வபீகுல்லிமிர்ஆத்தீ அறாஹா பிருவுயத்தீ - ஆனபோதே காணப்பட்டதடங்களிலும் அவன் தன்னையே காண்கிறது என்தன்னைக் காண்கிறதாக இருந்தது.

ஆகையினால் இந்தபடி அறிந்து உறூஜு நுஸூலுமாய் ஏறி இறங்கி ஹக்கையும் கல்கையும் ஒன்றென்றும் இரண்டென்றும் காணாமல் தாங்கள் அதமாக ஒரு பார்வையாக கண்டு இருந்தார்களே அந்தக் கூட்டத்தில் நம் அனைவரையும் சேர்ப்பானாகவும்.

எனது பெரிய தகப்பனார் குத்புஸ்ஸமான் கௌதுல் அமான் கல்வத்து நாயகமவர்கள் கோர்வை செய்த உலூமுத்தீன் என்னும் கிதாபாகிறது ஈமானுடைய பணர்களில் நின்றும் மூன்றாவது பணறாகிய வேதத்தைக் கொண்டு ஈமான் கொள்கிற விபரத்தை களங்கமற பயான் செய்யிரது கொண்டே முடிவு பெற்று விட்டது.

ஆனதால், மற்ற பணர்களை பயான் செய்யவேண்டுமென்று எனது அஹ்பாபுகளில் சிலர் விரும்பினதற்காக அந்த நாயகமவர்களின் இனாயத்து – உதவியுடைய பைளைக் கொண்டு ஊண்டுதல் பிடித்தவனாகவும் முஹக்கிக்கீன்களாகிய எனது நாயகமவர்களுடைய கிதாபுகளில் நின்றும் எடுத்து எழுதுகிறேன். ஆனதால், அல்லாஹுத்தஆலா அந்த நாட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்றும் கத்தாவை விட்டும் காத்துக் கொள்ளவேண்டும் என்றும் அந்த நாயனிடம் அஞ்சியும், கெஞ்சியும் அதபுடன் கேட்டுக் நிற்கிறேன்.

**ஈமானுடைய பணர்களில் நான்காவதாகிறது:-** அன்பியாக்களாகிய ரஸூல்மார்களைக் கொண்டு ஈமான் கொள்கிறதாக இருக்கும். ஆனால் கல்வத்து ஆண்டவர்கள் ரஸூல்மார்களைக் கொண்டு ஈமான் கொள்கிற விதத்தைக் கொஞ்சம் சைக்கினையாக இந்த கிதாபின் மேலே அனேக இடங்களில் எழுதியிருக்கிறார்கள்.

அதாவது அல் மவ்ஜூத்தாத்து கலிமாத்துல்லாஹி வல்வாதித்தாத்து றுஸ்லுல்லாஹி – உண்டாக்கப்பட்டது அடங்கலும் அல்லாஹ்வுடைய கலிமாக்கள் என்னும் வார்த்தையாக இருக்கும் என்றும் நினைக்காமல் யோசிக்காமல் கருத்தில் வந்து தரிபடுகிற நல்ல எண்ணமட்ங்களும் அல்லாஹ்வுடைய தூதர்களாக இருக்கும் என்றும் எழுதியிருக்கிறார்கள்.

இன்னமும் முஸ்லிம் காபிர் சகலருடைய கல்பிலும் அக்குலின் பேரில் தீர்ப்புச் செய்கிற நல்வழியில் சேர்த்து வைக்கிற நீதமாகிய நல்ல எண்ணம் எப்போதும் அடநதேறலாக வருகிறதென்றும் முஸ்லிம் இபாதாத்து முதலானதுகளை அதிகப்படுத்துகிறான் என்றும் ஆலம் கைபில் அவர்கள்தான் அவ்விதம் வெளியாகியிருப்பதும், ஆலம் ஷஹாதாவிலும் அவர்கள்தான் வெளியாகி நேர்வழியில் அழைக்கிறார்கள் என்றும் எழுதியிருக்கிறார்கள்.

ஆனால், நபிமார்கள் ஜனங்களை நேர்வழியில் அலைக்குதல் என்ற வழக்கத்தை ஏற்படுத்தி ஒரு இலட்சத்து இருபத்தி நான்காயிரம் நபிமார்களையும் ஆண்டவன் அனுப்பி அவர்கள் மனிதர்களை நேர்வழியில் அழைத்துக் கொண்டே வந்தார்கள். அதுபோல் நாயகம் முஹம்மது

முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் நபியாக அனுப்பினான். அவர்களும் மனிதர்களை நேர்வழி காட்டினார்கள். அவர்கள் துன்யாவை விட்டும் ஆகிறத்தளவில் எழுந்தருளியபோது துன்யா மனிதர்கள் ஆண்டவனிடத்தில் முறையிட்டார்கள்.

அப்போது நீங்கள் சலிக்க வேண்டாம். அந்த 124000 நபிமார்களுடைய கல்பைப் போன்ற அவ்லியாக்களாகிய உலமாக்களை அவர்களுக்குப் பகரமாக கியாமத்து நாள்வரைக்கும் அவதாரமெடுக்கச் செய்வேன். அவர்களாகிறவர்கள் அந்தந்த காலத்து மனிதர்களை நேர்வழி காட்டிக் கொண்டே வருவார்கள் என்று வாக்களித்தான். அதை நிறைவேற்றும் பொருட்டு அன்பியாக்களுடைய குலபாக்களாகிய உலமாக்களை ஆலத்தார் அடங்கலுக்கும் ரஹ்மத்தாக அனுப்பிக் கொண்டே இருக்கிறான்.

இன்னமும் அந்தந்த காலத்து மனிதர்கள் எந்தக் கொள்கையின் பேரில் மிகைப்பாக தரிபட்டிருக்கிறார்களோ அந்தக் கொள்கையை மிகைக்கும்படியாகிய முஃஜிஸாத்து என்றும் தத்துவத்தைக் கொடுத்து அந்தந்த நபிமார்களை நபியாக அனுப்பி வைத்தான். அதாவது தாஊது அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கவ்முகள் சங்கீத ராகம் கேட்பதிலும் சங்கீதம் பாடுகிறதிலும் மிகைப்பாக இருந்தார்கள்.

அவர்களுடைய சங்கீதத்தை மிகைக்கும்படியாக சங்கீத ராகத்தையுடைய ஸபூர் வேதத்தை முஃஜிஸாத்தாக தாஊது அலைஹிஸ்ஸலாமுக்குக் கொடுத்து நபியாக அனுப்பினான். அவர்கள் ஸபூர் வேதத்தை ஓதினபோது அவர்களிடத்தில் மிகைப்பாக இருந்த சங்கீத ராகங்கள் எல்லாம் பர்திலாகி வீணாகி விட்டது. அவர்களடைய சங்கீதம் கேட்குதல் என்ற சுபாவமும் மாறிவிட்டது. ஸபூர் வேதத்தை ஓதி அதன் ஹுக்குமுகளை பின்பற்றி நடக்கவும் நபியைத் தொடர்ந்து நடக்கவும் தலைப்பட்டார்கள். எல்லா நேரமும் சபூர் வேதத்தை ஓதி அதனுடைய சங்கீதத்திலும் மோகம் கொண்டவர்களாக ஆகிவிட்டார்கள்.

அதுபோல் மூசா அலைஹிஸ்ஸலாமுடைய கவ்முகள் சூனியம் செய்து அதுகொண்டு வீறுபேசுவதிலும் மிகைப்பாக இருந்தார்கள். அவர்களுடைய சூனியத்தை மிகைத்து பாத்திலாக்கி அழித்துப்போடும்படியாகிய முஃஜிஸாத்தை கொடுத்து மூஸாஅலைஹிஸ்ஸலாம் அவர்களை நபியாக அனுப்பினான். அவர்களுடைய அஸாவாகிய கைக்கோலானது பாம்பாக ஆகி அந்த கவ்முகளடைய சூனியத்தை தூக்கி விழுங்கி விட்டது. அப்போது நம்மளிடத்திலிருக்கிற சூனியத்தை மிகைக்கும்படியாகிய சூனியம் மூஸாவிடத்தில் இருக்கிறது என்று மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பின்பற்றினார்கள்.

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கவ்முகள் வைத்திய சாஸ்திரம் படித்து வியாதிஸ்தர்களை சுகப்படுத்துவதிலும் மருந்துகள் செய்வதிலும் மிகைப்பாக இருந்தார்கள். அவர்களுடைய வரத்திய சாஸ்திரத்தையும் மருந்தையும் மிகைக்கும்படியாகிய முஃஜிஸாத்தைக் கொடுத்து ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை நபியாக அனுப்பினான். ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மருந்து செய்யாமல் வெண்குஷ்டம், கருங்குஷ்டம், பிறவிக் குருடு போல் உள்ள பெரும் வியாதிகளை எல்லாம் சுகப்படுத்தினார்கள்.

நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய கவ்முகள் பஸாஹத்து என்னும் நாகரீகத்திலும் கஸீதாக்கள் சொல்லி ஒருவருக்கொருவர் வீறு பேசுவதிலும் மிகைப்பாயிருந்தார்கள். அவர்களுடைய நாகரீகத்தையும் கஸீதாக்களையும் குர்ஆனாகிறது பாத்திலாக்கிப் போட்டது. ஏனென்றால் குர்ஆனுடைய பஸாஹத்துக்கு எதுவும் ஈடாக மாட்டாது. அந்த குற்ஆனுடைய ஹுக்குமுகளை கொண்டு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனிதர்களை நேர்வழிக் காட்டினார்கள்.

ஆனால், நுபுவ்வத்தைக் கொடுக்கப்பட்ட நபிமார்கள் அடங்கலும் இனிமேல் வருகிற காரியங்களை அறிந்து அறிவிக்கிறதும் ஸமான் காலமும் மக்கான் தலமும் சுருண்டு போகிறதும் இன்னும் மலாயிகத்துகளும் ஜின்களும் மனிதர்களும் அவர்களுக்கு வழிப்படுகிறதும் அவர்களுடைய முஃஜிஸாத்துடைய சொந்தத்தில் நின்றும் உள்ளதாக இருக்கும். அதுபோல் ஆலம் முல்க்கு ஆலம் மலக்கூத்து போல் உள்ள ஆலம் அடங்களிலேயும் தஸர்றுபு என்னும் ஆக்கி அழிக்கிறதும் இன்னும் தங்களுடைய உம்மத்துகளை துன்யா ஆகிறத்துடைய ஹலாக்கையும் அதாபையும் விட்டுக் காத்து அந்த உம்மத்துக்களை மலக்கூத்துடைய ஆலத்தில் புகுத வைக்கிறதும்

பஞ்ச பூதங்களினால் சமைந்த சரீரம் என்னும் சிறைச்சாலையில் அடைபட்டுக் கிடப்பவர்களுக்கு எப்போதும் அழியாத மலக்கூத்தையுடைய ஆலத்தில் சேர்க்கப்பட்ட மிதாலிய்யத்தாகிய ஸூறத்தை அவர்களுக்கு கொடுத்து இரண்டாவது பிறப்பாக பிறக்கச் செய்கிறதும் அவர்கள் அடங்கலுக்கும் தகப்பனுடைய தானத்திலிருந்துச் சகல காரியங்களையும் செய்து முடிக்கிறதும் இலாஹிய்யத்தாகிய மர்தபா உடையச் சொந்தத்தில் நின்றுமுள்ளதாக இருக்கும்.

அந்த நபிமார்கள் தங்கள் உம்மத்துக்களை காக்கக் கடமைப்பட்டதுபோல் அவர்களுடைய குலபாக்களாகிய உலமாக்களும் தங்கள் முரீதீன்களை காக்க கடமைப்பட்டவர்களாக இருக்கும்.

இதற்காகத்தான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்: இன்னமா அலைக்கும் கல்வாலிதி லிவலதிஹி – திடனாக நானாகிறவன் உங்களுக்கு தகப்பனைப் போல் இருக்கும் என்றும் இன்னமும் வகத் கால அலைஹிஸ்ஸலாம் அஷ்ஷய்குபீ கவ்மிஹி கன்னபிய்யி பீ உம்மத்திஹி - ஒரு கவ்முகளுக்கு நேர்வழி காட்டும்படியாகிய நபியைப் போல் இருக்கும் என்றும் திருவுளமானார்கள்.

இன்னும் அல்லாஹுத்தஆலா வபில்வாலி தய்னி இஹ்ஸானன் என்று இந்த ஆயத்தில் உன்னுடைய இரண்டு தகப்பன்மார்களுக்கும் உபகாரம் செய்யென்று சொல்லியிருக்கிற இரண்டு தகப்பன்மார்களில் இரண்டாவது தகப்பனாகிறவர்கள் உம்மத்துகளுக்கு நபிமார்களும் முரீத்தீன்களுக்கு காமிலான செய்குமார்களுமாக இருக்கும். ஏனென்றால், அந்த நபியும் செய்குமாகிறவர்கள் உம்மதுகளும் முரீதீன்களும் இரண்டாவது பிறப்பு பிறக்குகிறதற்கு (ஸபபு) காரணமாகி விட்டார்கள்.

அதாவது அந்த உம்மத்துகளும் முரீதீன்களுமாகிறவர்கள் தங்களுடைய இஸ்தூலச் சரீரத்தை தகப்பன், தாய் இரண்டுபேர்களில் நின்றும் நன்கொடையாகப் பெற்றுக் கொண்டார்கள். இந்தச் சரீரம் இந்த ஆலத்தில் நின்றுமுண்டான வஸ்துவாகயிருப்பதால் இந்த ஆலத்திலுள்ள எந்த வஸ்துவும் அந்த ஆலத்துக்குப் போக சக்திப் பெறமாட்டாது.

அப்படிப்போல் உள்ள சரீரத்தை உடையவர்கள் சொர்க்கலோகத்துக்குப் போகக் கூடிய தகுதியை இழந்தவர்களாக இருக்கும்போது அந்த உம்மத்து முரீதீன்களுடைய கல்பென்னும் கெர்ப்பக் குவளரையில் நுபுவ்வத்து, விலாயத்து என்னும் நுத்பா இந்தியத்தை எடுத்துப் போட்டதின் பின்னால் நபிமார்களும், செய்குமார்களும் உம்மத்துகளுக்கும் முரீதீன்களுக்கும் போதிக்குதல் என்ற உருவாகிறது. அவர்களுடைய கல்பில் போய் குடிகொண்ட நுபுவ்வத்து விலாயத்து என்னும் நுத்துபாவை வளர்த்து உருவாக்கி மலக்கூத்து, ஜபரூத்து, லாஹூத்து என்னும் ஆலம்களுக்கெல்லாம் போகக் கூடிய தகுதியுடைய பிள்ளைகளாக அவர்களுடைய கல்பில் நின்றும் பிறக்கச் செய்கிறார்கள்.

அந்த பிள்ளைகளுக்குப் பெயர்களாகிறது ஹால் என்னும் முந்தின நிலைமை மாறுதல் என்றும் வஜ்து என்னும் ஆசை, ஹால் என்றும், மஹ்வு என்னும் மயக்கமென்றும், ஸஹ்வு என்னும் தெளியுதல் என்றும், பனாவென்றும் பகாவென்றும் முஷாஹதா என்றும் முகாஷப என்றும் தஜல்லிய்யாத்துல் அஸ்றார் பிலுஹூரில் அன்வாறென்றும் சொல்லப்படும்.

இவ்விதமாகிய பிள்ளைகளெல்லாம் அவர்களுடைய கல்பு என்னும் கெர்ப்பக் குவளரையில் நின்றும் பிறந்து ஹக்குடைய குணம் கொண்டு அந்த உம்மத்துகளும் முரீதீன்களும் குணம் பெற்று பனாவுக்குப் பின்னால் பகாவாகி தமக்கு என்னும் தரிபாட்டளவில் சேர்ந்து விடுவார்களானால் அந்த நபியவர்களுக்காவது அல்லது செய்கு அவர்களுக்காவது இரண்டாவது பிறப்பாகப் பிறந்த பிள்ளையாக ஆகிவிட்டார்கள்.

இதற்காகத்தான் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைத் தொட்டும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் லன்யலிஜ மலக்கூத்தஸ்ஸமாவாத்தி மன்லம்யூலத் மர்றத்தைனி – வானங்களுடைய மலக்கூத்தென்னும் ஆலத்தில் இரண்டாவது பிறப்புப் பிறந்தவன் தான் புகுதுவான் என்றும் திருவுளமானார்கள். ஆனால், இந்த இரண்டாவது பிறப்புப் பிறக்கிறதென்று சொல்லப்பட்டதில்

துன்யாவுடைய ஸ்தூலச் சரீரத்தில் போய்ப் புகுந்து திரும்ப துன்யாவில் பிறக்குறான் என்று விளங்கப்படாது. நாம் சொல்கிற பிறப்பாகிறது ஸூவரிய்யாவாகிய கண்டிப்பில்லை. மஆனிய்யாவாகிய கண்டிப்பில்லாத பிறப்பாக இருக்கும். ஆனதால், இவ்விதமெல்லாம் அந்தக் காலத்திலுள்ள நபிமார்கள் செய்தது போல் இப்போதும் எப்போதும், ஆகிறத்தையுடைய உலமாக்களைக் கொண்டு ஆண்டவன் செய்துக் கொண்டேதானிருக்கின்றான்.

அப்படிச் செய்து வருகிறதில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குமுன் மனிதர்களை அல்லாஹுத்தஆலா அளவில் அழைக்கிறவர்களுக்கு ரசூலென்றும் அவர்களுக்குப் பின் அழைக்கின்றவர்களுக்கு ரசூலுடைய கலீபாக்கள் என்றும்

சொல்லப்படும். அதாவது முரீதீன்களை விலாயத்தென்னும் பெரும் பதவியில் சேர்த்த நமது நாயகமார்களாகிய அபீயஸீது வல்ஜுனைது வஷ்ஷெய்கு அப்துல் காதிருல் ஜெய்லானி ரலியல்லாஹு அன்ஹு வனபஅனா பிஉலூமீஹிம் போல் உள்ளவர்களுக்கு ரசூலுடைய கலீபாவென்றும் ரசூலுல்லாஹ் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால், இவர்களெல்லாம் இந்த வேலைகளைச் செய்தபோதிலும் ஆண்டவனுடைய ஹக்கீக்கத்தாகிய உஜூதுதான் எல்லா வேலையும் செய்து முடிக்கிறது. ஏனென்றால், ஹக்குடைய உஜூதாகிறது ஒரு ஹகீகத்தாக இருக்கும். அது எண்ணிக்கையாகவும் மாட்டாது. மிகுதமாகவும் மாட்டாது. என்கிலும் தஅய்யுனாத்து தஜல்லியாத்துடைய வீதம் கொண்டு எண்ணிக்கையாகவும் மிகுதமாகவும் ஆகும்.

இன்னமும் ஹக்குடைய உஜூதாகிறது அர்வாஹுகளாகவும், அஜ்ஸாமுகளாகவும் அஃறாலுகளாகவும் ஆகும். இன்னமும், அன்பியாக்களுடைய றூஹைப்போல் குல்லிய்யாவான றூஹாகவும் மற்றவர்களுடைய றூஹைப் போல் ஜுஸ்இய்யாவான றூஹாகவும் ஆகும். அன்பியாக்களுக்கு ஈமான் கொண்டு அவர்களுடைய ஹுக்குமிலே தரிபட்டு நடக்கிறர்வளுடைய அர்வாஹுகளை அந்த அன்பியாக்களுடைய றூஹு பொதிந்துக் கொண்டிருக்கிறதற்காக வேண்டி அவர்கள் றூஹுக்கு குல்லிய்யா என்று சொல்லப்படும்.

இன்னமும், நெருப்பில் காய்ச்சப்பட்ட இரும்பானது நெருப்புடைய குணத்தை எடுத்துக் கொண்டு நெருப்புச் செய்கிற வேலைகளை எல்லாம் இரும்'பு செய்வதுபோல் ஹக்குடைய ஒளிவைக் கொண்டு ஒளிவு பெற்று பாயிதாக்களை எல்லாம் எடுத்துக் கொண்டு ஹக்குக்கு முடுகுதலாக இருக்கிற நப்சுக்கும் ஆலுமடங்கலும் வழிப்பட்டு நடக்கிறது புதுமையான காரியமில்லை.

ஆனால், இந்தக் குணங்களெல்லாம் நபிமார்கள், வலிமார்களுக்குத்தான் சொந்தமானதென்று எண்ணாதே. ஏனென்'றால், இன்சானென்ற ஒரு ஹகீகத்துதான் அன்பியாக்களாகவும், அவ்லியாக்களாகவும் பல பலவிதமான ரூபங்களைக் கொண்டும் குணங்களைக் கொண்டும் வெளியாகுகிறது. மேலும் எல்லா மனிதர்களுடைய றூஹையும் அந்தப்பக்குவத்திலேயே படைக்கப்பட்டிருக்கிறது.

அவ்விதமான நிலைமைகளில் ஆகிவிட வேண்டுமென்று ஒரு சாலிகு நாடினால் ஸைய்ருல் பாத்தினைக் கொண்டு ஆரிபீன்களாகிய அவ்லியாக்கள் மனத்தில் படிபடியாகக் கடந்து செல்லும் மகாமுகள் ஆறாக இருக்கும்.

அதில் அறிவின்னைமயான மோத்தனத்தைத விட்டும் நீங்கி ஹக்கை அறியுதல் என்னும் ஞானத்தை அடைய முயற்சி செய்வது முதலாவது மகாமாக இருக்கும்.

ஞானத் துர்ச்சையினால் அமலின் மக்கம் செல்வது இரண்டாவது மகாமாகயிருக்கும்.

தியான யோக முதிர்ச்சியினால் ஹக்குpலே தன் நினைவு பனாவாகி மாய்ந்துதெளரிவது மூன்றாவது மகாமாக இருக்கும்.

ஜீவ தத்துவமான மனிதப் பண்புகள் மடிந்து தன் எதார்த்த நிலையில் தரிப்பது நாலாவது மகாமாக இருக்கும்.

ஹக்குடைய அஸ்மா ஸிபாத்துகளைத் தனதாகக் கொண்டு தரிப்பினும் பெரும் தரிப்பாக நிலைப்பது ஐந்தாவது மகாமாக இருக்கும்.

மேல் உலகத்திலும் கீழ் உலகத்திலும் ஆட்சி அனுபவங்கள் செய்து தான் நாடின சூறத்தை எடுத்துக் கொண்டு எல்லா ஆலம்களிலும் சுத்திக் கொண்டிருப்பது ஆறாவது மகாமாக இருக்கும் என்பதை உணர்ந்து அவன் சுலூக்குடைய பாதையில் தெண்டித்து நடக்கும்போது ரசூல்மார்களைத் தொடர்ந்தவனாக ரசூலுடைய குணங்களை எடுத்து தன்னுடைய ஐயறிவு, தத்துவம், அடங்கலையும் அழித்து பனாவாக்கி துன்யா, ஆகிறத்துடைய உணர்ச்சிகளை எல்லாம் விட்டு நீங்கி ஆண்டவனுடைய ஜலாலிய்யத்தாகிய அஸ்மாக்களில் வெளியாகி

அப்பால் ஜமாலிய்யத்தாகிய அஸ்மாக்களில் வெளியாகி ஹக்குத்தஆலாவுடைய ஸிபாத்து அடங்களையும் கொண்டு சாலிக்கு குணம் கொண்டு அல்லாஹ்விலே பனாவானதில் நின்றும் திரும்பினால் தன்னை ஹக்குடைய ஸிபாத்துகளைக் கொண்டு வஸ்பு செய்யப்பட்ட உஜூதாகக் காண்பான். அதுதான் பகாவென்னும் விலாயத்தென்று சொல்லப்பட்ட நாயகத்தனமாக இருக்கும்.

அப்படி வெளியானவனுக்குதுன்யாவுடைய மூன்று பிள்ளைகளையும் அப்லாக்கென்னும் ஆகாய மண்டலங்களையும் ஒரு நொடியில் அழித்து மறுநொடியில் உண்டாக்கிப் போடக் கூடிய தத்துவத்தையும் ஆண்டவன் அவர்களுக்குக் கொடுத்து விடுவான்.

அவர்களுக்கு ரசூல் அஃலமென்றும், நூருல் அக்த்தமென்றும் சொல்லப்படும். அந்த றூஹுல் அஃலமுக்கு எல்லா ஆலம்களிலேயும் மலாஹிரென்னும் அவதாரங்கள் அன்பியாக்களுக்களுடைய சூரத்திலும் உண்டாகி இருப்பதுடன் மற்றும் மக்லூக்காத்துகள் என்னும் படைக்கப்பட்ட வஸ்துவு அடங்களுடைய ரூபத்திலும் மலாஹிரென்னும் அவதாரங்கள் கியாமத்து நாள் வரையிலும் அனுதினமும் வெளியாகிக் கொண்டேதானிருக்கும். வல்லாஹு யகூலுல் ஹக்க வஹுவயஹ்திஸ்ஸபீல்.

ஈமானுடைய பணர்களில் ஐந்தாவதாகிறது:- திடனாக அல்லாஹுத்தஆலா கியாமத்துநாள் உண்டாகுகிறதை நாடுவானேயானால் தன்னுடைய அஸ்மாக்களில் நின்றும் முப்னீ – அழிக்கிறவன், முமீத்து – மவ்த்தாக்கிறவன் என்ற இஸ்மைக் கொண்டு இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாமை வெளியாக்கி அவர்களுடைய முந்தின ஊதுதலைக் கொண்டு சூறத்து அடங்கலையும் அழித்துப் போடுவான்.

ப்போது காணப்பட்ட ஸூரத்து அடங்கலும் அழிந்து அவைகளுடைய அஸ்லாகிய மஹல்லளவில் மீண்டுவிடும். அதில் நின்றும் வந்ததுபோல் அதாவது அல்லாஹுத்தஆலா ஆலத்துடைய உஜூதை அவனுடைய இல்மில் உண்டாகியிருக்கிற ஸூறத்துப் படிக்குப்

படைக்க நாடினபொழுது தன்ஸீஹான தஜல்லியைக் கொண்டு குல்லிய்யாவான ஹக்கீகத்தளவில் வெளியானான்.

அப்போது அந்த ஹகீகத்தில் நின்றும் ஹவா என்னும் ஆகாயம் வெளியாச்சுது. ஹவாவாகிறது ஆலத்துக்கு முந்தின மௌஜூதாயிருக்கும். அந்த ஹவாவுக்கு ஹயூலா என்று சொல்லப்படும். ஹயூலாவாகிறது - ஹியஊலாவாகிறது ஆலமடங்கலுக்கும் அஸ்லாக இருக்கும்.

பின்பு ஹக்குத்தஆலா தன்னுடைய நூறைக் கொண்டு ஹவாவளவிலே வெளியானபோது ஆலமடங்கலும் அது அதனுடைய இஸ்திஃத்தாது என்னும் தங்கரீகம் தேடிக் கொண்ட விதத்தின்படிக்கு ஹவாவுலே வெளியாகிறதற்கு ஹவாவாகிறது இடம் கொடுத்து விட்டது.

ஏனென்றால், ஹவாவென்றும் ஆகாயத்துக்கு இன்திஹா வென்னும் தீர்ச்சை கிடையாது. அதில் எவ்வளவு வெளியானாலும் இடம் கொடுக்கவே செய்யும். மேலும் அல்லாஹ் என்னும் பராபரவஸ்துவாகிய கடவுளுக்கு மஃனாவாகிறது கடமென்றால் குடம் உள் என்றால் ஆகாயம் அப்போது குடத்தாகாயம் என்றால் ஆகாய மண்டலத்தாகாயம் என்ற பொருளாச்சுது.

ஆகாயம் தன்னை அளக்க மரக்காலெடன

ஆகாயம் அம்மரக்காலுள்ளிருக்க

ஆகாயம் கண்ட கருத்தைக் கருத்தாக்கிக்

கண்டாலதுவே கதி

என்று ஒருவர் சொல்கிறார்.

அப்படிக்கொற்ற ஆகாயத்தின் தீர்ச்சையை யாராலும் அறியக் கூடாமலிருப்பதோடு ஹக்குடைய நூரில் நின்றும் வெளியான ஆலமடங்களுடைய நூறின் வெளிச்சமாகிறது வஹாவென்னும் ஆகாயத்துடைய தீர்ச்சையை ஏற்றிவிடமாட்டாது.

அப்படிக்கொற்ற ஹக்கீக்கத்துன் முஹம்மதிய்யாவாகிய ஆகாயத்தில் முந்தி வெளியானது ஹக்கீகத்துன் குல்லிய்யாவாகிய நப்சுன் குல்லிய்யாவாக இருக்கும். அந்த நப்சுன் குல்லிய்யாவுக்கும் ஹவாவுக்கும் இடையிலே ஆண்டவனுடைய ஸிபாத்துகளில் நின்றும் ஹயாத்து, இல்மு, இராதத்து, குத்றத்து என்னும் இந்த நான்கு சிபாத்துடைய ஹகீக்கத்து வெளியான பொழுது தபீஅத்துடைய நாலு நாடி குணங்களும் உண்டாகிவிட்டது.

அதாவது ஹராறத் என்னும் சூடு றுதூபத்து என்னும் ஈரம், புறூதத்து என்னும் குளிர்ச்சி யபூஸத்து என்னும் வறட்சி இந்த நாலுமாக இருக்கும். பின்பு அல்லாஹுத்தஆலா இந்த நான்கு தபீஅத்தையும் ஒன்றுடனே ஒன்றைச் சேர்த்தான். அது விரிவாக்கப்பட்ட நெருப்பாக ஆகிவிட்டது. அந்த நெருப்புடைய ஹுக்குமாகிறது பலகுல் அக்ஸாவாகிய அர்ஸுடைய ஜிஸ்முலேயும் மூன்று தலத்திலே வெயியாச்சுது.

அந்த மூன்றில் ஒன்றாவதுக்கு ஹம்லு என்றும், இரண்டாவதுக்கு அஸது என்றும் மூன்றாவதுக்கு கவ்ஸு என்றும் சொல்லப்படும். பின்பு புறூதத்தை யபூஸத்துடனே சேர்த்தான். அது விரிவாக்கப்பட்ட பூமியுடைய குவ்வத்தாகிறது பலக்குல் அக்ஸாவாகிய அர்ஸுடைய ஜிஸ்முலே மூன்று தலத்திலே வெளியாச்சுது. அதில் முந்தினதுக்கு தவ்றென்றும், இரண்டாவதுக்கு ஸுன்புலா என்றும், மூன்றாவதுக்கு ஜத்தீ என்றும் சொல்லப்படும். பின்பு ஹறாறத்தை றுதூபத்துடனேச் சேர்த்தான். அது அடையவளைந்த காற்றாகிவிட்டது.

அந்த காற்றுடைய குவ்வத்தாகிறது பலக்குல் அக்ஸாவாகிய அர்சுடைய ஜிஸ்முலே மூன்று தலத்திலே வெளியானது. அதில் முந்தினதுக்கு ஜவ்ஸான் என்றும், இரண்டாவதுக்கு மீஸான் என்றும் மூன்றாவதுக்கு தல்வு என்றும் பேர் வைக்கப்படும்.

பின்பு புறூதத்தை ருதூபத்துடனே சேர்த்தான். அது விரிவான தண்ணீராகி விட்டது. அந்த தண்ணீருடைய குவ்வத்தாகிறது பலக்குல் அக்ஸாவாகிய அர்ஷுடைய ஜிஸ்முலே மூன்று தலங்களிலே வெளியானது. அதில் முந்தினதுக்கு ஷற்தான் என்றும், இரண்டாவதுக்கு அக்றபு என்றும் மூன்றாவதுக்கு ஹூது என்றும் சொல்லப்படும். ஆகக் கூடியது பன்னிரண்டு புறூஜாக இருக்கும்.

பின்பு அல்லாஹுத்தஆலா அதுகளுடைய ஸிபாத்துகளை பலனாக்கி தர்தீப்பாக்கி வைத்தபோது ஆலமடங்கலும் ஒன்றோடொன்று சேர்ந்து அடப்பாக வெளியாச்சுது. அல்லாஹுத்தஆலா அதைப் பிரித்தான். பின்பு வானமாகிறது உயர்த்தியை எடுத்துக் கொண்டு புகை போலாகிவிட்டது.

வானத்துக்கும், பூமிக்கும் இடையிலே பூமிக்கு அடுத்ததாக தண்ணீருடைய குர்றத்தை ஆக்கினான். அந்த தண்ணீருடைய தபீஅத்தாகிறது பாரிதும் றுத்தபுமாக இருக்கும். ஆனதால் அது ஏறுகிறதற்கு சக்தி பெற மாட்டாது. மேலும் பூமியளவிலே இறங்கிவிடும். பூமியாகிறது யபூஸத்தெனும் வறட்சியாக இருப்பதால் தண்ணீரைப் பிடித்துக் கொண்டது.

பின்பு நெருப்புடைய குர்றத்தை வானத்துக்கு அடுத்ததாக ஆக்கினான். அந்த நெருப்புடைய தபீஅத்தாகிறது ஹாறும்யாபிஸும் சூடும் வறட்சியுமாக இருப்பதால் அது பூமி அளவிலே இறங்குகிறதற்கு சக்திப் பெறமாட்டாது. மேலும், வானத்தளவில் ஏறிவிடும். வானம் அதைப் பிடித்துக் கொண்டது.

அந்த நெருப்புக்கும் தண்ணீருக்கும் இடையிலே காற்றுடைய குர்றத்தை நெருப்புடைய ஹறாரத்தில் நின்றும் தண்ணீருடைய றுதூபத்தில் நின்றும் வெளிப்படுத்தினான். அந்த காற்றாகிறது நெருப்பிடத்தில் போய்ச்சேரவும் தண்ணீரிடத்தில் போய் சேரவும் சக்தி பெறமாட்டாது. ஏனென்றால், நெருப்பிடத்தில் காற்று சேருகிறதற்கு நெருப்புடைய ஹறாறத்து நாடினால் தண்ணீருடைய றுதூபத்தாகிறது போய் சேரவிடாமல் விலகிக் கொள்ளும். அல்லது தண்ணீரிடத்தில் காற்று சேருகிறதற்கு தண்ணீருடைய றுதூபத்து நாடினால் நெருப்புடைய ஹறாறத்தாகிறது போய் சேரவிடாமல் விலகிக் கொள்ளும். இந்த இரண்டும் விலகிக்

கொண்டிருக்கும் காலமெல்லாம் காற்றாகிறது தண்ணீருக்கும் நெருப்புக்கும் இடையிலேயே ஒழிய தரிபடமாட்டாது.

ஆனால், மனிதர்களைப் போல் ஹயவானாத்துகளில் சிலது தண்ணீருக்கு மேலே நடக்குகிறதற்கு சக்தி இழந்தபடியால் தண்ணீருக்குள் மூழ்கி இந்த பூமியில் நின்றும் சில பாகங்களை தண்ணீருக்குமேலே வெளியாக்கி வைத்திருக்கிறான். பூமியுடைய முகத்து மேலே மனிதர்களைப்போல் உள்ள ஹயவானாத்துகளை இழக்கப்படும்போது முன்னிருந்ததுபோல் தண்ணீராகிறது பூமியை அடைய வளைந்துக் கொள்ளும்.

ஆனால், வானம் மேலும் பூமி கீழுமாக இருக்கிறதுடன் இந்த இரண்டுக்கும் இடையில் நாலு அனாஸிரும் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டும் வானங்கள் சுத்திக் கொண்டும் இருக்கிறபோது அந்தந்த றுக்னுகளுடைய தேட்டறவின்படிக்கு மஃனவிய்யாகிய நிக்காஹு - சேர்க்கையை அவைகளில் ஆண்டவன் நடத்தின சபபைக் கொண்டு பூமியில் ஹயவானாத்து நபாதாத்து ஜமாதாத்து என்ற மூன்று பிள்ளைகளும் வெளியாகிவிட்டது.

அப்பால் பூமியுடைய இராஜாங்கத்தை ஒப்புக்கொண்டு அதை மேலோங்கச் செய்யவேண்டுமென்று ஆண்டவன் நாடினபோது வானத்தின் சுத்துதலுடைய ஹுக்குமை ஸுன்புலாவுடைய புறூஜளவில் சேர்த்து இன்சான் என்ற கலீபாவை வெளியாகச் செய்தான்.

அப்பால் இன்சானுடைய சூறத்தை ரஹ்மானுடைய சூறத்தில் படைத்துச் சரியான குவ்வத்தையும் ஹறக்கத்தையும் கொடுத்து அந்த நாலு அனாஸிருடைய ஆலம் துன்யாவில் இன்சானுக்கு ஏழாயிரம் வருடம் விலாயத்தையும் கொடுத்து துன்யாவுடைய கோர்வையை நீதமாக நடத்த வேண்டுமென்று ஆண்டவன் நாடி துன்யாவிலே ஷற்வுடைய ஹுக்குமை அத்லு நீதத்துடைய மீஸானாக ஆக்கினான். அந்த அத்லுடைய மீஸானைக் கொண்டு அன்பியாக்கள் அவ்லியாக்கள் தான் அமல் செய்து வந்தார்கள். மற்றவர்கள் அத்லுடைய மீஸானைக் கொண்டு அமல் செய்யாமல் பாவம் செய்து குலைபாதகங்களாகிய அனியாயங்களைச் செய்து அத்லுடைய மீஸானை கடந்து விட்டார்கள்.

அவர்களுடைய அநியாயத்துக்குத் தகுந்த தண்டனை செய்யவேண்டுமென்று ஆண்டவன் நாடுவானேயானால் வானத்தின் சுத்துதலுடைய ஹுக்குமை மீஸானுடைய கோர்வை குலைந்து கியாமத்துடைய காலமாக ஆகிவிடும். அந்த கியாமத்துடைய காலமாகிறது மீஸானுடைய புறூஜில் சுத்தியாடுவதற்காக வேண்டி அந்த நாளை நீதத்துடைய நாளென்றுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனதால் அந்த நாளையில் ஒரு நப்சும் மற்ற நப்சுகளுக்கு அநியாயம் செய்ய மாட்டாது. ஏனென்றால், அல்லாஹுத்தஆலா குர்ஆனிலே கியாமத்து நாளைக் குறித்து:

வனலவுல் மவாஸீனல் கிஸ்த லியவ்மில் கியாமத்தி பலாதுல்லமு நப்சுன் ஷய்அன் வஇன்கான மித்கால ஹப்பத்தின் மின்கற்த்தலின் அதைனா பிஹா வக்பா பினாஹாஸிபீன் - கியாமத்துடைய நாளைக்காக நீதத்தையுடைய தராசுகளை நாம் வைத்திருக்கிறோம். அப்போது ஒரு நப்சுக்கும் ஒரு நலவைக் குறைக்கிறது கொண்டும் ஒரு பாவத்தை அதிகமாக்குகிறது கொண்டும் அநியாயம் செய்யப்படாது. அவன் செய்த அமல்களில் நின்றும் ஒரு

கடுகளவாகயிருந்தாலும் அதையும் நாம் கொண்டு வந்து நிறுத்து அதற்குத் தகுந்த கூலியைக் கொடுப்போம். அந்நாளையிலே கேள்வி கணக்கு கேட்பதற்கு நாமே போதுமென்று திருவுளமானான்.

ஆனால் இன்சான் அடங்களில் நின்றும் ஒவ்வொரு மனிதனைக் கொண்டு சொந்தமாக்கப்பட்ட கியாமத்து என்னும் ஒடுக்கத்து நாளாகிறது இரண்டு வகையாக இருக்கும். முந்தினதாகிறது, கியாமத்துஸ்ஸுஃவுறா என்னும் சிறிய கியாமத்து நாளாக இருக்கும். அதாவது இந்த துன்யா என்கிற ஆலமாகிறது அதனளவிலே அல்லாஹுத்தஆலாவாகிறவன் இன்சானுடைய வாஸித்தாவைக் கொண்டு அந்த துன்யா அளவிலே நோட்டமிடும்போது அந்த நோட்டத்துக்கு மஹல்லு எனும் தானமாகயிருக்கிற மனிதனில் நின்றும் ஆண்டவனுடைய நோட்டம் திரும்பி விடுமேயானால், அந்த இன்சானாகிறவன் துன்யாவை விட்டும் மறைந்துபோய் விடுவான். அதுதான் அவனுடைய சிறிய கியாமத்து நாளாக இருக்கும்.

அப்போது அந்த ஒருவனுடைய அனுபோகம் துன்யாவிலிருக்க மாட்டாது. அதுபோல் பெரிய கியாமத்;து நாளாகிறது இந்த துன்யா என்கிற ஆலத்தில் ஆண்டவனுடைய நோட்டத்துக்கு மஹல்லு என்னும் தானங்களாக இருக்கிற எல்லா மனிதர்களையும் துன்யாவையும் விட்டு ஆண்டவனுடைய நோட்டம் திரும்பி விடுகிறதாக இருக்கும். அப்போது மனிதர்களும் துன்யாவும் அழிந்து பனாவாகிப் போகும். மேலும் அவர்களுடைய ஹக்கில் துன்யாவாகிறது மறைவான ஆலமாக ஆகிவிடும். அவர்களும் ஆண்டவனுடைய தாத்தில் மாய்ந்து போய் விடுவார்கள்.

அப்போது அவர்களாகிறவர்கள் பற்ஸகு மலக்கூத்து, ஜபறூத்து, லாஹூூத்து போன்ற எந்த ஆலத்தில் ஆண்டவனுடைய நோட்டத்துக்கு மஹல்லாக இருக்கிறார்களோ அந்த ஆலத்தில் அவர்களுடைய அனுபோகம் இருக்கும். அப்படி இருக்கும்போது அந்த ஆலம்களையும் விட்டு ஆண்டவனுடைய நோட்டம் திரும்பும் போது எல்லா ஆலம்களும் அதிலுள்ள மனிதர்களும் அல்லாஹ்வுடைய தாத்திலே பனா அழிந்து மாய்ந்துபோய் அல்லாஹ்வுடைய தாத்தைக் கொண்டு பாகி – தரிபட்டதாக இருக்கும்போது தாத்தென்கிற சூரியனாகிறது இன்சான் என்கிற மங்ரிப் - அடையும் தானத்தில் நின்றும் துலூவு – உதயமாகி எல்லா ஆலம்களிலேயும் சுத்திக் கொண்டு தாத் என்கிற மக்ரிபில் போய் மறைந்து விடும். அப்போது நிறப்பமான வஹ்தத்து ஒன்றாகுதல் வெளியாகும். கத்றத்து பலதாகுதல் முறிந்துபோகும்.

அப்போது அல்லாஹுத்தஆலா லிமனில் முல்க்குல் யவ்ம லில்லாஹில் வாஹித்தில் கஹ்ஹாற் - இந்த கியாமத்து என்னும் முடிவு நாளையிலே ராஜாங்கம் யாருக்கென்று கேட்டு எல்லாரையும் அடக்கியாள்கிற தனித்த ஒருவனான அல்லாஹ்வுக்காக இருக்கும் என்றுதானே ஜவாபு சொல்லிக் கொள்வான்.

இன்னமும் குல்லு மன் அலைஹா பானின் வயப்கா வஜ்ஹு றப்பிக்க துல்ஜலாலி வல்இக்றாம் - பூமியிலுள்ள வஸ்துவு அடங்கலும் பனாவாகி – அழிந்துபோகும்.

வலுப்பத்தையும் சங்கையையும் உடைய நம்முடைய றப்பாகிய நாயனுடைய தாத்து என்னும் உள்ளமை மட்டும் தரிபடும் என்று திருவுளமானான்.

ஆனால் அவனுடைய தாத்தைக் கொண்டு என்றென்றும் தரிபாடாகிய நாயகன் தன்னை வலுப்பமாக்கித் தன்னுடைய தாத்தைக் கொண்டு தரிப்பட்டவனாக இருக்கும். ஹாலுலே எல்லா ஆலம்களையும், ஒரு நொடிநேரத்தில் அழித்துப் பார்த்ததுபோல் அவைகளை ஒரு நொடிநேரத்தில் உண்டாக்கியும் பார்ப்பான்.

அதுபோல் அவனுடைய தாத்துடைய மள்ஹறாகிய இன்சான் காமில் என்ற இன்சானாகிறவனும் அவனுடைய உஜூதில் றுபூபிய்யத் என்னும் நாயகத்தனம் வெளியாகி இருக்கிற ஹாலிலே கியாமத்துஸ்ஸுஃவுறா என்னும் சிறிய கியாமத்துடைய பகறத்தையும் தன்னுடைய ஹால் ஹயாத்துலேயே வெளியாக்கிப் பார்ப்பான்.

ஏனென்றால், ஹக்கீகத்துன் முகம்மதிய்யா என்னும் றூஹுல் அஃலமென்ற நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கியாமத்துஸ்ஸுஃவுறா, கியாமத்துல் குப்றா என்ற இரண்டு கியாமத்துடைய பகரத்தையும் துன்யாவிலே வெளியாக்கிக் காட்டி அதனுடைய அடையாளத்தையும் வெளியாக்கிச் சொல்லி இருப்பதற்காக வேண்டி இன்சான் காமில் என்னும் நிறப்பமான இன்சான் அடங்கலும் அதைக் கண்காட்சியாக கண்டிருப்பதுடன் மற்றவர்களில் அதனுடைய பகரத்தை வெளியாக்கியும் காட்டி இருக்கின்றார்கள்.

ஆனதால், அறிந்து கொள்! திடனாக கியாமத்து நாள் என்கிறதும் பற்ஸகு என்கிறதும் ஆகிறத்து என்கிறதும் துன்யா என்கிறதும் ஒரே உள்ளமையில் நின்றும் வெளிப்பட்டதாக இருக்கும். அதில் சிலதை துன்யாவாகவும் மற்றதை ஆகிறத்தாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அதுபோல் ஆலமடங்கலும் பல பல கண்ணாடிகளைப் போல் இருக்கும். அந்த கண்ணாடிகளில் வெளியாகியிருந்த உஜூதாகிறது ஆண்டவனுடைய தாத்துடைய மள்ஹறாகிய இன்சானுடைய உஜூதாயிருக்கும் அந்த கண்ணாடிகளாகிய ஆலமடங்கலும் அழிந்து போகிறது கொண்டு அதில் வெளியாகிருக்கிற உஜூதும் அழிந்து போகமாட்டாது.

மேலும் இன்சான் காமிலில் எல்லாம் வெளியாகி போகமாட்டாது. மேலும் இன்சான் காமிலில் எல்லாம் வெளியாகி மறைந்துவிடும். இன்சான் காமிலல்லாத மற்றவர்களில் எல்லாம் மறைவாகியிருக்கும். அதளவில் தெண்டித்துக் கண்காட்சியாக கண்டு கொள்ளாதவரையில் இன்சான் காமில் என்ற நிறப்பமான இன்சானாக ஆகமாட்டான்.

அதுகொண்டு ஈமானாவது கொள்ள வேண்டுமென்றுதான் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இடத்தில் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வந்து கியாமத்துடைய அடையாளத்தைத் தொட்டும் கேட்டு மற்றவர்களுக்கு அது கொண்டு உணர்ச்சி உண்டாக்கினார்கள்.

அதனுடைய அடையாளத்தைத் தொட்டும் அன்தலிதல் அமத்து றப்பத்தஹா – வெள்ளாட்டி நாச்சியாளைப் பெறுகிறதாக இருக்கும் என்றும், வஅன்தறல் ஹுபாத்தல் வுறாத்தல்

ஆலத்தறிஆ அஷ்;hயி யத்தத்தாவலூன பில புன்யானி - இன்னமும் காலுக்குச் செருப்பில்லாதவனையும் உடுமானமில்லாதவனையும் வறுமையானவனையும் ஆடுமேய்க்கிறவனையும் கட்டுமானங்களிலே நீளமாக்குகிறவனாக காண்கிறதாக இருக்கும் என்றும் திருவுளமானார்கள்.

ஆனால் இந்த ஹதீதுடைய மானாவவும் கருத்தையுமே நாயகம் அப்துல கரீமுல் ஜியலி ரலியல்லாஹு அன்ஹு தங்களுடைய இன்சான் காமில் என்னும் கிதாபில் சொல்கிறார்கள்: அறிந்து கொள்! இன்சானுடைய தாத்தாகிய உள்ளமையில் நின்றும் ஆண்டவனுடைய றுபூபிய்யத்தென்னும் நாயகத்தனம் வெளியாகுகிறதாவது வெள்ளாட்டி நாச்சியாளைப் பெறுகிறதாக இருக்கும் என்றும், இன்சானுடைய தாத்துதான் ஹியல் அமத்து - அதுதான் வெள்ளாட்டியாக இருக்கும். அதில் நின்றும் நாயகத்தனம் வெளியாகிறதாவது நாச்சியாளைப் பெறுகிறதாக இருக்கும்.

ஏனென்றால் ஹக்கு ஸுப்ஹானஹுவத்தஆலா ஹுலூலு இத்திஹாது - இறங்குதல் நேர்ப்பட்டிருக்குதல் என்ற நிலைமையன்றியே இன்சானுடைய உஜூதிலே மறைவாக இருக்கிறான். அதில் நின்றும் வெளியாவானேயானால் இன்சானாகிறவன் ஹக்குடைய சிபத்துக்குத் தாளாலே மாய்ந்து போய்விடுவான். அப்போது மறைவாக இருந்த ஹக்குதான் இன்சானாக வெளியாகிவிடுவான்.

அதற்காகத்தான் அல்லாஹுத்தஆலா ஹதீது குத்ஸியிலே, லாயஸாலு அப்தீ யத்த கர்றபு இலய்ய பின்ன வாபிலி ஹத்தா உஹிப்புஹு பஇதா இஹ்பப்த்துஹு குன்து ஸம்அஹு வபஸறஹு வயதஹு வரிஜ்லஹு என்று திருவுளமானான். அதாவது என்னுடைய அடிமையாகிறவன் என்னளவில் சுன்னத்தான அமல்களைக் கொண்டு முடுகுதல் பெறுகிறவனாக நீங்காமல் ஆகிவிடுவான். அவனை நான் உகக்கிறவரையிலும் (அவனை) நான் உகந்து விடுவேனேயானால் அந்த அடிமை கேட்கிற கேள்வியும் பார்க்கிற பார்வையும், பிடிக்கிற கையும் நடக்கிற காலும் நானாக ஆகிவிடுவேன் என்றும்

இன்னமும் ஹதீது குத்துஸிய்யில் லாயஸாலு அப்தீ யத்தகர்றபு இலய்ய பில் பறாயிலி ஹத்தா உஹிப்புஹு பஇதா அஹ்பப்த்துஹு குன்துஹு என்றும் திருவுளமானான். என்னுடைய அடிமை என்னளவில் பர்ளான அமல்களைக் கொண்டு முடுகுதல் பெற்றவனாக நீங்காமல் ஆகிவிடுவான். அவனை நான் உகக்கிற வரையிலும் அவனை நான் உகந்து விடுவேனாயானால் அந்த அடிமையாக நான் ஆகிவிடுவேன் என்றும் திருவுளமானான்.

அப்படி ஒருவனில் ஆண்டவன் வெளியாகிவிடுவது தான் அந்த அடிமையுடைய கியாமத்துல்குப்றா கியாமத்துஸ்ஸுவுறா உடைய அடையாளம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்போது அந்த அடிமையாகிறவன் எல்லா ஆலம்களிலேயும் தஸர்ருபு செய்யிறது கொண்டு தமக்குனென்னும் தரிபாட்டை உடையவனாக ஆகிவிடுகிறான்.

அப்பால் செருப்பில்லாதவன் என்று சொன்னதாகிறது ஆரிபானவன் அஸ்மாக்களை விட்டும் தனிக்குறதாக இருக்கும். உடுமானமில்லாதவன் என்று சொன்னதாகிறது ஆரிபானவன்

சிபாத்துகளை விட்டும் தனிக்குறதாக இருக்கும். ஆடுமேய்க்கிறவன் என்று சொன்னதாகிறது ஆரிபானவன் பூர்வீகமான ஒளிவுகளை தாயிமாக நோட்டமிடுகிறதாக இருக்கும்.

கட்டடங்களை நீளமாக்குவார்கள் என்று சொன்னதாகிறது மஜ்தூபாகிய ஆரிபூன்களாகிறவர்கள் இலாஹிய்யத்தாகிய அறிவுகள் அளவிலே மேலிடுகிறதாக இருக்கும் என்றும் சொல்லி, இதுதான் ஒவ்வொரு மனிதனுடைய சொந்தமான கியாமத்துடைய அடையாளமாக இருக்கும் என்று இன்சான் காமிலில் எழுதியிருக்கிறார்கள்.

ஆனதால் இன்சான் காமிலாகிறவன் இலாஹிய்யத்தாகிய ஹக்காயிக்கு – அந்தரங்கமடங்கலுக்கும் நேர்ப்பட்டவனாகவும் ஆலமடங்கலுக்கும் ஒப்பானவனாகவும் இருப்பதால் இலாஹிய்யத்தாகிய கருமங்களடங்கலும் ஒவ்வொரு இன்சான் அடங்கலிலேயும் நடந்துதான் தீரும். வல்லாஹு அஃலம்.

ஈமானுடைய எழுபத்திட்டு பணர்களில் நின்றும் ஆறாவது பணறாகிறது: கலா கத்றைக் கொண்டு ஈமான் கொள்கிறதாக இருக்கும். வஃலம். அறிந்து கொள்! அல்லாஹு ஸுப்ஹானஹுவத் தஆலாவாகிறவன் தன் நப்சையும் தன்னுடைய மக்லூக்காத்துகளையும் தன்னுடைய கத்தீமென்னும் பூர்வீகமாகிய இல்மைக் கொண்டு அறிந்தவனாக இருக்கும். என்கிலும் அவன் பூர்வீகமாக இருக்கிறது கொண்டு அவனுடைய மக்லூக்காத்துகளுடைய வுஜூதும் பூர்வீகமானதில்லை. மேலும் புதுசானதாக இருக்கும்.

அதற்காகத்தான் தன்னுடைய மக்லூகாத்துகளை படைத்து வெளிப்படுத்துகிற வக்த்தையும் ஸமானையும் இக்த்திலாப் என்னும் விதர்ப்பமாக ஆக்கி வைத்திருக்கிறான். அந்த நேரமும் காலமும் இக்திலாபாகயிருப்பதற்காகத்தான் அவனுடைய அடியார்கள் அடங்கலும் அவனுடைய கலா கத்றை அறிகிறதை விட்டும் மாட்டாங்கியாகி விட்டார்கள்.

மேலும் நபிமார்கள் உள்பட அவனுடைய கலா கத்றை அறியாமலிருக்க வேண்டுமென்பதுதான் ஆண்டவனுடைய நாட்டமாயிருக்கும். அப்படி இருக்க உஸைறு நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆண்டவனுடைய களா கத்றை அறிய வேண்டுமென்று கேட்டபோது உடனே ஹக்கிடத்தில் நின்றும் லஇன்லம் தன் தஹி லஅம்ஹு வன்ன இஸ்மக்க அன்த்தீவானின்னுபுவ்வத்தி – நீர் கலா கத்றை அறிகிறதை விட்டும் விலகிக் கொள்ளவில்லையானால் உம்முடைய பெயரை நுபுவ்வத்துடைய பட்டோலையில் நின்றும் அழித்துப் போடுவேன் என்று ஜவாபு வந்தது.

அதுபோல் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி லய்ஸ லக்க மினல் அம்ரி ஷய்உன் - உமக்கு யாதொரு காரியமும் கிடையாது என்றும், இன்னக்க லாதஹ்த்தீ மன் அஹ்பப்த்த – நீர் உகந்தவர்களை நேர்வழி காட்ட மாட்டீரென்றும், மாகுன்த தத்ரீ மல்கித்தாபு வலல் ஈமானு – என்னுடைய கல்குகளின் பேரில் எழுதப்பட்டிருக்கிற சீதேவித்தனத்தையும் மூதேவித் தனத்தையும் இன்னும், அவர்களுடைய ஈமான் என்னும் முடுகுதலையும் நீர் அறிந்தவனாக ஆகியிருக்கவில்லை என்றும் அல்லாஹுத்தஆலா திருவுளமாயிருக்கிறான்.

அதற்காகத்தான் அன்பியாக்கள், அவ்லியாக்கள் அடங்கலும் ஆண்டவனுடைய கலா கத்றை அறிகிற விஷயத்தில் தட்டளிந்தவர்களாக ஆகிவிட்டார்கள். மேலும் அவனுடைய அடியார்களில் நின்றும் யாருமே அறியக்கூடாதென்பதற்காகவே அவன் அதை மறைத்து வைத்திருக்கிறான்.

ஏனென்றால் அவனுடைய அடியார்களில் நின்றும் யாராவது அறிந்துவிடுவார்களானால் அவனுடைய கற்பனை இன்னதுதான் என்று தெரிந்துக் கொள்வதுடன் அவனுடைய குத்றத்து என்னும் சிபாத்துடைய  தகுதியை மட்டுப் படுத்திப்போடுவார்கள். அப்போது அவனும் அவனுடைய சிபாத்துகளும் அவர்களுடைய இல்மில் இஸ்திஹாவெனும் தீர்ச்சையாக ஆகிவிடும்.

அப்படி தீர்ச்சையாக ஆகாமலிருப்பதற்காகவே அவனுடைய மக்லூகாத்துகளுடைய உஜூதை தீர்ச்சை இழந்த அதம் மஹ்லு – கலப்பற்ற இல்லாமையில் நின்றும் அவனுடைய குத்றத்தைக் கொண்டு வெளிப்படுத்தினான். அதுவேத் தவிர அவனுடைய உஜூது மஹ்லாகிய கலப்பற்ற உள்ளமையில் நின்றும் அவர்களை வெளிப்படுத்தவில்லை.

அப்படி பூர்வீகமாகிய உள்ளமையில் நின்றும் மக்லூக்காத்துகளை வெளிப்படு:த்தினான் என்று சொன்னால் அவனுடைய பூர்வீகத்தைக் கொண்டு மக்லூக்காத்து அடங்கலும் பூர்வீகமானதென்று சொல்ல வேண்டும். அப்படி இன்சான் காமிலென்னும் கிதாபில் சொல்லவில்லை. மேலும், புதுசு புதுசாக இல்லாமை என்னும் திரையில் நின்றும் வெளிப்படுத்துகிறான் என்று சொல்கிறார்கள்.

இதுவிசயத்தில், செய்குல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு கிலாபு உண்டும். வல்லாஹு அஃலம். அல்லா ரெம்பவும் அறிந்தவன். இன்னமும் மக்லூக்காத்துகளில் நின்றும் சிலதாவது அவனுடைய களாகத்ரை அறிந்து இருக்குமென்று சொல்லும் விசயத்தில் அவனுடைய மக்லூக்காத்துகள் அடங்கலும் அவனுடைய களாகத்ரில் நின்றும் ஹைறு என்னும் நலவுக்கு வெளிப்படுவதுபோல் ஷர்று என்னும் தீங்குக்கு வழிப்பட்டிருக்கிறதென்றும் சொல்லமுடியாது. அத்துடன் அவனுடைய மக்லூகாத்துகள் அடங்கலும் அச்சம் தீர்ந்ததாகவும் ஆகிவிடும்.

அப்படி எல்லாம் அச்சம் தீர்ந்து போகாமலிருப்பதற்காகத் தான் அவனுடைய களாகத்ரை கைறைக் கொண்டும், ஷர்றைக் கொண்டும் கற்பித்து அதைத் தட்டிக் கொள்ளக் கூடாமல் அது உண்டாகிற நேரத்தையும் அவனுடைய மக்லூகாத்துகளடங்கலுக்கும் மறைந்து அதைக் கொண்டு அவனுடைய மக்லூக்காத்தை வசப்படுத்திக் கொண்டிருக்கிறான்.

அதுவும் அப்படியிருக்க அவனுடைய லௌஹுல் மஹ்பூல் உடன் உம்முல் கிதாபில் எழுதப்பட்டிருப்பதையும் இரண்டு வகையாக ஆக்கியிருக்கிறான். அதில் ஒரு வகையாகிறது தகய்யுறென்னும் பேதகத்துக்கும் தப்த்தீல் என்னும் புரட்டுதலுக்கும் இடம்பாடாகாத இலாஹிய்யத்தாகிய சிபாத்துகளுடைய கருமங்களாக இருக்கும்.

அதில் மற்றவைகளாகிறது தகய்யுர் என்னும் பேதகத்துக்கும் தப்த்தீல் என்னும் பிரட்டுதலுக்கும் இடம்பாடாகிய ஆலத்துடைய தேட்டறவாகிய மக்லூக்காத்துகளுடைய கருமங்களாயிருக்கும். இப்படி இந்த இரண்டு விதமாக இருக்கிறதுடன் ஆண்டவனுடைய கலாவாகிறது மக்லூக்காத்துகளுடைய அஹ்வாலுகளைக் கொண்டு சொந்தமாக்கப்பட்ட மூடலான ஹுக்குமாக இருக்கும். கத்றாகிறது மக்லூகாத்துகளுடைய அஹ்வாலுகளைக் கொண்டு சொந்தமாக்கப்பட்ட துலாம்பரமான ஹுக்குமாயிருக்கும்.

அதாவது மனிதர்கள் அடங்கலும் மவ்த்தாகிவிடுவார்கள் என்பது இன்னநேரமென்று அறியாத்ததால் கலாவாக இருக்கும். இன்ன மனிதன் இன்ன நஸல் பிடித்து இன்ன நேரத்திலே மவ்த்தாகி விட்டான் என்பது கலாவும் கத்றுமாக இருக்கும். மேலும் மக்லூகாத்துகளின் லுஹூறு வெளியாகிற காலமும் நேரமும் விதர்ப்பமாகிறதற்காக வேண்டி மக்லூகாத்துகளுடைய கலா கத்றிலும் தங்பீறு தப்த்தீலு உண்டாகுவதற்கு இடம்பாடாகிவிட்டது. அப்படி இடம்பாடில்லாதுபோனால் நபிமார்களையும், அவ்லியாக்களையும் உலமாக்களையும் அனுப்ப வேண்டிய தேவை வரமாட்டாது.

அந்த நபிமார்களும் அவ்லியாக்களும் மனிதர்களை நேர்வழியில் அழைக்கிறதும் பாவிகளைத் தொட்டும், மன்றாடி கரை சேர்க்கிறதும் அதாபைத் தட்டும்படி துஆ கேட்கிறதும் தேவையில்லாமல் போய்விடும்.

அப்படித் தேவைஇல்லாமல் போய்விடுவதும் அவனுடைய கலா கத்றை அறிந்து அச்சம் தீர்ந்துபோய் விடுமானால் நன்மை செய்தவர்களுக்கு தவாபும் தீமை செய்தவர்களுக்கு அதாபும் கொடுக்கிறது நீதமாகது என்றுதான் சொல்வான். ஏனென்றால் இரண்டும் அவனுடைய கற்பனையாக இருப்பதற்காக வேண்டி என்றும் சொல்வான்.

ஆனால், அப்படி அச்சம் தீர்ந்து போய் விடுவதையும் ஆண்டவனுடைய கலா கத்றைக் கொண்டு பொருந்தி தலைச்சாய்த்து திருப்தி அடைந்து இனிமேல் தெண்டிக்க வேண்டியதில்லை என்று ஆகிவிடுவதையும் எந்த நபிக்காவது எந்த வலிக்காவது ஆண்டவன் துன்யாவில் கற்பிக்கவில்லை.

மேலும் ஆகிறத்தில் கற்பித்திருக்கிறான். இன்னமும் இந்த துன்யாவின் ஆண்டவனுடைய நாட்டத்தில் மூதேவி என்று கற்பிக்கப்பட்டவனை இனிமேல் சீதேவியாக்க முடியாதென்று இருக்குமேயானால் நபி நாயகத்தை நோக்கி இன்னக்க லதஹ்த்தீ இலாஸிறாத்தின் முஸ்தகீம் - முஹம்மதே! திடனாக நீர் என்னுடைய அடியார்களைச் சரியான செவ்வுற்ற பாதையில் நேர்வழி காட்டுவீர் என்று திருவுளமாக மாட்டான். அவன் அப்படிச் செய்யாமலிருக்கவில்லை.

மேலும், ஒரு ஆயுத்தில் நீர் நேர்வழிகாட்ட மாட்டீர் என்று சொன்னான். இந்த ஆயத்தில் நீர் நேர்வழி காட்டுவீர் என்று சொல்கிறான். ஆனதால், அவனுடைய கலா கத்றைக் கொண்டு எவ்விதம் அவனுடைய ஹுக்குமுகளை மாற்றுகிறான். தரிபடுத்தி வைக்கிறான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டியது.

மேலும் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அத்ஊஇலல்லாஹி அலா பஸீறத்தின் - அல்லாஹுத்தஆலா அளவிலே மனிதர்களை என்னுடைய அகப்பார்வையின் பேரில் அழைக்குறேன் என்று சொன்னார்கள்.

ஏனென்றால், ஆண்டவன் அவர்களுக்கு ஒரு சமயத்தில் சகலதையும் சொந்தப்படுத்திக் கொடுத்து முஹம்மதே பத்ரில் நீர் எறிந்த தில் நீர் எறியவில்லை. என்கிலும், உம்முடைய நாயன் எறிந்தான் என்று சொன்னார். ஆனதால், நீர் நீராக இருக்கிறபோது உம்மால் ஒன்றுமில்லை. நீர் நாமாக இருக்கிறபோது எல்லாம் உம்மால் முடியுமென்றதாக இருக்கும்.

ஆனால், ஆண்டவனுடைய நாட்டத்தில் மூதேவி என்று கற்பிக்கப்பட்டவனை மூதேவியாக ஆக்கிப் போடுகிறதும், துன்யாவில் ஆண்டவனுக்கு இயன்ற காரியமாக இருப்பதற்காகத்தான் நபி நாயகத்தை ஆண்டவனுடைய உத்திரவைக் கொண்டு ஷபாஅத்து –சிபாரிசு செய்யும்படி ஏவி இருக்கிறான்.

அதற்காகத்தான், நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் துன்யாவில் முலில்லு என்ற இஸ்முடைய மள்ஹறில் இருப்பவனை ஹாதீ என்ற இஸ்முடைய மள்ஹறளவில் அழைத்து நேர்வழி காட்டினதுபோல் ஆகிறத்திலும் பாவிகளை மன்னிக்கும்படி ஷபாஅத்துச் செய்கிறார்கள்.

ஏனென்றால், மூதேவியைச் சீதேவி ஆக்கி விடுகிறது. ஆண்டவனுடைய கலா இரண்டில் நின்றும் பேதகமாகாத கலாவாகிய முஹ்க்கமான – கெட்டியான கலாவில் நின்றும் உள்ளதில்லை. மேலும் பேதகமாகிற கலாவையே முப்றமான களாவில் நின்றுமுள்ளதாக இருக்குமென்று நாயகம் அறிந்திருப்பதற்காகத்தான் துன்யாவில் ஒரு மனிதனை நேர்வழி காட்டுகிற விசயத்தில் தெண்டிக்க வேண்டிய மட்டும் தெண்டித்தார்கள்.

ஆனால் நாமும் நம்மைப் போல் உள்ளவர்களும் ஆண்டவனுடைய கலாவும் கத்றும் நம்மில் எவ்விதம் நடக்குமென்று அறியாதிருப்பதுடன் அதனளவில் யாதொரு தெண்டிப்புமில்லாமல் அச்சம் தீர்ந்தவர்களாக இருக்கிறோம். அது அப்படி இருக்கக் கூடாது. ஏனென்றால், ஆண்டவனுடைய தாத்துடைய மள்ஹறாகிய இன்சான் காமில் என்னும் முஹக்கிக்கூன்களைத் தவிர மற்றவர்களெல்லாம் அச்சம் தீர்ந்தவர்களாக ஆகமுடியாதென்று அறிந்துக் கொள்ள வேண்டியது

மேலும், அவனுடைய தாத்துடைய மள்ஹறாகிய இன்சான் காமில்தான் அச்சம். தீர்ந்தவர்கள் என்று உணர்ந்து கொள்வதுடன் துன்யாவில் ஆண்டவனுடைய கலா கத்றின்படிதான் நடக்குதென்றும் மனிதர்களுக்கு யாதொரு குத்றத்தும் இக்தியாரும் கிடையாதென்றும் சொல்லி எல்லாம் ஆண்டவனுடைய செய்கைதான் என்றும் சொல்கிற கத்ரிய்யா என்ற கூட்டத்தார்கள் அச்சம் தீர்ந்து போய் இருக்கிறார்கள் என்றும் இன்னமும் எல்லாம் மனிதர்களுடைய செய்கைதான் ஆண்டவனுடைய களா கத்றைக் கொண்டு யாதொன்றும் நடக்கவில்லை என்றுச் சொல்கிற ஜப்ரிய்யாக்கள் என்ற கூட்டத்தார்கள் வழிகெட்டுப் போயிருக்கிறார்கள் என்றும் அறிந்து கொள்.

மேலும் ஆண்டவனுடைய களா கத்றைக் கொண்டு சகல காரியங்களையும் நடத்துவதுடன் மக்லூகாத்துகளுடைய கொள்கைகளும் விதற்பமாகிறது கொண்டு அவனுடைய களா கத்றும் விதற்பமாகுமென்று அறிந்து கொள்வதுடன், அவனுடைய களாகத்ரைக் கொண்டு பொருந்தி அதெப்படி இருந்தாலும் இருக்குதென்று தன்னுடைய நிலைமையை இன்னதுதான் என்று விளங்காமலும் தெண்டிக்காமலும் துன்யாவில் யாருமே இருக்கக் கூடாதென்றும் அறிந்துக் கொள்வாயாகவும்.

ஆனால், நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதைப் பொருந்தி சந்தோஷமடையும்படிச் சொன்ன ஹதீதுகளை எல்லாம் ஆகிறத்தைக் கொண்டுச் சொந்தமானது என்றுதான் கருத்து வைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஹதீதாவது இஃமலூ பகுல்லூன் முயஸ்ஸருன் லிமா குலிக்க லஹு - நீங்கள் அமல் செய்யுங்கள். உங்களில் யாரை எதற்காக - சொர்க்கத்துக்காக அல்லது நரகத்துக்காக படைக்கப்பட்டதோ அந்த சொர்க்கம் அல்லது நரகம் அவர்களுக்கு இலேசாக்கப்பட்டதாக இருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னமும், அல்லாஹுத்தஆலா கலக்துல் கல்க ஹாஉலாயி லில்ஜன்னத்தி வலா உபாலீ வஹாஉலாயி லின்னாரி வலா உபாலீ – நான் கல்குகளைப் படைத்தேன். இரண்டு பிரிவாகப் பிரித்து ஒரு கூட்டத்தை சொர்க்கலோகத்தில் போட்டேன். அதுகொண்டு எனக்கு யாதொரு பாராட்டுதலும் இல்லை. மறுகூட்டத்தை நரகத்தில் போட்டேன். அதுகொண்டு எனக்கு யாதொரு பாராட்டுதலுமில்லை என்றும் திருவுளமாகியிருக்கிற இந்த இரண்டு ஹதீதையும் கொண்டு நாமும் திருப்தி அடைந்து இருக்கிறது, ஆகிறத்திலேயாக இருக்குமென்று அறிந்து கொள்வதுடன் அந்த ஆகிறத்துக்குப் போக முக்தி எந்த மனிதனடைய கற்பனையும் இன்னதுதான் என்று முடிந்து போகவில்லை என்றும் அறிந்து ஆனந்தமுருவாகாயகவும்.

ஈமானுடைய பணர்களில் ஏழாவது பணராகிறது:- மவ்த்துக்குப் பின் எழுப்புவதைக் கொண்டு ஈமான் கொள்கிறதாயிருக்கும். ஆனால், மவ்த்து, ஹயாத்து இந்த இரண்டுமாகிறது அஃறாலு என்னும் ஆதேயங்களாக இருக்கும். அதாவது குணத்தைப் போலே இடையில் வந்து குறுக்கிடுகுpறது ஒரு மனிதன் சிறு பிள்ளையாக இருந்து வாலிபமாகி நடுவயதாகி கிழவனாகிப் போறதுபோலே ஆனதால், இந்த நிலைமைகளாகிறது படைக்கப்பட்டதாக இருக்கும்.

மேலும், ஆரிபீன்கள் சொல்லி இருப்பதுபோல் என் ஆண்டவனே எங்களுக்கு ஹயாத்து குறுக்கிடாத ஒரு மவ்த்தையும் மவ்த்துக் குறுக்கிடா மணமான ஒரு ஹயாத்தையம் கொடுத்தருள்வாயாகவும் என்ற மவ்த்து, ஹயாத்து இரண்டுமாகிறது அஸ்லிய்யத்தாகிய மவ்த்தும் அஸ்லிய்யத்தாகிய ஹயாத்துமாக இருக்கும்.

அந்த அசலிய்யத்தாகிய ஹயாத்தாகிறது அல்லாஹுத்தஆலாதவுடைய தஜல்லிய்யாகிய தோற்றமென்னும் ஹயாத்தாக இருக்கும். அசலிய்யத்தாகிய மௌத்தாகிறது அல்லாஹுத்தஆலாவுடைய இஸ்திதாறாகி மறையுதல் என்னும் மவ்த்தாகயிருக்கும். இன்னும்

ஹக்குத்தஆலாவுடைய வெளியாகுதல் மறையுதல் என்ற இந்த இரண்டு நிலைமையுமாகிறது ஆரிபீன்களுக்கு துன்யாவிலேயே வந்து குறுக்கிட்டு அந்த இரண்டு நிலைமையையும் அனுபோகம் செய்து இருப்பதால் அவர்களுக்கு மவ்த்து என்னும் திரை அவர்களை விட்டும் நீங்கிப் போகும்.

ஆனதால் நினைவு என்னும் ஹயாத்தும் திரை என்னும் மவ்த்துமன்றியே தன்னைத்தான் கண்டுக் கொள்வதற்காக மவ்த்தைப் பெரியோர்கள் ஆசைவைப்பார்கள். மறைவில்லாமல் தன்னைத்தான் காண்பதற்கே மவ்த்து என்னும் திரையை கடந்ததற்குப் பின்னால் மவ்த்தில்லை. அவர்களுக்கு கால காலமுமே, பூரண உணர்ச்சி உண்டாகிய நேரங்களில் மவ்த்துடைய நேரமும் ஒரு நேரம்தான்.

மேலும் ஆஷிகீன்களாகிய அல்லாஹ்வுடைய முஹிப்பீன்களுக்கு இந்த வெளியாகுதல், மறையுதல் என்ற நிலைமைகள் மாறாது போனால் அவர்களுக்கு அவர்களுடைய பதவி கூடுதல், குறையுதல் என்னும் வித்தியாசம் அவர்களுக்கு தோன்றாது. மேலும் ஆஷிக்கீன்களுடைய ஆசையும் மேலிட்டு தாங்காத மையலில் மஸ்த்தாகி விடத் தெண்டிக்க மாட்டார்கள

அதற்காகத்தான் அல்லாஹுத்தஆலா அந்த திரையை நீக்கி அவனுடைய முஹிப்பீன்களை அவன் பக்கம் அழைக்கிறான். மேலும் தைக்காசாகிபு நாயகம் ஹகீகத்து மாலையில் சொல்கிறார்கள்:

ஹக்கு கல்குக்குப் பொருளாவது

ஹக்கு மெய்யாகும் கல்கு பொய்யாம்

ஹக்கும் கல்கும் தாத்தும் ஸிபாத்தும்

கல்கு  கானலைப்போலையாமே

தாத்து சிபாத்துக்கு உவமையறி

தாத்து ஹயாத்து ஸிபாத்து மவ்த்தாம்

ஹயாத்தும் மவ்த்தும்தான் ஒன்றேயாகும்

ஹக்கீகத்தில் மவ்த்து இல்லை என்றார்

மவ்த்து ஹயாத்துக்கு ம.்னா அறி

வருசை நபியுல்லாச் சொல்ப்படிக்கி

மவ்த்து ஹக்கீகத்தில் மறதியாகும்

மவ்லாதிக்ருதான் ஹயாத்தாகுமே

திக்ரு அகமியத்தில் ஹயாத்து

திக்ரு செய்தவர் ஹயாத்தானவர்

திக்ரில்லாதவர் மவ்த்தானவர்

தினமும் நினைத்தவர் வலிய்யாகுமே

அறிந்துக்கோ திக்ரு அகமியத்தை

அல்லாவெண்ணியே உள்ளதெல்லாம்

மறந்து விடவேணும் உனை உள்பட

உனக்கு நீ திரையானதாலே

தன்னை மறப்பது பனாவாகுமே

தன்னை நினைப்பது பகாவாகுமே

தன்னை அறிந்தவன் நாயன்தன்னை

அறிவானென நபிச் சாத்தினரே

ஆனால், தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிவான். நாயனை அறிந்தவன் தன்னை மறந்து விடுவான். தன்னை மறந்து தான் நாயனாக மாறிவிடுவதுதான் அவ்லியாக்களுடைய மவ்த்தாக இருக்கும்.

ஏனென்றால், ஹக்கீகத்தில் மவ்த்து இல்லை என்று அஷ்ஷெய்குல் அக்பர் முஹ்யித்தீனுல் அரபி ரலியல்லாஹு அன்ஹு சொன்னதுக்கு தலீலாவது அல்லாஹுத்தஆலாவும் அவனுடைய ரஸூலும் சொல்லியிருப்பதாயிருக்கும்.

அதாவது லாதஹ்ஸி பன்னல்லதீன குதி லூபீஸபீலில்லாஹி அம்வாத்தன் பல் அஹ்யாஉன் இன்த றப்பிஹிம் - அல்லாஹ்வுடைய பாதையில் நப்சோடு போர் செய்தல் என்ற பெரிய பீஸபீலில் வெட்டுண்டு போனவர்களை மவ்த்தானவர்கள் என்று நீர் எண்ண வேண்டாம். மேலும், அவர்கள் தங்களுடைய ரப்பிடத்தில் ஹயாத்தானவர்களாக இருக்கும்.

ஹதீதில் இன்னக்கும் குலிக்த்தும் லில் அபதி வஇன்னக்கும் துன்கலூன மின் தரின் இலாதரின் - திடனாக நீஞ்களாகிறது கால காலமும் இருப்பதற்காக படைக்கப்பட்டவர்களாக இருக்கும். மேலும், ஒரு வீட்டில் நின்றும் மறுவீட்டளவில் திருப்பப்படுவீர்கள் என்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னதின் கருத்தாவது: மேலும், அல்லாஹ்வுடைய சொல்லாயிருக்கும்.

அதாவது லாயதூகூன பீஹல்மவ்த்த இல்லல்மவ்த்த தல்ஊலா – முந்தின மவ்த்தையே ஒழிய அவர்கள் அனுபோகம் பண்ணமாட்டார்கள் என்று சொன்ன முந்தின மௌத்தாகிறது அவர்கள் துன்யாவுக்கு வரமுன்பிருந்த நிலைமையாக இருக்கும். அதாவது ஹக்காகயிருந்தது எப்போது ஹக்குடைய பூர்வீகமான ஒளிவைக்கொண்டு உண்டாக்கப்பட்டுப் போனார்களோ இனிமேல் இல்லாமையாக மாட்டார்கள்.

ஆனால் மவ்த்து ஹயாத்து என்று அவர்களுக்கு நிலைமைகள் மாறுவதாகிறது ஹக்குடைய சோதிப்பாக இருக்கும். ஏனென்றால், ஹக்குத்தஆலா அவனுடைய கல்குகளுக்கு யாதொரு திரையில்லாமல் வெளியாகுவானேயானால் அவனுடைய முகத்தின் சுடர்பட்ட கல்குகள் கரிந்து போகும். அப்படி கரிந்து போகாமல் தரிப்பட்டிருப்பதற்காக வேண்டி சில சோதனைகளாகிய திரைகளைப் போட்டு: ஹக்காகிறவன் மறைத்து வைத்திருக்கிறான்.

கல்குகள் அவனைத் திரை நீங்கி பார்க்க வேணும் என்றால் கல்கு என்கிற நிலைமைகள் மாறி ஹக்காக ஆக வேண்டும். அப்போதுதான் ஹக்கை திரை நீங்கி கண்காட்சியாக காண்பாhர்கள்.

கமா கால அலைஹிஸ்ஸலாம் இன்ன அஹதக்கும் லாயறா றப்பஹு ஹத்தாய மூத்த ஐ லாயல்கல்லாஹ இல்லாபஃதல் மவ்த்தி – உங்களில்ஒருவன் அவன் மவ்ததாகாமலிருக்கிறவரையிலும் அவனுடைய நாயனைக் காணமாட்டான் என்று நபிநாயகம் சொன்னார்கள்.

அதாவது மவ்த்துக்கு பின்னாலேதான் அல்லாஹ்வை காண்பான். அதற்காகத்தான் மவ்த்து இறாத்திய்யைக் கொண்டு மவ்த்தாவதை பெரியோர்கள் ஆசைவைத்தார்கள். அல்லாஹ்வும் அவர்களை மவ்த்தாக்கிப் போட - மனிதப் பண்பான குணங்களை அவர்களை விட்டும் நீக்கி ஹக்காக ஆக்கிக் கொள்ள ஆசிக்கிறான்.

மேலும், மவ்த்து இறாத்திய்யைக் கொண்டு மவ்த்தாகாதவன் ஹக்குத்தஆலாவை தஜல்லிய்யாத்துடைய புறத்திலே கண்டுகொள்ள சகிக்க மாட்டான். மேலும், மவ்த்து தபய்யியைக் கொண்டு ஹக்குத் தஆலாவை அவனுடைய அக்கீதாவுடைய ஸூறத்திலே மாத்திரம் காண்பான். மவ்த்து இறாத்தியைக் கொண்டு மவ்த்தானவன்தான் ஹக்குத்தஆலாவை தஜல்லியாத்துடைய புறத்தில் எல்லாவிதத்திலும் காண்பான்.

அப்படிக் காண முடியாததற்கு மிதாலாகிறது ஒரு நாளொன்றுக்கு எழுபது தடவை ரப்பைக் கண்டுக் கொண்டிருந்த அபீத்துறாபின் நக்ஷபந்தி உடைய தில்மீதுக்கு ஷிப்லீ ரலியல்லாஹு அன்ஹுவை ஒரு விடுத்தம் பார்க்க முடியாமல் உயிரை இழந்து விட்டதைப் பற்றி ஷிப்லீ ரலியல்லாஹு அன்ஹுவைக் கேட்க அவன் தங்கரீகக் குறைச்சலானவனாக இருந்தபடியால் உயிரை இழந்து விட்டான்.

அதாவது ஹக்கை அகீத்தாவுடைய ஸூரத்தில் கண்டவனுக்கு தஜல்லிய்யாத்துடைய புறத்தில் காண முடியாது. அது எப்படி என்றால் புலியைப் பார்க்கவும் அதோடு சேர்ந்து மருகுதலாக இருக்கவும் வேண்டுமென்று நாடினால் அவனும் புலியாக ஆகி விடவேண்டும்.

தனக்கும் புலியாக ஆகக் கூடிய தகுதி உண்டாகியிருந்தால் புலியுடைய சூறத்தில் வெளியான ஷிப்லியைப் பார்க்கும் போது உயிரை இழந்திருக்க மாட்டான். ஆண்டவனுடைய தஜல்லியர்துகள் என்னும் அவதாரங்களாகிறது மடங்கி வருகிறதன்னியே வகைவகையாகிக் கொண்டேயிருக்கும். அப்போது ஆரிபீன்களும் அதுகளைத் தெரிசித்துக் கொண்டே இருப்பதுடன், தாங்களும் அதுக்குத் தகுந்த மாதிரியான நிலைமைகளில் ஆகிக் கொண்டேயிருப்பார்கள்.

மேலும், மனிதப் பண்பான குணம் நீங்கித்தான் ஹக்கை பார்க்க வேண்டுமென்பதற்கு தலீலாவது மவ்த்துடைய நேரமாகயிருக்கும். ஏனென்றால், ஹக்குத் தஆலாவாகிறவன் அவனுடைய கல்குகளுக்கு துன்யாவுடைய நிலைமை மாறி மவ்த்தாகும் போதும் இரண்டாவது கப்ரிலிருந்து எழும்பும்போதும் மூன்றாவது கியாமத்திலும் நான்காவது சுவர்க்கத்திலும் ஐந்தாவது ஆரிபீன்களுடைய அஃறாபு கதீபுல் அப்யலு என்ற வெண்மையாகிய மணல்மேட்;டிலும் சொந்தமாக ஹக்கை அவனுடைய கல்குகள் கண்டு தெரிசிப்பார்கள் என்று வந்ததாக இருக்கும்.

இந்த ஐந்து நேரமும் கல்குகளுக்கு கல்கென்கிற நிலைமை மாறி ஹக்காக ஆகும்படியான உணர்ச்சியுண்டாகிற நேரமாகயிருக்கும். மேலும், ஆரிபீன்கள் துன்யாவிலிருக்கும்போதே மவ்த்து இறாத்திய்யைக் கொண்டு மவ்த்தாகி மேலான ஆலம்களில் சென்று ஹக்கை பல பல மவ்ஜூத்தாத்துகளுடைய ஸூறத்துகளிலேயும் தெரிசிப்பார்கள். அவர்கள் மனிதப்பண்பான குணங்களை விட்டும் நிவாரணையாகி ஹக்குடைய சிபாத்துகளுக்குத் தாளாலே மாய்ந்து போய் அவர்கள் ஹக்காகவே ஆகிவிட்டதால் அவர்களுக்கு மவ்த்தில்லை காலகாலமுமே.

ஏனென்றால், அல் அற்வாஹு ஜுமன்துன் முஜன்னததுன் மாதஆறப மின்ஹா இவுதலப வமாதனா கற மின்ஹா இக்தலப - அர்வாஹுகளாகிறது சேகரிக்கப்பட்டக் கூட்டங்களாக இருக்கும். அர்வாஹுடைய ஆலத்தில் ஒன்றுக்கொன்று மருகுதலாக இருந்தது தான் துன்யாவிலும் மருகுதலாக இருக்கும்.

அந்த ஆலத்தில் ஒன்றுக்கொன்று விரோதமாக இருந்ததுதான் துன்யாவிலும் விரோதமாக இருக்கும் என்று நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்.

இன்னமும் அன்னாஸு னியாமுன் இதாமாத்தூ இன்தபஹூ - மனிதர்கள் அடங்கலும் தன்னை மறந்து இருக்குதல் என்னும் தூக்கத்தில் இருக்கிறார்கள். மவ்த்தான நேரத்தில் உணர்ச்சி அடைவார்கள் என்று நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள். ஆனதால் நித்திரையை கவனிப்பாயாக.

காலல்லாஹு தஆலா வஜஅவ்னா நவ்மக்கும் ஸுபாதன் - அல்லாஹுத்தஆலா உங்களுடைய நித்திரையை உங்களுக்கு சுகண்டியாக ஆக்கியருக்கிறோம் என்று சொல்கிறான். ஏனென்றால் மவ்த்துக்கு பின்னாலே நீங்கள் செல்லும் ஆலம்களில் உங்களுடைய நிலைமை இன்னதென்று விளங்கிக்கொண்டு அர்வாஹுகளுடனே நீங்கள் மருகுதலாக இருப்பதற்காக இருக்கும்.

மேலும் மனிதன் இவ்வுலகத்துக்கு வந்தது தன்னையும் தன் சரீரத்தை அண்டி நிற்கும் ஐயறிவுகளால் உலகத்தையும் அறிந்து அதனால் தன் தங்கரிப்பாகிய அல்லாஹ்வுடைய மஃரிபாவை உண்டாக்கிக் கொள்வதற்காக இருக்கும். இந்த ஐயறிவுகள் அவனோடு இருந்து விசயங்களை அவனுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறவரையிலும் அவனாகிறவன் துன்யாவிலிருக்கிறான் என்றும் ஐயறிவுகளையும் திரேக உணர்ச்சைகளையும் விட்டொழிந்து தன் தாத்திய்யத்தாகிய ஐயறிவுகளோடு இருப்பானாகில் அவன் ஆகிறத்தை நோக்கிச் சென்று விட்டான் என்று சொல்லப்படும். எப்படி என்றால் மனிதனுடைய கல்புக்கு வெளியேயிருந்து ஆலமுல் ஜிஸ்மானிய்யி என்று சொல்லப்பட்ட மஹ்ஸூஸாத்தின் பக்கம் ஐந்து வாசல்கள் இருப்பதுபோல் கல்புக்கு உள்ளே இருந்து ஆலமுற்றூ ஹானிய்யி என்று சொல்லப்பட்ட ஆலமுல் மலக்கூத்துக்கு ஒரு வழியண்டும்.

அந்த வழியில் நபிமார்கள் அவ்லியாக்கள் சென்று நுபுவ்வத்தையும் விலாயத்தையும் பெற்றிருக்கிறார்கள். அதுபோல் மனிதன் ஐயறிவுகள் அடைபட்ட நித்திரையுடைய ஹாலிலும் அதில் சென்று லௌஹுல்மஹ்பூலில் நின்றும் கைபு என்னும் மறைவான சங்கதிகளை அறிந்துக் கொள்வான். முழிப்பில் அவைகளை அறியமாட்டான். ஆனதால் முழிப்பை விட நித்திரை ரெம்பவும் உணர்ச்சையை உடையது. ஆனதால் மவ்த்து பூரண உணர்ச்சையாயிருக்கும்.

ஏனென்றால் மனிதன் நித்திரையுடைய ஹாலில் மனாமில் செய்கிற வேலையை முழிப்பில் செய்யத் சக்தி பெறமாட்டான். ஆனதால் நித்திரை அல்லது மவ்த்து இந்த இரண்டு வழியால்தான் ஆலமுல் மலக்கூத்துககுச் செல்லலாம் என்று நினைக்காதே. மேலும் ஒருவன் ஆசை,கோபம் முதலிய கெட்ட குணங்களை விட்டும் கல்பைச் சுத்தப்படுத்தி ஒளிந்த ஓரிடத்தில் உட்கார்ந்து கண்ணை மூடி ஐயறிவுகளையும் அதனதன் தொழிலைவிட்டும் அப்புறப்படுத்தி கல்பிலிருந்து ஓயாமல் அல்லாஹ் என்ற சத்தம் பிறக்கும்படி கல்பை ஆலமுல் மலக்கூத்துக்கு நேர்படுத்தி தன்னையும் எல்லா உலகத்தையும் மறந்து அல்லாஹ்வை நினைத்துக் கொண்டிருப்பானாகில் அவன் முழித்திருந்தாலும் கல்புடைய வாசல் திறக்கும்.

மற்றவர்கள் மனாமில் காணுகிறதை அவன் விழிப்பில் காண்பான். மலாயிக்கத்துகளுடைய நல்ல ரூபங்களைக் காண்பான். நபிமார்களை சந்தித்து அவர்களால் பிரயோஜனங்களைப் பெறுவான் . எவனுக்கு இந்த வழி திறக்குமோ அவனுக்குச் சொல்ல வராத புதுமையாகிய காட்சிகளைக் காண்பான். அப்படிக் கண்டவனுக்குத்தான் மவ்த்து ரெம்பவும் ஆனந்தமாகிய காட்சியாயிருக்கும்.

ஆனதால் மவ்த்து இன்னதென்று அறிய நாடுவாயாகில் அறிந்து கொள், மனிதனுக்கு இரண்டு ரூஹுகள் உண்டாகியிருக்கிறது. அதில் ஒன்றாவது ரூஹு ஹையவானியாக இருக்கும். ரூஹு ஹயவானியாகிறது சரீரத்தின் சுபாவம் சரியாக இருக்கிற வேளையில் இருதயக் கமலத்தில் நின்றும் புறப்படுகிற நுட்பமாகிய ஆவியாக இருக்கும். அந்த ஆவியானது இருதயக்கமலத்தில் நின்றும் புறப்பட்டு நரம்புகள் வழியாய் தலைமூளைக்கும் மற்றும் உறுப்புகளுக்கும் செல்லும்போது கண்ணானது பார்க்கவும், காதானது கேட்கவும், நாவானது பேசவும் மற்றும் புலங்கள் அதனதன் தொழிலைச் செய்யும். இந்த ஆவியானது சரீரத்தில் அக்லாத்து – நாடிக்குணம் என்னும் உதிர, வாத, பித்த, சிலேத்துமங்களால் உண்டானது.

இந்த றூஹின் சுவாபம் சரியாக இருக்கிற வரையில் அல்லாஹ்வுடைய உத்திரவைக் கொண்டு மலக்குகள் மூலமாய் ஓட்டம், உசும்புதலுடைய காரியங்களைச் செய்து கொண்டிருப்பான். உஷ்ணம் சீதளங்கள் மேலிட்டதினால் அல்லது வேறே காரணத்தினால் எப்போது இந்த றூஹு ஹயவானியின் சுபாவம் கெட்டுப் போகுமோ அப்போது மனிதன் மவ்த்தாகி விடுவான்.

இந்த சுபாவம் கெட்டுப் போகும்படியான காரணங்களைச் செய்கிறவர்தான் மலக்குல் மவ்த்தாக இருக்கும். இதுதான் ஹயவானாத் என்னும் ஜீவராசிகளுடைய மவ்த்தாக இருக்கும்.

ஆனால் மனிதனுடைய மவ்த்தாகிறுது வேறே விதமாக இருக்கும். ஏனென்றால், மனிதனுக்கு இந்த றூஹு ஹயவானியைத் தவிர இன்னுமொரு றூஹு - றூஹு இன்சானிய்யி என்றும் கல்பு என்றும், றூஹுல் அஃலமென்றும், மள்ஹறு தாத்தில் இலாஹிய்யா என்றும் சொல்லப்பட்ட றூஹு மலக்குடைய இனத்திலுள்ளது. அது ஆண்டவனைச் சேர்ந்தது. அதுஒரு போதும் மவ்த்தாக மாட்டாது. மேலும் இந்த றூஹு இன்சானிய்யிக்கு அந்த றூஹு ஹயவானிய்யி வாகனமாகயிருக்கும்.

வாகனம் மவ்தாகிறதினால் ஏறுகிறவன் மவ்த்தாகிறதில்லை. இந்த வாகனத்தை இவனுக்கு கொடுத்தது எதுக்கானால் அல்லாஹ்வுடைய மஃரிபாவ்யும் மஹப்பத்தையும் வேட்டையாடுவதற்காக இருக்கும். வேட்டை வாய்த்துக் கொண்டதின் பின்னால் வாகனமும், ஆயுதமும் அவனை விட்டும் ஒழிந்து போவது அவன் விசயத்தில் நன்மையாக இருக்கும். வேட்டை வாய்க்க முன் வாகனமும், ஆயுதமும் அவனை விட்டும் இழந்து போனால் அவன் பெபரிய கைசேதத்திலும் துன்பத்திலும் அகப்படுவான். அல்லாஹ் காக்க வேண்டும்.

ஆனதால் சரீரம் முழுவதும் ஒருவனுக்கு வசப்படுவது றூஹு ஹயவானியின் உதவியைக் கொண்டாயிருக்கும். எப்போது அதன் சுபாவம் கெட்டுப் போகுமோ அப்போது சரீரம் அவனுக்கு வசப்படாமல் போவதற்கே மௌத்து என்று சொல்லப்படும். அப்படி வசப்படாமல் போய்விட்டால் மனிதன் தன்னுடைய ஸ்தானத்தில் நிலைத்திருப்பான். அவன் சரீரம் முழுவதும் அழிந்து போனாலும் சரியே. ஏனென்றால், மனிதன் என்பதற்கு அவனுடைய திரேகம் பொருளில்லை. ஆனதால் மனிதனுடைய இருப்பு இந்த உடலைக் கொண்டல்ல. இது

அழிந்து போனால் ஜீவித்திருப்பான். அப்போது அவனுடைய குணங்கள் இரு வகைப்பட்டிருக்கும்.அதில் ஒரு அவகை சரீர சம்பந்தமானதாக இருக்கும்.

அதாவது பசி, தாகம், நித்திரை இதுபோல் ஆதமிய்யாகிய குணங்களாக இருக்கும். இதுகளுக்குச் சரீரம் தேவையானதாக இருக்கும். இக்குணங்கள் மவ்த்துக்குப் பின் நிலைத்திருக்காது. மற்றது சரீரசம்பந்தமில்லாத்ததாக இருக்கும். அதாவது அல்லாஹ்வை அறிவது அவனுடைய ஜமாலை – அழகைத் தரிசிக்கிறது ஆனந்தமடைவது போன்ற காரியங்களாக இருக்கும் சரீர சம்பந்தமில்லாத இந்தக் குணங்கள் தான் அவனுக்குச் சொந்தமான குணம்.

ஆனால் அல்லாஹ்வை அறியாமல் இருந்தானாகில் அந்த அறியாமை என்ற குருட்டுத்தனமாகிறது அவனோடு நிலைத்திருக்கும். திண்மையாக இருக்கும். ஆனதால் துன்யாவில் அல்லாஹ்வைத் தரிசிக்காமல் குருடாக இருந்ததுபோல் ஆகிறத்திலும் குருடாக இருப்பான் என்று அல்லாஹ்தஆலா சொல்லியிருக்கிறான்.

மேலும் றூஹாகிறது சரீரம் இல்லாமல் தனித்திருக்க மாட்டாது. றூஹு சரீரத்தை விட்டும் பிரிந்தால் மிதாலுடைய ஆலத்தில் நின்றும் ஒரு சரீரத்ரைத ஆண்டவன் அதற்குக் கொடுப்பான். அந்த றூஹு நல்ல பதவியை பெற்றிருந்தால் அந்த றூஹுக்கு கொடுக்கக் கூடிய சரீரமாகிறது நல்ல ரூபமாக இருந்து சுகத்தையும், மருகுதலையும் கொடுத்துக் கொண்டே இருக்கும்.

அந்த றூஹு யாதொரு பதவியும் பெறாதிருந்தால் அந்த றூஹுக்கு கொடுக்கக் கூடிய சரீரமும் கெட்ட ரூபமாக இருந்து வேதனை செய்துக் கொண்டே விரட்சியாக இருக்கும். அதற்காகத்தான் அல்லாஹுத்தஆலா யவ்ம தஜிது குல்லு நப்ஸின் மாஅமிலத் மின்கைறின் முஹ்லறன் வமா அமிலத் மின் ஸூஇன் தவத்து லவ்அன்ன பைனஹா வமாஅமிலத் அமதன் பயீதன் - அந்த நாளையிலே ஒவ்வொரு நப்சடங்களும் தான் செய்த நல்ல அமலையும் கெட்ட அமலையும் ஹாலிறாக்கப்பட்டதாக கண்டுக் கொள்ளும். கெட்ட அமலைச் செய்து அந்த கெட்ட ரூபத்தைக் காணும்போது அந்த நப்சுக்கும் அந்த கெடுதிக்குமிடையில் தூரமான காலம் உண்டாகி இருக்கிறதை உகந்துக் கொள்ளுமென்று திருவுளமானான்.

அதற்காகத்தான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யமூத்துன்னாஸு அலாமாஆஷ பீஹி வயஹ்ஷுறு அலாமா மாத அலைஹி – எவன் எந்த எண்ணத்தில் தரிப்பட்டிருந்தானோ அந்த எண்ணத்துடைய சூறத்திலேயே மவ்த்தாக்கி அந்த எண்ணத்துடைய சூறத்திலேயே எழுப்பப்படுமென்று திருவுளமானார்கள்.

யஹ்யப்னு மஆது ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் பேசி வரப்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்கிறார்கள்: நான் அல்லாஹுத்தஆலாவை மனாமில் கண்டேன். அவன் என்னை நோக்கி யஹ்யப்னு மஆதே! மனிதர் எல்லோரும், என்னில் நின்றும் அவர்கள் ஹாஜத்தை தேடுகிறார்கள். அபாயஸீது என்னை தேடுகிறார் என்று சொன்னான் என்று சொன்னார்கள்.

அந்த அபாயஸீதாகிறவர்கள் சொல்கிறார்கள்: நான் அல்லாஹுத்தஆலாவை மனாமில் கண்டேன். அவன் என்னை நோக்கி அபாயஸீதே! நானாகிறவன் நீர் தேடக்கூடிய வித்தாக இருக்கும். ஆனதால் உம்முடைய கல்பென்னும் பூமியை துன்யாவின் பராக்குகள் என்னும் கூளங்களை விட்டு துப்புறவாக்கி அல்லாஹுத்தஆலாவை அறியுதல் என்ற வித்தை அந்த கல்பில் ஊன்றி மஹப்பத்தென்னும் மழையைச் சொரிவதால் சாலிகான அமல் என்ற பணர்களைக் கொண்டு துளிர்ந்து ஹால், வஜ்து, மஹ்வு, ஸஹ்வுகள் என்ற கனிகளைச் சொரியும்.

அப்போது மஹப்பத்து மஃரிபத்து, தாயிமாக- நேமமாக இருக்கும்போது குன்னு சம்அஹு வபஸறஹு என்ற ஹதீதுடைய அந்தரங்கத்தைக் கொண்டு நீ ஹக்காக வெளியாகிவிடுவதுதான் மவ்த்துக்குப் பின் எழுப்புவதைக் கொண்டும் எட்டாவது பணராசகிய சகலரையும் எழுப்பி மஹ்ஷறென்னும் தலத்தில் சேகரிப்பதைக் கொண்டும் ஈமான் கொள்வதும் இறந்து பிழைத்து மானிடனாய் ஜென்மம் எடுக்கும் மகிமையை அறிந்து கொள்வதுமாக இருக்கும். வல்லாஹு அஃலம்.

ஈமானுடைய பணர்களில் ஒன்பதாவது பணராகிறது:- மூமினானவர்கள் மீளும்தலம் சொர்க்கமென்றும் காபிரீன்கள் மீளும் தலம் நரகமென்றும் ஈமான் கொள்வதாயிருக்கும். ஆனால் மூமினானவர்கள் என்று சொன்ன சொல்லே மூமினானவன் அச்சம் தீர்ந்தவன் என்று அறிவிக்கிறது.

ஆனதால் மூமின் அச்சம் தீர்ந்தவனாக இருப்பதால் மூமின் அடங்களும் சொர்க்கவாதிகளாகத்தான் இருப்பார்கள். மேலும், சொர்க்க வாதிகளுக்கு ஆண்டவன் தன்னுடைய றுபூபிய்யத் என்னும் நாயகத்தனத்தை அவர்களுக்குக் கொடுத்துத்தான் சொர்;க்க லோகத்தில் புகுத வைப்பான்.

ஆனதால் சொர்க்கவாதிகள் எந்த சமயத்தில் எதைஎதை நாடுவார்களோ அதை உடனேயே தாங்களாகவே உண்டாக்கிக் கொள்வார்கள். இன்னமொருவரைக் கொண்டு துன்யாவில் தேடுவதுபோல் உதவி தேடமாட்டார்கள்.

ஆனால், அல்லாஹ்வுடைய காரியஸ்தர்களாகிய அவ்லியாக்களுக்கும் அந்த றுபூபிய்யத்தென்ற நாயகத்தனத்தை துன்யாவில் கொடுத்து அவர்களைச் சங்கையாக்கி வைத்திருப்பதற்காக வேண்டி அந்த அவ்லியாக்களும் அக்குலானது கண்டிருப்பதற்கும் கேட்டிருப்பதற்கும் மாற்றமாகிய சில அற்புதங்களை துன்யாவில் வெளிப்படுத்தி காட்டி மற்றவர்களுடைய கல்பைத் திடப்படுத்தி இருக்கிறார்கள்.

மேலும் சொர்க்கலோகத்தில் ஆதம் ஹவ்வா அலைஹிமிஸ்ஸலாம் இருவர்களும் இருக்கும்போது அவர்களில் தன்னுடைய நாயகத்தனமென்ற ருபூபிய்யத்தை வெளியாக்கியிருந்தான். அப்போது அவர்கள் தங்களுக்குத் தேவையான வஸ்துவை தங்களுடைய கல்பில் ரூபப்படுத்தி விடுவார்கள். உடனே வெளியில் ரூபமாகி தங்கள்

ஹலறத்திலே வந்து விடும். ஆனதால் அவர்கள் சொர்க்க லோகத்தில் யிருக்கிறபோது வஹ்மு என்னும் சந்தேகமும் கியாலு என்னும் தோற்றரவும் அவர்களுக்கு இல்லாமலிருந்தது.

சொர்க்கலோகத்தை விட்டும் அவர்களை வெளிப்படுத்தப்பட்டபோது அந்த நாயகத்தனமென்ற றுபூபிய்யத் அவர்களில் மறைந்து வஹ்மு கியாலு என்ற இந்த இரண்டு திரையும் அவர்களை மூடிக் கொண்டு அவர்களுக்கும் அந்த றுபூபிய்யத்துக்கும் இடையில் திரையாகிவிட்டது. அவர்களில் வந்து குடிகொண்ட அந்த வஹ்மும் கியாலும் அவர்கள் மக்கள் அடங்கaயும் பின்பற்றிக் கொண்டே வந்ததால் அந்த றுபூபிய்யத்துடைய ஒளிவை மாற்றி இருளாக ஆக்கிப் போட்டதால் துன்யாவில் குப்ருகள் என்ற மார்க்க விரோதங்களும் ஜாதிபேதங்களும் வெளியாகி நன்மை, தீமை என்ற இருவினையும் ஏற்பட்டு நரக சொர்க்கத்துக்கு ஆளாகும்படியாகவும் ஆகிவிட்டது.

ஆனதால், இந்த வஹ்மு, கியாலு என்ற இரண்டு திரைக்குள் அகப்பட்டுப் போறதுதான் நரகமாக இருக்கும். அப்பால் அந்த வஹ்மு, கியால் என்ற திரையை விட்டும் நீங்கி றுபூபிய்யத் என்னும் நாயகத்தனம் வெளியாகிவிடுவதுதான் சொர்க்கமாக இருக்கும். மேலும், சொர்க்கலோகத்து பதவிகளில் நின்றும் மேலாம்பரமான பதவியாகிறது மக்காமன் மஹ்மூதன் என்ற புகழப்பட்டப் பதவியாக இருக்கும். அந்தப்பதவியை வேறே எந்தப் பதவியும் முந்திவிட மாட்டாது.

மேலும், அந்தப் பதவியாகிறது ஆண்டவனுடைய அடிகார்களில் நின்றும் தனித்த ஒருவருக்கே சொந்தமாக்கப்பட்டதாக இருக்கும். அதற்காக வேண்டித்தான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த ஒருவன் நானாகவே இருக்க ஆஷிக்கிறேன். ஆனதால், அந்தப் பதவியை எனக்குக் கொடுக்கும்படி நீங்கள் எல்லோரும் ஆண்டவனிடத்தில் துஆ கேளுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதுபோல், பாங்கு துஆவில் அந்தப் பதவியை அவர்களுக்குக் கொடுக்கும்படி துஆ கேட்கிறோம். மேலும், அந்தப் பதவியாகிறது நபிமார்களில் நின்றும் ஒருவராகிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கே சொந்தமானதாக இருக்கும் என்று இஃத்திகாது – நிர்ணயம் கொள்ள வேண்டியது நம் எல்லோர் பேரிலும் வாஜிபானதாக இருக்கும்.

அப்பேர்பட்ட மக்காமன் மஹ்மூதன் என்ற புகழப்பட்ட சொர்க்கமாகிறது அல்லாஹ்வுடைய தாத்துடைய சொர்க்கமாக இருக்கும். ஆனதால், அந்த மக்காமன் மஹ்மூதன் என்ற பதவியை அறிய நாடுவாயாகில் அறிந்து கொள். அல்லாஹுத்தஆலா ஹக்கீகத்துன் முஹம்மதிய்யாவாக வெளியாகி நூறத்துன் முஹம்மதிய்யாவைக் கொண்டு எல்லா காரியங்களையும் துவக்கம் செய்திருக்கிறான். அதுபோல், அந்த முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எல்லா வஸ்துவுமாக வெளியாகி இருக்கிறார்கள்.

துவக்கம் அவர்களாக இருப்பதுபோல் கடைசி முடிவும் அவர்களாக வெளியாகி விடுவதுதான் மகாமன் மஹ்மூதன் என்ற பதவியாக இருக்கும். அது எப்படி என்றால் ஹக்குத்தஆலா ஆலம் ஙைபில் நின்றும் ஆலம் ஷஹாத்தளவில் வெளியாக நாடி துன்யாவில் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அல்லாஹ்வுடைய கலீபாவாகயிருந்த போதிலும் ஆதம்

அலைஹிஸ்ஸலாம் உடைய அந்தரங்கமாகிறது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாக இருக்கும்.

அப்படி இருந்தாலும், அல்லாஹுத்தஆலாதான் ஆதமுடைய சூறத்தில் வெளியாகி மலக்குகள் உள்படச் சகல கல்குகளையும் அவனுக்குப் பணியச் செய்து கொண்டான். ஆனால், துன்யாவில் ஆதம் அலைஹிஸ்ஸலாமுடைய அந்தரங்கம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாக இருப்பதுபோல் ஆகிறத்தில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆதமுடைய அந்தரங்கமும் வெளியிரங்கமுமாக இருக்கும்.

அப்போது ஆதமுடைய அந்தரங்கமும் வெளிரங்கமும் ஒன்றாகிய நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய சூறத்தில் அல்லாஹுத்தஆலா வெளியாகி சகல கல்குகளையும், தனக்குப் பணிந்து சுஜூது செய்யவும் தன்னிடத்தில் ஷபாஅத்து செய்யவும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தனக்கு கலீபாவாகத் தெரிந்து கொண்டான்.

அதற்காகத்தான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நானாகிறவன் மனிதர்களுக்கு கியாமத்து நாளையில் செய்யிதாக – நாயனாக இருப்பேன். துன்யாவில் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மலாயிகத்துகள் சுஜூது செய்ததுபோல் உள்ள காரியங்கள் நடந்தது எல்லாம் கியாமத்து நாளையில் எனக்கும் நடக்கும். அந்த நிலைமையில் நான் ஆகிவிடுவதுதான் அல்லாஹுத்தஆலா எனக்குக் கொடுக்கிறதாக வாக்களித்த மக்காமன் மஹ்மூதன் என்னும் பதவியாக இருக்கும். அந்தப் பதவியை எனக்குக் கொடுக்கும்படி உங்களில் ஒவ்வொருவரும் ஐந்து வக்த்திலேயும் சிபாரிசு செய்வீர்களேயானால் கியாமத்து நாளையில் என்னுடைய சிபாரிசு உங்கள் பேரில் கடமையாகிவிடும்.

அப்போது நான் வெளியாகியிருக்கிற பதவியினுடைய தோற்றம் உங்கள் நப்சுகளிலேயும் தரிசனையாகும். அதற்காகத்தான் தன்னை ரசூலுல்லாஹ் என்று கண்டு தன் நூரை - ஹக்காக தரிசிக்க சொன்னார்கள். அப்படித் தரிசித்தவர்களுக்கு தானும் ரசூலுல்லாஹ்வும் ஹக்கும் ஒன்றாகத்தான் தரிசனையாகும். அப்படித் தரிசிப்பதற்கு அந்த நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஷபாஅத்தை துன்யாவிலும் பெற்றுக் கொண்டு அந்த நாயகத்தை தங்கள் நப்சுகளிலேயும், கண்காட்சியாகக் கண்டவர்களுக்குத்தான் அந்த மகாமன் மஹ்மூதன் என்கிற பதவியும் காணக் கிடைக்கும்.

அந்த பதவியாவது ஹக்கு சுப்ஹானஹுவத்தஆலாவாகிறவன் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாக கியாமத்து நாளையில் வெளியாகி விடுவதுதான் **மக்காமன் மஹ்மூதன்** என்கிற பதவியும் தாத்துடைய சொர்க்கலோகமுமாக இருக்கும். அப்போது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஹக்காக வெளியாகிவிடுவார்கள். கல்குகள் அடங்கலும் துன்யாவில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஹக்காக கண்டதுபோல் ஆகிறத்திலும் நாயகம் முஹம்மது

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத்தான் ஹக்காக கண்டு களிகூர்ந்திருப்பார்கள்.

அதுதான் மக்காமன் மஹ்மூதன் என்னும் புகழப்பட்ட பதவியாக இருக்கும். *அன்னல்வஸீலத்த அஃலா மகானின் பில்ஜன்னத்தி வலாதகூனு இல்லா லிவாஹிதின் வஅற்ஜூ அன்அகூன அன தாலிக்கர்றஜ்லு லிஅன்னஹு கானலஹுல் புத்வு பில்வு ஜூதிபலாபுத்த அன்யகூன லஹுல் கித்தாமு அலைஹி அப்லலுாஸ்ஸலாத்தி வஸ்ஸலாம்.* والسلام

والله يقول الحق وهو يهدي السبيل وعليه التكلان

மற்ற பணர்களை அல்லாஹுத்தஆலா உடைய உதவியைக் கொண்டும் எனது குதுபுஸ்ஸமான் கௌதுல் அமான் கல்வத்து ஆண்டவர்களாகிய நாயகம் எனது பெரியத் தகப்பனார் அவர்களுடைய உஸூலுர் ரஹ்மத்துடைய பைளைக் கொண்டும் இன்ஷாஅல்லாஹுத்தஆலா பின்னால் ஷரஹு செய்து வெளிப்படுத்துவதற்கு ஆண்டவனிடத்தில் அஞ்சியும் கெஞ்சியும் அதபுடன் விட்டு விலகுகிறேன்.

الا الى الله تصير الامور

அறிந்து கொள்! அல்லாஹுத்தஆலா அளவுலே சகல கருமங்கள் அடங்கலும் மீளுகிறதாக இருக்கும்.

**அலி நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆன்மீக உபதேசங்கள்:**

காலன்னபிய்யு ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன மதீனத்துல் இல்மி வஅலிய்யுன் பாபுஹா – நானாகிறது அறிவென்னும் பட்டணமாக இருக்கும். அலியாகிறவர் அந்தப்பட்டணத்தின் வாசலாக இருக்கும் என்று நபி நாயகம் திருவுளமானார்களே அப்பேர்பட்ட அலியுன் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களுடைய சொற்களில் நின்றும் சிலதை எடுத்தெழுதப்பட்டிருக்கிறது.

அதாவது *மன்கானத் ஹிம்மதுஹு மாயுத்திலுஹு பீபத்னிஹி பகீமதுஹு மாயுக்ரிஜ்ஹு மின்ஹு* - ஒருவன் தன்னுடைய மனதுணிகரமான எண்ணமெல்லாம் ஊன்,தீன் குடிப்பாகவே இருந்தால் அவனுடைய பொறுமதி அந்த தீனினாலே வெளிப்படுகிற மலமாக இருக்கும்.

*அன்னாக பிஸ்மானிஹிம் அஷ்பஹு மின்ஹும் பிஆபாயிஹிம்* - மனிதர்கள் தங்கள் காலத்திலுள்ள மனிதர்களைக் கொண்டு ஒப்பாகயிருப்பது மிகுதமல்லால் தங்கள் தகப்பன்மார்களைக் கொண்டு ஒப்பாகுதல் மிகுதமல்லை. *மாஹலகம்றுஉன் அறுபகத்றஹு* - தன்னுடைய தகுதியை அறிந்த மனிதன் மோட்சமடையமாட்டான். அல்மற்வு *மக்புவ்வுன் தஹ்த லிசானிஹி* – மனிதன் தன்னுடைய நாவின் தாளாலே மறைக்கப்பட்டவனாக இருக்கும். – வாய்திறந்து பேசுவானாகில் அவனுடைய நிலைமை வெளியாகிவிடும்.



www.sufimanzil.org

மன் அதுப லிசானுஹு கதுற இக்வானுஹு - ஒருவனுடைய நாவு மதுரமாக இருந்தால் அவனுக்கு சினேகிதர்கள் மிகுதமாவார்கள். லாஸவாப மஅதற்கில் முஷாவறா – உஷாவுதல் செய்யாமல் நடத்துற கருமங்களில் நேர் கிடையாது. புத்திவான்களை உஷாவுதல் செய்து நடக்க வேண்டும். பில்பிர்ரி யுஸ்தஃபுதுல் ஹுர்று – நன்றி செய்வதால் நாட்டாமகளை அடிமை கொள்ளப்படும். யஃனீ – ஒருவனுக்கு உபகாரம் செய்தால் உபகாரம் பெற்றவன் உபகாரம் செய்தவனுக்கு அடிமைபோல் நடப்பான். அல்ஜஸவு இன்தல் பலாயிதமாமுல்மிஹ்னதி – முஸீபத்து வந்த நேரத்தில் சப்று செய்யாமல் திடுக்கமிடுவதால் முஸீபத்துடைய வகையெல்லாம் நிரப்பமாகிவிடும்.

லாலபற மஅல்பங்யி –அழிச்சாட்டியக்காரன் தான் எடுத்த காரியத்தை நிறைவேற்றல் என்கிற ஜெயமுடையவனாகான். லாதனா மஅல்கிபரி – பெருமை அடிப்பவனை எவரும் புகழார். என்கிலும், பழிப்பார்கள். லாபிர்ற மஅஷுஹ்ஹின் - கஞ்சத்தனத்துக்கு ஒருவரும் நன்றி செய்யமாட்டார்கள். லாஸிஹ்ஹத்த அன்ன ஹிமி – கெலிப்பாக மிகுதம் திண்பதுடன் சுகம் கிடையாது. லாஷறப மஅசூயில் அதபி – ஒழுக்கம் கெட்டுப் போவதுடன் சிறப்புக் கிடையாது.

(லாறாஹத லிஹஸூதன்) பொறாமை என்னும் ஹசது உள்ளவனுக்கு சௌக்கியம் கிடையாது. (லாஅத்றமஅ அஸ்ஸமினத்துகா) அல்லாஹவைப் பயந்து ஹறாமைத் தவிர்த்து ஹலாலை தேவையான மட்டும் எடுத்து வணங்குவதைக் காண சங்கையானது ஒன்றுமில்லை. (லாஅஷ்றப அஃலா மினல் இஸ்லாம்) இஸ்லாமைக் காண சங்கையானதொன்றும் இல்லை. (லாமப்அல அஹ்ஸன மினல்வறபி) பேணுதலாய் நடப்பதைக் காண அழகான செயலொன்றும் இல்லை.

(லாஅஷபீஅ அன்ஜஹ மினத் தவ்பத்தி) தவ்பாவைக் காண ஜெயம் பெற்றும் கொள்ளும் மன்றாட்டமுடையவன் யாருமில்லை. (லதாஅ அஃயாமினல் ஜஹ்லி) லோச்சி செய்வதை விட்டும் பரியாரிகளை இயலாமையாக்கி வைக்கும் வியாதியில் மடத்தனம் என்னும் வியாதியைக் காண ஒரு வியாதியும் இல்லை. (லிசானுக்க யல்பலு மாஅவ்வத்தஹு) உன்னுடைய நாவாகிறது எதைப் பழக்கம் செய்தாயோ அதைத்தான் மொழியும். (அல்மற்வு அதுவ்வுன் மாஜஹிலஹு) மனிதன் தன்னுடைய தகுதியை அறியாதிருக்கும் காலமெல்லாம் தனக்குத்தானே பகையாக இருப்பான். (இதாதம்மல் அக்குலு கல்லல்கலாம்) புத்தி நிறம்பினால் பேச்சு குறைந்து போகும்.

(நிபாகுல் மற்யிதில்லதுன்) - ஒரு மனிதன் உள்ளொன்று புறமொன்றுமாக இருப்பது தன்மையாக இருக்கும். (லாலிபாச அஜ்மல மினஸ்ஸலாமத்தி) ஒருவரையும் நோவினை செய்யாமல் சலாமத்தாயிருப்பதென்னும் உடுமானத்தைக் காண அழகான உடுமானமில்லை. (மன்தலப மாலா யஃனீஹி பாதஹு யஃனீஹி) தனக்கு வேண்டாத கருமத்தைத் தேடுவானாகில் வேண்டிய கருமம் தப்பிப் போகும்.

(அர்றாஹத்து மஅல்யவுஸ்) மனிதர் கையில் உண்டான பொருளை விட்டும் ஆசை முறிவதுடன் மனறாஹத்து உண்டும். (அல்ஹிற்மானு மஅல்ஹிற்ஸி) பேர் கெட்டுப் போறது

வேட்கை வைப்பதுடனேயாயிருக்கும். யஃனீ துன்யாவிலுள்ள ஒரு வஸ்துவின் பேரில் மிகுதி வேட்கையாகுதல் பேர்கேட்டை வருத்தும்.

(அப்துஷ்ஷஹவாத்தி அதல்லு மின் அப்திர்ரிக்கி) சரீர இச்சைக்கு அடிமைப்பட்டவன் கொள்கிற யத்துக்கு அடிமைப்பட்டவனைக் காண தன்மையடைவான். (அல்ஹாஸிது முக்தாலுன் அலாமன் லாதன்பலஹு) பொறாமை என்னும் ஹசதுக்காரனாகிறவன் யாதொரு குத்தமில்லாதவன் பேரில் கோபமாக இருப்பான் (லாதத்தகில் அல்லமுனா) மேலெண்ணத்தின் பேரில் சிந்தையைச் சாட்டாதே. மேலெண்ணத்தை எத்த முதல் மவ்த்து வந்துகொள்ளும்.

(அல்யவுஸுஹுர்றுன் வர்றஜாவு அப்துன்) மனிதரை விட்டும் ஆசை முறிவது நாட்டாமைத் தனமும் ஆசை வைப்பது அடிமைத்தனமுமாக இருக்கும். மன் னலற இஃதபற காரியங்களின் முடிவை நோட்டமிட்டுப் பார்த்தால் உறுதி பெற்றுக் கொள்வான். அல்அதாவத்து ஷுங்லுன் - பகைமைத்தனம் எடுக்குதல் ஒழியாப் பராக்கை உண்டாக்கும். அல்கல்பு இதாகரிஹ அமிய – ஏதமொரு இல்மைப் படிக்கிறதில் கல்பு சடைந்து பொருத்தம் கெடுமாகில் அது குருடாகிவிடும். அல்அதபு சூறத்துல் அக்குலி – வணக்கம் ஒழுக்கமாய் நடப்பது அக்குலின் சுரூபமாயிருக்கும்.

மன் லானத் அஸாபீலுஹு ஸலுபத் அஆலீஹி – தாழ்ந்தவர்களால் உதவி பெற்றுக் கொண்டவன் தனக்கு மேலானவர்கள் உதவியைப் பெற்றுக் கொள்ளமாட்டான். அல்ஸயீது மன்வுயில பிஙைரிஹி – தன்னல்லாதவனைக் கொண்டு உபதேசிக்கப்படுகிறவன் தான் சீதேவி தன்னுடைய படிப்பு எவ்வளவு மேலிட்டிருந்தாலும் இன்னமொருவருடைய படிப்பைக் கொண்டு உபதேசிக்கப்பட்டவனாக இருக்கும்.

அல்ஹிக்மத்து லாலத்துல் மூமினி –பூறாயமாகிறது மூமினானவனுக்கு தப்பிப் போன இரத்தினத்தைத் தேடி எடுப்பது அவசியமாக இருக்கும். உத்றுகில்ஹஸத தங்லிபுல் அஸத - ஹஸதை விட்டு விடு. விட்டுவிடுவாயாகில் புலியையும் வெல்லுவாய். அன்னாஸு அஜ்னாஸுவ அக்தருஹும் அன்ஜாஸு - மனிதர்கள் பல பல விதமாக இருக்கும். அவர்களில் மிகுந்தபேர்களும் நஜீஸுகளாக இருக்கும்.

இஸ்லாத்தில் நீ வழிப்படுவாயாகில் சலாமத் என்னும் ஈடேற்றத்தை பெறுவாய். *மன் அறப நப்ஸஹு பகத் அறப றப்பஹு* - தன்னை பனாவென்று அறிந்தால் தன்னுடைய நாயன் பகா என்று அறிவான். வஸ்ஸலாம்.

*முற்றும்.*